236

T.N.L.C Debates

official Report

1986

vol 223,

No: 2,3

D
oV 2,11,32'N86
N86.223.2-3
143550

1040/R (286)

# தமிழ் நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 18, 1986-தொகுதி 223 எண் 3.
Friday, 18th April 1986-Volume 223 No. 3.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

[விலை ரூ. 2.75]

## பொருளடக்கம்.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | வினாக்கள்—விடைகள் .. .. .. | 323—325 |
| 2 | அரசின் தீர்மானம்— வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு | 326—395 |
| 3 | தகவல் கோரல்— அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நடத்தும் தர்ணா பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் | 326 |
| 4 | 20–4–1986 அன்று ஓய்வு பெற இருக்கும் உறுப்பினர்களுக்குப் பாராட்டு பகர்தல் | 395—420 |
| 5 | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 420—421 |

(238)

143550

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1986, ஏப்ரல் 18.

சித்திரை 5, அட்சய, திருவள்ளுவராண்டு-2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிடாத வினாக்கள்.

### சென்னை மாநகரில் பூங்காக்கள்

7 வினா.—செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பூங்காக்கள் எத்தனை ?

(இ) அவற்றில் பெரும்பான்மையானவை, சரிவர பராமரிக்கப்படாமல் சீர்கெட்டுள்ளன என்பது உண்மையா ?

விடை—

(அ) சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பூங்காக்கள் 88 ஆகும்.

(இ) மெட்ரோ வாட்டர் மூலமாக பூங்காக்களுக்கு கிடைத்து வந்த தண்ணீர் கடந்த இரண்டு ஆண்டுகளாக துண்டிக்கப்பட்டதாலும், பூங்காக்களுக்கு ஏற்ற தண்ணீர் பூங்காக்களில் உள்ள கிணறுகளில் கிடைக்காததாலும், சில பூங்காக்களை போற்றத்தக்க அளவில் பராமரிக்க முடியவில்லை. இருந்த போதிலும், பூங்காக்களில் தேவையான அளவு தண்ணீர் வசதியை அமைத்துக் கொள்ள மாநகராட்சியால் எல்லா ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் அனைத்து பூங்காக்களும் நல்லமுறையில் பராமரிக்கப் பட்டு வரும்.

## கிணத்துக்கடவு அருகே இரயில்வே மேம்பாலம்

8 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கோயம்புத்தூர்-பொள்ளாச்சி இடையே, கிணத்துக்கடவு அருகில், இரயில்வே மேம்பாலம் கட்டும் கருத்துரு எந்நிலையில் உள்ளது?

**விடை—**

இப்பணியினை இனிவரும் ஆண்டுகளில் நிதி நிலைக்கேற்ப இரயில்வே பணிகள் திட்டத்தில் சேர்த்து செயல்படுத்த பரிசிலிக்கப்படும்.

## ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் வேலை நிறுத்தம்.

9 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1985 அக்டோபரில், கோயம்புத்தூரில் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள், பதினைந்து நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது?

(உ) கோயம்புத்தூர், சேலம் நகரங்களுக்கு மட்டும், தனியாக ஆட்டோ ரிக்ஷா மீட்டர் கட்டணம் நிர்ணயிக்க அரசு முடிவு ஏதும் செய்துள்ளதா?

**விடை—**

(அ) ஆம்.

(இ) மீட்டர் போடாமல் ஓட்டுவது, சீருடை அணியாமல் ஓட்டுவது, பயணிகளிடம் அதிகமாகக் கட்டணம் வசூல் செய்வது, வண்டிகளை போக்கு வரத்துக்கு இடையூறாக நிறுத்துவது போன்ற குற்றங்களுக்காக ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வழக்குகள் தொடர்ந்ததை அடுத்து ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் 23—10—1985 முதல் வேலை நிறுத்தம் செய்தனர்.

(உ) இல்லை.



## ஆட்டோ ரிக்ஷா மீட்டர் கட்டணம்

10. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆட்டோ ரிக்ஷா மீட்டர் கட்டணத்தை, டீசல் மற்றும் ஆட்டோ பாகங்கள் தற்போது விலை ஏறியுள்ளதை கருத்தில் கொண்டு, மாற்றியமைக்கும் கருத்துரு ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் அமல்படுத்தப்படும்?

**விடை—**

(அ) மற்றும் (இ) ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி வாடகைக் கட்டணத்தை மாற்றியமைக்க அரசு ஆணை நிலை எண் 1306, உள் துறை, நாள் 29—5—1985-ல் அறிவிக்கை செய்துள்ளது. அதுபற்றி அரசு விரைவில் முடிவெடுக்கும்.

## கைமுறை காகிதம்

11 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நமது மாநிலத்தில் கைமுறை காகிதம் எவ்வளவு தயாரிக்கப் படுகிறது?

(இ) இதில் உற்பத்தியை அதிகப்படுத்தும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

**விடை—**

(அ) தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கைமுறை காகித அலகுகள் மூலம் 1984-85-ம் ஆண்டில், 169.5 டன் கைமுறை காகிதம் மற்றும் அட்டைகள் தயாரிக்கப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூ. 30.98 இலட்சமாகும்.

(இ) புதிய அலகுகள் ஆரம்பித்து உற்பத்தியை பெருக்க தமிழ் நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அரசின் தீர்மானம்.

**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அரசின் தீர்மானம். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த . . .

### 3. தகவல் கோரல்.

**அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நடத்தும் தர்ணா பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம்.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : தலைவர் அவர்களே, இன்றைய தினம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் ஒரு தர்ணா போராட்டம் நடத்துகிறார்கள். தலைமைச் செயலக ஊழியர்களின் தற்காலிக பதவி நீக்கத்தை ரத்து செய்யக் கோரி, அவர்கள் இன்று நடத்தும் தர்ணா பற்றி நாங்கள் நான்கைந்து பேர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எழுப்புவதற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருந்தோம். அதற்கு தாங்கள் அனுமதி அளித்து விவாதத்திற்குக் கொண்டு வந்தால், நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அது பரிசீலனையில் இருக்கிறது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்பின் மீது விவாதம்.

20—4—1986 அன்று ஓய்வு பெறும் உறுப்பினர்களுக்கு பாராட்டுரை வழங்க வேண்டியிருப்பதால், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்தை நண்பகல் 12 மணி அளவில் முடித்துவிட்டால், நலமாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 2. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.**

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி** : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு@ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 99 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன்வைக்கப்பட்டுள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திரு. எல். ஜெயச்சந்திரன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்தில் பங்குகொள்ள வாய்ப்பளித்ததற்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக மக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை தமிழக அரசு அறிவித்திருக்கிறது. வீட்டு வசதியைப் பெருக்குவதற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் வீட்டு வசதித் துறையின் மூலமாகவும், நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மூலமாகவும் பல்வேறு திட்டங்களை தமிழக அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்காக தமிழக அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டுக் களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம், நகர் ஊர் அமைப்புத் துறை, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போன்ற பல்வேறு பிரிவுகளை வைத்து நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தைப்பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால், அது அகில இந்திய ரீதியில் இரண்டாவது இடத்தை அடைந்திருக்கிறது என்பதை பத்திரிக்கையின் வாயிலாகவும், இந்தக் குறிப்பின் வாயிலாகவும் அறிகிறோம். அவ்வாறு இரண்டாவது இடத்தைப் பெற்றமைக்காக முதற்கண் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும் மற்றும் சென்னையிலும் வீட்டு வசதி வாரியம் இரண்டு மூன்று வகையான வீடுகளை அமைத்து, மக்களுக்குப் பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. இதிலே பல்வேறு சிக்கல்கள், பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. வீட்டு வசதி வாரியம் நல்ல பணிகளைச் செய்து கொண்டிருந் தாலும், கோடிக்கணக்கான ரூபாயைச் செலவழித்து அவ்வப்போது வீடு கட்டினாலும் இதிலே சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. அந்தச் சிக்கல்களை அரசு அவ்வப்போது நீக்க முயல வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுக்கு நல்ல பயன் தரும் வகையில், நல்லெண்ணத்தின் அடிப்படையில் சில முறைகள் கையாளப்படுகின்றன. இருந்தாலும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மனை, வீடு வாங்குபவர்களுக்குச் சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. இந்த நடைமுறைச் சிக்கல்களை அரசு தீர்த்தால் மக்களுக்கு நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒருவர் நிலத்தையோ, அல்லது வீட்டையோ வாங்கிய ஐந்து வருடங்களுக்குப் பிறகு 'சேல் டீட்' கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால் அப்படி ஐந்தாண்டுகள் கழிந்ததும் 'சேல் டீட்' வருகிறதா என்று பார்த்தால், நிச்சயமாக வருவதில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பல்வேறு முறைகளில் அவர்கள் விண்ணப்பங்களை அதிகாரிகளிடமும், வீட்டு வசதி வாரியத் தலைவரிடமும் கொடுத்தும் அந்த 'சேல் டீட்' வாங்க பல வருடங்கள் ஆகின்றன. ஆகவே முதலில் ஐந்து வருடங்கள் ஆனதும் 'சேல் டீடை' உடனடியாக வழங்க வேண்டும் என்ற முறையை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மனையை வாங்கும்போது 'ஸ்கூருட்டினி ஃபீஸ்' என்று வாங்குகிறார்கள். அதையும் தளர்த்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று வீட்டை வாங்கிய பிறகு, பிளாட்டை வாங்கிய பிறகு ஒவ்வொரு மாதம் அந்த வீட்டுக்காரர்களிடம் 'மன்த்லி மெயின்டனன்ஸ் சார்ஜ்' என்று வாங்குகிறார்கள். இப்படி வாங்குவதையும் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாதம் ரூ. 60 என்று வாங்குவதை 'வேண்டாம்' என்று முடிவு செய்திருக்கிறோம். இதை சட்டமன்றப் பேரவையிலும் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாதம் தொகை வாங்க வேண்டாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. அந்தக் காலி இடங்களை வாங்கியிருப்பவர்களுக்கு இன்றைக்கு இருக்கும் பெரிய பிரச்சினை என்னவென்றால் அங்கே 'என்க்ரோச்மெண்ட்' இருக்கின்றது. அதனால் காலி இடங்களை வாங்கியவர்களுக்கு அங்கு போக கால தாமதம் ஆகின்றது.



பல்வேறு இடங்களில் நிதி, கடன் வாங்குவதற்கும் கால தாமதம் ஆகின்றது. அந்தக் காலி இடங்களில் ஆக்கிரமிப்பாளர்கள் குடிசைகள் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அதைத் தடுக்க வேண்டும். குறிப்பாக, சென்னையில் அண்ணா நகர் போன்ற இடங்களை எடுத்துக்கொண்டால்கூட, அங்கேயும் ஆக்கிரமிப்புகள் நிறைய இருக்கின்றன. அங்கே ஒரு எக்சிகியூடிவ் என்ஜினியர்கூட இருக்கின்றார். அங்கே ஹவுசிங் போர்டின் எக்சிகியூடிவ் ஆபீசர் இருக்கிறார். அவர்களுடைய மேற்பார்வையிலே அந்த இடம் இருக்கின்றது. பல்வேறு என்ஜினியர்கள் பல்வேறு மேற்பார்வையாளர்கள் இருக்கின்றார்கள். இதுபோன்ற குடிசைகள் போடுவதெல்லாம் அவர்களுக்கும் நன்றாகத் தெரிந்திருக்கும். அப்படி இருந்தும் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அப்படி ஆக்கிரமிப்புகள் இருப்பதால், அங்கே காலி இடங்களை வாங்கியவர்கள் வீடு கட்ட நினைக்கும் போது, மிகவும் சிரமப்படுகின்றார்கள். காவல் துறையினரும், வீட்டு வசதி துறையினரும் இவ்வாறு ஆக்கிரமிப்புகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஒரு மனை வாங்குபவர்கள் அவர்கள் வீடு கட்டவேண்டும் என்று கருதி, ஹட்கோ-விடம் அல்லது எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கவேண்டியிருக்கிறது என்றால், அதற்கு என்.ஓ.சி. வாங்க வேண்டும் என்று ஒரு விதி இருக்கின்றது. அதை வாங்க வேண்டும் என்று சொல்லும்போது, அது மட்டுமல்லாமல் மற்ற டாக்குமென்ட்ஸ் எல்லாம் வாங்க வேண்டும் என்னும்போது, அந்த விட்டுவசதி வாரியத்தில் அந்த சர்டிபிகேட் தரவேண்டும். ஆனால் அது சரியான நேரத்தில் கிடைப்பதில்லை. பல மாதங்களாகக் கிடைப்பதில்லை. முக்கியமான டாக்குமென்ட்ஸ் எல்லாம்கூட கிடைப்பதில்லை. அண்மையிலே நான் ஒருவருக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூறித்தான் அதைப் பெற முடிந்தது. ஒவ்வொருவரும் அதே மாதிரி அமைச்சர் அவர்களிடமோ, சேர்மேன் போன்றவர்களிடமோ, அதிகாரிகளிடமோ போய் பெற முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். வீடு கட்டுபவர்கள் அந்த சர்டிபிகேட்டுக்களை, டாக்குமென்ட்டுகளை வைத்துக் கொண்டுதான் கடன் வாங்க வேண்டும். அப்போதுதான் அவைகள் தேவைப்படுகின்றன. அவர்கள் வீட்டு வசதி வாரியத்திற்குக் கட்டவேண்டிய தொகைகளைக் கட்டியதும், என்.ஓ.சி. மற்றும் டாக்குமென்ட்ஸ் எல்லாம் உடனடியாக அவர்களுக்குக் கொடுக்கச்செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1986 ஏப்ரல் 18

மிக முக்கியமாக வீடு வாங்கி வைத்துக்கொள்பவர்கள், 'பிளாட்ஸ்' வாங்கி வைத்துக்கொள்பவர்கள், வருத்தத்துடன் கூறிக்கொள்கின்றார்கள். வாரியத்தில் சரியான கணக்கு இல்லை என்று கூறுகின்றார்கள். ஒரு முறை இந்த அளவுக்குக் கட்ட வேண்டும் என்று சொல்லிவிட்டு, சில நாட்களுக்குப் பிறகு அதிகமாகக் கட்ட வேண்டும் என்று சொல்கின்றார்கள். 'இவ்வளவு கட்டுங்கள்' என்று மாற்றிச் சொல்கின்றார்கள் என்று வருத்தத்துடன் கூறிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு உதவியாக இருக்குமளவுக்கு சரியான வழிமுறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். அதற்காக என்று ஒரு தனிக் குழுவேகூட அமைத்தால், நன்றாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்ற சிறுசிறு குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்ற குறைபாடுகளை தவிர்க்க முயல்வார்களானால், நிச்சயமாக வீட்டுவசதி வாரியம் நல்லமுறையில் செயல்பட வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதே நேரத்தில் நல்ல பல யோசனைகளை இந்த அவையில் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். இப்போது ஆசிரியர்களுக்கு என்று தமிழ்நாடு ஆசிரியர்கள் வீட்டு வசதி வாரியம் என்று தமிழக அரசில் அமைத்திருக் கின்றார்கள். தமிழ்நாடு ஆசிரியர்கள் வீட்டு வசதி வாரியம் இப்போது கல்வித் துறையுடன் இணைந்து செயல்படுகின்றது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு என்று நிதி ஒதுக்கிடு தனியாக வந்திருக்கின்றதா என்றால், அதுவும் இல்லை. இதற்கு என்று கல்வித் துறையில் தனியாகத் தொகை கொடுத்தால்தான், வீடு கட்டித் தர முடியும் என்ற எண்ணம் இருக்கின்றது. இந்த தமிழ்நாடு ஆசிரியர்கள் வீட்டு வசதித் துறையை நகர்ப்புற வளர்ச்சித் துறையுடன் இணைத்துக்கொண்டு செயல்பட வேண்டும். எந்தக் காரணத்திற்கு இந்தத் துறையை ஏற்படுத்தினார்களோ அந்தப் பயன் சரியான முறையில் கிடைக்கமுடியும். நம்முடைய தமிழக அரசு இதைச் செய்தால்தான், அந்தத் திட்டம் முழு அளவில் நிறைவேறும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். அந்த அளவுக்கு தமிழ் நாடு ஆசிரியர்கள் வீட்டு வசதித் துறையை நகர்ப்புற வீட்டு வசதித் துறையுடன் இணைத்து செயல்பட்டால், வெகு விரைவில் சென்னையிலேயும் சரி, பல்வேறு மாவட்டங்களிலும் நல்ல வீட்டு வசதியைச் செய்துதர முடியும். அப்படி வீட்டு வசதி வாய்ப்புக்களை பெருக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 18] [திரு. எல். ஜெயச்சந்திரன்]

(முற்பகல் 10-10)

இதுபோன்று, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு என்று கடந்த வருடம் 50 இலட்சம் ரூபாய் வீட்டு வசதி வாரியத்தால் கொடுக்கப்பட்டது என்று அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இந்த வருடம் 60 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு அனைத்துத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்க முடியுமா என்றால், நிச்சயமாக முடியாது. எனவே அவர்களுக்காக மேலும் நிதியை ஒதுக்கி, அவர்களுக்கு வீட்டு வசதி செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும், பெரு நகரங்களிலும் வீடுகள் கட்ட கடன் வழங்குகின்றன. இப்போது 60,000 முதல் 80,000 ரூபாய்வரை கடன் கொடுக்கிறார்கள். எப்படி கூட்டுறவுத் துறையில் 'லேண்ட் டெவலப்மெண்ட் பாங்க்'—நில அடமான வங்கி—என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் வைத்துக்கொண்டு, விவசாயப் பெரு மக்கள் டிராக்டர்கள், மற்ற உபகரணங்கள் வாங்க கடன் வசதி செய்து கொடுக்கிறார்களோ அதைப் போல ஹவுசிங் டெவலப்மெண்ட் பாங்க் என்று ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் தனியாக ஆரம்பித்து, அதோடு கூட்டுறவு வங்கிகளை இணைத்தோ அல்லது இதனைத் தனியாகவோ செயல்படுத்துவது பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி ஹவுசிங் டெவலப்மெண்ட் பாங்க் ஆரம்பித்தால், பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு வீடுகள் கட்ட எண்ணுகிறார்களோ, அதாவது அவர்களுடைய தகுதிக்கு ஏற்றாற்போல, அவர்களுடைய மாத வருமானத்திற்கு ஏற்றாற்போல ஒவ்வொருவருக்கும் கடன் வரம்பு வைத்துக் கொடுத்தால், நிச்சயமாக பல வீடுகள் கட்ட வசதியாக இருக்குமென்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும். உறுப்பினர்கள் 10 நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** அண்மையிலே, ஆறு மாதங்கள் இருக்கு மென்று நினைக்கிறேன். உலக வங்கியிலிருந்து ஒரு குழு நமது தமிழகத்திற்கு விஜயம் செய்து, பல்வேறு நகரங்களுக்குச் சென்று பார்வையிட்டு, வீட்டு வசதி வாரியத்திற்கு 500 கோடி ரூபாய் கடன் கொடுத்து, அந்த நகரங்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். சென்னை,

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1986 ஏப்ரல் 18

கோவை, மதுரை, சேலம், திருச்சி போன்ற நகரங்களுக்கு விஜயம் செய்து, அந்த நகரங்களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்ய இருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பெரிய நகரங்களில் வசதிகளைச் செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. இருந்தாலும், பின் தங்கிய மாவட்டங்களையும் மனத்திலே கொண்டு, அதாவது தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை போன்ற மாவட்டங்களையும் மனத்திலே கொண்டு, அங்கேயும் வீட்டு வசதிகளை ஏற்படுத்த உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கி, அந்த மாவட்டங்களில் வாழும் மக்களுக்கும் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக ஒன்றை மட்டும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். கடலூரிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரிலே, அண்ணா நகர் என்று ஒரு பகுதி இருக்கிறது. அந்த நகரிலே 1979-81 ஆகிய இரண்டு ஆண்டுகளில் ஏறத்தாழ 202 வீடுகள் எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி. வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஐந்து ஆண்டுகளில் 'ஃபைனல் எஸ்டிமேட்' கொடுக்க வேண்டுமென்ற நியதி இருக்கிறது. ஆனால் இன்றுவரை அதைக் கொடுக்கவில்லை. அதனால் என்ன பிரச்சினை என்றால், கடலூர் நகரசபையிடம் அந்த நகரை ஒப்படைக்க முடியவில்லை. அதனால் அந்த நகருக்குத் தேவையான குடி தண்ணீர், சாலைகள், மற்றும் மின் விளக்குகள் போன்ற வசதிகளைச் செய்ய முடியாமல் இருக்கிறது. எனவே உடனடியாக ஃபைனல் எஸ்டிமேட் என்ன என்று கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை உடனடியாக நகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.

கடலூர் பழைய நகரில் 66 வீடுகளைக் கட்டி இருக்கிறார்கள். மூன்று வருடங்கள் ஆகியும் அதை ஒப்படைக்காமல் இருக்கிறார்கள். அவற்றையும் விரைவில் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களை எல்லாம் மனதிலே கொண்டு தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், மற்ற அனைத்து அமைப்புகளும் நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று கேட்டு, என்னுடைய வாழ்த்துக்களைக் கூறி, முடிக்கிறேன்.

(முற்பகல் 10-15)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். வீட்டு வசதி என்பதை விட



1986 ஏப்ரல் 18] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

வீட்டுக்கு வரும் வசதி என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன். இறுதிநாளிலும் என்னுடைய சில கேள்விகள் ஏற்கப்பட்டு அவற்றுக்கு பதில் அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எரிபொருள் விலை உயர்ந்துள்ளமையால் ஆட்டோ ரிக்ஷா கட்டணம் உயர்ந்திருக்கிறது. இந்நிலையில் ஓரளவுக்காவது அரசு கட்டுப்படுத்தும் வகையில் சேலம், கோவை போன்ற இடங்களில் ஓடுகின்ற ஆட்டோ ரிக்ஷாக்களில் கட்டாயம் மீட்டர் பொருத்த வேண்டுமென்பதற்கான வழிவகை காண வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான், வீட்டுக்கு வர வசதியாக இருக்கும் என்பதால் நான் இதனைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக நடுத்தர மக்களுக்கு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் தொலைவாக இருக்கின்றன. அதிலும் மாறுதல் வரக்கூடிய அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், வீட்டு வசதி வாரிய வீடுகள் வரப்பிரசாதமாக இருக்கின்றன. கோவை போன்ற இடங்களை எடுத்துக் கொண்டால், ரேஸ் கோர்ஸ் மைதானத்திற்கு அருகிலே இருக்கின்ற வீடுகளில் கொசுத் தொல்லை தாங்க முடியவில்லை. வீட்டு வசதி வாரியத்தால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்ட பிறகு, அந்த வீடுகளை அப்படியே அநாதைகளாக விட்டுவிடுவது நல்லதல்ல. பயங்கரமாகக் கொசுத் தொல்லை இருக்கும் நிலையில் அங்குள்ள குழந்தைகளால் எப்படி நிம்மதியாகப் படிக்க முடியும்? அந்தக் குழந்தைகள் கொசுக்களால் சூழப்படுகின்றன. கொசுக்களை ஒழிக்க தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல் அங்கே தேங்குகின்ற குப்பை கூளங்களை உடனுக்குடன் அகற்ற வேண்டும். வீட்டு வசதி வாரியம் வீடுகளைக் கட்டிவிட்ட பிறகு, அனைத்துப் பொறுப்புகளும் மாநகராட்சியைச் சார்ந்தது என்பதுபோல் எண்ணி, அப்படியே தள்ளிவிடக் கூடாது. யாரும் இதுபற்றி கவனம் செலுத்தாத காரணத்தால், அங்கே வாழ்பவர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள்.

அடுத்து, அரசே எல்லா வீடுகளையும் கட்ட முடியாது, ஆகவே தனியார்களையும் ஊக்குவிக்க வேண்டுமென்று குறிப்பிலே தரப்பட்டிருக்கிறது. அது நல்லதுதான். என்றாலும் பல தனியார்களைப் பொறுத்தவரையில், அவர்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள். வீடுகளே கட்ட முடியாத இடத்தில் வீடு கட்டித் தருவதாகச் சொல்லி மக்களிடமிருந்து பணத்தைப் பெறுகிறார்கள். அங்கே குடியிருக்க முடியாததாகையால், அப்படி வாங்குகிறவர்கள் ஏமாற்றப்பட்டு சிரமப்படுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்வேன், பர்மா அகதிகளுக்கும் ஸ்ரீலங்கா அகதிகளுக்கும் வீடு கட்டிக்கொள்ள பணம் வழங்குகிறார்கள். ஆனால் அவர்கள் தனியாரை நம்பி, இந்த நாட்டிலுள்ள நிலை தெரியாமல்

பணம் கொடுத்துவிடுவதால், தனியார்கள் அவர்களை ஏமாற்றி விடுகிறார்கள். ஐந்து ஆயிரம் ரூபாய்க்கு வீடு கட்ட முடியுமோ, இல்லையோ, ஆனால் அந்த அகதிகளுக்கு அரசே துணையாக இருந்து வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய எண்ணிக்கை 90 ஆயிரமா அல்லது அதிகமா என்பதல்ல பிரச்சினை. இது திரு. ஜெயவர்த்தனாவால் சொல்லப்படும் கணக்கு என்று நினைக்கிறேன். எது எப்படி இருந்தாலும், அவர்கள் இங்கேயே இருப்பதாக இருந்தாலும் சரி, அவர்களுக்குத் தேவையான வீட்டு வசதியை வீட்டு வசதி வாரியமே செய்து கொடுத்து, அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமேஸ்வரத்தில் அவர்கள் வந்து இறங்கிய உடனேயே ஊட்டி, கூனூர் போன்ற இடங்களில் வீடு கட்டித் தருவதாகச் சொல்லி, ஐந்து ரூபாய்க்கான பத்திரத்தைக் காட்டுகிறார்கள். அவர்களும் உடனே தங்களுக்கு வீடு கிடைத்தமாதிரி நம்பிவிடுகிறார்கள். அதுவே அவர்களுக்கு வீடு கிடைத்து விட்டதற்கான ஆதாரம் என்று நம்பி, அவர்கள் கொண்டு வரும் பணத்தையும் அந்த ஏஜென்டுகளிடம் கொடுத்து ஏமாந்து பணத்தை இழந்துவிடுகிறார்கள். ஆகவே அவர்களுக்குக் கொடுக்கப்படும் கடன் பணத்தைக் கொண்டு வீட்டு வசதி வாரியம் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க இந்த அரசு வழிவகை செய்திருக்கிறது. 74 வீடுகளை 4½ லட்சம் ரூபாய் செலவில் 1985-86-ல் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வீடுகளை விரைந்து கட்டிக் கொடுக்க வேண்டும். வெள்ளைக்காரன் காலத்தில் இங்கேயிருந்து ஏராளமான தமிழர்களை ஸ்ரீலங்கா, மலேசியா போன்ற நாடுகளிலுள்ள தோட்டங்களுக்கு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் அங்கே சென்று தங்கள் வியர்வை சிந்தி, ரத்தம் சிந்தி அந்நாடுகளை எல்லாம் வளம் கொழிக்கச் செய்தார்கள். அதுபோல் நீலகிரி போன்ற தோட்டப் பகுதிகளிலும் நம்முடைய தொழிலாளர்களை அவர்கள் பயன்படுத்தியபோது, அவர்களுக்காகக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளை நாம் பார்த்தோமானால், மாட்டுக்கொட்டகை போல மிகச் சிறிய அறைகளாக அவை இருக்கின்றன. ஆனால் இன்றையதினம் நம்முடைய வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அந்தத் தொழிலாளர்களுக்கு நல்லமுறையில் வீடுகள் கட்டிக் கொடுக்க தேவையான அளவுக்கு நிறைய நிலம் இருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களுக்குரிய பணம் அவர்களிடமிருந்து பிடித்தம் செய்த பணம் இன்றைக்கு நிறைய இருப்பதால், அந்தப் பணத்திலிருந்து அவர்களுக்கு நல்லமுறையில்



வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். கட்டிடம் கட்டுவது என்றால், இன்றைக்கு இரண்டு லட்சம், மூன்று லட்சத்தில் கூட வீடுகள் கட்டுகிறார்கள். அவ்வளவு தொகையைக் கொடுத்து வீடு வாங்குகிறவர்களும் இருக்கிறார்கள். இன்றைக்கு என் பெயரிலோ, என் குழந்தைகள் பெயரிலோ, என் மனைவி பெயரிலோ வீடு இல்லை. கட்ட வேண்டுமென்று எண்ணினாலும் கட்டுமானப் பொருள்களின் விலை பயங்கரமாக இருக்கிறது. தச்சருக்கான கூலியாகட்டும் அல்லது மேசனுக்கான கூலியாகட்டும் அல்லது பொருள்களைக் கொண்டு வருவதற்கான வாடகையாகட்டும், மிக பயங்கரமான அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அரசு இதற்கெல்லாம் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு வர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

அதுபோல் மரங்களுக்கான விலை மிகவும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. இந்தியப் பிரதமர் அவர்கள் இதற்கு ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். காடுகள் அழியக் கூடாது என்பதால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி மூலமாக மரங்களைப் பெறுவது என்பதற்கான அனுமதியை அளித்து மூன்று மாதங்கள் ஆகியிருக்கும் என்று நான் கருதுகிறேன். இப்போது மரங்களையும்

(முற்பகல் 10-20)

இறக்குமதி செய்திருப்பார்கள். ஆனால் விலைகள்தான் குறைந்தபாடில்லை. மரங்கள் விலைகள் குறைந்திருக்கக்கூடிய நிலையில் ஒருவேளை இடைத்தரகர்களால் அதன் விலை அதிகமாகியிருக்கிறதோ என்னவோ. அது எப்படி இருந்தாலும் மரங்களின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்ததாக, சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் மக்கள் தொகை மிகுதியாக இருக்கிறது. அதனால் அவர்களுக்குக் குடியிருப்புப் பிரச்சினையும் அதிகமாகத் தோன்றுகிறது. உயர்ந்து விட்ட வாடகையைக் கொடுக்க முடியாத நிலையில் மாநகர மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, நகரின் ஒதுக்குப்புற ஊர்களான பெருங்களத்தூர் போன்ற பகுதிகளில் வீட்டு வசதி வாரியம் தனது பணியை விரிவுபடுத்தி, மேலும் அதிகமான குடியிருப்புக்களைக் கட்டித்தர வேண்டும். இப்போது சென்னை எழும்பூரில் அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவர், அங்கேயிருந்து சாஸ்திரி நகர் போன்ற இடங்களுக்கு வீட்டுக்குத் திரும்பிச் செல்லும் நேரத்தைக் காட்டிலும், எலெக்ட்ரிக் டிரெயின் மூலம் பெருங்களத்தூர் செல்வது மிக எளிதானது. வேகமாகவும் போக முடியும். பாரிஸ், லண்டன் போன்ற நகர்களின் புறநகர்ப் பகுதிமக்கள் வசதிக்காக டியூப் டிரெயின், எலெக்ட்ரிக்

டிரையின் போன்ற வசதிகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே அந்த வகையில் பெரிய அளவில் இதில் கருத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நடுத்தர மக்கள் வீடுகளை வாங்கவும், விற்கவும் அரசு ஒரு ஏஜென்சி முறையை உருவாக்க வேண்டும். இப்போது அப்பணிகளை தனியார் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி பழைய வீடுகளை வாங்கவும் விற்கவும் எத்தனையோ அமைப்புகள் இருந்தாலும், அரசு அமைப்பு ஒன்றை உருவாக்கினால், நடுத்தர மக்கள் ஏமாறாமல் இருப்பார்கள். இப்போது வீட்டை வாங்கும்போது வழக்கறிஞர்களை நாட வேண்டும். அப்படி இல்லையென்றால் அது முறையான சொத்தா என்று பார்க்காமல் ஏமாறும் நிலை இருக்கிறது. வீட்டு வசதி வாரியம் அதனுடைய சொந்த முயற்சிகளோடு இந்தப் பணியையும் செய்தால், மக்களுக்கு உறுதுணையாக விளங்கும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக, குடியிருப்புக்கள், தனியார் குடியிருப்புகளாகட்டும், வீட்டு வசதி குடியிருப்புகளாகட்டும், கட்டிடங்கள் கட்டி மக்களுக்குத் தந்து விடுகிறார்கள். அதைத் தொடர்ந்து தேவையான சாலை வசதிகள், மின்சார வசதி, தண்ணீர் மற்றும் ஆண்டுக்காண்டு அதை நிர்வகிக்கக் கூடிய ஏற்பாடுகள், இதைப்பற்றி நாம் கவனம் செலுத்துகிறோமா என்று பார்க்க வேண்டும். சில தனியார்கள் குடியிருப்பில், இப்படிப்பட்ட நிலைமைகளைச் சமாளிக்க அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு அமைப்பை ஏற்படுத்தி முறை செய்து கொள்கிறார்கள். அந்தப் பணிகளைக்கூட வீட்டு வசதி வாரியம் செய்யலாம். இப்போது பல குடியிருப்புக்களைப் பார்த்தால், குடியிருப்புகளிலிருந்து பெரிய வீதிகளுக்கு வர முடியாத நிலையும், பழுதடைந்த நிலையும் இருக்கிறது. அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே இருக்கிற நம்முடைய வீட்டையும் நம்முடைய மக்களையும் பார்ப்பதோடு, அதைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கிற நேரத்தில், ஸ்ரீலங்காவிலிருந்து வீட்டையும் பொருளையும் இழந்து வருகிற மக்களுக்கு அவர்கள் நாட்டையும் வீட்டையும் பெற்றுத்தருகிற நாள் வரவேண்டுமென்று விரும்பி, எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த விளக்கக் குறிப்பின் மீது நான் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை மட்டும் வலியுறுத்திவிட்டு அமைய விரும்புகிறேன்.



வீடுகள் கட்டுவதற்கு என்று சில விதிமுறைகள் உண்டு. அனுமதிக்காக அவர்கள் சென்றால், இந்த விதிகளைக் கூட மதிக்காமல் காலதாமதம் செய்வது ஒரு நடைமுறையாக இருக்கிறது. இந்த நடைமுறை என்பது இப்போது ஒரு ஆண்டு இரண்டு ஆண்டில் ஏற்பட்டதில்லை. சில ஆண்டுகளாகவே இருக்கிறது. ஆனால் இப்போது என்ன ஏற்பாடு இருக்கிறதென்றால், இந்த அனுமதி வாங்குவதற்கு முறையான முயற்சிகளைச் செய்தால், அவர்களுக்கு முறையாக அனுமதி கிடைப்பதில்லை. அதற்கு மாறாக, வேறு வழிகளில் முறை தவறிய என்று சொல்ல மாட்டேன், உண்மையில் அந்த முறையை மீறுகிற முயற்சிகளை சிலர்செய்து சுலபமாக வெற்றி பெறுகிறார்கள். அதற்குக் காரண காரியங்கள் அந்த விதிகளில் இருக்கிறதா என்றால் விதிகளில் எல்லாம் இருக்கின்றன. அப்படியென்றால், ஒருவரிடம் விதியை அனுஷ்டித்துவிட்டு மற்றவர்களிடம் அதை அனுஷ்டிப்பதில்லை.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மற்றவர்கள் பிரச்சினையில் உதாரணத்தைச் சொல்வதாக இருந்தால், அது வேறு எங்கோ அழைத்துச் சென்றுவிடும் என்பதால், நான் வசிக்கிற பகுதியிலேயே நானே அனுபவித்திருக்கிற ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டே முக்கால்

(முற்பகல் 10-25)

வருஷமாகக் காத்திருந்தோம். சந்தர்ப்பவசமாக ஒரு அதிகாரி ஓரளவு நேர்மையானவராக இருந்ததால், நான் அனுமதியை வாங்க முடிந்தது. ஆனால் என்னுடைய வீட்டிற்குப் பின்னாலே பொறியாளர் ஒருவர் இந்த விதிமுறைகளுக்குப் புறம்பாகவே வீடு கட்டியிருக்கிறார். ஏதோ ஒரு வகையிலே அதிகாரிகளைப் பிடித்து மிகக்குறுகிய காலத்திலே அனுமதியும் வாங்கிவிட்டார்.

கழிவு நீர், மழை நீர் (Drain water, Storm water) செல்வதற்கு, வெளியேறுவதற்கு வழி இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் அதற்கு வழியில்லாமலே அவர் வீடு கட்டியிருக்கிறார். அதற்கு அனுமதியும் கிடைத்திருக்கிறது. அது பக்கத்து வீடுகளிலுள்ள கிணறுகளைப் பாதிக்கிறது. இதே மாதிரி அடுத்த தெருவிலுள்ளவர்களும் பாதிக்கப்பட்ட காரணத்தாலே . . .

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியில் இருக்கிறார்கள் என்று தெரிவித்தால் நான் குறிப்பு எடுத்துக்கொண்டு, நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

[1986 ஏப்ரல் 18

திரு. ப. மாணிக்கம்: தலைவர் அவர்களே, நான் நடவடிக்கை எடுப்பதற்காகச் சொல்லவில்லை. நான் சென்னைக்கு அருகிலுள்ள பல்லவபுரம் நகராட்சிப் பகுதியிலுள்ள குரோம்பேட்டையில் வசிக்கிறேன். இது நடந்து சில ஆண்டுகளாகிவிட்டது. நான் இதை இங்கே கிளப்புவதற்குக் காரணம் ஒரு அனுபவத்தைச் சொல்வதற்காகத்தானேயொழிய, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக அல்ல. இதுபோன்ற தவறுகள் இனியும் தொடரக் கூடாதென்பதற்காகத்தான் சொல்கிறேன். தவறுகள் இனியாவது நடக்காமல் இருக்க வேண்டும். இதன்மீது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்தால், "வீடு கட்டிய ஒருவர் எம்.எல்.சி.-யாக இருப்பவர் விவகாரத்தைக் கிளப்பி என் தலையில் நெருப்பை போட்டுவிட்டார்" என்று அவர் நினைத்து விடுவார். அந்தமாதிரி வந்துவிடக்கூடாது. இந்த முறைகேடுகள் இனிமேலும் தொடரக்கூடாதென்பதற்காகத்தான் சொல்கிறேன். இவ்வாறு தண்ணீர் வெளியேற வழியில்லாத வீடுகளுக்கெல்லாம் அனுமதி தரப்பட்டிருக்கிறது. இதனால் பக்கத்திலுள்ள கிணறுகள் பாதிக்கப்பட்டுவிடுகின்றன. ஒருவர் இதற்காக நீதிமன்றத்திற்குச் சென்று அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஆணையும் பெற்றிருக்கிறார். இதுவும் நடந்திருக்கிறது. நான்கூட நீதிமன்றத்திற்குச் செல்லலாம். பின் அவ்வழக்கு முடிவதற்கு பல தலைமுறைகளாகலாம். இவ்வாறு அதிகாரிகள் விதிமுறைகளைச் சரிவர நிறைவேற்றுவதில்லை. மாறாக ஒருசிலருக்கு அனுமதி தரக்கூடாதென்று நினைத்தால். ஏதேனும் விதியைக்காட்டி தடுத்து விடுகிறார்கள்; அல்லது அனுமதி தரவேண்டுமென்று நினைத்தால். விதிகளையெல்லாம் மீறி தந்துவிடுகிறார்கள்.

அரசு விதிகள், சட்டத்தை ஒழுங்காக நிறைவேற்றுவதற்காகத்தான் ஏற்படுத்தப்படுகின்றன. விதிகள், சட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பதற்காகவும், குடிமக்களுக்கு அச் சட்டத்தின் பலன் கிடைக்காமலிருப்பதற்காகவும் ஏற்படுத்துவதல்ல. நான் இந்த நேரத்திலே மற்றொரு அனுபவத்தையும் சொல்ல விரும்புகிறேன். ஓர் உயர் அதிகாரியிடம் சில ஆண்டுகளுக்கு முன்னால் பேசிக் கொண்டிருந்தபோது, இந்த விதிகளைக் காட்டி இப்படி விளக்கம் சொல்லி மக்களுக்குச் செல்ல வேண்டிய பலனை மறுத்து விடுகிறார்களே என்று நான் கேட்டபோது, அவர் சொன்னார் "எங்களுடைய பழக்கம் சட்டத்திற்கு என்ன வியாக்கியானம் என்று விதிகளைக் கொண்டு செய்வது தான், இதுதான் எங்களுடைய (habit of thinking) இவ்வாறு செய்யும்போது பெரும்பாலும் அந்தப் பலன் மக்களுக்குக் கிடைக்காது. நாங்கள் விதிகளின்பேரில் அரசுக்குப் பாதுகாப்புத் தரத்தான்



1986 ஏப்ரல் 18] [திரு. ப. மாணிக்கம்]

யோசிப்போமே தவிர, மக்களுக்குப் பலன் கிடைக்க என்ன செய்யவேண்டுமென்று யோசிக்க மாட்டோம். இந்த முறையில்தான் எங்கள் சிந்தனை அமையும். அப்படி நாங்கள் பழகிவிட்டோம்." என்றார். ஆகவே தான் வேண்டிய இடம், வேண்டாத இடம் என்று வந்து விடுகிறது. இவ்வாறு விதிகளை ஏற்படுத்தியபின் அனுமதி கோரும்போது, வேண்டியவர்களுக்கு விதிகள் தளர்த்தப்படுகின்றன; அதற்கு ஏதேனும் "Special reasons" சொல்லி விடுகிறார்கள். வேண்டாதவர்களுக்கு ஏதேனும் சில விதிகளைக் காட்டி, எந்த அளவுக்கு ஒத்திப் போட முடியுமோ அந்த அளவுக்கு ஒத்திப் போட்டு விடுகிறார்கள். அவ்வாறு ஒத்திப் போடுவது மாத்திரமல்ல, சில காரண, காரியங்களைக் காட்டி, கட்டிடங்கள் கட்டுவதையே பாதியில் நிறுத்தி விடுகிறார்கள். இவ்வாறு அநேக கட்டிடங்கள் அரைகுறையாக நிற்கின்றன.

நான் இவ்வாறு பொதுவாகப் பேசுவதற்குக் காரணம், இனியாவது விதிகளை நிறைவேற்றும்போது, சிறிது இன்றைக்குள்ள நகர்ப்புற வளர்ச்சியை மனதிலே கொண்டு, மனிதாபிமான முறையில் விதிகளை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "அண்டை வீட்டுக்காரரைப் பொறுத்த வரை விதி கண்மூடித் தூங்குகிறது; எதிர்த்த வீட்டுக்காரரைப் பொறுத்த வரை விதி தலைவிரித்தாடுகிறது" என்கிற மாதிரி இருக்கக் கூடாது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

அடுத்தது, நகர்ப்புற வளர்ச்சிபற்றியது. அதை அபிவிருத்தி செய்கிறோம் என்று சொல்கிறோம். ஆனால் சென்னையைச் சுற்றி ஏற்பட்டிருக்கக் கூடிய வளர்ச்சியால் ஆங்காங்குள்ள குளங்கள் எல்லாம் மூடப்படுகின்றன. இது நகர்ப்புற வசதியோடு, வீட்டுவசதி வாரியத்தோடு சம்பந்தப்பட்ட பிரச்சினையா என்றால், சில விஷயங்கள் நேரடியாக சம்பந்தப்படாமல் இருக்கலாம். நகர வளர்ச்சித் திட்டங்கள் எதிர்காலத்தை நோக்கமாகக் கொண்டு கொண்டுவரப்பட வேண்டும். இப்போது கல்கத்தா பழைய நகரம், இந்தியாவின் பழைய தலைநகரம். கல்கத்தாவில் போக்குவரத்து மற்றும் சுகாதாரத்தைக் கட்டுப்படுத்துவது கஷ்டமாக இருக்கிறது. கிழக்குக் கல்கத்தாவில் 10 இலட்சம் ரூபாய் செலவில் தண்ணீர் வசதி செய்தார்கள். அது இப்போது 1 கோடி ரூபாய்க்கு ஆகிவிட்டது. இது அங்கே வந்திருக்கக்கூடிய கஷ்டம். அங்கு 'அன்பில்டேர்டு வாட்டரை' (வடி கட்டாத நீரை) வைத்து மக்கள் கழுவுகிறார்கள். அங்கே இருப்பது 'லெஃப்ட்டு ஃபிரன்ட் கவர்ன்மென்ட்'. அது வருவதற்கு முன்னாடி கழுவுவதே இல்லை. இதை அரசிய

[திரு. ப. மாணிக்கம்] [1986 ஏப்ரல் 18

லாக்க விரும்பவில்லை. சில விஷயங்கள் அங்கே நடக்கின்றன. இங்கு சென்னை நகரம் இருக்கிறது. இப்போது அது பெருகி வருகிறது. இங்கு குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. இங்கு குடிநீர்ப் பிரச்சினை மாத்திரமல்ல, குடியிருப்பு வளர்ச்சியும் வந்திருக்கின்றது. அந்தக் குடியிருப்புகளிலுள்ள வர்கள் சொந்தக் கிணற்றை உபயோகிக்கிறார்கள். கடந்த நவம்பரில் பெய்த கனத்த மழையால் இங்கு நிலத்தடி நீர் பெருகியிருக்கிறது. இவ்வளவு பெரிய வெள்ளம் வரும்போது, சென்னை நகரைச் சுற்றி இருக்கிற குளங்களை மூடி, குடியிருப்புகளாக மாற்றினால், இங்குள்ளவர்களுக்கெல்லாம் குடிநீர் விநியோகக் கஷ்டம் ஏற்படும். நகரத்தை அபிவிருத்தி செய்யும்போது, அதற்குக் குடிநீர் வசதிகளையும் அரசு கவனத்தில் கொண்டு திட்டங்களைத் தீட்ட வேண்டும். நகரைச் சுற்றி இருக்கின்ற குளங்களை மூடக்கூடாது. அவைகள் எதிர்காலத்தில் நிலத்தடி நீரைக் காப்பாற்றுவதற்கும், மழை நீரைப் பிடித்து வைப்பதற்கும் உதவும். அந்தக் குளங்களைக் காப்பாற்றி னால்தான், வளரும் சென்னை நகரைக் காப்பாற்ற முடியும். கோவை, மதுரை மற்றும் திருச்சி போன்ற நகரங்களிலும் குளங்களைப் காப்பாற்றி நகரங்களை அபிவிருத்தி செய்வது நல்லது. திருச்சி நகரம் காவிரி ஆற்றின் அருகில் இருப்பதால் அங்கு வேண்டுமானால் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஆபத்து அதிகம் இப்போது ஏற்படாமல் பின்னால் ஆபத்து ஏற்படக்கூடும். வட சென்னையில் 'பொல்லுஷன்' அதிகமாக இருக்கிறது. மதுரையிலும் 'பொல்லுஷன்' அதிகமாக இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே செய்த ஆராய்ச்சியில் சென்னையைவிட மதுரை இரயில் நிலையம், மீனாட்சியம்மன் கோவில் ஆகிய இடங்களில் 'டென்சிட்டி ஆஃப் டஸ்ட்', தூசி அளவு மிக அதிகமாக இருக்கிறது. அதனால் பின்னர் கோவில் கோபுரத்திற்குக்கூட ஆபத்து ஏற்படும். நான் விவரத்தைத் தான் சொல்கிறேன். மதுரை கோவிலின் 'ஆர்கிடெக்சர்' நீண்டநாள் கட்டிடக் கலையின் சின்னம். அந்த இடம் இப்போது பாழாகப் போகிறது. அதைப் பாதுகாப்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் சொல்வது கட்டிடக் கலையைப்பற்றித்தான் என்று மற்றவர்கள் நினைப்பார்கள்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, இதை எச்சரிக்கையாகத்தான் சொல்கிறேன். இந்தமாதிரி பொல்லூஷன் ஜாஸ்தியாகிக் கொண்டிருக்கிறது. ஐரோப்பிய நகரங்களில் எல்லாம் அவைகளைச் சுற்றி காடுகளை வளர்க்கிறார்கள். காரணம் அவைகள் நகருக்குப் போதிய பிராணவாயுவைக் கொடுக்கும் என்பது. அதற்கு காடுகள் பாதுகாப்பாக அமைகின்றன. அது



1986 ஏப்ரல் 18] [திரு. ப. மாணிக்கம்]

மட்டுமல்லாமல், ஓய்வு நாட்களில், வார இறுதியில் மக்கள் தங்குவதற்காக அரசே காடுகளுக்குள்ளே கூடாரங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறது. மக்கள் ஓய்வு நாட்களில் தங்களது குடும்பத்தோடு அங்கே சென்று தங்கிவிட்டு வருகிறார்கள். அப்படி அவர்கள் அங்கு தங்கிவிட்டு வருவதால், அவர்களுக்குப் புதவுணர்ச்சி உண்டாகிறது. சென்னை நகரத்தில் ஏற்படுகின்ற வளர்ச்சியைப் பார்த்தால், இன்னும் ஐந்து அல்லது 10 ஆண்டுகள் கழித்து, இங்கும் ஐரோப்பிய நகரங்களில் அரசு ஏற்படுத்திக்கொடுத்த வசதிகளைப்போல், வசதிகள் செய்து தரவேண்டிய கட்டாயம், தேவை ஏற்படும். அதுமாத்திர மல்ல, சென்னை நகரை அபிவிருத்தி செய்யும்போது, அதைச் சுற்றியுள்ள நீர் நிலைகளைப் பாதுகாத்து, சுத்தமான காற்று வசதி, குடிநீர் வசதி, தூசி மற்றும் பொல்லூஷன் ஏற்படுவதைத் தவிர்த்து அவைகளுக்கான சில முறைகளை கவனத்தோடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-35)

இன்றையதினம் திட்டமிடப்படாத முறையில் "மஷ்ரூம் குரோத்" என்று சொல்லுவதற்கு இணங்க நகரங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றையநிலையில் மக்கள் வீடு கட்ட முடியாத நிலை இருக்கிறது. காரணம் வீட்டுமனைகள் வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்திருக்கின்றன. எனவே வீட்டு மனை வாங்குவதே கஷ்டம். அதற்கு மேல் செங்கல், இரும்பு, சிமிண்ட் ஆகியவற்றின் விலை எல்லாம் ஏறிவிட்டது. பொதுவாக, கட்டிடப் பொருள்கள் எல்லாவற்றின் விலையும் உயர்ந்துவிட்டது. எனவே இந்த நிலையில் வீடு கட்டுவதே கஷ்டம் என்று இருக்கும்போது, அதற்கு மேலே இருக்கிற இடங்களில் "பொல்யூஷன்" அதிகமானால், நாளைக்கு அரசுக்குத்தான் அதிகமாகச் செலவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஒரு நகரத்தில் வாழ்கிற மக்கள் நோய் நொடிகளுக்கு ஆளாகாமல் இருந்தால்தான், அங்கெல்லாம் நல்ல முறையில் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும். அதைப் போலவே அரசு காரியாலயங்களில் நல்ல முறையில் வேலைகள் நடக்கும். இதற்கு முக்கியமான தேவை நகரத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதாகும். எனவே இப்படிப்பட்ட பாதுகாப்புகளை உருவாக்குவது அவசியம். நகர அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இவைகளை யெல்லாம் ஆலோசித்து விதிமுறைகளாக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும்கூட, இவை எங்கேயும் அமலுக்கு வருவதில்லை. ஆகவே அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். கண் காணிப்போடு செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி கட்டிடப் பொருள்கள் எல்லாம் விலை ஏறியிருக்கின்றன. இதில் இரும்பு விலையும் சிமிண்ட் விலையும் நம் கையில் இல்லை. இவை இரண்டுமில்லாமல் நாம் வீடு கட்ட முடியாது. இவைகளுக்கு மேலாக இன்றைக்கு செங்கல் விலையும் ஏறிவிட்டது. கேட்டால் மண் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் கட்டிடங்களுக்குத் தேவையான அத்யாவசியப் பொருள்களின் மீது விலைக் கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதற்கு நம் மாநில அரசும் மத்திய அரசும் முன்வர வேண்டும். பிரச்சினையின் தன்மையை உணர்ந்து தக்க நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும். பெரிய நிறுவனங்களைப் பொறுத்தவரையில், ஒரு நிர்ணயிக்கப்பட்ட விலையில் கட்டிடத்திற்கான பொருள்களை வாங்கிவிடலாம். ஆனால் சாதாரண ஏழை எளிய மக்கள் அப்படி வாங்க முடியாது. 400 சதுர அடிக்குள் கட்டுவதாக இருந்தால், அதற்குக் கடன் வசதி உண்டு, மற்றும் கட்டுப்பாடான விலையில் பொருள்கள் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அரசே இன்றைக்கு எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுப்பது என்பது முடியாத காரியம். எனவே சுய முயற்சியில் மக்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும்போது, அவர்களுக்கெல்லாம் கட்டுப்படியாகக் கூடிய விலையில் கட்டிடப் பொருள்கள் கிடைக்கவும், கடன் வசதி கிடைக்கவும் அரசு உறுதி செய்ய வேண்டும். அதற்கான முறையில் கவனம் செலுத்த வேண்டும். இல்லை என்றால், இன்றைக்கு பெருகி வரும் ஜனத்தொகையின் அடிப்படையில் பார்த்தால்—வெறும் ஜனத்தொகையை மட்டும் நான் குறிப்பிடவில்லை—கிராமங்களில் உள்ளவர்கள் நகரத்தில் வந்து குடியேறுகிற நிலைமை அதிகமாகிவிட்டது. இந்த நிலைமையை ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் நிறுத்திவிட முடியாது. அந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்றால், விவசாயம், மற்றும் தொழில் துறையில் அடிப்படையில் மாற்றத்தைக் கொண்டு வந்து கிராமத்தில் இருப்பவர்களுக்கெல்லாம் அங்கேயே வேலை கிடைக்கிற நிலையை உருவாக்கினால் ஒழிய, இத்தகைய migration to the town போக்கை நாம் தடுக்கவே முடியாது. எனவே நகரங்கள் பெருகிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நகர அபிவிருத்திக்குத் தக்க யோசனை செய்து அத்தியாவசியமான பல காரியங்களைச் செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றி





தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் நாமெல்லாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், வீட்டு வசதி என்பது ஒரு அவசியமான ஒன்றாகிவிட்டது என்பது நம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒன்றாகும். வீட்டு வசதி இல்லாதவர்கள்—பொதுவாக அவர்கள் அரசியலில் இருந்தாலும் அல்லது வேறு துறைகளில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் சரி, அவர்கள் ஒழுங்காகப் பணியாற்ற முடியாது. வீட்டு வசதி இல்லாத காரணத்தால், சில பேர் அரசியலில் இன்றைக்குக் குழப்பம் செய்து கொண்டிருப்பார்கள். அதைப் போலவே சிலருக்கு வீட்டு வசதி இல்லாத காரணத்தால், ஊழியர்களோடு பணியாற்றுகிற இடத்தில் குழப்பம் செய்து கொண்டிருப்பார்கள். வீட்டு வசதி என்பது ஒரு அடிப்படையான தேவை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தால்தான் இன்றைக்கு இந்த அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னாலே, எந்த அளவுக்கு வீட்டு வசதியை உருவாக்க முடியுமோ அந்த அளவுக்கு உருவாக்குவதற்காக பல்வேறு வகையில் திட்டங்களை வகுத்து பல்வேறு தரப்பட்ட மக்களுக்கும் வீட்டு வசதியைத் தேடிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மாளிகையில் இருப்பவர்களுக்கு மேலும் வசதியைச் செய்து தருவதைவிட அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் குடிசைகளில் வாழ்கிற ஏழை எளிய மக்களுக்கு எப்படி வசதி அளிப்பது என்ற முறையில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட உடனே சென்னை மாநகரத்தில் திடீரென்று தீப்பற்றி விபத்துக்கள் அதிகமாகி, அதன் காரணமாகக் குடிசையில் வாழ்கிற ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அவசர அவசரமாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் எரியாத வீடுகளை—தீப்பிடிக்காத வீடுகளை—கட்டித்தர வேண்டும் என்று திட்டமிட்டு அது இன்றைக்குப் பெரிய அளவில் வளர்ந்து குடிசை மாற்று வாரியமாகச் செயல்பட்டு எந்த அளவுக்கு அது சென்னை நகரில் பணியாற்றிக் கொண்டு வருகிறது என்பதை நாம் அறிவோம்.

(முற்பகல் 10-40)

ஆனால் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டி குடிசைகளில் இருந்தவர்களை அங்கே குடியேற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு அரசு செயல்பட்டிருந்தாலும், இன்றைக்கு பல்வேறு நடுத்தர மக்கள் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளைப் பயன்படுத்துகிறார்கள். ஒவ்வொரு பகுதியிலும் குடிசை மாற்று வாரியத்தால்

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 ஏப்ரல் 18

கட்டப்பட்ட விடுகளில் இருக்கின்ற பல குடிசை வாசிகள் திரும்பவும் குடிசையிலே வாழ்வதே நல்லது என்று கருதி மீண்டும் குடிசைக்கே போய்க் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியிலும் குடிசை மாற்று வாரியம் குடிசைகளின் கணக்கெடுத்து விடுகளைக் கட்ட வேண்டும் என்று நிதி ஒதுக்கி வீடுகளைக் கட்டிக் கொடுத்தாலும், அதாவது ஆயிரம் பேருக்கு வீடு கட்டிக் கொடுத்தாலும், திரும்பவும் ஆயிரம் குடிசைகள் அந்தப் பகுதியிலே வருகின்றன. இதற்கு என்ன காரணம் என்று யோசித்து, இதில் ஏன் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன என்பதைச் சிந்தித்து இந்தப் பிரச்சினையை ஒழிக்க வேண்டும் என்ற முறையில் அரசியலில் இருக்கிறவர்கள் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்வேன்.

பொதுவாக சென்னை மாநகரம் பெருமை தேடித்தரும் அளவிற்கு இருக்க வேண்டுமென்றால் சென்னையைச் சுற்றியுள்ள நெருக்கடியான பகுதி களில் நிச்சயமாக குடிசைகளே இல்லாத அளவிற்குச் செய்ய வேண்டும். அந்த வகையிலே குடிசை மாற்று வாரியம் வீடுகளைக் கட்டிக் கொடுத்தாலும், மீண்டும் குடிசைகளைப் போடுகிறார்கள். ஆகவே பத்தாண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம், 25 ஆண்டுக் காலம் என்ற அளவிற்கு ஒரு திட்டத்தைத் தீட்டி, ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் ஐந்து வட்டங்கள் அல்லது பத்து வட்டங்களைத் தேர்ந்தெடுத்து அந்த வட்டங்களில் இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டில் குடிசைகள் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில், அந்த வட்டங்களில் உள்ள குடிசைகளைக் கணக்கெடுத்து, அந்தக் குடிசைகளில் இருக்கின்றவர்களுக்கு மாற்று வீடுகளைக் கட்டிக் கொடுத்து அவர்களைக் குடியேற்றியதற்குப் பிறகு, அந்த வட்டங்களில் அதற்கு மேல் யாரும் குடிசை களைப் போடக் கூடாது என்று அறிவிக்க வேண்டும். அப்படி மீண்டும் குடிசையைப் போட்டால், அதைப் பிரித்தெறிகிற அதிகாரத்தை அந்த அதிகாரி களுக்குத் தர வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பத்தாண்டுக் காலத்திற்குள் அல்லது இருபது ஆண்டுக் காலத்திற்குள் இப்படி சென்னை மாநகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடிசைகளே இல்லாத அளவிற்குச் செய்வதன் மூலமாகத்தான் மிகப் பெரும் பெருமையை சென்னை மாநகருக்குத் தேடித் தர முடியும்.

குடிசைகளை ஒழிக்க வேண்டும் என்று சொல்லும்போது, குடிசைகளில் வாழ்பவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். பல்வேறு வசதிகளை நாம் செய்து கொடுக்கிறோம். இருந்தாலும் அவர்கள் அந்த வசதிகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. குடிசைப்



1986 ஏப்ரல் 18 [திரு. எஸ். ஆர். இராதா]

பகுதிகளில் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. அடிக்கடி தீ விபத்துக்கள் சென்னை நகரக் குடிசைப் பகுதிகளிலே ஏற்படுகின்றன. இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும். தீ விபத்து ஏற்படுகிற இடங்களில் குடிசையில் இருப்பவர்களுக்கு ஒரு பாதுகாப்பு என்ற முறையில் இன்ஷூரன்ஸ் திட்ட அடிப்படையில் பாதுகாப்பு தர முடியுமா என்று நாம் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். இதற்காக குடிசைவாசிகளிடம் ஒரு கட்டணத்தை வசூல் செய்து, அரசும் அதற்கேற்ப ஒரு கட்டணத்தைத் தந்து, இந்த இரண்டையும் சேர்த்து இன்ஷூரன்ஸ் திட்டத்தில் கொடுத்து, குடிசைகள் தீப்பற்றி எரிந்தால் அவர்களுக்கு அதிக உதவிகள் செய்வதற்கு வாய்ப்புகள் உருவாக்கித் தரும் நிலையை ஏற்படுத்தச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக சென்னையிலே உள்ள குடிசைகள் எரிந்ததற்குப் பிறகு அந்த குடிசைவாசிகள் படும் பாட்டைப் பார்க்கிறபோது, மிகவும் வேதனையாக இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான சொத்துக்களை அவர்கள் இழந்து படுகிற வேதனையைப் பார்க்கும்போது, நாம் தருகிற உதவி சாதாரண நிலையிலேதான் அமைகிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகவே இன்ஷூரன்ஸ் மூலமாக அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இன்ஷூரன்ஸ் ஏற்பாட்டைச் செய்து, எல்லா இடங்களிலும் உள்ள குடிசைகளையும் இத் திட்டத்திலே இணைந்து இதை வளர்க்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல குடிசைகளில் இருக்கிறவர்கள் அடிக்கடி பெயரை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பல வீடுகளுக்கு மாற்றிக்கொண்டு பெயரை மாற்ற வேண்டும் என்று அதிகமான அளவிற்கு விண்ணப்பம் கொடுக்கிறார்கள். அப்படி பெயர் மாற்றத்திற்கு அனுமதித்தால், அது பெரிய அளவிற்கு விற்பனைக்குரிய இடமாக ஆகிறது. பெரிய வியாபார ஸ்தலமாக ஆகிறது. பெரும்பாலான இடங்களை குடிசைவாசிகளுக்குத்தான் தர வேண்டும் என்ற நிலை இருந்தாலும், இதை முழுமையாக, தீவிரமாகப் பின்பற்றும் நிலை ஏற்படவில்லை. காரணம் குடிசைப் பகுதிகளில்தான் அதிகமான அளவிற்கு அரசியல் நடமாட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அரசியல் நடமாட்டம் எங்கே அதிகமாக இருக்கிறதோ அங்கே நிச்சயமாக ஒழுங்காக எதுவும் வருவதில்லை. அவ்விடங்களில் முறையாக சட்டத்திற்குட்பட்டு கொண்டுவர வேண்டிய நிலையை நம்மாலே உருவாக்க முடியவில்லை. குடிசைவாசிகளின் நலனுக்காக நாம் எவ்வளவுதான் விளம்பரம் செய்தாலும், பல இடங்களில் சுகாதாரக் கேடு இன்னமும் இருக்கிறது. விளம்பரம் செய்ய வேண்டு

மென்றால்—சென்னை நகரத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய நிலையை நினைத்துப் பார்க்கிறேன்—

(முற்பகல் 10-45)

இந்த அரசு விளம்பரத்தை செய்துதான் வாழ்ந்துகொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டைக் கூறினார்கள். "இந்த அரசு விளம்பரத்தை நம்பித்தான் வாழ்கின்றது. புரட்சித் தலைவர் அரசு விளம்பரத்தை நம்பித்தான் வாழ் கின்றது" என்றுகூட இங்கே சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொல்லும் போது, மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வை நான் உணர்ந்துகொண் டேன். பல விஷயங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஒரு காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் கதரை நம்பியவன்தான் வாழ்வான் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் யார் யார் ஆண்டி போடுகின்றார்களோ அவர்கள்தான் வாழ முடியும் என்று சொன் னார்கள். ஆண்டி போடாதவர் அந்தக் கட்சியிலே இல்லாத அளவுக்கு அன்று இருந்தது. அப்படி ஆண்டி இருந்தால்தான் வாழ முடிந்தது என்பதை பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதுபோலவே எங்கள் மீதும் குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காகவே இந்த அரசு விளம்பரத்தையே நம்பிக்கொண்டிருக்கின்றது என்று சொல்கின்றார்கள். இந்தக் குற்றச்சாட் டிலே எந்த அளவுக்கு உண்மை இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு பல்வேறு அரசுத் துறைகள் இருக்கின்றன. அந்த அரசுத் துறைகள்தான் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தொகையை ஒதுக்கி விளம்பரங் களைச் செய்துகொண்டிருக்கின்றன. அந்த விளம்பரத்தைப் பார்க்கின்ற போது, பொறாமையும் பொச்சரிப்பும் அவர்களுக்கு வருகின்றது. டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் படம் வருகின்றபோது, பொறாமைப்படுகின்றார்கள். இதில் என்ன அதிசயம் இருக்கின்றது. அப்படி இன்றைக்குத்தானா வருகின்றது? என் அந்தப் படங்கள் வருவதைப் பார்க்கிறபோது கோபம் வருகின்றது என்பது தெரியவில்லை. அதை யாராவது மறைக்க வேண்டு மென்று நினைக்கலாம். ஆனால் முடியாது. இன்றைக்கு அல்ல, இன்னும் 25 ஆண்டு 30 ஆண்டு காலத்திற்கு அவர் புகழ் இருந்துகொண்டிருக்கும். இந்த நல்ல மனிதர்கள் இருக்கின்ற வரையில், நிச்சயமாக எம்.ஜி.ஆர். அவர்களின் படமும் அப்படியாக இருந்தாலும், மறைக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வேன். அவருடைய படம் வருகின்ற நேரத்திலே இவர்களுக்குக் கோபம் வருகின்றது. எம்.ஜி.ஆர். படத்தைப் போடுகின் றார்கள் என்றால், இதற்கு முன்னால் பல பேர் போடாதவர்கள் போல. போடா மல் வைத்தவர்கள் போல. [illegible]



பேசுகின்ற பேச்சைக் கேட்கும்போதுதான், என்னைப் போன்ற சாதாரண தொண்டர்களுக்கு வருகின்ற கோபம் எல்லாம், செய்யவேண்டிய அளவுக்கு அக்கிரமங்களைச் செய்துவிட்டதற்குப் பின்னாலே இவ்வளவு துணிவாகப் பேசுகின்றார்களே அது எப்படி என்பதுதான். இந்தத் துணிவு அவர்களுக்கு எப்படி வருகின்றது? அதைத்தான் நான் சிந்திக்கிறேன். இதற்கு முன்னாலே விளம்பரம் என்று சொன்னால் எல்லாவற்றையும் விளம்பரம் செய் யலாம், கக்கூஸ் வரையிலே விளம்பரம் செய்யலாம். அதிலேகூட நம்முடைய படத்தைப் போடலாம் என்ற அளவுக்கு இருந்தார்கள். இன்றைக்கு விளம்பரம் செய்கின்றார்கள் என்று அவர்கள் எங்கள் மீது குற்றம் சொல்கின் றார்கள். தவறு செய்துவிட்டு, ஊழல் செய்துவிட்டு பின்னாலே இன்றைக்கு எங்களைப் பார்த்து அப்படிச் சொல்கின்றார்கள். அவர்களும் கண்ணாடி முன்னாலே நின்று தங்கள் உருவத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பார்த்தால்தான், "நாம் என்ன செய்தோம்? நான் செய்ததை அவர்கள் செய்கின்றார்களா, மாற்றிச் செய்கின்றார்களா" என்பது தெரியும். என்ன வேறுபாடு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். இப்படிப் பேசுவது என்றால், அப்படி யார் வேண்டுமானாலும் பேசலாம். அது நிச்சயமாக ஒரு அரசியல் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்குமா என்றால், அது நிச்சயம் வழி வகுக்காது என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்றைச் சொல்வேன். இன்றைக்கு வீட்டுவசதி வாரியத்திலே பல்வேறு இடங்களிலே வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு ஏற்பட்டதற்குப் பின்னாலேதான் அதிலே தவறுகள் நடக்கக்கூடாது என்பதற் காக பல்வேறு முறைகளை உருவாக்கியிருக்கின்றது. அந்த முறைகளிலே குற்றச்சாட்டுகள் இருக்குமானால், அதற்கான பரிகாரம் காணுவதற்கு நாங்கள் தயாராக இருப்போமே தவிர, யார் தவறு செய்தாலும் அந்தத் தவறுக்கு உறு துணையாக இருப்போம் என்று மட்டும் கருத வேண்டாம். இன்று அதில் தவறு சொல்பவர்களையே கேட்கிறேன். தவறு சொல்கின்றீர்கள். இன்றைக்கு வீட்டுவசதி வாரியம் தவறு செய்கிறது என்று சொல்கின்ற தைரியம் வரும் என்றால் சொல்லுங்கள், எந்தெந்த இடத்திலே தவறு செய்திருக்கின்றார்கள் என்று சொல்ல வேண்டும். அதிலே அரசியல் எந்த அளவுக்கு விளையாடி இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். தவறு சொல்பவர்கள் இதை எல்லோர் நினைத்துப் பார்க்க வேண்டும். உதாரணத் திற்குச் சொல்கிறேன். வீட்டு வசதி வாரியம் இன்றைக்கு வீடு பெறுவதற்கு என்று சில தகுதிகளை நிர்ணயித்திருக்கின்றது. இன்றைக்கு அதற்கு குலுக்கல் முறையை வகுத்திருக்கின்றது. இன்றைக்கு வீடு பெறுகின்ற

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 ஏப்ரல் 18

மென்றால்—சென்னை நகரத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய
நிலையை நினைத்துப் பார்க்கிறேன்—

(முற்பகல் 10-45)

இந்த அரசு விளம்பரத்தை செய்துதான் வாழ்ந்துகொண்டிருக்கின்றது என்ற
குற்றச்சாட்டைக் கூறினார்கள். "இந்த அரசு விளம்பரத்தை நம்பித்தான்
வாழ்கின்றது. புரட்சித் தலைவர் அரசு விளம்பரத்தை நம்பித்தான் வாழ்
கின்றது" என்றுகூட இங்கே சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொல்லும்
போது, மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வை நான் உணர்ந்துகொண்
டேன். பல விவரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஒரு காலத்தில்
காங்கிரஸ் ஆட்சியில் கதரை நம்பியவன்தான் வாழ்வான் என்று சொல்லிக்
கொண்டிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் யார்
யார் துண்டு போடுகின்றார்களோ அவர்கள்தான் வாழ முடியும் என்று சொன்
னார்கள். துண்டு போடாதவர் அந்தக் கட்சியிலே இல்லாத அளவுக்கு அன்று
இருந்தது. அப்படி துண்டு இருந்தால்தான் வாழ முடிந்தது என்பதை
பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதுபோலவே எங்கள் மீதும்
குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காகவே இந்த அரசு விளம்பரத்தையே
நம்பிக்கொண்டிருக்கின்றது என்று சொல்கின்றார்கள். இந்தக் குற்றச்சாட்
டிலே எந்த அளவுக்கு உண்மை இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும்.
இன்றைக்கு பல்வேறு அரசுத் துறைகள் இருக்கின்றன. அந்த அரசுத்
துறைகள்தான் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தொகையை ஒதுக்கி விளம்பரங்
களைச் செய்துகொண்டிருக்கின்றன. அந்த விளம்பரத்தைப் பார்க்கின்ற
போது, பொறாமையும் பொச்சரிப்பும் அவர்களுக்கு வருகின்றது. டாக்டர்
எம்.ஜி.ஆர். அவர்கள் படம் வருகின்றபோது, பொறாமைப்படுகின்றார்கள்.
இதில் என்ன அதிசயம் இருக்கின்றது. அப்படி இன்றைக்குத்தானா
வருகின்றது? என் அந்தப் படங்கள் வருவதைப் பார்க்கிறபோது. கோபம்
வருகின்றது என்பது தெரியவில்லை. அதை யாராவது மறைக்க வேண்டு
மென்று நினைத்தால், அது முடியாது. இன்றைக்கு அல்ல, இன்னும் 25
ஆண்டு 30 ஆண்டு காலத்திற்கு அவர் புகழ் இருந்துகொண்டிருக்கும். இந்த
நல்ல மனிதர்கள் இருக்கின்ற வரையில், நிச்சயமாக எம்.ஜி.ஆர். அவர்களின்
படத்தை யார் யாராக இருந்தாலும், மறைக்க முடியாது என்பதை நான் இந்த
நேரத்தில் சொல்லிக்கொள்வேன். அவருடைய படம் வருகின்ற நேரத்திலே
இவர்களுக்குக் கோபம் வருகின்றது. எம்.ஜி.ஆர். படத்தைப் போடுகின்
றார்கள் என்றால், இதற்கு முன்னால் படம் போடாதவர்கள் போல, போடா
[illegible] சேர்ந்தவர்கள் போல. இன்றைக்கு அரசுக்கு [illegible] போல



1986 ஏப்ரல் 18 [திரு. எஸ். ஆர். இராதா]

பேசுகின்ற பேச்சைக் கேட்கும்போதுதான், என்னைப் போன்ற சாதாரண தொண்டர்களுக்கு வருகின்ற கோபம் எல்லாம், செய்யவேண்டிய அளவுக்கு அக்கிரமங்களைச் செய்துவிட்டதற்குப் பின்னாலே இவ்வளவு துணிவாகப் பேசுகின்றார்களே அது எப்படி என்பதுதான். இந்தத் துணிவு அவர்களுக்கு எப்படி வருகின்றது? அதைத்தான் நான் சிந்திக்கிறேன். இதற்கு முன்னாலே விளம்பரம் என்று சொன்னால் எல்லாவற்றையும் விளம்பரம் செய்யலாம், கக்கூஸ் வரையிலே விளம்பரம் செய்யலாம். அதிலேகூட நம்முடைய படத்தைப் போடலாம் என்ற அளவுக்கு இருந்தார்கள். இன்றைக்கு விளம்பரம் செய்கின்றார்கள் என்று அவர்கள் எங்கள் மீது குற்றம் சொல்கின்றார்கள். தவறு செய்துவிட்டு, ஊழல் செய்துவிட்டு பின்னாலே இன்றைக்கு எங்களைப் பார்த்து அப்படிச் சொல்கின்றார்கள். அவர்களும் கண்ணாடி முன்னாலே நின்று தங்கள் உருவத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பார்த்தால்தான், "நாம் என்ன செய்தோம்? நான் செய்ததை அவர்கள் செய்கின்றார்களா, மாற்றிச் செய்கின்றார்களா" என்பது தெரியும். என்ன வேறுபாடு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். இப்படிப் பேசுவது என்றால், அப்படி யார் வேண்டுமானாலும் பேசலாம். அது நிச்சயமாக ஒரு அரசியல் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்குமா என்றால், அது நிச்சயம் வழி வகுக்காது என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்றைச் சொல்வேன். இன்றைக்கு வீட்டுவசதி வாரியத்திலே பல்வேறு இடங்களிலே வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு ஏற்பட்டதற்குப் பின்னாலேதான் அதிலே தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காக பல்வேறு முறைகளை உருவாக்கியிருக்கின்றது. அந்த முறைகளிலே குற்றச்சாட்டுகள் இருக்குமானால், அதற்கான பரிகாரம் காணுவதற்கு நாங்கள் தயாராக இருப்போமே தவிர, யார் தவறு செய்தாலும் அந்தத் தவறுக்கு உறுதுணையாக இருப்போம் என்று மட்டும் கருத வேண்டாம். இன்று அதில் தவறு சொல்பவர்களையே கேட்கிறேன். தவறு சொல்கின்றீர்கள். இன்றைக்கு வீட்டுவசதி வாரியம் தவறு செய்கிறது என்று சொல்கின்ற தைரியம் வரும் என்றால் சொல்லுங்கள், எந்தெந்த இடத்திலே தவறு செய்திருக்கின்றார்கள் என்று சொல்ல வேண்டும். அதிலே அரசியல் எந்த அளவுக்கு விளையாடி இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். தவறு சொல்பவர்கள் இதை எல்லாம் நினைத்துப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். வீட்டு வசதி வாரியம் இன்றைக்கு வீடு பெறுவதற்கு என்று சில தகுதிகளை நிர்ணயித்திருக்கின்றது. இன்றைக்கு அதற்கு குலுக்கல் முறையை வகுத்திருக்கின்றது. இன்றைக்கு வீடு பெறுகின்ற

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 ஏப்ரல் 18

வர்கள் என்று சொல்லும்போது, இன்றைக்கு சென்னை மாநகரத்திலே இருக்கின்ற வட நாட்டுக்கார வியாபாரிகள் இதை லாட்டரி சீட்டுபோலக் கருதி, எங்கேயாவது வீடுகள் கட்டித் தரப்படும் என்று விளம்பரம் செய்தால், உடனே அவர்கள் 10 மனுக்கள், 20 மனுக்கள் என்று லாட்டரி சீட்டுக்குப் போடுவதுபோல போட்டு அதில் 4 வீடுகளாவது கிடைக்காதா என்று மனு போடுகின்றார்கள். அந்த அளவுக்கு அந்த முறையிலேயும் அவர்கள் பெருந்து லாபம் சம்பாதிக்கின்ற அளவுக்கு இருக்கின்றார்கள். அவர்கள் அந்த முறையிலே இருக்கின்ற நியாயத்தைக்கூட ஏற்றுக்கொள்ளாதவர்களாக இருக்கின்றார்கள். இதற்கு முன்னால் என்ன நடந்தது? எனக்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நடக்கின்ற நேரத்தில் யார் யாருக்கு வீடுகள் கிடைத்தன? யார் வேண்டுமென்று கருதினார்களோ அவர்களுக்குக் கிடைத்தது. நினைத்தவர்களுக்குத் தரலாம் என்று இருந்தது. அவர்களுக்கு அதிகாரம் இருந்த நேரத்திலே வாங்கியிருக்கின்றார்கள். எனக்குத் தெரியும். பொதுப் பணித் துறையிலே என்னுடைய நண்பர் ஒருவர் வீடு பெற்றிருக்கின்றார். கோட்டூர்புரத்திலே சொந்த வீடு வைத்திருந்தவர் பெற்றிருக்கின்றார். நண்பர்தான். அவர் நண்பர் என்ற காரணத்தினாலேயே பரவாயில்லை என்று இருந்தேன். அதனால் அதற்கு அனுமதித்தேன். இன்றைக்கு அவர்கள் சொல்கின்றார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அப்படி இருந்தால், இன்றைக்கு அதைப்பற்றி எடுத்துச் சொல்லலாம்.

(முற்பகல் 10-50)

யார் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் வீடு வாங்கியிருக்கிறார்கள்? எத்தனை எம்.எல்.ஏ.க்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று கணக்கு பார்க்கும்போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எத்தனை தி.மு.க. எம்.எல்.ஏ., எம்.எல்.சி.க்கள் வீடு வாங்கினார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். இன்றைக்கும் ஆயிரக் கணக்கில் வாடகை வாங்குகிறார்கள். இன்றைக்கும் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தூய்மை என்று பேசுகிறார்கள். "நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை" என்று சொல்லுகிறார்கள். தவறு செய்யவில்லை என்றால், 'நாங்கள் தவறு செய்யவில்லை' என்று தைரியமாகச் சொல்லட்டும். நான் இவ்வளவு துணிவாகச் சொல்லக் காரணம், இந்த அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் யார் தவறு செய்தாலும், அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நோக்கம் கொண்



1986 ஏப்ரல் 18] [திரு. எஸ். ஆர். இராதா]

டிருப்பதால் சொல்கிறேன். "நாங்கள் செய்யவில்லை" என்று சொல்லட்டும். "நாங்கள் தூய்மையாக நடந்துகொண்டிருக்கிறோம்" என்று சொல்லட்டும். ஒன்றைக் கேட்கலாம், அரசியல் வாதிகளுக்கு வீடு கொடுக்கக் கூடாதா என்று கேட்கலாம். அவர்கள் என்ன ரோட்டிலா வசிப்பார்கள் என்று கேட்கலாம். அப்படிக் கேட்டவர்கள், இன்றைக்கு 'அவர்களுக்குத் தந்துவிட்டார்கள்' என்று சொல்லுகிறார்கள். அன்றைக்குச் செய்த தவறை மறைப்பதற்காக இன்றைக்குப் பேசப்படும் பேச்சாகத்தான் இது இருக்கிறது. அப்படி இல்லாமல் இந்த வகையில் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்று சொல்லும் நிலைமை வர வேண்டும். அப்படி எந்த அரசியல்வாதி சொன்னாலும் சொல்லட்டும். அதை ஏற்றுக்கொள்ளும் கடமை எங்களுக்கு இருக்கிறது.

அடுத்து, இன்றைக்கு பல்வேறு துறையினருக்கு அரசு வீடுகளைத் தருகிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், அரசு வாடகை வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறது. அரசு ஊழியர்களுக்கும், பல்வேறு தரப்பு மக்களுக்கும் இன்றைக்கு வசிப்பதற்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். வாடகை வீட்டுத் திட்டம் என்ற பெயரிலே அதைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வீடுகளிலே குடியிருக்கிறவர்கள் அரசு ஊழியர்கள். அங்கே அரசியல் வாதிகளும் குடியிருக்கிறார்கள். சில இடங்களில் பத்திரிகைத் துறையில் இருக்கிறவர்களுக்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்கி இருக்கிற வீடுகளிலே பார்த்தால், மாண்புமிகு தலைவரவர்களே. தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். அரசு வாடகைக் குடியிருப்பில் இருக்க வேண்டுமென்றால், அவர்கள் அரசு ஊழியர்களாக இருக்கும்வரையில்தான் அங்கு குடியிருக்க முடியும். அவர்கள் அரசு ஊழியர்களாக இல்லை என்றால், அந்த வீட்டைக் காலி செய்துவிட்டுப் போக வேண்டும். ஆனால் ஒரு அரசியல் வாதி அங்கே வசித்தால், எந்த ஊரிலே எத்தனை வீடுகள் வைத்திருந்தாலும், சென்னையிலே வீடு வைத்துக்கொண்டு, வாடகை வந்தாலும், அவர் இருக்கிற வரை அந்தக் குடியிருப்பிலே குடியிருக்க முடியும். என்றைக்கோ பத்திரிகையிலே வேலை செய்தவன் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, பல பேர் இப்போது பத்திரிகைத் தொழிலில் இருப்பதாகக் காட்டி, வேறு தொழில் செய்து கொண்டு, இந்த வீடுகளிலே இன்றைக்கும் குடி இருக்கிறார்கள் அவர்களை அகற்ற வேண்டுமென்றால், உடனே அரசியல்வாதிகள் குறுக்கிட்டு 'நமக்கு வேண்டியவன், கொஞ்சம் பார்த்து விட்டு விடுங்கள்' என்று சொல்லுகிறார்கள். இதனால் நியாயமாகப் பத்திரிகைத் துறையில் வாழ்ந்து கொண்

டிருக்கிற பல ஊழியர்களுக்கு வீடு தர முடியவில்லை. இந்த நிலைமைகளை மாறுவதற்கு கொஞ்சம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி தீவிர நடவடிக்கை எடுக்கும்போது, அரசியல் எதிர்ப்புகள் வரத்தான் செய்யும். அரசியல்வாதிகளுக்கு ஒரு பயம். எதிர்ப்புகள் வரும்போது, கொஞ்சம் அஞ்ச வேண்டிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற அரசியல் சூழ் நிலையைப் பார்த்தால், திடீர் திடீரென்று பழி போடுவார்கள். அதற்குப பத்திரிகை துலை இருக்கிறது. பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் போட்டு விடுவார்கள். ஒரு நாள் பழி போட்டால், அதைத் தீர்க்க எத்தனையோ நாட்களாகும். அதனால் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குச் சொல்கிறேன், பயப்படாமல் துணிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பழி வரும் என்பதற்காகப் பயப்பட வேண்டாம். அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கும் நேரத்தில் பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் போடுவார்கள். அது மிரட்டுவதைத் தவிர வேறல்ல. தவறுகளைக் களைய வேண்டுமென்ற நோக்கத்திற்காக அல்ல அது. அடுத்து தவறுக்கு அச்சாரம் போடுவதாகத் தான் அது இருக்கும்.

இன்னும் ஒன்றைச் சொல்வேன். அரசு வாடகைக் குடியிருப்புகளில் பராமரிப்புப் பணிகளை அதிகமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். ஏனென்றால், இவற்றைக் கவனிக்கும் நிலைமையைப் பார்க்கும் போது, அரசு வாடகைக் குடியிருப்புகளுக்கு பராமரிப்புக்காக ஒதுக்கப்பட் டுள்ள பணம்—அதாவது அது வீட்டு வசதி வாரியத்தின் பொறுப்பிலே இருந் தாலும் சரி, பொதுப் பணித் துறையின் பொறுப்பிலே இருந்தாலும் சரி, மிகக் குறைவாக இருக்கிறது. எனவே இன்னும் கொஞ்சம் அதிகமான பராமரிப்பு இருந்தால், அந்த வீடுகள் மேலும் சிறப்பாக இருக்கும் நிலைமை உருவாகும். அதையும் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

(முற்பகல் 10-55)

அதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன் னொன்றையும் சொல்வேன். என்னதான் வீட்டு வசதியை வீட்டு வசதி வாரியம் செய்தாலும், இன்றைக்கு இருக்கிற அரசியல் சூழ்நிலையில் கட்டப் படுகின்ற கட்டிடங்களின் தரத்தை உயர்த்தியாக வேண்டும். வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் கட்டிடங்களாக இருந்தாலும் சரி அல்லது குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் கட்டிடங்களாக இருந்தாலும் சரி, அவை தரமானவைகளாகக் கட்டப்பட வேண்டும். இதிலே அரசு முனைப்பாக, முன் எச்சரிக்கையாக இருந்து செயல்பட வேண்டும்.



1967-க்குப் பின்னாலே, 1969 மற்றும் 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பல குடிசை மாற்று வாரிய விடுகளைப் பொறுத்தவரையில், அவைகள் லாயக்கற்ற நிலையில் இருக்கின்றன. அங்கே வாழ்கின்ற மக்களை கட்டாயமாக வெளி யேற்ற வேண்டிய நிலை இருக்கிறது. ஏன் அப்படி லாயக்கற்ற வகையில் கட்டினார்கள் என்று இன்றைக்குக் கேட்க முடியுமா என்று கேட்டால் கேட்க முடியாது. இன்றைக்கு ஒரு சாதாரண நகராட்சி என்றால்கூட, அங்கே ஒரு சிறிய தவறு செய்தால் கூட, அதற்குக் காரணமானவர்கள் அதற்குக் காரணமான பணத்தைக் கட்டினால்தான், அடுத்த தேர்தலில் நிற்க முடியும் என்கிற நிலை இருக்கிறது, அதற்கான விதியே இருக்கிறது. ஆனால் அரசைப் பொறுத்தவரையில், அரசிலே இருப்பவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிட்டு ஏப்பமிடலாம், லாயக்கற்ற முறையில் வீடுகள் கட்டிய அதிகாரிகள் மீதும் அவர்களுக்குத் துணையாக இருந்த அரசியல்வாதிகள் மீதும் எந்த ஒரு நடவடிக்கையும் கிடையாது. பல குடிசை மாற்று வாரிய வீடுகள் மக்கள் குடியிருக்க லாயக்கற்ற நிலையில் இருக்கின்றன. இன்றைக்கு அந்த வீடு களை எல்லாம் உடைத்து, இடித்துவிட்டு வேறு வீடுகளைக் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. இதன்மூலம் எவ்வளவு கோடி ரூபாய் பாழாகிறது. அத னால்தான் கட்டுகின்ற வீடுகளை தரமாகக் கட்ட வேண்டுமென்று சுட்டிக் காட்டுகிறேன். நாம் கூட இதற்காக தனியே அதிகாரிகளை வைத்திருக்கி றோம். அவர்களை வைத்து அவைகளை எல்லாம் பரிசீலிக்கச் சொல்கிறோம். வீட்டு வசதி வாரியம் என்றால், மேல் அதிகாரிகள், அதற்கு மேல் அதிகாரிகள் என்கிற நிலையில் பார்க்கின்ற நிலை இருக்கிறது. அதுபோல் குடிசை மாற்று வாரியம் என்றால், கடைசியில் தலைமைப் பொறியாளர் பார்க்கிற நிலை இருக்கிறது. அந்நிலையை மாற்றி வீட்டு வசதி வாரிய வீடுகள் என்றால், இன்றைக்கு பொதுப்பணித் துறை பொறியாளர்கள் இருக்கிறார் களே, அதற்கென்று தனியாக கட்டிடப் பொறியாளர்கள் இருக்கிறார்களே, அவர்களை வைத்து கொஞ்சம் இந்த வீடுகளை எல்லாம் கண்காணிக்கின்ற நிலைமை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருந்தால்தான், இனிமேல் கட்டப்படுகின்ற வீடுகள் மிகவும் தரம் உயர்ந்த கட்டிடங்களாகக் கட்டப்பட வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு நகரமைப்பு என்ற முறையில், நகர வளர்ச்சி என்று பார்த்தால், நகரங்கள் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. சின்ன சின்ன கிராமங்கள் கூட வேகமாக வளர்ச்சியடைந்து புதிய புதிய நகரங்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. டவுன் பிளானிங் என்று பார்த் தால், அந்த 25, 30 ஆண்டுகளாக பல இடங்கள் கவனிப்பாரற்ற நிலையில்

இருக்கின்றன. அவர்கள் அதற்கான காலத்தை நீட்டித்துக்கொண்டே போகிற நிலையில் திட்டங்கள் முடிந்தபாடில்லை. ஒவ்வொரு நகரசபையிலும் இதுதான் நிலைமை. அந்நிலையை மாற்றியமைக்க வேண்டும். திட்டங்களை இத்தனை ஆண்டுகளுக்குள் நிறைவேற்றியாக வேண்டுமென்ற வரைமுறையை உருவாக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் அந்தத் திட்டம் தேவையில்லை என்று சொல்லி ரத்து செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்கினால்தான் தவறுகள், அதுவும் திட்டங்களின் பெயரால் தவறுகள், நடக்க முடியாத நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திட்டங்களைத் தீட்டிவிட்டு அவற்றை நீட்டித்துக்கொண்டே போவதும், கிடப்பில் போடுவதும் நாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததல்ல.

அதேபோல இன்றைக்கு அநேக பகுதிகள், பல குடியிருப்புப் பகுதிகள் திடீர் திடீர் என்று உருவாகிக்கொண்டிருக்கின்றன. பல பேர் அனுமதி பெறாமலேயே அனுமதி பெற்றதாகக் கூறி, விளம்பரம் செய்து மனைகளை அதிக விலைக்கு விற்கிறார்கள். ஆனால் நகரமைப்பில் இருக்கிற விதிகளை இவர்கள் கொஞ்சம் கூட அனுசரிப்பதில்லை. ரோடு போடாமலேயே ரோடு போட்டதாகச் சொல்லி பிளானில் காட்டுவது, அனுமதி பெறாமலேயே அனுமதி பெற்றதாகச் சொல்லி விளம்பரப்படுத்தி விற்பது போன்ற நிலைகளை அவசியம் மாற்றியாக வேண்டும். இந்நிலையை மாற்ற அரசு விழிப்புடன் செயல்பட வேண்டும். யார் அனுமதி கேட்டாலும், முறையாகத் தெரிந்து கொண்டு செய்ய வேண்டும், முறையாக அவர்கள் விதிகளை அனுசரிக்கவில்லையென்றால், அனுமதி மறுக்க வேண்டும். அனுமதி கொடுத்த பிறகு, அவர்கள் சொல்லியபடி செய்யவில்லையென்றால், விதிகளைப் பின்பற்றவில்லையென்றால், அனுமதியை அரசு ரத்து செய்ய வேண்டும். நகரமைப்பு அந்த முறையில் சரியான முறையில் கவனிக்கப்பட வேண்டும்.

இன்றைக்கு நாம் பார்க்கிறோம், பல இடங்களில் அனுமதி வாங்காமல் கட்டிடங்களை, குடியிருப்புகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால், நகராட்சி கட்டுவதற்கான அனுமதியைக் கொடுத்துவிட்டது என்று தவறாகச் சொல்லும் நிலை இருப்பது நல்லதல்ல. டவுன் பிளானிங்கைப் பொறுத்தவரையில், நடைமுறையில் தவறுகள் நடைபெறாமல் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். புதிய நிர்வாகம் வந்திருக்கிற நிலையில் நகராட்சிகள் எல்லாம் இதற்குத் துணையாக இருக்க வேண்டும். டவுன் பிளானிங்கில் அதிகமாக கவனம் செலுத்தப்பட வேண்டும். இல்லையென்றால் பல்வேறு தவறுகள் தொடர்ந்து நடைபெற வாய்ப்பு ஏற்படும். பல்வேறு நகராட்சிகளைப் பொறுத்தவரையில், நகர மன்ற உறுப்பினர் நினைத்தால், அந்தப்



பகுதியில் யார் வேண்டுமானாலும் வீடு கட்டலாம் என்கிற நிலையும், யாருக்கு வேண்டுமானாலும் அந்த வீடுகளை விற்கலாம் என்கிற நிலையும் வந்துவிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அதனாலே நகர்மன்றங்களுக்காக நாம் வைத்திருக்கிற டவுன் பிளானிங் அதிகாரிகளானாலும் சரி, திட்டங்களானாலும் சரி, முனைப்பாக இருக்கிற அளவுக்கு பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதேபோல, இன்றைக்கு வீட்டுவசதி வாரியம் பல்வேறு வீடுகளை விற்பனைக்குக் கொடுத்த பின்னும் கூட, 5 ஆண்டுகள், பத்தாண்டுகளாக ஆனாலும் சரி, பணம் கட்டியதற்குப் பிறகு, அதை விற்க உரிமை கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. நான் இங்கே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன், இதை வேகமாக விரைவுபடுத்தி, விற்க விரும்புகிறவர்களுக்கு உடனடியாக அனுமதி கொடுத்து, யார் வேண்டுமானாலும் விற்கலாம் என்று சொன்னால், சென்னையில் மட்டுமல்ல, மற்ற நகரங்களில் மட்டுமல்ல, சுற்றுப்புறங்களில் இருக்கிற வீடுகளின் விலைகள் கூட உயர துணையாக இருக்கும். தடுக்கத் தடுக்க என்ன ஆகிறதென்றால், சில தவறுகள் நடக்கின்றன. தவறுகளைக் களைய வேண்டுமானால், அதிகாரிகள் மட்டத்தில் உட்கார்ந்து பேசி வீடு வாங்கியிருக்கிறவர்களுடைய கஷ்டத்தைப் போக்க, மாற்று வழிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்தனை ஆண்டுக்குப் பின்பு யார் வீடாக இருந்தாலும், அதை விற்கலாம் என்ற நிலையை சட்டபூர்வமாக உருவாக்க வேண்டும், இப்போது இருக்கும் சட்டத்தின் மூலம், சில தவறுகள் நடக்க வாய்ப்பு இருக்கின்றது. சில பேர் விண்ணப்பித்தால், காரியமே நடப்பதில்லை. சில பேர் விண்ணப்பித்தால், காரியம் நடக்கிறது. காரணம் அங்கே அவர்களுக்கு ஆட்கள் இருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இன்றைக்கு பல்வேறு நல்ல திட்டங்களை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சென்னையிலே ஒரு பெரிய வாணிபப் பகுதியை உருவாக்கத் திட்டமிட்டு காரியங்கள் நடக்கின்றன. அந்தக் காரியம் இன்றைக்கு எந்த வகையிலும் தேங்கி விடாமல் விரைவுபடுத்துகிற அளவுக்கு இன்னும் துரிதப்படுத்தி, சென்னையின் பிரச்சினையைத் தீர்க்க உறுதுணையாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு வீட்டு வசதிக்காக, இடங்களைத் தேர்ந்தெடுக்கிற நேரத்தில் சென்னை மாநகரம் மட்டுமல்ல, பல்வேறு பகுதிகளில் இடங்களைத் தேர்ந்தெடுக்கிறோம். ஆனால் பல ஆண்டுகள் ஆனதற்குப் பிறகுதான் அரசாங்

கத்தின் கைக்கு அந்த நிலங்கள் வருகின்றன. அதற்குப் பிறகு வாரியத்
திற்குச் சென்று, அதன் பின்னால்தான் கட்டிடம் கட்ட முடிகிறது. இதற்கு
10, 15 ஆண்டுக் காலமாகிவிடுகின்றது. இதுதான் இந்தத் திட்டத்தின்
நிலையாக இருக்கிறது. அதை மாற்றி, விரைவு படுத்துவதற்கு வீட்டு வசதி
வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான நிலத்தை எடுப்பதற்கான
அதிகாரம் அதிகாரிகளுக்கும், மக்களுக்கு விரைவில் பணம் போய்ச் சேர
வேண்டுமென்பதற்காக நடவடிக்கையும் எடுக்க வேண்டும். உதாரணத்திற்கு
நான் இருக்கும் கும்பகோணத்தில் ஒரு காலத்தில் வீடுகள் கட்ட வேண்டு
மென்று நிலத்தை எடுத்தார்கள். ஆனால் இன்றுவரையிலும் அதற்கான
பணிகள் நடக்கவே இல்லை. காலத்தில் வீடுகளைக் கட்ட முடியாத நிலை
இன்னும் இருக்கிறது. பல்வேறு நேரங்களில் இப்படிப்பட்ட நிலைதான்
இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
நிலம் எடுக்கிற நேரத்தில் எந்த அளவுக்குச் சிந்திக்க வேண்டுமோ அந்த
அளவுக்குச் சிந்தித்து நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும். சில நேரங்
களில் நிலம் எடுப்பதற்கு முடிவெடுத்து, அதன் பின்னாலே சில நடவடிக்கை
களுக்குப் பிறகு, அந்த நிலத்தை அவர்களுக்கே திருப்பிக் கொடுக்கிற
நிலைமை இருக்கிறதே, அதிலேதான் தவறே நடக்கிறது, ஊழல் உருவாவ
தற்கு வழி வகுக்கிறது. அப்படி நிலத்தை எடுப்பதற்கு முன்பு சிந்தித்து,
எடுத்ததற்குப் பின்பு நிலத்தைத் திருப்பித் தருகிற நிலை இல்லாமல் இருக்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பில் இவ்வளவு நேரம் பேச
வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

* டாக்டர் மு. கருணாநிதி : அன்பார்ந்த தலைவர் அவர்களே, வீட்டு வசதி
மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது
என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம் நடந்தபோது நான் அதிலே
கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்த நேரத்தில், சில
புள்ளி விவரங்கள் நிதியமைச்சர் படித்த நிதிநிலை அறிக்கைக்கும், பட்ஜெட்
மெமோரண்டம் என்று சொல்லப்படுகிற நிதிநிலைக் குறிப்புக்கும் முரண்
பாடாக அமைந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டினேன். அவற்றில்
பலவற்றை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.





(முற்பகல் 11-05)

1987 ஜனவரி முதல் மதுவிலக்கை அமல்படுத்தப்படுகிற காரணத்தால் 60
கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்கிற மாண்புமிகு நிதி அமைச்சரின்
அறிக்கைக்கு மாறாக (பட்ஜெட் மெமோரண்டம்) நிதி நிலை அறிக்கையில்
30 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று இருக்கின்ற வேறுபாட்டை மீண்டும்
சுட்டிக்காட்டியபோது, அந்தக் குறைபாடு எப்படி ஏற்பட்டதென்பதைப்
பிறகு தெரிவிக்கிறேன் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்
டார்கள்.

அதைப்போலவே இந்த அவையிலே இன்று வைக்கப்பட்டிருக்கின்ற இந்தக்
கொள்கை விளக்கக் குறிப்பிலும் தொடக்கத்திலேயே ஒரு குழப்பம் சுட்டிக்
காட்டப்பட வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறது. இதன் மூன்றாம்
பக்கத்தில் "1986—87 ஆம் நிதியாண்டில் மொத்தம் 16,400 வீடுகள்/மனைகள்
உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்காகும் மொத்தச் செலவு
ரூ. 3742.50 இலட்சம். அரசின் நிதி உதவி ரூ. 1,567.50 இலட்சமாகும்"
என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் கீழ் இதே பக்கத்தில், "பொரு
ளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்தின்
கீழ்) 7,200 குடியிருப்புகளுக்கு 700 இலட்சம் ரூபாய்—அதாவது 7 கோடி
ரூபாய்—என்றும், குடிசைப்பகுதி மாற்றுத் திட்டத்திற்கு 96 குடியிருப்பு
களுக்கு 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்றும், குறைந்த வருவாய்ப்
பிரிவினருக்கு 1,300 வீ'களுக்கு 300 இலட்சம் ரூபாய்—அதாவது 3 கோடி
ரூபாய்—என்றும், நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 5,016
குடியிருப்புகளுக்கு 1,875.00 இலட்சம்—அதாவது 18 கோடியே 75 இலட்சம்
ரூபாய்—என்றும், அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்திற்கு
2,788 குடியிருப்புகளுக்கு 8 கோடி ரூபாய் என்றும் ஆக மொத்தம் 16,400
குடியிருப்புகளுக்கு 1986-87 ஆம் ஆண்டு ஒதுக்கீடு 37 கோடியே 42
இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு
அரசு நிதி உதவி 15 கோடியே 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்றும்
குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மூன்றாம் பக்கத்தில் இருக்கிறது. ஆனால் ஐந்தாம் பக்கத்தில்
முதல் பாராவிலேயே, "1986-87 ஆம் ஆண்டில் 5,016 வீடுகள் கட்ட திட்ட
மிடப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு ரூ. 3742.50 இலட்சம்" என்று
குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 5,016 வீடுகள் எந்தப் பிரிவு வீடுகள் என்று
பார்த்தால், நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் வீட்டு வசதித்

திட்டத்தின்கீழ் கட்டப்படுகின்ற வீடுகளாகும். இதற்கு மூன்றாம் பக்கத்திலே தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரத்திலே இதன்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு 18 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஐந்தாம் பக்கத்தில் 37 கோடியே 42 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக நூறு ரூபாய், இருநூறு ரூபாய் வித்தியாசமில்லை. கோடிக் கணக்கான ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. 18 கோடி ரூபாய் வித்தியாசப் படக்கூடிய ஒரு புள்ளிவிவரத்தை எப்படி அதிகாரிகள் தயாரித்தார்கள்? மாண்புமிகு அமைச்சர் அவர்களும், கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்துப் பார்த்து விட்டு, எப்படி அவர் அதை அவை முன் வைத்தார் என்பது மிகவும் வியப்புக்குரிய செய்தியாக இருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடம் விளக்கம் பெற்று, இங்கே கூறுவார் என்று நான் நம்புகிறேன். கோடிக்கணக்கான ரூபாய் வித்தியாசம் வரக்கூடிய அளவுக்கு முரண்பாடுகள் வருவது நல்லதல்ல. மூன்றாம் பக்கத்தில் ஒரு குறிப்பு, ஐந்தாம் பக்கத்தில் ஒரு குறிப்பு என்று செய்தி வருவது நல்லதல்ல. இது உறுப்பினர்களைக் குழப்பக்கூடிய ஒன்றாகும் என்பதை மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

முக்கியமான குடிசை மாற்று வாரியத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். நல்லவேளையாக 1971 ஆம் ஆண்டிலே துவங்கப்பட்ட குடிசைப்பகுதி மாற்று வாரியம் என்பதை மறவாமல் குறிப்பிட்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெயர் 'நல்லசாமி' என்கிற காரணத்தால், நல்ல முறையிலே நடந்துகொண்டிருக்கிறார். 1971 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். அவ்வாறு குறிப்பிட்டுவிட்டு அதன் பின்னால், "1984-85 ஆம் ஆண்டுவரை சென்னை மாநகரிலும், ஈரோட்டிலும் ரூ. 4,169 இலட்சம் செலவில் 45,980 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன" என்கிற குறிப்பை மாண்புமிகு அமைச்சர் தந்திருக்கின்றார்.

(முற்பகல் 11-10)

1984—85 வரை 45,980 குடியிருப்புகள் என்கின்ற கணக்கை 1971 ஆம் ஆண்டில் தொடங்கி அதுவரை இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. 1974—75, 1975-க்குப் பிறகு சில மாதங்கள்—ஆக மொத்தம் 4½ அல்லது 4¾ ஆண்டுகளில் இந்தக் குடிசைப் பகுதிகளில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பாகவும் கோவை, சேலம் போன்ற இடங்களிலுள்ள வீட்டு வசதி



வாரியங்களின் சார்பாகவும் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டப்பட்ட வகையில் ஏறத்தாழ 20 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆக இது 5 ஆண்டுகளுக்கு என்று எடுத்துக்கொண்டால் கூட இந்த 5 ஆண்டுகளில் 20 ஆயிரம் வீடுகள் என்றால் ஆண்டு ஒன்றுக்கு 4 ஆயிரம் வீடுகள், குடியிருப்புகள் குடிசை மாற்று வாரியத்தாலே அவர்களுக்குக் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. ஆக ஆண்டு ஒன்றுக்கு 4 ஆயிரம் வீடுகள் கழக ஆட்சியில் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, 1976 முதற்கொண்டு என்று எடுத்துக்கொண்டாலும் அல்லது 1977 ஆம் ஆண்டு இந்த அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அந்தக் காலக் கட்டத்தை எடுத்துக்கொண்டாலும், சற்றொப்ப 9 ஆண்டுக் காலம் ஆகிறது. இந்த 9 ஆண்டுகளில் ஏற்கெனவே கட்டப்பட்ட ஆண்டு ஒன்றுக்கு 4 ஆயிரம் வீடுகள் என்கின்ற அந்த விகிதப்படியாவது பார்த்தால், 36 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அமைச்சர் தந்துள்ள புள்ளிவிவரப் படி 26 ஆயிரம் வீடுகள்தான் கட்டப்பட்டிருக்கின்றன. கழக ஆட்சியில் அப்போது அரசுக்கு இருந்த வருமானம், அப்போதிருந்த நிதிநிலை அறிக்கைபடி 500 கோடி ரூபாய் என்பதும், அதற்குப் பிறகு அது ஆயிரம் கோடி, இரண்டாயிரம் கோடி என்று வளர்ந்து, மூவாயிரம் கோடியாக இப்போது ஆகியிருப்பதையும் கருத்தில் கொண்டு பார்க்கும் நேரத்தில், இந்த வளர்ச்சி குடிசை மாற்று வாரியப் பகுதியைப் பொறுத்தவரையில், அந்த மக்களுக்குக் கட்டித் தரப்படுகின்ற குடியிருப்பு மனைகளைப் பொறுத்த வரையில், உயரவில்லை என்பதை நான் குறையாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், இந்த அரசின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொன்று இப்படி 9 ஆண்டுக் காலத்தில் 26 ஆயிரம் வீடுகள்தான் குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் கட்ட முடியும் என்கிறபோது, 3 ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகளை எப்படிக் கட்ட இருக்கிறார்கள் என்பதை எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. இந்த சந்தேகத்தை இதே மன்றத்திலே நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற நேரத்திலே நான் குறிப்பிட்ட போது, நிதியமைச்சர் நாவலர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ள" என்கின்ற திருக்குறளை எடுத்துக்காட்டி, "இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்ற முடியாத ஒன்று; இதை அறிவிக்காமலேகூட இருந்திருக்கலாம்; அறிவித்துவிட்டோம்; ஆனாலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்" என்று தான் நாவலர் அவர்கள் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். அதேநாளில் அந்த அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் இந்த வீடுகள் கட்டித்

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 18

தரப்படும் ; இந்த இலக்கு நிறைவேற்றப்படும் என்று உறுதிமொழி அளித்தது பத்திரிக்கைகளிலே வெளிவந்தது. அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் புத்தாண்டுச் செய்தியை வெளியிட்டபோதுகூட, மிகத் தெளிவாக முதலமைச்சரின் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையில் தாழ்த்தப்பட்ட மற்றும் நலிந்த பிரிவினர்களுக்கு 3 ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள்—இதுபோல நீண்டகால மறுமலர்ச்சித் திட்டங்களை அரசு அறிவித்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிட்டுவிட்டு, இருப்பினும் தமிழக மக்களின் நலனுக்காக இந்த அரசு தீட்டும் திட்டங்களை மலிவுபடுத்தி, அதன் வாயிலாக அதன் வளர்ச்சியைத் தடை செய்வோர் தங்களுடைய பாதையிலிருந்து மாறவில்லை என்பதை உணர்கிறேன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். பாதையிலிருந்து மாறவில்லை என்று யாரைக் குறிப்பிட்டார் என்பது பிரச்சினையல்ல என்றாலும்கூட, இதே அளவிலே 3 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகக்கூடிய ஒரு மாபெரும் திட்டத்திற்கு 26 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்களே, அது போதுமா என்று நான் கேட்ட நேரத்தில், நாவலர் அவர்கள் "அது போதாதுதான் ; என்னுடைய நிலையை உணருகிறேன் ; பாம்பின் கால் பாம்பு அறியும் என்பதைப்போல அவர் உண்மையை உணர்ந்து பேசுகிறார். எனவே இந்த 3 ஆண்டுக்காலத்தில் 30 லட்சம் வீடுகளைக் கட்ட முடியாது" என்று நாவலர் அவர்கள் இதே அவையிலே குறிப்பிட்டார். ஆனால் கவர்னர் அவர்களுடைய அறிவிப்பில் 3 ஆண்டுக் காலத்தில் 10 லட்சம் வீடுகள் என்றுதான் தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த உள்ளாட்சிமன்றத் தேர்தலையொட்டி வெளியிடப்பட்ட விளம்பரங்களில் 3 ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள் என்று அறிவிக்கப்பட்டது. இப்போது நிதிநிலை அறிக்கையில் இதற்கு ஏற்ப பல்வேறு நிறுவனங்களிலிருந்து கடன்வசதி, பணவசதி இவைகளையெல்லாம் பெற்று இந்த வீடுகள் கட்டித் தர முயற்சி மேற்கொள்ளப்படுமென்று சொல்லி இந்த விவகாரத்தை மெல்லமெல்ல கரைத்து இதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமென்று நாவலர் அவர்கள் அன்று அறிவித்தார்கள். ஆனால் இப்போது

(முற்பகல் 11-15)

அவர்கள் அறிவித்த அந்தப் பாதையிலிருந்து விலகி நமது முதலமைச்சர் அவர்கள் தமது புத்தாண்டுச் செய்தியில் "30 லட்சம் வீடுகள் 3 ஆண்டுகளில் கட்டித் தரப்படும்" என்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுதி செய்திருக்கிறார்கள். நான் முன்பே அதைப் பேசிவிட்ட காரணத்தால், தொடர்ந்து பேச விரும்பவில்லை. நான் குறிப்பிட விரும்புவதெல்லாம், 9 ஆண்டுக் காலத்தில் கழக ஆட்சியில் கட்டித் தரப்பட்டதைப்போல் ஆண்டு



1986 ஏப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

ஒன்றுக்கு 4000 வீடுகள் என்று கட்டித் தந்திருந்தாலும், 36,000 வீடுகளை குடிசை மாற்று வாரியத்தின் சார்பாகக் கட்டிக் கொடுத்திருக்க முடியும் என்று இருக்கும்போது, அந்த இலக்கைக் கூட எட்டாமல், 26,000 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டிருக்கின்றன. எப்படி 30 லட்சம் வீடுகளை 3 ஆண்டுகளில் கட்டித் தரப் போகிறது என்ற விளக்கத்தைத்தான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலமாக மீண்டும் பெற விரும்புகிறேன்.

குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு வாடகைப்பற்றி நமது அமைச்சர் அவர்களின் கொள்கைக் குறிப்பில் ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது இந்தக் குடியிருப்புகளுக்கு ரூ. 20 வாடகை வசூலிக்கப்படும் என்று அந்தக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. 10 ஆம் பக்கத்தில் "இத்திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு அவைகளில் குடியிருக்கும் குடிசைவாசிகளுக்கென்று குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இக்குடியிருப்புகள் வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தற்போதுள்ள மிகக் குறைந்த வாடகை ரூ. 20 ஆகும்" என்று அமைச்சர் அவர்களாலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கழக ஆட்சியில் இந்த வீடுகள் கட்டப்பட்டபோது, ரூ. 10 என்றிருந்த வாடகை தான் இப்போது ரூ. 20 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது.

பொதுத் தேர்தலின்போது, நான் சென்னையில் பேசிய கூட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டேன். "கழகத்திடம் நீங்கள் ஆட்சி அமைக்கும் பொறுப்பை ஒப்படைப்பீர்களானால், சென்னை குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் வாழ்கிற மக்கள், அதே வீட்டில் தாம் வாழ்வோம் என்று உறுதி அளிப்பார்களானால், அவர்களுக்கு வாடகை இல்லாமலேயே அந்த வீடுகள் தரப்படும்" என்ற அறிவிப்பைத் தந்தேன். அடுத்த நாளே 'தினத் தந்தி' பத்திரிகையின் மூலமாக குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக ஒரு மிகப் பெரிய விளம்பரம் வெளியிடப்பட்டது. அந்த விளம்பரத்தில் "குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு வாசிகளே, கருணாநிதி ஆசை காட்டுகிறார்—அதிலே கூட கருணாநிதி என்பதற்கு "ணா" போடாமல் "கருநாநிதி" என்று தன்னகர "நா" போட்டு—அதன் உள்ளர்த்தம் என்னவென்று எனக்குத் தெரியாது—என்று சொல்லி விளம்பரம் வந்தது. அந்த விளம்பரம் தனிப்பட்டவரால் வெளியிடப்பட்டிருந்தால், நான் அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டேன். குடிசை மாற்று வாரியத்தின் தலைவர் சார்பில் அந்த விளம்பரம் வெளியிடப்பட்டது. குடிசை மாற்று வாரியம் என்பது அரசாங்கத்தோடு தொடர்பு கொண்ட வாரியம் என்பதால்தான், நான் அதை இங்கே குறிப்பிடு

கிறேன். அந்த விளம்பரத்தில் சொல்லப்பட்டது இதுதான். "குடிசைவாசிகளே, கருணாநிதியின் வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள். இப்போதே புரட்சித் தலைவர் அரசு வாடகை வாங்குவதில்லை. ஆனால் கலைஞர் கருணாநிதி 'இருக்கிற வீடுகளில் குடிசைவாசிகள் அவர்களே குடியிருக்கச் சம்மதித்தால் வாடகை இல்லாமல் சொந்தமாக்குவேன்' என்று சொல்வதை, குடிசைவாசிகளே, நம்பி ஏமாறாதீர்கள்" என்று குடிசை மாற்று வாரியத்தின் தலைவர் அன்றைக்கு ஒரு பெரிய விளம்பரத்தைக் கொடுத்தார். அது எல்லா பத்திரிகைகளிலும் வந்தது. அந்த விளம்பரத்தை தினத் தந்தியும் வெளியிட்டது. 'கருணாநிதி' என்று போட்டிருக்கிறதே என்றுகூட அந்தப் பத்திரிகை யோசிக்கவில்லை. அதை அப்படியே பத்திரிகையில் போடாவிட்டால் என்ன தண்டனையோ என்ற பயத்தின் காரணமாக அவர்களும் அந்த விளம்பரத்தை அப்படியே வெளியிட்டார்கள். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், தேர்தல் நேரத்திலே அப்படி ஒரு அறிவிப்பு. அதாவது ஏற்கெனவே வாடகை வாங்குவதில்லை என்று அறிவித்துவிட்டு, இப்போது கொள்கை விளக்கக் குறிப்பில் 20 ரூபாய் வாடகை என்று குறிப்பிட்டிருப்பது ஏறுமாறாக, முரண்பாடாக இருக்கிறதா அல்லவா என்று தான் கேட்கிறேனே தவிர வேறு அல்ல.

மீனவர்கள் மெரினா கடற்கரையிலிருந்து வேறு இடத்திற்குச் செல்ல வேண்டும் என்கிற ஒரு நிலை எடுக்கப்பட்டு அதன் காரணமாகச் சில அமளி துமளிகள் எல்லாம் ஏற்பட்டு, அதன் தொடர்ச்சியாகத்தான் அவர்கள் குடிசைப் பகுதி மாற்று வாரிய வீடுகளில், அதாவது அவர்கள் குடியிருக்கும் நொச்சிக் குப்பம், நடுக்குப்பம் போன்ற இப்படிப்பட்ட குப்பங்களில் உள்ள மீனவர்களின் வீடுகளில் குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் வாடகை வாங்கச் சென்ற காரணத்தால், குழப்பம் ஏற்பட்டது என்பதையும் அது உச்ச நீதி மன்றம் வரை சென்றதையும் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே தேர்தல் நேரத்தில் எதையாவது சொல்வது என்பது சரியல்ல என்பதையும் இப்படிப்பட்ட தவறான தகவல்களை வீட்டு வசதி வாரியமானாலும் சரி, குடிசை மாற்று வாரியமானாலும் சரி, தரக் கூடாது என்பதற்காகத்தான் இதையெல்லாம் சுட்டிக் காட்டுகிறேனே தவிர வேறு அல்ல.

(முற்பகல் 11.20)

மற்றொன்று. நேரத்தின் அருமை கருதி நீண்ட நேரம் பேசுவதாக இல்லை. இருந்தாலும் நம்முடைய அமைச்சர் பெருமக்களிடமும் இந்த அவையிலேயும் நியாயத்தைக் கேட்க சில குறிப்புகளை எடுத்து வைக்க விரும்புகிறேன்.



நம்முடைய நண்பர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. மாணிக்கம், அவர்களுடைய சொந்த வீட்டுப் பிரச்சினையில் இரண்டே முக்கால் ஆண்டுக் காலம் தாமதமாயிற்று என்பதையும் வேறு ஒருவருக்குச் சுலபமாகக் கிடைத்தது என்பதையும் இங்கே சுட்டிக்காட்டினார். நான் பேசுவது சொந்த வீட்டுப் பிரச்சினை அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் அறக்கட்டளையின் சார்பில் சென்னையில் அண்ணா சாலையில் உருவாகி வருகின்ற அண்ணா அறிவாலயம் குறித்த பிரச்சினை. இந்த அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அறக்கட்டளையின் பெயரில் ஒரு அனாதை இல்லத்தைத் தொடங்குவது என்றும், நூலகம் ஒன்றைத் துவங்கி நடத்துவது என்றும், கண்ணொளி முகாம் ஒன்றை நடத்துவது என்றும், திருமண மண்டபம் ஒன்று கட்டுவது என்றும், அலுவலகம் கட்டுவது என்றும் திட்டமிட்டு முறைப்படி சென்னை மாநகராட்சி மன்றத்திடமும், எம்.எம்.டி.ஏ.விடமும் தேவையான வரைபடங்கள் மற்றும் விவரங்கள் எல்லாம் இணைத்து மனுச் செய்து கட்டிடம் கட்ட அனுமதி, எல்லாவிதமான ஆய்விற்குப் பிறகு, 11—8—1980-ல் பெறப்பட்டது. அப்படி அனுமதி வழங்கப்பட்ட பிறகு அந்தப் பணிகளைத் தொடங்கிட திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை டெண்டர் கோரி, அந்த டெண்டரின் பேரில் முடிவு எடுக்கப்பட்டது. அப்படி முடிவு எடுக்கப்பட்டாலும்கூட, அதற்கான செலவுக்காக இந்திய வங்கியில் கடன் வாங்க வேண்டுமென்று அவர்களிடத்திலே அது குறித்துப் பேசி, 50 இலட்சம் ரூபாய் கடன் தருவதாக இந்திய வங்கி ஒப்புக்கொண்டு தொடக்கத் தொகையாக இது வரை 25 இலட்சம் ரூபாய் தந்து, அங்கே கட்டிடம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இதற்கிடையிலே இந்தக் கட்டிட வேலைகளை விரைவாக முடிக்க இயலாமல் நாங்கள் வங்கியோடு கடிதப் போக்குவரத்து நடத்தி, அவர்கள் பணம் சாங்ஷன் செய்வதற்கு காலம் கடந்துவிட்டதாலும், மேலும் சிமெண்ட் பற்றாக்குறை, சென்னையிலே உள்ள தண்ணீர்த் தட்டுப்பாடு, மின்வெட்டு போன்ற காரணங்களால் கட்டிடப் பணிகள் விரைவாக முடியாமல் சுணக்கம் ஏற்பட்டது. அப்போது கட்டிடப் பணியில் மாடிக் கட்டிடங்கள் எழுப்புவதற்காக பக்கத்திலேயே அதற்குரிய பொருள்கள், கருவிகள் ஆகியவைகளையெல்லாம் வைக்க சாதாரண ஷெட் ஒன்றும் கட்டப்பட்டது. அதற்குப் பிறகு இந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, 28—10—1985 அன்று எம்.எம்.டி.ஏ. அலுவலகத்திலேயிருந்து சில அதிகாரிகள் அறிவாலயக் கட்டிடத்தை வந்து பார்த்தார்கள். பார்த்துவிட்டு 30—10—1985 தேதியிட்ட கடிதத்தில் கட்டிடங்கள் கட்ட முதலில் அனுமதி வழங்கும்போது குறிப்பிட்ட கால அளவு முடிந்துவிட்டது என்றும், மேலும் கட்டிடப் பணியைத் தொடர்வது குற்றம் என்றும், எனவே உடனடியாக அந்தப் பணிகளை

நிறுத்த வேண்டும் என்றும், அப்படி நிறுத்தியது குறித்து ஒரு வார காலத்திற் குள்ளே தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், அப்படித் தெரிவிக்கத் தவறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எம்.எம்.டி.ஏ. மெம்பர்- செக்ரட்டரி எங்களுக்கு எழுதியிருந்தார்.

அலுவலகக் கட்டிடத்திற்குப் பக்கத்திலேயே சிறிய ஓர் ஷெட் கட்டும் பணியையும் உடனடியாக நிறுத்த வேண்டுமென்று அதே தேதியிட்ட மற்றொரு கடிதம் எம்.எம்.டி.ஏ. விலிருந்து எங்களுக்கு வந்தது. 30 ஆம் தேதி கடிதம் எங்களுக்கு 31 ஆம் தேதி கிடைத்தது. 2-11-1985 அன்றே எங்களுடைய அறக்கட்டளையின் சார்பில் மெம்பர் செக்ரட்டரி அவர்களுக்குப் பதில் எழுதினோம். அதில்—

"We are taking steps to apply for revalidation of the permits. We are also in receipt of your notice No. RT2/1394/85, dated 30th October 1985 in respect of construction of temporary storage shed in the rear. We are taking steps to include this also in our plan for necessary permits.".

அதாவது அனுமதியைப் புதுப்பிக்க நாங்கள் முயற்சிகளை மேற்கொள் வதாகவும், ஷெட் கட்ட அனுமதி பெற முயற்சி எடுப்பதாகவும் எங்கள் பதில் கடிதத்தில் நாங்கள் குறிப்பிட்டோம். 5-11-1985 தேதியிட்டு எம்.எம்.டி.ஏ. விலிருந்து அவசரப் பதில் கடிதம் கிடைத்தது. எங்களுக்கு எழுதிய அந்தக் கடிதத்தில் கட்டிடப் பணிகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், அப்படி நிறுத்தியது குறித்து 12-11-1985-க்குள் பதில் கிடைக்கா விட்டால் 'பீனல் ஆக்ஷன்' மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்திருந்தார் கள். அந்த ஐந்தாம் தேதி கடிதத்திற்கு ஏழாம் தேதியே பதில் எழுதினோம்.

"We confirm having stopped the construction. Our plan for renewal is being submitted separately.".

நாங்கள் கட்டிட வேலையை நிறுத்திவிட்டோம். அதற்குள்ளே நிறுத்திவிட்ட பணியைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பத்தை உங்களுக்கு அனுப்பி முறைப் படி புதுப்பித்துக் கொள்கிறோம் என்ற பதிலை எழுதினோம். நாங்கள் பதில் எழுதிய நேரத்தில் சில விவரங்களைக் குறிப்பிட்டோம். அண்ணா அறிவாலயம்

(முற்பகல் 11.25)

கட்டப்படுவதற்காக, 1980 ஆம் ஆண்டு முறைப்படி சென்னை மாநகராட்சி, எம்.எம்.டி.ஏ. ஆகியோரிடமிருந்து தேவையான அனுமதி, ஒப்புதல் எல்லாம் பெற்று வேலை தொடங்கப்பட்டிருக்கிறது என்றும், ஆனால் 1980 ஆம் ஆண்டு முதல் 1983 வரை இருந்த தண்ணீர் பஞ்சம், வறட்சி,



சிமெண்ட் பற்றாக்குறை காரணமாக பணிகள் துரிதமாக நடைபெறவில்லை என்றும், அதன் காரணமாக குறிப்பிட்ட காலக்கெடுவான 10-8-1983-க்குள் கட்டிடங்கள் முற்றுப்பெறவில்லை என்றும் குறிப்பிட்டுவிட்டு, அனுமதியையும் ஒப்புதலையும் புதுப்பித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டதோடு எம்.எம்.டி.ஏ.வின் உத்தரவின்படி கட்டிட வேலைகளை உடனடியாக நிறுத்தி விடுவதாகவும், அதன் காரணமாக ஏராளமான தொகை நஷ்டம் ஏற்படுகிறது என்றும், எனவே கட்டிடப் பணிகளை தொடர்ந்திட அனுமதிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் விண்ணப்பித்துக் கொண்டோம். விண்ணப்பித்துக் கொண்ட தேதி 7-11-1985. இதற்கு எந்த பதிலும் இல்லாமல் போகவே, 3-12-1985-ல் அறக்கட்டளை சார்பில் மீண்டும் எம்.எம்.டி.ஏ.-வுக்கு நினைவு படுத்தி ஒரு கடிதம் எழுதினோம். அந்தக் கடிதத்தில்

"We have submitted our application for re-validation of building permit along with the necessary plans and we have *inter alia* requested for permission to proceed with the construction, as the suspension of work is resulting in great loss to us. We request you to expedite the re-validation of the permit and in the meantime to permit us to proceed with the work as there is no deviation from the original approved plan."

அதாவது, முதலிலே அனுமதித்த வரைபடிவத்திலேயிருந்து மாறுபாடாக நாங்கள் எதுவும் செய்யவில்லை என்றும், பணி தாமதம் ஆவதால் நஷ்டம் ஏற்படுகிறது என்றும், எனவே விரைவுபடுத்தி அனுமதி வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம். இந்த இரண்டு கடிதங்களுக்கும் 19-12-1985-ல் பதில் கிடைத்தது. எம்.எம்.டி.ஏ. விலிருந்து பதில் கிடைத்தது.

"Building permit application received with the reference cited for construction of Kalyana Mandapam and Anathai Illam has been examined and permission for the same is refused for the following reasons :

The proposal violates D. C. R. 19-B relating to space to be left on both sides. 10 per cent open space is not left for recreational use requirement.".

அதாவது 1980 ஆம் ஆண்டிலே கட்டிடம் கட்டுவதற்கான வரைபடங்கள் மற்ற எல்லாவற்றையும் துருவித் துருவிப் பார்த்து அனுமதிக்கப்பெற்ற கட்டிடத்திற்கு இப்போது திடீரென்று அனுமதி மறுக்கப்பட்டதற்கு சொல்லப் பட்ட காரணங்கள் 'கட்டிடத்தின் இருபக்கங்களிலும் 6 மீட்டர் இடைவெளி

விடுவதற்குப் பதிலாக 3 மீட்டர் இடைவெளிதான் இருக்கிறது. அடுத்து 10 சத விகிதம் இடம் திறந்த வெளிக்கு ஒதுக்க வேண்டும். 10 சதவிகிதம், அதாவது 80 கிரவுண்ட் என்றால் 8 கிரவுண்ட் இடத்தை திறந்தவெளித் தேவைக் காக ஒதுக்க வேண்டும் எனவும் சொல்லி இந்த இரண்டு காரணங் களுக்காக அனுமதி மறுக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்கள். மேலும் அந்தக் கடிதத்திலே பின்குறிப்பு என்று போட்டு, மனுதாரர் தேவைப்பட்டால், இந்த மறுப்பை எதிர்த்து அரசாங்கத்திற்கு இரண்டு மாதங்களுக்குள் மேல் முறையீடு செய்துகொள்ளலாம் என்றும் தெரிவித்தார்கள். உடனடியாக நாங்கள், அவர்கள் குறிப்பிட்ட தவறுகள் களையப்படுவதாகவும் 6 மீட்டர் அளவுக்கு இடம் ஒதுக்குவதாகவும், கண் சிகிச்சை முகாமுக்காக ஒதுக்கப் பட்ட இடத்தை திறந்த வெளித் தேவைக்காக ஒதுக்குவதாகவும் தெரிவித்து பதில் எழுதினோம். அதற்குப் பிறகாவது அனுமதி கிடைக்கும் என்று நினைத்தோம். 7-1-1986-ல் எம்.எம்.டி.ஏ. கடிதம் தான் மீண்டும் கிடைத்தது. அந்தக் கடிதத்திலே என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், கட்டிடப் பணியை மேற்பார்வையிட ஒரு ஆர்க்கிடெக்ட் நியமிக்கப்பெறவேண்டும் என்றும், 3 மாதங்களுக்கு ஒரு முறை பணிகள் முன்னேற்றம் குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், மரம் நடவேண்டும் என்றும், பணி முற்றுப் பெற்றவுடன் தெரிவிக்கவேண்டும் என்றும் சில நிபந்தனைகள், அந்த நிபந்தனைகளின் கடைசி நிபந்தனையாக திறந்தவெளித் தேவைக்காக ஒதுக்கப்படுகின்ற இடங்களை சென்னை மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு ரிஜிஸ்டர்ட் கிப்ட் டீட் மூலமாக பதிவு செய்து ஒப்படைப்பதோடு 10 நாட் களுக்குள் ரூ. 50,200 கட்டவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்கள். இதற்குப் பிறகுதான் கட்டிட அனுமதி வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தது. அந்தக் கடிதத்திற்கு 9--1--1986-ல் எழுதிய கடிதத்தில் எம்.எம்.டி.ஏ. நிபந்தனை களை எல்லாம் ஏற்றுக்கொள்வதாகவும், ரூபாய் 50,200க்குக் காசோலை அனுப்ப உடன்படுவதாகவும், ஆர்கிடெக்ட் நியமித்து அவர்களுடைய ஒப்புதல் கடிதத்தையும் இணைத்திருப்பதாகவும் தெரிவித்துவிட்டு, 1980 ஆம் ஆண்டு முறைப்படி இதற்கான அனுமதி பெற்றது குறித்து தெரிவித்துவிட்டு, எங்களுடைய அறக்கட்டளை விண்ணப்பத்தின் பேரில் அரசாங்கம் எங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கின்றது என்றும், அப்போது திறந்தவெளி இடத்தை விடவேண்டுமென்ற ஒரு பிரச்சினை எழவில்லை என்றும், இருந்தாலும் எம்.எம்.டி.ஏ. கருத்துப்படி திறந்தவெளிக்கான இடம் பொதுமக்கள் உபயோகத்திற்காக அறிஞர் அண்ணா பூங்கா என்ற பெயரில் ஒதுக்குவதற்கு தயாராக இருக்கிறது என்றும், இருந்தாலும் அறக்கட்டளையின் நல்ல நோக்கத்தைக் கருதி இந்தத்



மருத்துவமனையை நிர்வகிக்கும் பொறுப்பை டிரஸ்டிடம், அறக்கட்டளையே ஏற்றுக்கொள்ளும் என்ற அளவில் மாநகராட்சிக்கு தானம் செய்யவேண்டு மென்ற நிபந்தனையை வலியுறுத்தாமல் விரைவில் அனுமதி வழங்க வேண்டு

(முற்பகல் 11-30)

மென்றும் அந்தக் கடிதத்தில் கேட்டுக்கொண்டோம். இந்தக் கட்டிடத்திற்கு எம்.எம்.டி.ஏ. விடம் முறையிடுவதைவிட அரசாங்கத்திடமே முறையிடலாம் என்று கருதது தொடங்கப்பட்டபோது, அரசாங்கத்திற்கு நேரடியாக 10—1—1986 அன்று எல்லா விவரங்களையும் தெரிவித்து, அரசுக்கு உள்ள அதிகாரத்தின்கீழ் புதுப்பிப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை எல்லாம் மன்னித்து, கட்டிடப் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிட உரிய ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அதன் நகல் முறைப்படி எம்.எம்.டி.ஏ.க்கும் 10-1-1986-ல் அனுப்பப்பட்டது. இதற்குப் பிறகு நாங்கள் அரசாங்கத்திற்குக் கடிதம் அனுப்பினால் மாத்திரம் போதாது என்று, நம்முடைய நண்பர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களும், சென்னை மாவட்டச் செயலாளர் டி. ஆர். பாலு அவர்களும் வீட்டு வசதி வாரியத்திற்கும், எம்.எம்.டி.ஏ.-க்கும் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சரவர்களைப் பல முறை நேரில் சந்தித்துக் கேட்டபோதெல்லாம், அவர்கள் விரைவில் அதுகுறித்து முடிவு செய்கிறேன், முடிவு செய்கிறேன் என்று பதில் அளித்தார்கள். ஆனால் எந்த முடிவும் வரவில்லை. இதுபற்றி எனக்கு ஒரு ஆதங்கம் ஏற்பட்டு, நம்முடைய நண்பர் திரு. மாணிக்கம் அவர்களிடத்தில் பேசிக் கொண்டிருந்தபோது, அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். “நீங்கள் அரசாங்கத்திற்கு எழுதிவிட்டீர்கள், எம்.எம்.டி.ஏ.க்குத் தெரிவிக்க வேண்டியதெல்லாம் தெரிவித்து விட்டீர்கள், காலதாமதத்திற்கு மன்னிப்பும் கேட்டு விட்டீர்கள், அதற்காக அபராதத் தொகை 50,000 ரூபாய் கட்டுவதாகவும் சொல்லி விட்டீர்கள், திறந்த வெளிப் பகுதி விட்டு, அண்ணா பூங்கா என்று பெயர் வைப்பதற்கு சம்மதித்துவிட்டீர்கள், அதை மாநகராட்சிக்கு ‘கிப்ட்’ ஆகத் தருவதில்தான் வேறுபாடு, எனவே நீங்கள் மாண்புமிகு முதலமைச்சரவர் களுக்கு ஒரு கடிதம் எழுதினால், அவர்கள் நிச்சயமாகக் கவனித்து ஆவன செய்வார்கள் என்று கருதுகிறேன், ஆகவே அந்த வாய்ப்பையும் ஏன் தவற விட வேண்டும்?” என்ற யோசனையை நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்னவுடன் நான் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 5-3-1986-ல் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், “அன்புள்ள முதலமைச்சர்

அவர்களுக்கு, வணக்கம். சென்னை திராவிட முன்னேற்றக் கழக அறக் கட்டளை அண்ணா அறிவாலயக் கட்டிடம் எழுப்ப 11-8-1980-ல் எம்.எம்.டி.ஏ.-வில் அன்றிருந்த சட்ட விதி முறைப்படி எல்லா நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது. அதற்கேற்ப கட்டிட நிர்மாணப் பணிகள் தொடங்கி, வேலைகள் தொடங்கியுள்ள நிலையில், மேலும் கால நீட்டிப்புக்கான அனுமதியைப் புதுப்பிக்க வேண்டுமென்று எம்.எம்.டி.ஏ. மூலம் தாக்கீது அனுப்பப்பட்டது. அதன்படி கட்டிட வேலைகளை உடனடியாக நிறுத்திவிட்டு, அதனால் இழப்புக்கு ஆளானாலும், முறைப்படி புதுப்பித்து விண்ணப்பம் 7-11-1985-ல் செய்யப்பட்டது. இந்த விண்ணப்பத்திற்கு எம்.எம்.டி.ஏ. இசைவு தெரிவிக்கும் நிலையில், அதற்குரிய நிபந்தனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தும்கூட, புதிதாகக் கொண்டு வந்த விதிமுறைகளை எம்.எம்.டி.ஏ. சுட்டிக்காட்டி, 8 கிரவுண்ட் அளவுக்கு நிலத்தை மாநகராட்சிக்கு இனாமாக ஒதுக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதித்து, பதில் அனுப்பியுள்ளார்கள். இது குறித்து அரசுக்கு 10-1-1986-ல் கடிதம் எழுதியுள்ளேன். இதுவரை எந்தப் பதிலும் இல்லை. புதிய விதி முறைகளைக் காட்டி, 8 கிரவுண்ட் இனாமாகக் கேட்டு, அண்ணா பெயரால் அறிவாலயம் உருவாக்கும் முயற்சிக்கு முறைகேடாக ஏற்படுத்தப்படும் தடைக்கு, முதலமைச்சரவர்களே, தாங்கள் தலையிட்டு, உடன் ஒப்புதல் வழங்கிட ஆவன செய்ய வேண்டுகிறேன்" என்று என் கையெழுத்திட்டு முதலமைச்சரவர்களுக்குக் கடிதம் எழுதினேன். எனக்கு உடனடியாக அவர்களிடமிருந்து பதில் வந்தது. அதில் "அன்பார்ந்த டாக்டர் கருணாநிதி அவர்களுக்கு, தங்களுடைய 5-3-1986 நாளிட்ட கடிதம் கிடைக்கப்பெற்றேன். கடிதத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் தெரிந்துகொண்டேன். கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வேண்டுகோளைக் கனிவோடு பரிசீலனை செய்து, ஆவன செய்கிறேன்" என்று முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு கடிதம் அனுப்பினார். இந்தக் கடிதத்திற்குப் பிறகு, எப்படியும் இன்னும் இரண்டொரு நாட்களில் அனுமதி கிடைத்துவிடுமென்று நான் நம்பியிருந்தேன். ஆனால் கிடைக்கவில்லை. எனவே மீண்டும் 19-3-1986-ல் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், "அன்புள்ள முதல் அமைச்சர் அவர்களுக்கு, வணக்கம். சென்னை அண்ணா சாலை திராவிட முன்னேற்றக் கழக அறக் கட்டளை சார்பில் கட்டடப்படும் அண்ணா அறிவாலயம் சம்பந்தமாக. . .

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முக்கியமான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்தில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீண்ட



நாட்கள் இந்தச் சட்டமன்ற அனுபவம் பெற்றவர் என்பதால் கேட்கிறேன். சட்டமன்றத்திலே சொந்த விவரங்களைப் பேசக்கூடாது என்பது நியதி. அவர்கள் ஒரு குறிப்பு சொல்லலாம். ஆனால் தொடர்ந்து, அவருக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டிருக்கிற நிகழ்ச்சி பற்றி கால் மணி நேரம், அரை மணி நேரம் பேசுவது என்பது மரபல்ல. இந்த நிகழ்ச்சி அவருக்கும், அரசுக்குமிடையே ஏற்பட்டிருக்கிற ஒரு காரியம் பற்றியதாகும். அதைத் தொடர்ந்து பேசுவது முறையா, அது அவையின் மரபுக்கு ஒப்புதல் உள்ளதா என்பது குறித்து தாங்கள் தீர்ப்பு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இது கட்சியினுடைய அறக் கட்டளை. தனிப்பட்ட முறையில் கருணாநிதிக்குச் சொந்தமான அறக் கட்டளை அல்ல. இது கட்சியினுடைய அறக்கட்டளை. இதுதான் காங்கிரஸ் கட்சியினுடைய அறக் கட்டளைக்கும் பொருந்தும். இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், இன்னொரு அறக் கட்டளை விஷயத்தில் எப்படி தவறு நடந்திருக்கிறது என்று நான் சுட்டிக் காட்டப் போகிறேன். இந்த அரசு மீது குற்றம் சாட்ட, எங்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியையும், இன்னொரு அறக்கட்டளைக்கு—வேறு ஒரு அறக்கட்டளைக்கு—எவ்வாறு இந்த விதிகளை எல்லாம் மீறி காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று ஒப்பிட்டுக் காட்டத்தான் இதைத் தொடங்குகிறேன். ஆகவே அருமை நண்பர் திரு. சுவாமிநாதன் சற்று பொறுமையாக இருந்தால் அதையும் புரிந்து கொள்ளலாம்.

(முற்பகல் 11.35)

நான் முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், சென்னை அண்ணா சாலையில் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை சார்பில் கட்டப்படும் அண்ணா அறிவாலயக் கட்டிடம் சம்பந்தமாக எம்.எம்.டி.ஏ. புதிய விதிகளைக் காட்டி கட்டிடம் கட்டுவதை நிறுத்துமாறு தாக்கீது அனுப்பியுள்ளதால், அண்ணா அறிவாலயக் கட்டிடம் கட்டுவது கடந்த 4 மாதங்களாகத் தாமதப் பட்டு பெரும் இழப்பு ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டி, தாங்கள் தலையிட்டு உடனடியாக ஆவன செய்து கட்டிடப் பணிகள் தொடர்ந்து நடைபெற உதவிடுமாறு கேட்டு 5 ஆம் தேதி நான் முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். முதலமைச்சரும் பரிசீலித்து ஆவன செய்வதாக உடன் பதில் எழுதியிருந்தார்கள். ஆனாலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பலமுறை முதலமைச்சரின் தனிச் செயலாளருடன் தொடர்பு கொண்டும் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. எனவே அதுகுறித்து தாங்கள் உடனடியாக கட்டிடம் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற ஒப்புதல் வழங்குமாறு முதல்வருக்கு நான் மற்றொரு கடிதம் எழுதியிருந்தேன்.

அதற்கு முதல்வர் அவர்கள் அளித்த பதிலில்—

"அன்பார்ந்த டாக்டர் கருணாநிதி அவர்களுக்கு,

தங்களின் 19-3-1986 ஆம் நாள் கடிதம் கிடைக்கப்பெற்றேன். சென்னை அண்ணா சாலையில் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை சார்பில் கட்டப்படும் அண்ணா அறிவாலயக் கட்டிடம் சம்பந்தமாக எம்.எம்.டி.ஏ.-யின் சில குறிப்புகளைத் தங்கள் பார்வைக்காக அனுப்பியுள்ளேன்." என்று சொல்லி எம்.எம்.டி.ஏ.-யின் கருத்துக்களை, அவர்கள் வைத்த "நோட்டை" எனக்கு அனுப்பினார். அந்த "நோட்" குறிப்பில் எம்.எம்.டி.ஏ. என்ன சொல்கிறது என்றால் "அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டுவது கண்டறியப்பட்டது. அந்த அனுமதியில்லாத கட்டுமானப் பணிக்கு தனியாக வேலை நிறுத்த அறிவிப்பு அனுப்பப்பட்டது. அந்த அறிவிப்புகளைத் தொடர்ந்து 8-11-1985 அன்று கட்டுமான திட்ட அனுமதி பெறப்பட்டது. இந்த அனுமதி கோரிய மனுக்களுக்கு ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட காலத்தை விட 2 வருடம் 3 மாத காலம் சென்று விட்டதாலும், மேலும் 27-10-1985 புதிய வளர்ச்சிக் கட்டுப்பாடுகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாலும், இந்த மனுக்களை புதிய விதிகளின்படி பரிசீலிக்க நேரிட்டது. அதன்படி 10 சதவிகித இடம் உள்ளூர் அமைப்பிடம் வெகுமதி பத்திரம் மூலம் ஒப்படைக்க வேண்டும். மனுதாரர் வரைபடத்தில் இந்த 10 சதவிகித இடத்தைக் காண்பிக்கிறார். ஆனால் மாநகராட்சிக்கு தானமாக தர விரும்பவில்லை. இந்த முடிவினால் பாதிக்கப்பட்டு அரசாணை எண் 702, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 29-5-1985-ஐ தொடர்ந்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் வழங்கப்பட்ட திட்ட அனுமதி புதுப்பித்தலுக்கு ஆன கால தாமதத்தைப் பொறுத்துக்கொள்ளுமாறு கோரி அரசுக்கு திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை மேல் முறையீடு செய்துள்ளது" என்று அந்த நோட் சொல்லுகிறது. அந்த குறிப்பின்கீழே முதலமைச்சர் கையெழுத்து போட்டு அப்படியே அனுப்பியிருக்கிறார். நோட்டில் அவர் கையெழுத்து போட்டு விட்டதாலேயே அதை ஒப்புக்கொண்டதாக அர்த்தமா? அல்லது அந்தக் குறிப்பை நீயே பார்த்துக் கொள், நான் என்ன செய்வது, இதுதான் செய்ய முடியும் என்று அர்த்தமா, என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

எனவே, மீண்டும் அவருக்குக் கடிதம் எழுதினேன்.

"அன்பார்ந்த முதலமைச்சர் அவர்களுக்கு,

19 ஆம் தேதி நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தில் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளையின் அண்ணா அறிவாலயக் கட்டிட இடத்தை மாநகராட்சிக்கு தானமாக தர வேண்டுமென்று நாங்கள் அனுமதி பெற்ற பிறகு

பிறப்பிக்கப்பட்ட புதிய விதிகளை ஏற்றுக்கொள்ள இயலாது. தாங்கள் தலையிட்டு கட்டிடத்தைக் கட்ட திட்ட அனுமதி புதுப்பித்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று கேட்டிருந்தேன். அதோடு "தங்கள் 21 ஆம் தேதிய கடிதத்தின் இணைப்புக் குறிப்புகள் என்னுடைய வேண்டுகோளை திரும்பச் சொல்லும் வகையில் அமைந்திருக்கிறது. என்னுடைய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெளிவாக இல்லை. கட்டிடம் கட்ட அனுமதியைப் புதுப்பித்துத் தருமாறு ஆணை செய்யுமாறு" எழுதியிருந்தேன். அதற்கு இது வரை எந்த பதிலும் இல்லை.

பிறகு கழகத்தின் பொதுச் செயலாளரும் அறக்கட்டளையின் டிரஸ்டிகளில் ஒருவருமான பேராசிரியர் அவர்கள் நிதியமைச்சரைச் சந்தித்து, அவரிடத்திலும் இந்த விவரங்களை எடுத்துச் சொல்ல அவர்களும் கவனிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனாலும் இதுவரையிலும் எந்தவிதமான பதிலும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட இதுவரையில் வாங்கியிருக்கிற 25 லட்சம் ரூபாய் கடனுக்கு நாங்கள் 3 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் வட்டி கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இன்னும் கட்டிடம் கட்டாமல் இருக்கிற ஒவ்வொரு மாதமும் ரூபாய் 31,250 விதம் வட்டி கட்ட வேண்டிய சூழ்நிலையில் பெரும் இழப்புக்கு ஆளாகி, அண்ணாவின் பெயரால் அண்ணா அறிவாலயம் என்று உருவாக்கப்படுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அறக்கட்டளையின் காரியங்கள் நடைபெற முடியாமல் தடுக்கப் பட்டிருக்கின்றன.

என்னுடைய கையில் இப்பொழுது இருப்பது

"Madras Metropolitan Development Authority—Agenda Notes for the meeting on Tuesday the twenty nineth October 1985 in M.M.D.A. Conference Hall 4 p.m.".

அதில் நடைபெற்ற ஒரு விஷயம் மிக முக்கியமானது. அண்ணா அறிவாலயத்திற்கு மறுப்பு, பிறகு விதி முறைகள் என்று சொல்லி மறுப்பு, திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை என்ற காரணத்தால் இத்தனை கடிதங்கள் எழுதியும், இத்தனை முறையீடுகள் செய்தும், அமைச்சரை நேரில் சந்தித்தும், முதலமைச்சருக்கு நேரில் கடிதம் எழுதியும், பொதுச் செயலாளர் நிதியமைச்சரைச் சந்தித்த பிறகும், இவ்வளவுக்கும் பிறகும் எம்.எம்.டி.ஏ. யினுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து, கட்டிடம் கட்டுவதை நிறுத்திவிட்டு நாங்கள் முறையீடுகளை அனுப்பியிருக்கிறோம். அந்த எம்.எம்.டி.ஏ.வுடைய கூட்டம் 29 அக்டோபர் 1985-ல் நடந்த போது இதைப்பற்றிப் பேசுகிறார்கள்.

(முற்பகல் 11-40)

" Sri Ramachandra Educational and Health Trust, Madras applied for reclassification...... ".

இது ஸ்ரீ ராமச்சந்திரா மெடிக்கல் டிரஸ்ட். அதுவும் டிரஸ்ட் தான். அந்த டிரஸ்ட் ரி கிளாசிபிகேஷனுக்காக ஒரு விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். எதற்கு?

" ......applied for reclassification from agricultural use zone to institutional use zone, in order to establish a Medical College and Hospital.".

அக்ரிகல்ச்சுரல் பகுதியாக இருக்கிற இடங்களையெல்லாம் ரி-கிளாசிபிகேஷன் செய்து இந்த மெடிக்கல் காலேஜ் கட்டுவதற்கு இடத்தைத் தரவேண்டு மென்பதற்கான ஒரு விண்ணப்பம்.

" The reclassification request was examined and the subject was placed before the Technical Committee. "

அது விவாதிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, டெக்னிகல் கமிட்டியிடம் விடப் படுகிறது. அந்த டெக்னிகல் கமிட்டி என்ன செய்கிறது தெரியுமா?

" The Committee recommended that the area under reference may be reclassified into institutional use zone excluding . . . . "

இதுதான் முக்கியம்.

" ......excluding the portion earmarked for National Highway By-pass. "

நேஷனல் ஹைவேயின் பைபாஸ் ரோட்டை விட்டுவிட்டு அந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அதை ரீ-கிளாசிபிகேஷன் செய்வதற்கு அனுமதிக்கலாம் என்று சொல்லிவிட்டு, ஒரு சீஃப் இன்ஜீனியரின் அறிவிப்பையும் அது சுட்டிக்காட்டு கிறது.

" The Chief Engineer, National Highways has brought to the notice of the Secretary to Government, Transport Department the fact that some buildings are being put up by Sri Ramachandra Educational and Health Centre, Porur in Survey No. 109, Thandalam village, through which the Madras By-pass road passes. The building under construction has occupied an area of 14 m. x 12 m. in the land proposed for Madras By-pass road. He has further stated that despite the fact that the representative of the said Trust has been



informed of the relevant facts, the building has come up to the basement level. In turn, the Secretary to Government, Transport Department, who is a Member of the Authority, has demi-officially urged MMDA that necessary action may please be taken for preventing any building or structure on Madras By-pass road. Inspection of the area under reference has revealed that construction works like compound wall, sheds, earth-work for other buildings have been commenced. In this regard, the legal position is that prior planning permission under section 48 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 is necessary for the commencement of any construction work. So far, MMDA has not received any planning permission application for putting up construction. "

இந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு எந்தவிதமான பிளானிங் பர்மிஷன் கூட எதுவும் பெறாமல் கூட அவர்கள் அந்தக் கட்டிட வேலையை ஆரம்பித்து அதிலும் பைபாஸ் ரோட்டிலேயே கட்டுகிறார்கள்.

" The construction under progress in the area under reference, to which the Chief Engineer, National Highways and Secretary, Transport Department have also drawn attention . . . ".

" ......would thus be unauthorised in terms of the provisions of the Tamil Nadu Town and Country Planning Act, 1971, besides interfering with the alignment of the Madras By-pass road approved by the Government of Tamil Nadu and the Government of India. "

மத்திய அரசாலும் மாநில அரசாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பை-பாஸ் ரோடு அது.

" In the light of facts stated in paragraph 4 and paragraph 5 above, a stop-work notice under section 56 and 57 read with section 85 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 has been served on the party calling upon him to stop the construction work forthwith, in MMDA's letter dated 15th October 1985. If the stop-work notice is not complied with, legal proceedings against the unauthorised construction would become unavoidable. "

இவ்வளவுக்கும் பிறகு அவர்கள் நிறுத்துகிறார்களா அந்த வேலையை? தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படி தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பவர்களுக்குச் சலுகை. அதைப்பற்றிக் கேள்வி கேட்க முடியாத அளவுக்கு தனி ராஜ்யமே அங்கே நடக்கிறது. அது மட்டுமல்ல,

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 18

" The applicant has not produced documentary evidence for certain Survey No. in Thandalam village, Survey No. 35 in Chetti Agaram village, Survey No. 210 in Vanagaram village, Survey No. 150 of Karambakkam village. But the applicant has informed that the Government have promised to acccord sanction for entering upon the land. "

(முற்பகல் 11-45)

அவர்களிடத்திலே எதையும் produce பண்ணவில்லை; எந்த documents களும் கொடுக்கவில்லை. இந்த நேரத்தில் அவர்கள் சொல்கிறார்கள். "இந்த சர்க்கார் எங்களுக்கு promise பண்ணியிருக்கிறது; உறுதி அளித்திருக்கிறது. இந்த நிலத்தையெல்லாம் நீங்கள் ஆக்கிரமித்துக் கொள்ளலாம்" என்று சொல்லி தனி இராஜ்ஜியமே நடக்கிறது. அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. குளங்கள், ஏரிகள் ஆகியவற்றைச் சுற்றி வளைத்துப் போட்டு மருத்துவக் கல்லூரி கட்டுகிறார்கள். நான் அதிலே ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை. ஆனால் இரண்டும் Trust ஒன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'Trusts'. இதற்கு நீங்கள் வழங்குகிற நியாயத்திற்கும், அதே நேரத்திலே நியாயத்திற்குப் புறம்பாக, சட்டத்திற்குப் புறம்பாக, உங்களிடத்திலே எந்தவிதமான முன் அனுமதியும் பெறாமல், கட்டிடங்கள் கட்டப்படுகிற சூழ்நிலை இருக்கிறதே அதற்கும், இந்த அரசு என்ன பதில் சொல்லப் போகிறதென்பதுதான் எனக்குப் புரியவில்லை.

நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் திரு. வீரப்பன் அவர்கள் ஒரு தியேட்டர் திறப்பு விழாவிலே பேசியதைத்தான் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர் 15—12—1985 அன்று பேசியிருக்கிறார்: "இந்தத் தியேட்டருக்கு லைசன்ஸ் பெறுவதில் ஏற்பட்ட சங்கடங்களை எடுத்துச் சொன்னார்கள். புதிய திரைப்பட அரங்குகளுக்கு எம். எம். டி. ஏ. வில் உள்ள ஒன்றிரண்டு அதிகாரிகளிடம் இந்த லைசன்ஸ் பெறுவதென்பது எமனிடத்தில் சென்று திரும்புவதுபோலாகிவிட்டது. இந்த தியேட்டரைக் கட்டியிருப்பவர்கள் இதுபோன்ற சங்கடத்திலிருந்து முழுமையாக மீளவில்லை" என்று சொன்னார்கள். இந்தத் திரையரங்குக்கான மின்சாரத்தை மின்வாரியத்தில் இருந்து அவர்கள் பெற்று இப்போது திரைப்படம் காட்டவில்லை. ஜெனரேட்டரை வைத்துப் படம் காட்டுவதுடன் குளுமை வசதியும் செய்து தருகிறார்கள். "மக்களுக்கு உதவி செய்வதற்காகவே அதிகாரிகள் இருக்கிறார்கள். மக்களை வாட்டி வதைக்க, கசக்கிப் பிழிய இல்லை என்பதை அதிகாரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்" என்று



1986 ஏப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் ஒரு தியேட்டர் திரைப்பட விழாவிலே கூறியிருக்கின்றார்கள். நான் கேட்பதெல்லாம் இதிலே அதிகாரிகள் தவறு செய்கிறார்களா? அதிகாரிகளிடத்திலே அவ்வாறு தவறுகள் செய்யச் சொல்லப்படுகின்றதா? அல்லது அமைச்சர்களை இந்த அரசு அவ்வாறு செய்யச் சொல்கிறதா என்பவைகளுக்கான விளக்கங்கள் எனக்குத் தேவை.

விட்டு வசதி வாரியத்தில் இருக்கிற குழப்பங்கள் என்ன என்ன, ஊழல்கள் என்ன என்ன என்பது பற்றிப் பேசியிருக்கின்றேன், இவைபற்றி நம் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. மோகன் அவர்களே 1980-ல் ஒரு தீர்ப்பில் குறிப்பிட்டுக்காட்டி கண்டித்திருக்கிறார். "இந்த அரசாங்கம் வேண்டும் என்றே விண்ணப்பங்கள் போடாத இரண்டு பேருக்கு வீட்டை ஒதுக்கீடு செய்திருக்கிறது; ஆனால் ஒரு தாழ்த்தப்பட்ட, கலப்புத் திருமணம் செய்து கொண்ட ஒரு பெண்ணுக்கு வீடு ஒதுக்கவில்லை. இதிலே அதிகார துஷ்பிரயோகம் நடந்திருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்போது வீட்டுவசதித் துறை அமைச்சராக வேறு யாராவது இருந்திருக்கலாம். ஆனால் இந்தத் துறையில் இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடைபெறும் போது, ஒரு நல்ல காரியத்திற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் அண்ணா அறிவாலய அறக்கட்டளையின் சார்பிலே கட்டப்படும் கட்டிடத்திற்கு, அனுமதியைப் புதுப்பித்துக்கொள்வதற்கு சில நாட்கள் தவற விட்டோம் என்பதற்காக மறுக்கப்படுகிறது. இதைப் பொறுத்துக் கொள்ளுங்கள், மன்னித்துக்கொள்ளுங்கள் என்று கேட்டும்கூட, அதற்கான அபராதத் தொகை ரூ. 50,000 கட்டுகிறோம் என்று தெரிவித்தும்கூட முடியாது என்று சொல்லப்படுகிறது. எட்டு சென்ட் இடத்தை மாநகராட்சிக்கு எழுதிக் கொடு என்று சொல்கிறார்கள். அந்த இடத்தைப் பார்த்தால் எல்லோருக்கும் தெரியும். அந்த இடத்தில் முன்பகுதியில் ஒரு பெட்ரோல் பங்க் இருக்கிறது. அதை அகற்றுவதற்கு மத்திய அரசு உடன்பாடாகவில்லை. அதைத் தவிர வேறெந்த இடத்தை ஒதுக்கினாலும், மாநகராட்சி எடுத்துக்கொள்ள முடியும். எந்தக் கட்டிடம் கட்ட வேண்டுமென்றாலும், முன்னால் திறந்தவெளி விடுவது வழக்கம். அங்கே திறந்த வெளி பூங்காக்கள் இருக்க வேண்டும்; மரங்கள் இருக்க வேண்டும். எனவே அங்கே அண்ணா பெயரால் பூஞ்சோலை அமைக்க எட்டு செண்ட் இடத்தை ஒதுக்குவதற்காக நாம் சொல்லி விட்டபிறகும்கூட, "நீங்கள் அந்த இடத்தை எழுதிக் கொடுங்கள் என்று சொல்கிறார்கள்" இவ்வாறு வேண்டுமென்றே அதைத் தடுக்க முயலுவது நியாயம்தானா? இங்கே இவ்வாறு செய்துவிட்டு இன்னொரு டிரஸ்ட், ஸ்ரீ இராமச் சந்திரா எஜுகேஷனல் ட்ரஸ்டுக்கு எல்லா

விதிகளையும் மீறி பாரபட்சம் காட்டுவது நியாயம் தானா என்பதை இந்த அரசு எண்ணிப்பார்த்து முடிவை அறிவிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

*திரு. எம். பி. சுப்பிரமணியம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கொள்கை விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அவருடைய பேச்சில் பெரும் பகுதியை அண்ணாவின் பெயராலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏற்படுத்தப்படவிருக்கின்ற அறக் கட்டளைக்கு இந்த அரசாங்கம் எப்படியெல்லாம் அநீதி இழைத்து வருகின்றதென்பதை நீண்ட நேரம் நீதி கேட்பதற்காகத் தன்னுடைய வாதங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

அரசாங்க அலுவலக இரகசியக் குறிப்புகள்கூட அவருக்குக் கிடைக்கும் என்கிற அளவிலே அது இருந்தது. ஆனால் அதே நேரத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேண்டியவர்களாக இருக்கின்ற மற்றொரு அறக் கட்டளைக்கு எல்லாச் சலுகைகளும் சட்டத்திற்குப் புறம்பாக கிடைக்கின்றன என்பதை அவர் சொல்லாமலே சொல்லியதையும் நான் இங்கே பார்க்கின்றேன்.

(பிற்பகல் 11-50)

இதைப் பார்க்கும்போது எனக்கு என்ன தோன்றுகிறது என்று சொன்னால், இந்த அரசாங்கம், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிர்ப்பாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சாதகமாக, எல்லா நடவடிக்கைகளையும் தன்னுடைய சொந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே எடுக்கிறது என்னும் போது தமிழ் நாட்டு மக்களினுடைய கவனம் முழுவதும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் இருக்க வேண்டுமென்ற ஒரு துர்ப்பாக்கிய நிலையில் தமிழக மக்கள் மாட்டிக் கொண்டார்கள் என்பதை வேதனையுடன் குறிப்பிட விரும்புகிறேன். எல்லா நடவடிக்கைகளிலும் நியாயம் என்பதைத் தூக்கி எறிந்துவிட்டு வெவ்வேறு பிரச்சினைபற்றிக் குறிப்பிடும்போது, அது நிர்வாகத்திற்கு நல்லதல்ல என்பதைப் பொதுவாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.





(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

வீட்டு வசதிகளைப் பொறுத்தவரையில், நகரங்களானாலும் சரி, கிராமங்களானாலும்சரி, இது ஒரு பெரிய பிரச்சினை என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. உலகம் முழுவதும் வீடு கட்டுவதை ஒரு தொழிலாக, 'இன்டஸ்ட்ரீ' யாகப் பாவிக்க வேண்டுமென்று நிபுணர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதன் நோக்கம் என்னவென்றால், இந்தப் பிரச்சினையைக் தீர்ப்பதற்கு தேவையான நிதி வசதிகளைப் பெறுவதற்கும் அந்தப் பிரச்சினையை முழுவதுமாகத் தீர்ப்பதற்குமாக அந்தக் கருத்தைச் சொல்லி வருகிறார்கள். இந்த மன்றத்திலேகூட ஏற்கெனவே முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு, நலிந்த பிரிவினருக்கு 15 லட்சம் வீடுகளும், தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு 30 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு கருத்தைச் சொல்லியதை இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டிருப்பதை நானும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அது சாத்தியமா, சாத்தியம் இல்லையா என்பது ஒரு பக்கம் இருந்தாலும், கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலைமை இருக்கிறது என்பதை உணர்ந்து சொல்லியதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதேநேரத்தில், இதற்கு வேண்டிய நிதி வசதிகள் இல்லை. கொள்கை அளவிலே அரசு அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று சொல்லி, பிறகு அதற்கும் கீழே அது தாழ்ந்து வந்து கொண்டிருப்பது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. அதற்கு வேண்டிய நிதி வசதிகளைப் பெறுவதற்கு அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். அதை 3 ஆண்டுகளுக்குள் முடிக்க வில்லை என்று சொன்னாலும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள்ளாவது இந்த இலக்கை அடைய முடியுமா என்று அரசு முழுமையாக ஆராய்ந்து ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக இன்றைய தினம் வீடு கட்டுவதற்கு அரசுத் துறையாக இருந்தாலும், தனியார் துறையாக இருந்தாலும், இன்றைக்கு மனையின் விலை மிக உயர்ந்து ஆகாயத்திலே பறந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். சென்னை நகரத்திலே ஒரு மனையின் விலை 2 லட்சம், 3 லட்சம், 4 லட்சம் ரூபாய்க்கு உயர்ந்து வருகிறது. சென்னை நகரத்தில் 30 மைல் வட்டாரத்திற்குள்ளாக எனக்குத் தெரிந்த பலபேர் 20 ஏக்கர், 30 ஏக்கர், 100 ஏக்கர் என்று பல்வேறு விவசாயிகளிடமிருந்து விலைக்கு ஏக்கருக்கு 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் என்று வாங்கி, அதே நிலங்களை தொழில் நிறுவனங்களுக்கும், அரசாங்கத்திற்கும் பிறகு பல லட்சக் கணக்கான லாபங்களுக்கு வியாபாரம் செய்யக்கூடிய நிலைமைகள் வளர்ந்து வருவதை நாம் நடைமுறையிலே பார்க்கிறோம்.

அதனால் நான் சொல்லும் ஆலோசனை என்னவென்றால், இன்னும் 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு அரசாங்கத்தின் தேவைகளை, சமுதாயத்தின் தேவைகளைக் கணக்கு எடுத்து, சர்வே செய்து, சென்னை நகரமாக இருந்தாலும், மற்ற நகராட்சிகளாக இருந்தாலும், கிராமங்களாக இருந்தாலும், அவைகளுக்குத் தேவையான நிலங்களை இப்போது ஆர்ஜிதம் செய்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே ஆலோசனையாகக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு நிதி தேவை என்று சொல்லலாம். ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே கூறிய ஆலோசனையை மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் இப்போது எல்லாப் பகுதிகளிலும் நகராட்சித் தேர்தல்கள், ஊராட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் இப்போதுள்ள தேவைகளையும், 15 அல்லது 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் வளர்ச்சிகளையும் மனதில்கொண்டு அதற்குத் தேவையான நிலங்களை ஆர்ஜிதம் செய்து அளிக்க வேண்டிய அதற்கு எல்.ஐ.சி. போன்ற நிதி நிறுவனங்களிலே, அரசாங்கத்தின் உத்தரவாதத்தின் பேரிலே வாங்கிக் கொடுத்து, அங்கு வீடு கட்டி இருப்பவர்களுக்கு அந்தத் தொகையை 20 ஆண்டுகளில் தவணையில் சுலபமாகச் செலுத்துவதற்குரிய வழி வகைகளை அரசு செய்யுமேயானால், குறைந்தபட்சம் மனைக்கட்டுப் பிரச்சினையாவது விரைவில் தீர்க்கப்பட முடியும் என்று ஆலோசனையாகக் குறிப்பிட விரும்புகிறேன். இறுதியாக அரசாங்கத்திற்கு இதிலே எந்தவிதமான பொருள் நட்டமும் நேரிடையாக வராது. ஆனால் நிதி நிறுவனங்களுக்கு, நகராட்சிகள், ஊராட்சிகள் பெற இருக்கின்ற கடன்களுக்கு அரசு ஜாமீன் கொடுக்க வேண்டிய அளவுக்கு வரலாமே தவிர, வேறு எந்தவிதமான நட்டமும் இல்லை. முதலாவதாக மனைக் கட்டுக்களையாவது கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை சீரிய முறையிலே பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக நகர்ப்புறங்களிலுள்ள வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இரண்டு வழி வகைகளைக் கையாளலாம். அது ஏற்கெனவே பல இடங்களிலே பேசப்பட்டதுதான். அதாவது கருப்புப் பணம் வைத்திருப்பவர்கள் வீடுகளைக் கட்டி ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வீடுகளை வாடகைக்குக் கொடுக்க முன் வந்தால் அல்லது விற்பதற்கு முன்வந்தால், ஒவ்வொரு நகரத்திலும் ஏராளமான வீடுகள் கட்டுவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படும். கருப்புப் பணம் இருக்கிறது என்பது உண்மை. வேறு வகையிலே அதைச் செலவழிப்பதை விட ஏராளமான வீடுகளை அவர்கள் கட்டிக் கொடுப்பார்களேயானால், வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்காவது சுலபமாக வீடுகள் கிடைப்பதற்கு வழி வகை இருக்கும். இது ஏற்கெனவே மத்திய அரசால் பரிசீலித்த பிரச்சினை என்றாலும், தமிழக அரசு இதில் அக்கறை கொண்டு மத்திய அரசாங்கத்தோடு பேசி ஒரு நல்ல முடிவுக்கு வரலாம் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.



(முற்பகல் 11-55)

அடுத்து "என்.ஆர்.ஐ" என்பது அண்மைக் காலமாக சில ஆண்டுகளாகவே பேசப்பட்டு வருவதாகும். அதாவது 'நான்-ரெசிடென்ட் இன்டியன்ஸ்' அதாவது இந்தியாவிலே பிறந்து வளர்ந்து இப்போது நிரந்தரமாகவே அந்நிய நாடுகளில் குடியிருப்பவர்கள் இந்தியாவில் உள்ள நகர்ப்புறங்களில் வீடுகளைக் கட்டுவதற்குப் பல்வேறு விதமான சலுகைகளை அளித்தால், நான் நிச்சயமாக நம்புகிறேன், தமிழ் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே வாழ்கிற பலர் இங்கே ஏராளமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்கள். அந்தத் திட்டத்தைக் குறித்தும் மத்திய அரசோடு மாநில அரசு கலந்து பேசி பரிசீலிக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன்,

அடுத்து, அரசாங்கம் ஏராளமான திட்டங்களைத் தீட்டியிருந்தாலும் கூட, அவற்றைச் செயல்படுத்தும் வகையிலும், பொது மக்களுடைய குறைகளைப் போக்கும் வகையிலும் அரசாங்க இயந்திரம் சரியாகச் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை அண்ணா நகரில் வீட்டு மனைப் பகுதிகள் போக மீதி இருக்கிற இடங்கள் பல பள்ளிகளுக்காகவும் பார்க்குகளுக்காகவும் மருத்துவ மனைகளுக்காகவும் என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய இடங்களில் ஏராளமானவர்கள் ஆக்கிரமிப்பு செய்து வந்தார்கள். அவர்கள் எப்படி அங்கே ஆக்கிரமிக்க முடிந்தது என்றால், அங்கே உள்ள அதிகாரிகளுக்கு மாதந்தோறும் பணம் கொடுத்துக் கொண்டு அவர்கள் அனுமதியோடு ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். அதைக் குறித்து 1982 ஆம் ஆண்டில் இதே மாமன்றத்தில் ஒரு கேள்வி கேட்கப்பட்டபோது, அதற்கு பதிலளித்த அமைச்சர் அவர்கள் "எல்லோரையும் நாங்கள் அப்புறப் படுத்திவிட்டோம். ஆனால் ஒருவர் மட்டும்தான் அங்கே இருக்கிறார். அவர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு

வாங்கிவிட்டார். ஆகவே அவரை அப்புறப்படுத்த முடியவில்லை" என்று 20—2—1982 ஆம் தேதியில் தெரிவித்தார்கள். இதுதான் அன்றையதினம் இந்த மாமன்றத்தில் அளிக்கப்பட்ட பதில். அவர் அங்கே உள்ள அதிகாரிகளுக்குக் கையூட்டு கொடுத்துவிட்டு இன்னும் தொடர்ந்து அங்கே இருக்கிற நிலைமை இருக்கிறது என்றால், அரசாங்கத்தின் கொள்கையை மனப்பூர்வமாகச் செயல்படுத்துகிற வர்க்கம் எங்கே இருக்கிறது என்றுதான் கேட்க விரும்புகிறேன். அப்படிச் செயல்படுத்துகிற அதிகார வர்க்கம் இல்லை என்றால் எப்படி திட்டங்கள் சரியாக நிறைவேறும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, 4, 5 ஆண்டுகளுக்கு முன்பே வீடு கட்டி முடிக்கப்பட்டு அதற்கான அனைத்துத் தொகையும் கொடுக்கப்பட்டிருந்தும்கூட, வீட்டு வசதி வாரியத்திடமிருந்து அந்த வீட்டிற்குரிய கிரையப் பத்திரம் தனிப்பட்ட நபர்களுக்கு இதுவரை எழுதிக் கொடுக்கப்படவில்லை. அதன் காரணமாக இரண்டு வகையான கஷ்டம் ஏற்படுகிறது. ஒன்று அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் அந்த வீட்டை, வேறு ஒரு இடத்தில் அதற்கான பத்திரத்தை, வைத்து ரூ. 5,000 அல்லது 10,000 என்று வாங்க முடியாத கஷ்டம் இருக்கிறது. மற்றொரு கஷ்டம் என்னவென்றால், தற்போது 'ஸ்டாம்பு ட்யூடி' என்பது மிக வேகமாக அதிகரித்துக்கொண்டே வருகிறது. 4 ஆண்டு காலத்திற்குப் பிறகு, கிரையப் பத்திரம் கிடைக்கும்போது, என்ன நிலைமை ஏற்படும் என்றால், இப்போது 10,000 ரூபாய் அளவுக்கு ஸ்டாம்பு வாங்க வேண்டியவர் ரூ. 30,000 என்கிற அளவுக்கு ஸ்டாம்பு வாங்கி கிரையப் பத்திரம் மூலம் சொத்தை டிரான்ஸ்பர் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. எனவே விரைவில் கிரயப் பத்திரங்களை வழங்குவதற்கான முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் . . . .

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது அண்ணா நகர் மருத்துவ மனைக்கு உரிய இடத்தில் தனிப்பட்டவருக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். யாருக்கும் அப்படித் தனிப்பட்ட முறையில் அனுமதி தரப்படவில்லை. தரப்படக் கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது உண்மையாக இருந்தால், அவர்கள்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன்.





**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனைக்கு ஒதுக்கப்பட்ட இடம் என்று நான் குறிப்பாகச் சொல்லவில்லை. பல்வேறு பொதுக் காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்றுதான் குறிப்பிட்டேன் . . . . . .

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** என்னைப் பொறுத்தவரையில், மருத்துவமனை என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதால் சொன்னேன். மருத்துவ மனைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை 3 அல்லது 4 முறை சென்று சோதனையிட்டிருக்கிறேன். அங்கே ஒரு காம்பவுண்டு சுவர் கூட அமைத்திருக்கிறோம். தடுப்புச் சுவர் கூட எழுப்பியிருக்கிறோம். எனவே மருத்துவ மனை என்று சொன்னதால் இதைக் குறிப்பிட்டேன். மற்ற விவரங்களைக் குறித்து எனக்குத் தெரியாது. மருத்துவ மனையைப் பொறுத்தவரையில், நான் இதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். அவ்வளவுதான்.

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** என்ன மருத்துவமனை? தனியார் மருத்துவமனையா, பொது மருத்துவமனையா?

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** பொது மருத்துவமனை என்றுதான் நான் குறிப்பிடுகிறேன்.

தொழில் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதி திட்டம் என்ற அடிப்படையில் மத்திய அரசாங்கமும், தமிழக அரசாங்கமும் சேர்ந்து வீடு கட்டிக்கொடுக்கிறது என்பது நமக்கெல்லாம் தெரியும், அப்படி கட்டிக் கொடுத்த வகையில், வடசென்னையில், பக்கிங்காம் ஆண்டு கர்நாடிக் மில் அருகில் திரு. வி. க. நகரில் நாற்பதாண்டு காலமாகக் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான வேலை கிடைத்துவிட்ட காரணத்தால், கிராமப்புறங்களில் தங்களுக்கு இருந்த சொந்தமான சொத்துக்களையெல்லாம் விற்றுவிட்டு சென்னையிலேயே குடியேறி கடந்த 40 ஆண்டுக் காலமாக வாடகை கொடுத்து வந்தார்கள். அவர்கள் கொடுத்த வாடகைக் கணக்கைப் பார்த்தால், அந்த வீட்டுக்குரிய முழு கிரயத் தொகையையும் செலுத்திவிட்டதாகச் சொல்லலாம். இப்போது அவர்களை அரசாங்கம் "அந்த வீட்டைக் காலி செய்துவிட்டு வெளியே போங்கள்" என்று சொல்லும் போது, நாற்பதாண்டுக் காலத்துக்குப் பிறகு சென்னை நகரத்திலே வேறு

இடத்திற்கு செல்வதற்கு அவர்களுக்கு வழி இல்லை. ஆகவே அந்த வீட்டை அவர்களுக்கே கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்றும், தேவையானால் அதற்குக் கட்ட வேண்டிய பணம் ஏதாவது இருந்தால், அதைக் கட்டு வதற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்து பலமுறை விண்ணப்பம் செய்தும் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். மத்திய அரசாங்கத்தின் பணம் இதிலே கலந்திருப்பதால், மத்திய அரசாங்கம் இதிலே சம்பந்தப்பட்டிருப்பதால், நாங்களாக முடிவு எடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கு நான் ஒரு விளக்கத்தைச் சொன்னேன். தூவை மாநிலத்தில் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் சேர்ந்து தொழிலாளர்களுக்கென்று குடியிருப்பு கட்டியதில், அங்கேயுள்ள மாநில அரசாங்கம் விரும்பினால், அக்குடியிருப் புகளை அந்தத் தொழிலாளர்களுக்கு உரிமையாக்குவதில் எந்தவிதமான ஆட்சேபணையுமில்லை என்று பதில் அளித்திருப்பதை நான் சுட்டிக்காட்டி னேன்.. ஆகவே மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அவர்களுக்கு வெளியேற்ற நோட்டீஸ் கொடுக்கப் பட்டு, அவர்கள் நீதிபதியிடம் சென்று, தடையுத்தரவு வாங்க வேண்டிய நிலைமை தொடர்ந்து இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே அதைப் பரிசீலித்து அதற்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது வீட்டு வசதித் துறையிலே இருக்கிறதா அல்லது தொழிலாளர் துறையிலே வருகிறதா என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. வீடுகள் என்பதாலே இதை நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

மற்றொன்று. "ஆடிட் ரிப்போர்ட்ஸ் அண்டு அக்கவுண்ட்ஸ் ஆஃப் தி ஹவுசிங் போர்ட் ஃபார் தி இயர் 1983-84" என்ற புத்தகத்தை எங்கள் கையில் கொடுத்திருக்கிறார்கள். அதைப் படித்தால், இந்தத் துறையிலே உள்ளவர்கள் எனை நிர்வாகம் செய்கிறார்கள் என்பதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. அவ்வளவு தவறுகள், அவ்வளவு சீர்கேடுகள், அஜாக்கிரதை யாக பொறுப்பு இல்லாமல் நடக்கக்கூடிய நிலைமைகள் அவ்வளவு இருக்கின்றன என்பதைச் சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஒரு துறையைப் பற்றி மட்டும் முழுவதுமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1,726 ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ் எழுப்பியிருக்கிறார்கள். இந்த ஒரே ஒரு வருஷத் திற்கு மட்டும் சம்பந்தப்பட்ட துறையில் 15,98 கோடி ரூபாய்க்கு முறை கேடுகள் உள்ளன. இதிலே 3,308 ஆடிட் அப்ஜெக்சன்ஸ் கடந்த இருபது ஆண்டுக் காலத்திற்கு மேலாக இருக்கின்றன என்றால். இந்தத் துறையிலே



என்ன நிர்வாகம் நடக்கிறது? இப்படி இருபதாண்டுகளுக்கு மேலாக இருக்கக்கூடிய ஆடிட் அப்ஜெஷன்ஸ்க்கு விளக்கம் கொடுக்க அதிகாரிகளுக்கு முடியவில்லையென்றால், அதைக் கேட்க மேலதிகாரிகளுக்கு முடியவில்லை யென்றால், அதைக் கேட்க அமைச்சரவை இல்லையென்றால், எப்படி நிர்வாகம் திறமையாக, நியாயமாக நடைபெற முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு திட்டத்தை நாம் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளும்போது, குறிப் பிட்ட காலத்திற்குள்ளே நிறைவேற்றவில்லையென்றால், அதனாலே மூன்றாண்டுகள், நான்காண்டுகளுக்குள் திட்டத்தினுடைய மதிப்பீட்டுச் செல வினம் 100 சதவீதம் உயர்ந்துவிட்டது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதில் காலம் கடத்தியதால் 261.81 இலட்சம ரூபாய் கூடுதல் செலவு ஆகியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். இதுபோன்று 16 செலவினங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த ஒரு இனத்திலே மட்டும் 261.81 இலட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது என்றால், மற்ற பல்வேறு திட்டங்களையும் கணக்கிலே எடுத்துக்கொண்டால், ஏறக்குறைய 100 சதவீதம் செலவினங்கள் உயர்ந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டிருக் கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏன் அப்படிப்பட்ட நிலைமை என்பதற்கு பல்வேறு காரணங்களைச் சொல்லலாம். ஆகவே திட்டமிடும் போதே, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய வாய்ப்புகள், சாத்தியக் கூறுகள், ஆட்கள், தேவையான மூலப்பொருள்கள் ஆகியவற்றின் கணக்கை யெல்லாம் எடுத்து திட்டமிட்டிருந்தால், இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. இதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி 1972 ஆம் ஆண்டு 1974, 1979, 1980, 1981 மற்றும் 1982 ஆகிய ஆண்டுகளில் துவங்கப்பட்ட திட்டங்கள் முடிவடையாமல் இருக்கின்றன என்பதை 'ஆடிட் ரிப்போர்ட்' குறிப்பிட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதனாலே இந்தத் திட்டங்களால் பலன் பெறக்கூடிய தனிப் பட்ட நபர்களின் நலன்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது, ஆரம்பத்திலே சொன்ன விலையை விட, கட்டி முடித்து ஒப்படைக்கும்போது கொடுக்கும்போது 200 சதவீதம், 300 சதவீதம் விலையேறும்போது அரசாங்கம் தன்னுடைய கையிலிருந்து கொடுக்க வேண்டிய மோசமான நிலை இருக்கிறது என்பதை அரசாங்கம் மனதிலே கொண்டால், இனியாவது இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க வழிவகை அமையும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அப்படி

(பிற்பகல் 12-05)

இங்கே 10, 12 ஆண்டுக்காலமாக ஆகியும்கூட முழுமையாக வேலைகள் முடிய வில்லை. 261 வேலைகள் முடிவடையவில்லை. ஏற்கெனவே 13, 14 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கின்றது. கொரட்டூரிலே ஒரு திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டத்தில் 146.17 ஏக்கர் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக் கின்றது. பல லட்சம் ரூபாய்கள் செலவு செய்து நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று திட்டம் இருந்தாலும்கூட, அந்தத் திட்டத்தை இன்னும் பூர்த்தி செய்யவில்லை. அதனுடைய மதிப்பீடு 28.12 லட்சம் ரூபாய். ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று செலவைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தாலும், கடைசியிலே 35.24 லட்சம் ரூபாய் அதற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. அதற்குக் காரணம் என்ன என்பதை அரசாங்கத்திலே உள்ள அதிகாரிகள் விளக்கம் சொல்லவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சமீபத்திலே முகப்பேறு, நெற்குன்றம் என்ற இடங்களிலே எம்.எம்.டி.ஏ. அவர்கள் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு 1981 ஆம் ஆண்டில் அரசாங்கத் தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்குரிய தொகைகளைக்கூட அரசாங்கம் அதனுடைய தாசில்தார் அவர்களிடம் 'டெப்பாசிட்' செய்திருக்கின்றது. அதற்குப் பிறகும்கூட ஆர்ஜிதம் செய்யவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அவையில் அமைதி காக்க வேண்டுகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** உரிய காலத்திலே ஆர்ஜிதம் செய்யாத தனாலேயே, ரூ. 42.96 லட்சம் கூடுதலாகச் செலவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. கட்டிமுடிக்கப் பட்ட வீடுகளைப் பொறுத்து வசூல் செய்வது பற்றி ஒரு குறிப்பு சொல்லி யிருக்கின்றார்கள். அது என்னவென்றால், டிமாண்ட், கலெக்ஷன், பேலன்ஸ் ஸ்டேட்மெண்ட் இவைகள் எல்லாம் சரியாக, ஒழுங்காக up to date ஆக இல்லை என்று சொல்கின்றார்கள். அப்படி இருந்தால் எப்படி வசூல் செய்ய முடியும்? எவ்வளவு பணம் வரவேண்டியிருக்கின்றது? எவ்வளவு பணம் வசூல் செய்யப்பட்டிருக்கின்றது? இவ்வளவு வசூல் செய்ய வேண்டி யிருக்கின்றது என்ற விவரங்கள் முழுமையாக இல்லை என்ற ஒரு சீரியசான குற்றச்சாட்டும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.



இன்னொன்று 'சென்ட்ரல் அக்கவுண்ட் எக்ஸ்பென்டிசர்' என்ற பெயரிலே 'சஸ்பென்ஸ் ஸ்டாக்' என்று சொல்லி ரூ. 70 லட்சம் இருக்கின்றது. அதாவது ரூ. 70 லட்சத்திற்கு ஒரு ரிவைஸ்ட் எஸ்டிமேட், மார்ச் மாதத்தில் அரசாங் கத்தினுடைய தேவை இது என்று சொல்லி, ரூ. 70 லட்சம் என்று சொல்லி யிருக்கின்றார்கள். ஆனால் சில நாட்களுக்குள்ளாக 'ஆக்சுவல் எக்ஸ்பென்டிசர்', செலவான தொகை என்னவென்று சொன்னால் ரூ. 471.91 லட்சம் ரூபாய். மார்ச் மாதம் இரண்டாவது வாரத்திலே அரசாங்கத்திற்குத் தேவை என்பது ரூ. 70 லட்சம். இரண்டு வாரத்திற்குப் பின்னாலே உண்மையாக செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 471 லட்சம் என்று சொன்னால், இதிலே அரசாங்கம் என்ன கவனம் செலுத்துகிறது என்று பார்க்க வேண்டும். செலவினங்களை வாட்ச் பண்ணிக்கொண்டிருக் கின்றார்களா இல்லையா என்று தெரியவில்லை. அரசாங்கத்திலே அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

'ஸ்டோர் ஆட்வான்ஸ்' என்ற பெயரிலே ரூ. 260 லட்சம் மார்ச் மாதம் இரண்டாவது வாரத்திலே தேவை என்று அனுமதி வாங்கிவிட்டு, செலவு செய்த தொகை ரூ. 732.29 லட்சம் என்று வருகிறது. மூன்று மடங்கு பணம் செலவு செய்யப்பட்டது. இதையெல்லாம் இரண்டு வாரங்களுக்கு முன் எதிர் பார்க்க முடியவில்லை. அதைப்பற்றி 'அசெஸ்' செய்ய முடியவில்லை. அது அவ்வளவு சரியில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்று. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தில் கட்டிமுடிக்கப்பட்ட 2037 பிளாட்கள் இருக்கின்றன. அந்த பிளாட்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக தண்ணீர் வரவில்லை, மின்சாரம் வரவில்லை, அதனால் அங்கே வீட்டை விட முடியவில்லை என்று சொல்கின்றார்கள். அப்படி என்றால் அதனால் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப் பிட்ட அந்த இரண்டு இலாக்காக்களும் வீட்டு வசதி வாரியமும், அதன் அதிகாரி களும் ஒருவருக்கொருவர் சரியான முறையில் கோ-ஆப்பரேட் செய்திருந்தால், அவர்களிடையே சரியான கோ-ஆர்டினேஷன் இருந்திருக்குமானால், இந்த நிலைமைகளைத் தவிர்த்திருக்கலாம். இரண்டு ஆண்டுகளாக கட்டிமுடிக்கப் பட்ட வீடுகளை யாருக்கும் ஒப்படைப்பு செய்யாததனால் எவ்வளவு நஷ்டம் என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹட்கோ திட்டத்தின் கீழ் பல்வேறு பிரிவினருக்கு என்று 15,58,24,000 ரூபாய் செலவு செய்து 9,156 வீடுகள் கட்டுவதாக திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் 15,58,24,000-க்கு மேல் ரூ. 21 கோடி செலவு செய்து 7,955

வீடுகள்தான் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், ரூ. 6 கோடிக்குமேல் அதிகமாகச் செலவு செய்தும் 1,231 வீடுகள் குறைவாக இருக்கின்றது என்று சொன்னால் கோளாறு எங்கே என்று அதிகாரிகள் விளக்க

(பிற்பகல் 12-10)

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அரசாங்க அதிகாரிகள் காரணமா அல்லது வேறு ஏதாவது தவறுகள், கோளாறுகள் நடைபெற்றிருக்கின்றனவா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். திட்டம் போட்டது 11,850 வீடுகள் கட்டுவதற்கு. அதுதான் அரசாங்கத்தினுடைய டார்கெட். அவர்கள் சாதிக்க முடிந்தது 7,427 வீடுகள்தான். அவ்வளவுதான் கட்ட முடிந்தது. அதனால் கட்டாமல் போனது 4,423 வீடுகள். தொகையைப் பயன்படுத்தாமல் போனது 40 சதவிகிதம், கட்டி முடிக்காமல் போனது 33.33 சதவிகிதம் என்று குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். இதிலே ஏராளமான காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நோக்கம் புனிதமானதுதான் என்று பேசப்பட்டாலும், அவைகளை நிர்வகிக்கும் தன்மையில் கவனக் குறைவு இருந்தால், அதனால் பலன் ஏற்படாது, அதனால் கெடுதல்தான் ஏற்படுமென்று கூறி, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பின்மீது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தமிழ் நாட்டினுடைய நலனைக் கருதியும், அரசு தொடர்ந்து நல்ல காரியங்கள் ஆற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடும், எங்கேயாவது தவறு நடந்தால் அதைப் போக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடும் சொன்ன கருத்துக்களாகத்தான் நான் அவற்றை ஏற்றுக்கொள்கிறேன். இதில் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கத்தான் ஒரு அரசு இருக்கிறது. அந்த அடிப்படையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ஜெயச்சந்திரன் அவர்கள் ஆரம்பத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக தமிழகத்தில் நல்ல காரியங்கள் நடைபெறுகிறதென்று சொன்னார்கள். அவர்களுடைய பேச்சின் இறுதிக் கட்டத்தில், கடலூர் பகுதியில் ஏற்கெனவே வீடுகள் கட்டப்பட்டும், ஒதுக்கப்படாமல் இருக்கிறதென்ற கருத்தைச் சொன்னார்கள். மற்ற இடங்களிலே இருக்கும் சூழ்நிலைகளைப் பார்க்கும் போது, இங்கே கொஞ்சம் விலை அதிகமாக இருக்கும் நிலை இருக்கிறது. அது. சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகள். இன்னும் ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. பின்

வசதி உடனே தர முடியாத நிலை இருந்ததால், காலதாமதம் ஏற்பட்டது. இப்போது அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த வீடுகள் ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், மனை வழங்குதல் திட்டத்தை உரிய காலங்களில் நிறைவேற்றுவதில் கொஞ்சம் காலதாமதமாகிறது என்று சொன்னார்கள். ஒவ்வொரு நகரத்திலும் நிலங்களை எடுக்க வேண்டும், விரைவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. 500 ஏக்கர் நிலம் ஒரு இடத்தில் இருக்கும்போது, 50 உரிமையாளர்கள் அங்கே இருந்தால், 30, 40 பேர் நீதி மன்றங்களுக்குச் செல்லும் சூழ்நிலை உருவாவதில்லை. 2, 3 பேர் நீதிமன்றங்களுக்குச் செல்வதால், திட்டத்தை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும், நிலங்களைக் கொஞ்சம் குறைத்து எடுத்தாவது, திட்டத்தை சீக்கிரம் நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் பல்வேறு காரியங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அடுத்து பணம் கட்டுகின்ற காலங்களில், எவ்வளவு பணம் கட்டுகிறார் என்று கட்டுகிறவருக்கே தெரியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அங்கே பணியாற்றும் ஊழியர்களும் சரியாகச் சொல்லாததால், குழப்பம் வருகிறது என்று சொன்னார்கள். நியாயமான அந்தக் குறையைப் போக்க, 'பாஸ் புக் சிஸ்டம்' அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி சட்டமன்றத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். வங்கிகளில் இருக்கும் அடிப்படையில், வீட்டு வசதி வாரியத்தில் வீடு, நிலம் வாங்குகிறவர்களுக்கு 'பாஸ் புக்' கொடுத்து, அவர்கள் நேரடியாகச் சென்று, வீட்டு வசதி வாரிய ஊழியர்களிடம் பாஸ் புக்கைக் காட்டி 'பணம் கட்டினேன்' என்றால் அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அடுத்து, ஹட்கோ நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அது 3 மாதத்திற்கு ஒரு முறை வட்டி வாங்குகிறது. ஆனால் வீடு வாங்குகிறவர்களிடம் ஆண்டுக்கு ஒரு முறை என்று வட்டி வாங்குவதால், கூடுதல் வட்டியாகிறது. எனவே 3 மாதத்திற்கு ஒரு முறை வட்டி விதித்துப் பார்த்தால், வட்டி குறையும் நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கோவையிலே துவங்கி, கடைசியிலே ஸ்ரீலங்காவிற்குச் சென்று முடித்திருக்கிறார்கள். அவர்களுக்கு வெளி நாட்டு தமிழர்கள்மீது ஆர்வம்

அதிகமாக இருக்கிறது. வெளி நாட்டுத் தமிழர்களுக்கு இங்கே வீடு கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் சொன்னார்கள். தமிழக அரசு முதற் கட்டமாக, இந்த ஆண்டு எப்படி வரவேற்பு இருக்கிறது என்று கண்டறிய 50 வீடுகளை பெசன்ட் நகரிலும், அண்ணா நகரிலும் அவர்களுக்காக அறிமுகப்

(பிற்பகல் 12-15.)

படுத்தி இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக நமக்கு வரவேற்பு அதிக மாக இருந்தால், மேல்நாடுகளிலிருந்து வருகிற தமிழர்களுக்கு நிச்சயமாக இந்த வாய்ப்புகள் கிடைக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார். எம்.எம்.டி.ஏ.யை பொறுத்தவரையில், வீடு கட்ட அனுமதிக்குச் செல்கின்றபோது, 1 ஆண்டு, 2 ஆண்டு என்று காலதாமதம் ஆகிறது என்றார்கள். அனுமதியைப் பொறுத்தவரையில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் தனியான விதி முறையை வைத்திருக்கிறது. 1-1-1986 முதல் புதிதாக அதற்கென்று நடைமுறையை ஏற்படுத்தியிருக்கிறோம். அதாவது மனு செய்யும்போது, தேவையான தகவல்கள் அனைத்தையும் சரியாகக் கொடுத்திருந்தால், 10 நாட்களுக்குள் கட்டிடம் கட்டுவதற்கான அனுமதியை, உரிமையைத் தந்து விட வேண்டுமென்கிற ஒரு நடைமுறையை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறோம். சாதாரணமாக 300 சதுர மீட்டர் கட்டிடங்களைப் பொறுத்தமட்டில், முன்னுதாரணமாகக் காட்டி அமுல்படுத்தி யிருக்கிறோம். அதுபோல் கல்வி நிறுவனங்கள், மதசார்புடைய அமைப்புகள் போன்றவை குறித்தும் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பொதுமக்கள் நிலம் வாங்கும்போது அவர்கள் ஏமாறாமல் இருக்கும்படி அரசு பார்த்துக் கொள்ள வேண்டுமென்றார்கள். அதற்காகத்தான் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அலுவலகத்தில் தகவல் மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக் கிறது. அங்கே அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட மனைகள் குறித்து ஒரு அருமையான வரைப்படம் போன்றவற்றை வைத்திருக்கிறார்கள். ஆகவே, இனிமேல் பொதுமக்கள் அங்கே தொடர்பு கொண்டு ஏமாறாமல் இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அதுபோல் கட்டிடம் கட்டும்போது விதிகளை மீறாமல் கண்காணிக்க வேண்டுமென்றார்கள். அதற்காகத்தான் 'என்போர்ஸ்மென்ட் செல்' என்கிற ஒரு பிரிவை ஏற்படுத்தியிருக்கிறோம்.

அடுத்து, சென்னையைச் சுற்றியுள்ள குளங்கள் எல்லாம் மூடப்பட்டு வருவதால், தண்ணீர் பிரச்சினை வரும் என்றார்கள். நாங்கள் வீடுகள் கட்ட மனைகளை எடுக்கும்போது, குளம் உள்ள பகுதியா இல்லாத பகுதியா என்று பார்த்து எடுப்பதில்லை. ஆனால் இனிமேல் அப்படிப்பட்ட இடங்களை





நிச்சயமாக எடுக்காமல் நாட்டிலே இருக்கிற தண்ணீர் பிரச்சினையை மனதிலே கொண்டு திட்டங்களை வேறு இடங்களில் செயல்படுத்த முன்னுரிமை அளிப் போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் நகராட்சிகளைப் பற்றியும் குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பற்றியும் சொன்னார்கள். சாதாரண விஷயங்களுக்காக எல்லாம் நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது, உரிமைகள் பறிபோகாமல் பார்த்து எடுக்க வேண்டுமென்றார்கள்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

நகராட்சிப் பகுதிகளில் இன்றைக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதில் நிலம் எடுத்தால் தான், நீதிமன்றத்திற்கு அது சென்றாலும் கூட கடைசியில் நமக்கு 100 ஏக்காராவது மிஞ்சும். அதனால்தான் நாம் சற்று கூடுதலாக எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அரசு கட்டுகின்ற குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் பராமரிப்புக்காக அதிக அளவில் நிதி ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா குறிப்பிட்டார். பட்டினப்பாக்கத்தைப் பொறுத்தவரையில், அதற்காக 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் எங்கேயாவது குறைபாடுகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டால், உடனடியாக சரி செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாஸ்டர் பிளானைப் பொறுத்தவரையில், திட்டங்களைச் செயல்படுத்தும் போது அதற்கென்று ஒரு கால வரையறையை நிர்ணயிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா குறிப்பிட்டார். அதனுடைய அடிப் படை நோக்கத்தைப் பொறுத்தவரையில், உதாரணத்திற்குச் சொல்வ தென்றால், திருச்சியில் ஒரு நகரத்தில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல் படுத்த முனைகிறோம் என்றால், 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நகரத் தினுடைய தேவைகள் என்னவாக இருக்கும், அந்த நகரத்தினுடைய மக்கள் தொகை எவ்வளவாக இருக்கும் என்பதை எல்லாம் மனதிலே கொண்டு, அந்த அடிப்படையில் தான் மாஸ்டர் பிளான் திட்டங்களைச் செயல்படுத்துகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலமும் செய்யாத அளவுக்கு நாம் இதில் நல்லமுறையில் வளர்ச்சியடைந்திருக் கிறோம். நகராமைப்புத் துறையை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு

[திரு. ந. நல்லுசாமி] [1986 ஏப்ரல் 18

(பிற்பகல் 12-20)

தமிழகத்திலே 3 மாநகராட்சிகள் இருக்கின்றன. 98 நகராட்சிகள் இருக்கின்றன. 626 பேரூராட்சிகள் இருக்கின்றன. சில நகராட்சிகளையொட்டி பேரூராட்சிகளிலும் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 112 பேரூராட்சிகளில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதுபோல் 72 பேரூராட்சிகளில் ஏற்கெனவே முழுமையான அளவுக்கு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. 1986-87-ல் மீதியிருக்கிற 44 உள்ளூர் திட்டம் மற்றும் புறநகர் அபிவிருத்தித் திட்டங்களை தமிழகத்திற்குத் தர இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. எல்லா நகராட்சிகளுக்கும் இந்த மாஸ்டர் பிளான் தயார் செய்து முழுமையாக நாட்டில் இந்த நல்ல திட்டங்களை அறிவிப்பு செய்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இருக்கிற இந்த அரசுக்குத் தான் உண்டு.

அதேபோல் இங்கே மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பேசும்போது, பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். முதலில் சொல்கிறபோது, கொள்கைக் குறிப்பைப் பொறுத்தவரையில், பக்கம் 3-ல் கொடுத்துள்ள விபரமான நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்காக 1986-87 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு 1,875 லட்சம் ரூபாய் என்று போட்டுவிட்டு, பக்கம் 5-ல் இதே ஆண்டுக்கு 5,016 வீடுகள் கட்ட 3,742.50 இலட்சம் ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது 'டோட்டல் அவுட்லே' என்ற குறிப்பில்தான் வருகிறது. அந்தக் கணக்கின் அடிப்படையில் பார்க்கிறபோது....

**டாக்டர் மு. கருணாநிதி:** மன்னிக்க வேண்டும். நான்காம் பக்கத்தில் ஆரம்பமாகிறது. அதனுடைய தலைப்பு "நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டம்" என்று ஆரம்பிக்கிறது. அது முடியும்போது, 1986-87 ஆம் ஆண்டில் 5,016 வீடுகள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அதற்கான செலவு ரூ. 3,742.50 லட்சம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் மூன்றாம் பக்கத்தில் 16,400 வீடுகள்/மனைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 3,742.50 இலட்சம் என்று இருக்கிறது. இந்த வேறுபாட்டைத் தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** அதேபோல, குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில், இது 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டம் 1976-77 வரை 20,939 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருந்தும், 1977-86 வரை 18,362 வீடுகள் என்ற அளவுக்குத் தான் கட்டியிருக்கிறார்கள், ஏன் இத்தனை



1986 ஏப்ரல் 18] [திரு. ந. நல்லுசாமி]

குறைவான எண்ணிக்கையில் கட்டியிருக்கிறீர்கள் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் கேட்டார்கள். இன்னொரு திட்டத்தை நாம் சொல்லியாக வேண்டும். 'ஸ்லம் கிளியரன்ஸ்' என்பதைவிட, ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட்' என்று கொண்டு வந்தால், அந்தப் பகுதிகளில் சுகாதார வசதி அவர்களுக்கு மேம்பாடான முறையில் கிடைக்கும் என்ற நோக்கத்தை மனதில் கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறோம். இந்த அமைப்பு 1971-76-ல் இல்லை. 1977-86-ல் கொண்டு வரப்பட்டு, அந்த அடிப்படையில் 71,698 பேருக்கு அந்த வசதி கிடைத்திருக்கிறது. சென்னை புறநகர் வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் 67,502 பேருக்கு இந்த வசதி வாய்ப்பு கிட்டியிருக்கிறது. மற்ற பகுதிகளில் 1977-86-ல் 28,147 பேர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதேபோல் சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, குடிசைகளுக்கு பட்டா கிடைக்கிற சூழ்நிலையும் இருக்கிறது. இப்போது இந்தப் பட்டா வசதியைப் பெற்றுத் தந்திருக்கிற அரசு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசு தான் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

அதேபோல், வேறு வகையான சின்ன சின்ன வசதிகளையும் நாம் ஏற்று செய்து வருகிறோம். குடிசைப் பகுதிகளை துப்புரவுப் படுத்தும் திட்டமானாலும், சீரமைக்கும் நடவடிக்கையானாலும் சரி, 1977-லிருந்து 1986 வரை 2,77,447 பேர்களுக்கு பல்வேறு வசதிகளை, அதாவது வியாபாரம் செய்வதற்கு, வீடு கட்டுவதற்கு போன்ற வசதிகளை குடிசை மாற்று வாரியம் செய்து வருகிறது. அதேபோல், இன்னொரு கருத்தையும் சொன்னார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அண்ணா அறிவாலயம் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதில் கால தாமதம் ஆகிறது என்ற கருத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அது குறித்த சில செய்திகளையும் சொன்னார்கள். அதை விரைவாக முடிக்க தேவையான நடவடிக்கைகள் உரிய நேரத்தில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்பத்தில் பார்க்கிறபோது, அது அண்ணா சாலையில் இருக்கிறது. ஆனால் அந்தக் கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலனையில்தான் இருக்கிறது. இடையில் காலதாமதம் ஏற்படுவதற்கு தனிப்பட்ட காரணம் ஏதுமில்லை. 'பேரிக் பாயிண்ட்' என்னவென்றால், ஆரம்பத்திலே அனுமதிக்கப்பட்டது என்பது உண்மைதான். ஆனால் இவ்வளவு காலதாமதத்திற்குக் காரணம், 1983-ல் அனுமதி கொடுக்கப்பட்டு, அந்த 'பீரியட்' முடிந்து விட்டது. புது அனுமதி தேவைப்படுகிற காரணத்தால், பல்வேறு சூழ்நிலைகளைப் பார்ப்பது அவசியமாகிறது என்ற காரணத்தால், காலதாமதம் ஏற்படுகிறது. வேறு ஒன்றுமில்லை. இங்கே ஸ்ரீ ராமச்சந்திரா மெடிக்கல் காலேஜ் பற்றியும்

கொண்டிருக்கிறார்கள். "கட்டக்கூடாது என்று சொன்னதால் நாங்கள் கட்டாமல் இருக்கிறோம், எங்களுக்கு அனுமதி கொடுங்கள்" என்பது குற்றம். "நாங்கள் எதையும் செய்வோம். மீறியும் கட்டுவோம்" என்று சொல்கிறவர்களுக்கு நீங்கள் அளிப்பது சலுகை. இது நியாயம்தானா?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நியாயமாக நடப்பவர்களை நாங்கள் குற்றமாக எப்போதும் சொல்வதில்லை.

அடுத்து, குடிசை மாற்று வாரியத்தின் தலைவர், தேர்தல் நேரத்திலே ஒரு அறிவிப்பைத் தந்ததாகச் சொன்னார்கள். அது தனிப்பட்ட முறையில் அவர் தந்த அறிவிப்பு. துறையோ, அமைச்சரோ சொல்லியிருந்தால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம். குடிசை மாற்று வாரியத் தலைவர் தனிப்பட்ட முறையில் தான் கூறியிருப்பதாக என் மனதிலே படுகிறது.

இன்றைக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஓர் அருமையான திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். முப்பது இலட்சம் வீடுகள் கட்டித்தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு அரசின் சார்பில் சில நேரங்களில் சில திட்டங்களைச் சொல்கின்றபோது, சந்தேகங்கள் வருவது இயற்கை. இந்த அரசு ஏற்கெனவே சத்துணவுத் திட்டத்தை அறிவித்தபோதும் அது நடக்குமா என்று ஆரம்பத்திலே சந்தேகப்பட்டார்கள். "இது வந்தால் நாட்டிலே வேறெந்தத் திட்டமும் நடைபெறாது. இதில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கூட கொடுப்பதற்குப் பணம் இருக்காது." இவ்வாறெல்லாம் சத்துணவுத் திட்டம் வந்த காலத்தில் சொன்னார்கள். "இது தொடர்ந்து இருக்குமா? ஆறு மாதங்களுக்காவது இருக்குமா?" என்றுகூட சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அது தொடர்ந்து நடைபெற்று

(பிற்பகல் 12-30)

வருகிறது. சட்டமன்றப் பேரவையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இன்றைக்கு அதைப் பாராட்டத் துவங்கியிருக்கிறார்கள். அதுபோல் 30 லட்சம் வீடுகளைப் பொறுத்தவரையில், பின்னாலே மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும் நிச்சயமாகப் பாராட்டுவார்கள் என்று நம்புகின்றேன். அரசு அதை அறிவித்த 1½ மாதத்தில், என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. மூலமாக 60 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு இப்போது முடிவு எடுத்திருக்கிறோம். குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 60 ஆயிரம் வீடுகளும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 40 ஆயிரம் வீடுகளும், அரசு நிதி மூலமாக சில வீடுகளைப் புதுப்பிக்கின்ற வகையில் 60 ஆயிரம் வீடுகளும் இப்படிக் கிட்டத்தட்ட 2 லட்சத்து 10 ஆயிரம்





வீடுகள் கட்டுகின்ற ஒரு முடிவை கிட்டத்தட்ட 1½ மாதத்திற்குள் தமிழக அரசு எடுத்திருக்கிறது. அவைகளுக்கு நிதியைப்பற்றிச் சந்தேகப்பட்டார்கள். வீட்டுவசதி இலாக்கா மட்டுமல்லாமல், மற்ற இலாக்காக்களும் அதாவது தாட்கோ, ஹட்கோ இப்படிப் பல்வேறு நிறுவனங்கள் எல்லாம் சேர்ந்து 30 லட்சம் வீடுகள் கட்டும் சூழ்நிலை இருக்கிறது. என்.ஆர்.ஈ.பி-யைப் பொறுத்தவரை, 20.44 கோடி ரூபாய், ஆர்.எல்.ஈ.ஜி.பி. 30.23 கோடி ரூபாய், ரூரல் ஹவுசிங் ஸ்கீம் 3 கோடி ரூபாய், தாட்கோ நிறுவனம் 3 கோடி ரூபாய், வேறு ஒரு திட்டத்தின் அடிப்படையில் 50 ஆயிரம் ரூபாய், ஹவுசிங் ஸ்கீம் என்ற அடிப்படையில் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது 20 கோடி ரூபாய் ஆக மொத்தம் 77.21 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் இருக்கின்றன. மேலும் நிதி வசதியைப் பெறுவதற்கு பல்வேறு நிறுவனங்கள் இருக்கின்றன. யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா, ஜெனரல் இன்சூரன்ஸ் கார்பரேஷன், ஹவுசிங் பைனான்சிங் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் இப்படிப்பட்ட நிறுவனங்களோடு தமிழக அரசு இந்த 30 லட்சம் வீடுகள் கட்டித் தரும் திட்டத்திற்காகத் தொடர்பு கொண்டிருக்கிறது. அந்தத் திட்டம் நிச்சயம் வருமென்ற நோக்கத்தோடு, கடந்த 2 நாட்களாக, இந்த மாதம் 16, 17 தேதிகளில், நம்முடைய துணைக் கண்டத்தில் குறைவான செலவில் வசதியான வீடுகளைக் கட்டுவதற்கு, சில நிபுணர்களை எல்லாம் அழைத்து, சென்னையில் தனிப்பட்ட ஒரு குழு போட்டு, அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது நேற்றையதினம் தான் முடிந்தது. அவர்கள் எல்லாம் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நல்ல முடிவு எடுத்திருக்கிறார்கள். விரைவாக குறைந்த செலவில் அதிகம் பேர்களுக்கு உதவும் வகையில் வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டுவர முடியுமென்ற நல்ல கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அதன் முழு விவரங்களையும் நான் பின்னர் தெரிவிக்கிறேன்.

நானே ஒரு கருத்தைச் சொல்லாமென்று நினைத்தேன். எம்.எம்டி.ஏ.வைப் பொறுத்தவரையில், தொடர்ந்து சில காரணங்களால் மாண்புமிகு அவை முன்னவர் திரு. ஆர். எம். வீ. அவர்கள்கூட சொன்னார்கள். "இப்படியெல்லாம் சில பேருக்கு நடக்கிறது; ஆனால் எங்களுக்கு நடக்கவில்லை" என்று மாண்புமிகு கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அதை நானே சொல்லலாமென்று நினைத்தேன். நாங்கள் ஒரு நிகழ்ச்சிக்குப் போனோம். அதிகாரிகள் சரியாக இருந்தால் வேலைகள் எல்லாம் சரியாக நடக்கும். எங்காவது தவறு நடந்தால் அதைப் பார்த்துச் சொல்ல வேண்டும். தவறு இல்லாமல் இருந்தால் நாட்டுக்கு நல்லது. தவறு செய்கின்ற அதிகாரிகள் யாராவது இருந்தால், அவர்களைக் கண்டுபிடிப்பதுதான் எங்களுக்கும், வேலை, எதிர்க் கட்சி

களுக்கும் வேலை. எதிர்க் கட்சிகள் சொல்கின்ற நியாயமான குறைபாடுகளைப் போக்கும் தன்மையோடு அரசு நிச்சயமாக ஈடுபடும். குறை பாடுகள் இருக்கின்ற நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைக்கு ஒரு தியேட்டர் திறப்பு விழாவில் கூறினார்கள். நானும் அந்த நிகழ்ச்சியில் இருந்தேன். எனவே யமன் வருவதற்கு வாய்ப்பு இல்லை. நியாயமான குறை பாடுகளை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். தவறு எங்கு நடைபெற்றாலும், அதைப் போக்கும் தன்மையோடுதான் இந்த அரசு நடந்துகொள்ளும். அந்த அடிப்படையில்தான், உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் ஒவ்வொன்றையும் பார்க்கும்போது அது நாட்டு வளர்ச்சிக்காகவும், சமுதாய வளர்ச்சிக்காகவும், தமிழக அரசு மேலும் பல திட்டங்கள் கொண்டுவர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு சொன்னதாகத் தான் நான் மனதிலே கொள்கின்றேன். அதுபோல மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களுடைய கருத்துக்கள் நியாயமாக இருந்தன. அதிலே குறிப்பாக தொழிலாளர்களுக்கு கட்டப்பட்ட மலிவு வீட்டு வாடகை வசதித் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். அரசு அதை மேற்பார்வையிட்டு வசூல் செய்கின்ற வேலையைத்தான் செய்துகொண்டிருக்கிறது. என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், தொழிலாளர்களுக்காக முன்பு மத்திய அரசின் மூலமாக ஒரு திட்டம் இருந்தது. அதன்படி தோட்டத் தொழிலாளர்களின் உரிமையாளர்கள் 50 சதவீதம் கொடுக்க வேண்டும், தொழிலாளர்கள் 25 சதவீதம் கொடுக்க வேண்டும். மீதியை மாநில அரசு 25 சதவீதம் கொடுக்க வேண்டும். இது ஒரு நல்ல திட்டம். இது 10 இடங்களில் இருந்தது அரசு. ஆனால் இப்போது அந்தத் திட்டத்தை அறிமுகம் செய்தது மத்திய அரசு. இப்போது மாநில அரசு அந்தத் திட்டம் நல்ல திட்டம் என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. அந்தத் திட்டத்தை மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுத்தால், நிறையத் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து அந்த வசதி வாய்ப்புகளைக் கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

(பிற்பகல் 12-35)

அதைப் போலவே இங்கே பேசிய மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும், குறைபாடுகளையும் இந்த அரசு மனதில் கொண்டு, அவற்றையெல்லாம் போக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடும் என்றும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



திரு. ஏ. ஜே தாஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தவணை முறையில் ஒதுக்கப்பட்ட வீடுகளைப் பொறுத்தவரையில், தவணை முறையில் செலுத்த வேண்டிய அவ்வளவு தொகையையும் செலுத்தி 4 அல்லது 5 ஆண்டுகளாகியும் கூட இன்னும் அத்தகைய வீடுகளுக்குக் கிரையப் பத்திரம் கொடுக்கப்பட வில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இன்னும் எத்தனை ஆண்டுகள் கழித்து அவைகளுக்கான கிரையப் பத்திரங்கள் எழுதிக் கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ந. நல்லுசாமி: தவணை முறையில் வீடுகளை வாங்கி 5 ஆண்டுக் காலம் கழித்த பின்னர்தான் அவற்றிற்கான டாக்குமெண்ட்களை வீட்டு வசதி வாரியம் மூலமாகக் கொடுக்கப்படும் என்று சொல்லியே தரப் படுகிறது. முழுப் பணம் கொடுத்தாலும் கூட 5 ஆண்டுகள் கழித்துத்தான் டாக்குமெண்ட்களைக் கொடுக்கலாம் என்று வைத்திருப்பதற்குக் காரணம் தவணைத் தொகையை முழுவதுமாகக் கட்டிவிட்டு உடனே அதை மற்றவர் களுக்குப் பலர் விற்று விடுகிறார்கள். எனவேதான் 5 ஆண்டுகள் கழித்தும் முழுமையாகப் பணத்தைக் கட்டியும் கிடைக்காமல் இருந்தால் அத்தகைய நிலைமைகளை இந்த அரசு போக்குவதற்குத்தான் ஏற்கெனவே அறிவிப்பு கொடுத்திருக்கிறோம். எனவே அப்படிப்பட்ட குறைபாடுகள் இனிமேல் இருக்காது என்று சொல்லிக் கொள்கிறேன்.

## 4. 20-4-1986 அன்று ஓய்வு பெற இருக்கும் உறுப்பினர்களுக்குப் பாராட்டு பகர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 20-4-1986 அன்று ஓய்வு பெற இருக்கும் உறுப்பினர்களின் விவரம் வருமாறு:—

1. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் திரு. ஜி. சுவாமிநாதன்.
2. திரு. க. அருணாசலம்.
3. டாக்டர் இரா. சனார்த்தனம்.
4. செல்வி ஆ. லீலாவதி.
5. திரு. பி. முனுசாமி.
6. திருமதி தாரா செரியன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 6 ஆண்டுக் காலமாக நம்முடைய அவையில் உறுப்பினர்களாகப் பொறுப் பேற்று, சிறந்த முறையில் பணியாற்றி, அரசுக்கும் இந்த அவைக்கும், குறிப் பாக நாட்டு மக்களுக்கும் நல்ல கருத்துக்களை வழங்கிப் பணி புரிந்திருக்கிற

[திரு. இராம. வீரப்பன்] [1986 ஏப்ரல் 18

உறுப்பினர்களை இந்த அவையின் சார்பில் பாராட்டுவதற்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம். அதிலும் மேலவையின் துணைத் தலைவராகப் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் 3 முறை பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவையில் மிகச் சிறந்த பணி புரிந்து, நீண்ட அனுபவம் மிக்க சட்ட மன்றத் துறையில் நல்ல பயிற்சி பெற்றவர்களாவார்கள். அவர்கள் இப்போது ஓய்வு பெறுகிற அந்தச் சூழ்நிலையில் நாம் நம்முடைய வாழ்த்துக்களைத் தெரிவித்தாலும், மீண்டும் நம்மோடு இந்த அவையில் இருக்கப் போகிறார்கள் என்ற அறிவிப்பு மேதகு ஆளுநர் அவர்களால் கிடைத்திருக்கிற சூழ்நிலையில் அவர்களுடைய பணி தொடர்ந்து இந்த அவைக்குக் கிடைக்க இருக்கிறது என்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கடந்த 6 ஆண்டுக் காலத்தில் இந்த மன்றத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டு, தங்களுக்கு உறுதுணையாக இருந்து, இந்த அவையை நடத்திய பாங்கையும துணைத் தலைவராக இல்லாத சூழ்நிலையில் உறுப்பினர் என்ற முறையில் அந்த உணர்வோடு பல விவாதங்களில் கலந்து கொண்டு அவர்கள் எடுத்து வைத்த கருத்துக்கள் மிகுந்த பயன் அளிக்கத் தக்கவையாக அமைந்திருந்தன என்ற உணர்வோடு அவரைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போல இந்த அவையில் கடந்த ஆறு ஆண்டுக் காலமாக உறுப்பினராக இருந்து, ஓய்வு பெறுகிறவரான பெரியவர் மாண்புமிகு உறுப்பினர் திரு க. அருணாசலம் ஆவார்கள். அவர்கள் 75 வயது நிரம்பப் பெற்ற முதிர்ந்த, மிகச் சிறந்த காந்தியவாதி, மற்றும் கல்வியாளர் ஆவார், சமுதாய நலப் பணிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டார். மக்கள் பணியே தன்னுடைய வாழ்க்கை என்று மாற்றிக் கொண்டிருக்கிற சிறந்த பண்பாளர். அவரைப் போன்றவர்கள் இந்த அவையில் பங்கேற்றுப் பொறுப்புகளை வகிக்கிற நிலையில் பல நேரங்களில் விவாதங்களில் நல்ல கருத்துக்களை எடுத்து வைத்தது இந்த அவைக்கும், இந்த அவையின் மூலமாக இந்த நாட்டு மக்களுக்கும், அரசுக்கும் மிகுந்த துணையாக இருந்தது என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட பெரியவர் இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற, விளங்கிக்கொண்டிருக்கிற காந்தியவாதிகளில் தலைச் சிறந்தவராக விளங்குகிறவர். காந்தியவாதிகள் என்றாலே புதிய கருத்துக்களுக்கும், விஞ்ஞான யுகத்தோடும் தங்களை இணைத்துக் கொள்ளாதவர்கள் என்ற கருத்தை நாட்டிலே பலர் உருவாக்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், பெரியவர் மாண்புமிகு உறுப்பினர் திரு அருணாசலம் அவர்கள் தான் கற்றுக்



1986 ஏப்ரல் 18] [திரு. இராம. வீரப்பன்]

கொண்டிருக்கிற மிகுந்த அனுபவம் வாய்ந்த கல்வி அறிவை இந்த நாட்டில் மட்டுமல்லாமல், வெளி நாட்டில் பயின்று பெற்ற கல்வி அறிவை, நம் நாட்டின் பெருமையைக் காப்பாற்றுகிற வகையில் தூய்மையான உணர்வோடு தம் அனுபவத்தை வளர்ந்து கொண்டிருக்கிற இந்த விஞ்ஞான உலகத்தோடு இணைத்து, புதிய சித்தாந்தங்களை சமுதாயத்திற்கு வழங்கிக்கொண்டிருக் கிறார்கள்.

(பிற்பகல் 12.40)

அதை நிறைவேற்றுகின்றவர். அமைதி, விஞ்ஞானம் என்ற புதிய அறிவியலுக்கு பாடம் வகுத்து, அதனை முதுகலைப் பட்ட வகுப்பாக ஏற்படுத்தி, மதுரை பல்கலைக் கழகத்தின் மூலமாக இந்த நாட்டுக்கு மிகச் சிறந்த கல்விப் பணி ஆற்றுகின்ற மிக அருமையான கல்விமான் அவர். இந்த வயதிலேயும் தன்னுடைய உடல் நலத்தைச் சிறப்பாக வைத்துக்கொண்டு மிகச் சிறந்த ஆற்றலோடும், மிகப் பெரிய அறிவார்ந்த உணர்வுகளோடும் அவர்கள் நம் மிடையே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர் ஆறாண்டுகளாக இந்த அவையிலே நிறைவேற்றியிருக்கின்ற பணிகள் என்றைக்கும் இந்த அவையின் குறிப்புகளிலே இருந்து நம்முடைய நினைவுகளில் நிலைத்திருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி தாரா செரியன் அவர்கள் மிகச் சிறந்த சமுதாயப் பணிக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற சிறந்த பெண்மணியாவார்கள். அவர்களுடைய வாழ்வு, முழுவதும் சமுதாயப் பணிக்கும், பொதுப் பணிக்கும் ஒப்படைத்துக்கொண்டிருக்கிற வாழ்வாகும். அவருடைய துணைவராகட்டும், அவராகட்டும், இருவருமே பெயரில் மாத்திரம் இணைந்திருக்கவில்லை; வாழ்க்கையில், சமுதாயப் பணியில், பொதுப் பணியில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிற மிகச் சிறந்த சேவையாளர்கள். அப்படிப்பட்ட அம்மையார் மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்களை நான் பாராட்டி வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அருமை நண்பர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள். இரண்டு முறை பட்டதாரிகள் தொகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவையிலே பணியாற்றியிருக்கின்ற மிகச் சிறந்த ஓர் உறுப்பினர். அவர் தன்னுடைய வாழ்க்கையையே போராட்ட வாழ்க்கையாக அமைத்துக் கொண்டிருக்கிறவர், மிகச் சிறந்த தொண்டாற்றுவதற்காக அமைத்துக் கொண்டிருக்கிறவர். அதனாலேதான் இன்றைக்கு இந்த வீட்டு வசதித் துறையின் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதங்களில் கலந்துகொண்டு

[திரு. இராம. வீரப்பன்] [1986 ஏப்ரல் 18

பேசுகின்றபோதுகூட தனக்கோ, தன்னுடைய குடும்பத்திலே உள்ள யாருக்கோ ஒரு வீடுகூட இல்லையென்ற உணர்வை இங்கே சுட்டிக் காட்டினார்கள்.

பொது வாழ்க்கையை பொது வாழ்க்கையாகவே வைத்துக் கொண்டு தமிழகத்திற்கு மாத்திரமல்லாமல், உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழ் மக்களுக்காக, தமிழ் இளைஞர்கள் அமைப்பை ஏற்படுத்தி, அதற்காகப் பாடுபடுகின்றவர். உலகத்திலே உள்ள தமிழ் இளைஞர்களுடைய உள்ளத்திலே தமிழ்நாட்டின் இளைஞர் ஒருவருடைய பெயர் இடம் பெற்றிருக்கிறது என்றால், அது அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்களின் பெயர்தான் என்றால், அது மிகையாகாது. அப்படிப்பட்ட ஆற்றல் மிக்கவர் இளைஞர்களின் தலைவராக, தமிழ் இளைஞர்களின் தலைவராக, தமிழ் மக்களுக்குத் துணை நிற்கின்ற தலைவராக விளங்கு கின்றார். அவருடைய பணியை இந்த அவை இரண்டு முறை அதாவது 12 ஆண்டுக் காலம் பெற்றுக் கொண்டிருந்தது, அவருடைய கருத்துக்கள் உணர்ச்சி பூர்வமான கருத்துக்கள், பயன்தரத்தக்க கருத்துக்கள், அவர் எடுத்து வைத்த அடிப்படைக் கருத்துக்கள் நமக்குப் பெரிதும் பயன் தந்திருக்கின்றன.

அதைப் போலவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள், அமைதியானவர், காந்தியத்தில் முழு நம்பிக்கை வைத்திருப்பவர். ஆதி திராவிட வகுப்பில் பிறந்து, தாழ்த்தப்பட்டு ஒடுக்கப்பட்டு இந்த நாட்டிலே இன்றைக்கும் மீளாத அடிமைப்பட்ட சூழ்நிலையில் இருக்க வேண்டுமென்று எண்ணப்படுகிற மிகப் பெரிய மக்கள் சமுதாயத்தின் பிரதிநிதியாக அவர் தன்னை மாற்றிக்கொண்டு அதற்காக தன்னுடைய வாழ்வை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறார். அவர் சிறந்த சமுதாயத் தொண்டர். அப்படிப்பட்ட நல்ல தொண்டரின் சேவையை இந்த அவை மறக்க முடியாது.

அதைப் போலவே நம்முடைய திருமதி லீலாவதி அவர்கள் ஆசிரியர் தொகுதியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசிரியர்களுக்காக போராட்டத்திலே ஈடுபட்டு, சிறைவாசம் ஏற்றுக்கொண்டு, அந்த அனுபவத் தின் மூலமாக ஆசிரியர் பெருமக்களுக்காக, ஆசிரியர்களின் உரிமைக்காக இந்த அவையில் குரலை எழுப்பிக் கொண்டிருந்தார். அப்படிப்பட்ட உறுப்பினரை இந்த அவை என்றைக்கும் நினைவிலே வைத்துக் கொண்டிருக்கும் என்று எடுத்துச் சொல்லி, அவர்கள் நம்மிடையேயிருந்து விடைபெற்றுக்கொள்ளும் நேரத்தில் அவர்கள் அனைவரையும் இந்த அவையின் சார்பிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பிலே மனமார வாழ்த்தி, பாராட்டி அமைகிறேன். வணக்கம்.



1986 ஏப்ரல் 18]

(பிற்பகல் 12.45)

திரு எம். பி. சுப்பிரமணியம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறுகின்ற உறுப்பினர்களிலே மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மீண்டும் நமது அவையிலே இடத்தைப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை. இந்த அவையிலே கட்சியைச் சார்ந்தவர்களும் இருக்கின்றார்கள். கட்சியைச் சாராதவர்களும் இருக்கின்றார்கள். நாம் இந்த அவையிலே ஒரு கட்சிக் கண்ணோட்டத்தோடு செயல்படாத அளவுக்கு ஒரு பெரிய மரபைக் கடைப்பிடித்து வந்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இந்த அவை நடைபெறுகின்ற முறையில் heat dust என்பார்கள், தேவையில்லாத உஷ்ணமோ கசப்புகளோ இல்லாமல் உயர்ந்த முறையில் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. அந்த மரபில் நடத்துவதற்கு உறுப்பினர்கள் துணை இருந்தார்கள். அதற்காக என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு நீண்ட நாட்களாக அவர்களுடன் பழக்கம் இல்லை என்றாலும், கடந்த 3 ஆண்டுகளாகப் பெற்ற பழக்கத்தில் அவர்களைப் பாராட்டிப் பேசுகின்றேன். ஓய்வு பெற்று மீண்டும் இந்த நிலைக்கு வரமுடியாதவர்கள், வெளியிலே இருந்து மக்கள் சமுதாயத்திற்கு நல்ல உடல்நலத்தோடு இருந்து செயல்படுவார்கள் என்று சொல்லி, முன்னவர் அவர்களுடைய கருத்துக்களோடு இணைந்து நானும் அவர்களைப் பாராட்டி அமைகிறேன்.

* டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த பாராட்டுரையை வழிமொழிந்து சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். இன்று ஓய்வு பெறுகின்றவர்கள் 6 பேர்கள் என்றாலும் கூட, நம்முடைய துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் மீண்டும் இந்த அவையிலே இடம் பெறுகின்ற காரணத்தினால், 5 பேர்கள் என்று எண்ணிக்கை வருகிறது. ஆனால் ஓய்வு பெறுகின்றவர்கள் ஏழு என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. திரு. தாமஸ் அவர்கள் ஏற்கெனவே ஆசிரியர்கள் பிரச்சினையில் சிறையில் இருந்து அவரே பதவி விலகி தன்னுடைய உணர்வைக் காட்டுவதற்காக அவர்கள் தானே அந்த ஓய்வை எடுத்துக்கொண்டு விட்டார்கள். எனினும் அவரும் பாராட்டப்படவேண்டியவர்களில் ஒருவர் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 18

திருமதி தாரா செரியன் அவர்கள் இன்று இந்தப் பாராட்டுக்களைப் பெறுவதற்கு வரவில்லை என்றாலும்கூட, ஏடுகளிலே படித்துப்பார்த்து மகிழ்வார்கள் என்ற எண்ணத்தோடு முன்னவர் அவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். நானும் பாராட்ட விரும்புகிறேன். அம்மையார் அவர்களை நான் 30, 35 ஆண்டுகளுக்கு முன்பே இந்த இயக்கத்திலே தொடர்பு கொண்டிருந்ததன் காரணமாக மிக நன்றாக அறிவேன். 1952 என்று கருதுகிறேன். அவருடைய சகோதரர் ஆல்பர்ட் ஜேசுதாசன் அவர்கள் வட சென்னையிலே சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டபோது அண்ணா அவர்கள் ஆணைப்படி நான் அந்தப் பகுதியிலே பணியாற்றிய நேரத்தில் அம்மையார் தாரா செரியன் அவர்களுடைய உழைப்பும், அந்தத் தொகுதியில் வெற்றிக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளும், அது பயன்பட்டதோ இல்லையோ, அவர்கள் அயராது எடுத்துக்கொண்ட முயற்சிகள் எனக்கு நன்றாக நினைவுக்கு வருகின்றன. நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில் ஒரு முறை பம்பாய்க்கு ஒரு நிகழ்ச்சிக்காகச் செல்ல இருந்தபோது, அவருடைய கணவர் டாக்டர் செரியன் அவர்கள் அங்கே கவர்னராக இருந்தார்கள். அவர் எனக்குக் கடிதம் எழுதி அங்கே ராஜ்பவனில் தங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அவருடைய அன்பு வேண்டுகோளை ஏற்று, ராஜ்பவனில் தங்கியிருந்தபோது, திருமதி தாரா செரியன் அவர்கள் என்னிடமும் என்னைச் சேர்ந்த நண்பர்களிடமும் ஒரு பெரிய மாநிலத்தின் கவர்னரின் மனைவி என்ற ஒரு இறுமாப்பு இல்லாமல் மிகுந்த பணிவோடு கவனித்துக் கொண்டார்கள் என்பதை என்னால் மறக்க இயலாது. ஆனால் நான் இந்த மூன்றாவது இடத்திலே உட்காருவதற்கு அம்மையார் அவர்கள் காங்கிரஸ் கட்சிக்கு உதவி இருக்கின்றார்கள். நான் அதையெல்லாம் மறந்து, கடந்த காலத்தில் இருந்த அந்தப் பசுமையான எண்ணங்களையெல்லாம் நினைத்து மகிழ்ச்சியடைகிறேன். அவர்களை நான் வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன். பொது சேவையிலே எதற்கும் பின்னடையாதவர்கள் என்பதை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதை ஏற்று நான் அம்மையார் அவர்களை வாழ்த்துகிறேன்.

(பிற்பகல் 12-50)

நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஓய்வு பெற்றார். ஆனால் ஓய்வு பெற்ற உடனே மீண்டும் அவைக்குத் திரும்ப வருகிறார் என்பது ஒரு நல்ல செய்தி. நான் இந்த அவையிலே அவரோடு நீண்ட காலம் பழகுகிற ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். கழகம் ஆளுங் கட்சியாக இருந்த காலத்தில், அவர்கள் எத்தனையோ அற்புதமான கருத்துக்களை



1986 ஏப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

எல்லாம் எடுத்து வைத்து, இங்கே வாதிட்டிருக்கிறார்கள். மாநில சுயாட்சித் தீர்மானம் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானம் இங்கே விவாதிக்கப்பட்டபோது, மாநில சுயாட்சி குறித்து சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எவ்வளவு அழுத்தந்திருத்தமாக வலியுறுத்திப் பேசினார்கள் என்பதை நான் என்றைக்கும் மறப்பதற்கில்லை. இன்னும்கூட ஒரு பசுமையான நினைவு. இதையெல்லாம் சொன்னால், குடும்ப விஷயத்தை எல்லாம் பேசக்கூடாது என்று அவர்கள் சொல்லுவார்கள். எனக்கும் அவருக்கும் குடும்பத் தொடர்பு கூட உண்டு. எப்படி என்றால், நான் முதலமைச்சராக இருந்தபோது, நான் வந்துதான் அவருடைய மகள் நடன அரங்கேற்றம் செய்ய வேண்டும் என்று என்னை அழைத்து அந்த நடன அரங்கேற்றத்திற்காக நான் முதலமைச்சராக இருந்தபோது, என்னை தஞ்சைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான்கூட வந்திருக்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தாங்களும் வந்திருக்கிறீர்கள். தாங்கள் வராமல் எப்படி இருக்க முடியும்? நீங்கள் ஒருகாலத்தில் அவருடைய கட்சித் தலைவராயிற்றே, எனவே நீங்களும் வந்தீர்கள். எவ்வளவுதான் கட்சி மாறுபாடுகள், கருத்து மாறுபாடுகள் இருந்தாலும், அந்த அன்பு உள்ளம், பாச உள்ளம் இருக்கிறது. இப்போதுகூட நான் பேசும்போது குறுக்கிட்டார்கள் என்றாலும்கூட, எனக்கு உதவியாகத் தான் குறுக்கிட்டார். இதிலே இன்னொரு விஷயம் சொல்ல வேண்டுமென்பதற்காகக் குறுக்கிட்டார். அப்படிப்பட்ட அவருடைய குறுக்கீடுகள் கூட நல்ல விதத்திலே அமையும். அவர் தொடர்ந்து இங்கே இருந்து பணியாற்றுவதற்காக மகிழ்ச்சியடைகிறேன். மேலும் சில பதவிகள்கூட அவருக்கு வர வேண்டுமென்ற என்னுடைய வாழ்த்துக்களை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய திரு. முனுசாமி அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும்கூட, அந்தச் சமுதாயம் தலை தூக்குவதற்குப் பாடுபடுகிற ஒரு பெரியவர் என்பதை நான் நீண்ட நாட்களாக அறிவேன். திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் ஆளுநராக இருந்த காலத்தில், திரு. முனுசாமி அவர்கள் நியமனம் செய்யப்பட்டார் என்பது என்னுடைய நினைவு. அவர்கள் காந்தியக் கொள்கையிலே கொண்டிருக்கிற அந்தப் பற்று, பாசத்தின் காரணமாக, தொடர்ந்து சமுதாயத்திற்கு உழைத்து வருகிறார். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் தொடர்ந்து இந்த அவையிலே இருக்க வேண்டியவர்கள் என்றாலும்கூட, ஜனநாயகத்திலே நம்முடைய சட்டமன்றத்திலுடைய மரபுகள் என்ற

காரணத்தால், அவரை நாம் இங்கிருந்து ஓய்வு பெற்றுச் செல்லுகிறார் என்பதாலே பாராட்ட வேண்டியிருக்கிறது. மீண்டும் அவர்கூட, திரு. சுவாமிநாதனைப்போல வருவார்களானால், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தவருக்கு அளிக்கப்பட்ட அந்த வாய்ப்புக்காக நான் மெத்தவும் மகிழ்ச்சி அடைவேன்.

அடுத்து, செல்வி லீலாவதி அம்மையார் அவர்கள். அவர்கள் ஆசிரியர் தொகுதியிலிருந்து வெற்றி பெற்று, பிறகு ஆளுங் கட்சி வரிசையிலே அமர்ந்தாலும்கூட, ஆளும் கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கிறோம் என்பதற்காக அவர்கள் கிஞ்சித்தும் கவலைப்படாமல் ஆசிரியர்கள் போராட்டத்திலே அவர்களும் முன்நின்று நடத்தி, சிறைச்சாலை செல்லவும் தயாராக இருந்து, ஆசிரியர் போராட்டக் குழுவிலே தன்னை உறுப்பினராக்கிக்கொண்டு, தான் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், ஆளுங்கட்சியின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும் வகையிலே அவர்கள் மிகுந்த துணிவோடு பாடுபட்டவர்கள் என்பதாலே அந்த அம்மையாரைப் பாராட்டி, வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, நம்முடைய டாக்டர் சனார்த்தனம் அவர்கள். அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அவர் எந்தப் பிரச்சினையை எடுத்தாலும், ஸ்ரீலங்கா வாராமல் அவரால் பேசமுடியாது, கேள்வி கேட்க முடியாது. அந்த அளவுக்கு அவருடைய நினைவுகள் என்றென்றும் ஸ்ரீலங்காவைச் சுற்றியே செல்லக்கூடிய நினைவுகள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற காலத்தில், அவர்கள் அண்ணாவினுடைய நாடகங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து, அதிலே அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றார் என்று கருதுகிறேன். அது ஒரு அருமையான புத்தகம். அண்ணாவினுடைய நாடகங்கள் நீதிதேவனின் மயக்கம், சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் இப்படிப்பட்ட நாடகங்களில் அண்ணாவினுடைய நடிப்பு மாத்திரமல்ல, அதிலே எழுதப்பட்ட வசனங்கள், உரையாடல்கள், முற்போக்குச் சிந்தனைகள் இவைகளைப்பற்றி எல்லாம் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் ஆராய்ந்து, ஒரு அரிய புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் இரண்டு முறை இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்து அரும்பணி ஆற்றியிருக்கிறார்கள். ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக பாடுபட்டிருக்கிறார்கள். 'இலங்கை எரிகிறது' என்ற உணர்ச்சிகரமான நூலை அவர் வெளியிட்டிருக்கிறார்கள். ஸ்ரீலங்கா தமிழர்களுக்காகத் தொடர்ந்து பாடுபடுகிற ஒரு தம்பி என்ற முறையில், ஓர் இளவல் என்ற முறையில் நான் அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. அருணாசலம் அவர்கள் சர்வோதயத் தலைவராக, காந்தியவாதியாக, அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல பழைய எண்ணங்கள் அவருடைய உள்ளத்திலே இருந்தாலும்கூட, புதிய எண்ணங்களுக்கு, புதிய தலைமுறைக்கு உற்சாகம் அளிக்க வேண்டுமென்ற நல்ல உள்ளம் படைத்தவராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-55)

இந்த நிலையிலும் கூட அவர் தான் கொண்ட கொள்கையிலிருந்து மாறாமல், உறுதியாக தன்னுடைய தொண்டினை ஆற்றிக்கொண்டு வருகிறார்கள்.. சர்வோதய தலைவர்களின் வரிசையில் தலைவர்களை நாம் எண்ணிப் பார்க்கையில் இவரும் ஒருவர் என்ற முறையிலும், இந்த அவையின் மூத்தவர் என்ற வகையிலும் நாமெல்லாம் இந்த அவையிலே எப்படி அமைதியாக இருக்க வேண்டுமென்பதைக் கற்றுத் தருகின்ற ஆசானாகவும் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த அவையைவிட்டுச் செல்வது உள்ளபடியே நமக்கெல்லாம் பெரு இழப்பு தான். அப்படிப்பட்ட அனுபவஸ்தர் இந்த அவையில் இல்லாதது நமக்கெல்லாம் இழப்புதான் என்றாலும், அவர்கள் வெளியே சென்ற பிறகும் தொடர்ந்து அவருடைய பணியை ஆற்றுவார் என்பது நாமெல்லாம் அறிந்த ஒன்று. அவர் தன்னுடைய பணிகளில் வெற்றி பெற என்னுடைய பாராட்டினையும் வாழ்த்தையும் அவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, இன்று உறுப்பினர்கள் எல்லாம் ஓய்வு பெறுவதையொட்டி தாங்கள் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். தங்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் விருந்துக்கு நான் நிச்சயமாக வர வேண்டும் என்றாலும் கூட, புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் விழாவிலே இன்று மாலை நான் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால், எங்கள் கட்சியின் சார்பிலே திரு. சாதிக் பாட்சா அவர்களும் மற்றவர்களும் வருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த விருந்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்காக தாங்கள் ஏற்பாடு செய்திருப்பதால், தி.மு.க. உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள் என்பதைத் தெரிவித்து மீண்டும் ஓய்வு பெறுகிறவர்களைப் பாராட்டி வாழ்த்தி அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்களால் 20-4-1986 அன்று ஓய்வு பெறவிருக்கும் உறுப்பினர்களுக்குப் பாராட்டுரை பகர்தல் சம்பந்தமாக சொல்லப்பட்ட கருத்துக்களை ஒட்டி நானும் சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். மாண்புமிகு துணைத்

தலைவர் அவர்கள் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றுகிறார்கள். மிகச் சிறந்த பாராளுமன்ற விதிகளில் தேர்ந்த ஒருவராக அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் மிகச் சிறந்த, நல்ல வழிகாட்டியாகவும் அவர்கள் இருக்கிறார்கள். சட்டமன்ற மேலவையில் எப்படிப் பேச வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும், விதிமுறைகளை எப்படிப் பின்பற்ற வேண்டும் மற்றும் நடைமுறைகளை எல்லாம் எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுபோன்ற பல்வேறு ஆலோசனைகளை அவ்வப்போது எடுத்துச்சொல்லி, எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து, அவையை நடத்தும்போதும் மிகவும் பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் மாண்புமிகு தலைவர் அவர்களைப் போலவே மிகவும் தாராள மனதுடன் எங்களிடம் நடந்துகொண்டு மிகச் சீரிய முறையில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் அவர்கள். மீண்டும் அவர்களுடைய பணி இந்த மேலவைக்குக் கிடைத்திருப்பது மகிழ்ச்சியடையத் தக்க ஒன்று. அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்களைப் பொறுத்த வரையில், நாங்களெல்லாம் அவரை அண்ணாச்சி என்று தான் சொல்வோம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரியநாயக்கன் பாளையத்திலே அவர்களால் நடத்தப்படும் இராமகிருஷ்ணா மிஷன் கல்லூரி இருக்கிறது. அங்கே அவர்கள் மிகச் சிறந்த முறையில் கல்விப் பணி ஆற்றி வருகிறார்கள். அவருடைய கல்விப் பணி பற்றி அந்த ஊரைச் சுற்றி வாழ்கிறவர்கள் மட்டுமல்லாமல், சுற்றிலும் இருக்கிற ஏராளமான கிராமங்களில் வாழ்கிற ஏழையெளிய மக்களும், ஆதி திராவிட மக்களும் மிகச் சிறப்பாக இப்போதும் பாராட்டிச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட மிகச் சிறப்பான கல்வித் தொண்டை அவர்கள் கல்விக்காக ஆற்றியிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கல்லூரியின் தலைவராக இருந்தபோதும் சரி, இப்போதும் சரி, கல்வி வளர்ச்சிக்காகவும், ஏழையெளிய ஆதி திராவிட மக்களுக்காகவும் அந்தக் கல்லூரியுடன் மிக நெருங்கிய தொடர்பு வைத்து இன்றைக்கும் நல்ல ஆலோசனைகளை நல்கி வருகிறார்கள். இராமகிருஷ்ணா மிஷன் இருக்கிறதே, அது தமிழ் நாட்டில் இருக்கிற மிகப் பெரிய கல்வி நிறுவனங்களில் ஒன்று. இப்போது அங்கே போய் சுற்றிலும் வாழ்பவர்களிடம் கேட்டாலும், ஒன்றைச் சொல்வார்கள். அங்கே இருக்கிற ஒவ்வொரு மரமும், கட்டிடமும், ஒவ்வொரு கல்லும் அவருடைய தொண்டைப் பற்றி பறை சாற்றும் என்று சொல்லுவார்கள். அந்த அளவுக்கு தன்னுடைய வாழ்க்கையினுடைய பெரும் பகுதியை கல்விப் பணிக்காக அர்ப்பணித்துக் கொண்டவர் அவர். மிகச் சிறந்த முறையில் முனைப்புடன் கல்வித் தொண்டு ஆற்றியவர் அவர். அதோடு



கூட சர்வோதய பணியிலும் மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றி வருகிறார்கள். அப்படிப்பட்ட பெரியவரின் அனுபவத்தையும், ஆற்றலையும் இங்கே எங்களைப் போன்றவர்கள் எல்லாம் பகிர்ந்துகொள்கின்ற வாய்ப்பு கிடைத்தது குறித்து பெருமைப்படுகிறேன். அவர்கள் செய்திருக்கின்ற மிகச் சிறந்த பணிகளை எல்லாம் பாராட்டுகிறேன்.

அடுத்து, ஸ்ரீலங்கா தமிழர்கள் என்று சொன்ன உடனே, நம்முடைய நினைவுக்கு வருவது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்களுடைய பெயர்தான். இந்த மேலவையிலே ஸ்ரீலங்கா தமிழர்கள் பற்றி அநேகமாக எல்லோருமே பேசியிருக்கிறார்கள். இருப்பினும் அன்றைக்கு ஒருநாள் ஸ்ரீலங்கா தமிழர்கள் பற்றி டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பேசிய போது, எல்லோருமே கண்ணீர் வடித்தார்கள். அன்றைக்கு மேலவையிலே மிகப் பெரிய அளவுக்கு உணர்ச்சிக் கொந்தளிப்பே ஏற்பட்டது. அப்படி அன்றைக்கு அவர் பேசியது அவருக்கே உரிய தனிச் சிறப்பு. பிரச்சினையின் தன்மையைப் பற்றி ஆழமாகப் புரிந்துகொண்டு, பிரச்சினையில் தன்னை முழுமையாக ஐக்கியப்படுத்திக்கொண்டு, உணர்ச்சி வேகத்தோடு பேசி, இந்த மேலவையிலே உள்ள உறுப்பினர்களை கண்ணீர் வடிக்க வைத்தார்கள் என்றால், அது அவருக்கே உரிய மிகச் சிறந்த ஆற்றல்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: ஆக, உலகத் தமிழர் இனத்தோடு அவர்களின் முன்னேற்றத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட டாக்டர் சனார்த்தனம் அவர்களின் பணி நிச்சயம் தொடரும் என்ற நம்பிக்கையில், அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

செல்வி லீலாவதி அவர்கள், எங்களுடைய இயக்கத்தில் ஒருகாலத்தில் உறுப்பினராக இருந்து, எங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பின் ஆளுங்கட்சிக்குப் போன பிறகும் கூட, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஆசிரியர்கள் பிரச்சினை, ஆசிரியர்கள் போராட்டம் என்று வந்துவிட்டால், எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் தன்னை இணைத்துக்கொண்டு போராடியவர்கள். ஆசிரியர்களுக்காக அவர்கள் ஆற்றிய பணிகளுக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

## 20-4-1986 அன்று ஓய்வு பெற இருக்கும் உறுப்பினர்களுக்குப் பாராட்டு பகர்தல்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 ஏப்ரல் 18

அடுத்தபடியாக, திரு. முனுசாமி அவர்கள், இங்கே தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியாக இருந்தார்கள். அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மிகவும் அமைதியோடும் அடக்கத்தோடும் அவர் இங்கே பணியாற்றியதை யாரும் மறுக்க முடியாது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வழியில் வந்த திரு. முனுசாமி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, அவர்களுடைய நலனுக்காகப் பாடுபட்டு இங்கே ஆறாண்டுக் காலம் அடக்கமாக, அமைதியாகப் பணி செய்தவர்கள். அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

திருமதி தாரா செரியன் அவர்கள், குழந்தைகளின் நலனுக்காகவும் மகளிர் முன்னேற்றத்திற்காகவும் தன்னை. அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அவர்களுடைய பணியைப் பாராட்டுகிற வேளையில், டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, எங்கள் அணியைச் சார்ந்த திரு. பி. ஆர். தாமஸ் அவர்கள் பெயர் ஓய்வு பெறுவோர் பட்டியலில் இருக்க வேண்டியிருந்தாலும், ஆசிரியர்களின் போராட்ட காலத்தில் செம்மையான உணர்வுகளை வெளிப்படுத்துகிற நிலையில், தனது பதவியை ராஜிநாமா செய்தவர்கள். அதுவும் சிறையில் இருந்து வெளிவரும் முன்னரே ராஜிநாமா செய்தவர்கள். 11½ ஆண்டுக் காலம் ஆசிரியர்களுக்காக அவர்கள் மிகச் சிறந்த பணியாற்றினார்கள். அந்தப் பணியை ஆசிரியர்கள் மறக்க மாட்டார்கள். தேர்தலில் வெற்றி தோல்வி என்பது சகஜம். ஆனால் வெற்றி ஏற்பட்டாலும், தோல்வி ஏற்பட்டாலும், ஒருவர் செய்த சாதனைக்ளையும் தொண்டுகளையும் நிச்சயமாக அந்த சமுதாய மக்களும், அவர்கள் யாருக்காகச் செய்தார்களோ அவர்களும் மறக்க மாட்டார்கள் என்ற கருத்தைச் சொல்லி, சகோதரர் திரு. தாமஸ் அவர்களின் பணியையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் அவர்களே, ஏழு பேர்களுடைய பணியைப் பாராட்டுகிற அதே நேரத்தில், மேலவையில் முன்பு நான் சொல்லிய ஒரு கருத்தைச் சொல்கிறேன். மேலவையின் பெருமையை மேலும் உயர்த்த பல நேரங்களில் சொல்லப்பட்ட கருத்தையே மீண்டும் வலியுறுத்துகிறேன். உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமல் இருக்கலாம் என்று அரசியல் சட்டம் நமக்கு உரிமை அளித்திருக்கிறது. அப்படியானால் 78 பேர் வரை இருக்கலாம். 78 பேர் இருப்பதற்கு இடமளிக்க நமக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இப்போது 63 பேர்தான் இருக்கிறோம். இன்னும் 15 இடங்களை மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டு அனுமதி பெற்று அந்த இடங்களை நிரப்பி இந்த அவைக்குப் பெருமையைச் சேர்க்கிற வகையில் 78 உறுப்பினர்களாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்



1986 ஏப்ரல் 18]

திரு. ப. மாணிக்கம்: தலைவர் அவர்களே, நம்முடைய அவையில் இருந்து பிரிந்து செல்லும் உறுப்பினர்களுக்கு அவையின் முன்னவர் பாராட்டுத் தெரிவித்துச் சொன்ன கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக்கொள்கிறேன்.

ஆறு பேர் என்று கணக்கில் வந்தாலும், உண்மையில் 7 பேர், ஒருவர் ஆசிரியர் போராட்டத்தில் ஈடுபட்டு அந்தப் போராட்டத்தின் உச்சக் கட்டத்திலே அவையிலிருந்து ராஜிநாமா செய்து விட்டவர். அவருடைய இயக்கத்தின்பால் அவருக்குள்ள பற்றின் காரணமாக அப்படி ராஜிநாமா செய்தாரே தவிர வேறல்ல. எனவே, அவர் இங்கு சில மாதங்கள் வராமல் இருந்தாலும் கூட, அவையில் உறுப்பினராக சிறப்பாகச் செயல்பட்டவர், குறிப்பாக ஆசிரியர் நலனுக்காக எப்போதும் உறுதியாக தெளிவாகப் பாடுபட்டு வந்த உறுப்பினர். அவர் ஆசிரியர்களுடைய நலனுக்காக நடத்திய போராட்டத்தில் இன்னும் சொல்லப்போனால், அவ்வப்போது குறிப்பிட்ட பிரச்சினைகளுக்காகவும், பல மாவட்டங்களில் ஆசிரியர்களின் நிர்வாகங்களில் ஏற்பட்டிருக்கிற சங்கடங்களைக் களைந்தெறிவதற்கும் அவர் இந்த அவையில் ஆற்றிய சேவை நினைவு கூரத்தக்கது.

(பிற்பகல் 1-05)

அவர் இந்த அவையிலிருந்து சில மாதங்களுக்கு முன்பே சென்று விட்டாலும் கூட, அவருடைய சேவையை நாம் பாராட்டுவது அவசியம் என்ற முறையிலே நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இதே ஆசிரியர் இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்களும் இந்த அவையிலிருந்து விடைபெறுகிறார்கள். அவர்களும் ஆசிரியர் இயக்கத்திலே பாடுபட்டு சிறை சென்றிருக்கிறார்கள். தொடர்ந்து இன்னும் தன்னை அந்த இயக்கத்தோடு ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த அவையிலிருந்து அவர்கள் வெளியேறினாலும், அந்த இயக்கத்திற்கு அவர்கள் ஆற்ற வேண்டிய சேவையைத் தொடர்ந்து செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இந்த அவையில் அவர் ஆசிரியர் இயக்கத்திற்காகவும், கல்வித் துறைக்காகவும் ஆற்றிய சேவைகளுக்காக பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் இந்த அவையில் உறுப்பினராக இருந்தபோது, குறிப்பாக பெண்கள், குழந்தைகள் நலன் குறித்து எழுகின்ற பிரச்சினைகளைப்பற்றியும், சமூக நலம் பற்றியும்

[திரு. ப. மாணிக்கம்] [1986 ஏப்ரல் 18

தொடர்ச்சியாக பிரச்சினைகளை எழுப்பி வாதாடியிருக்கிறார். அதுமட்டுமல்ல, அவர் அவையில் மட்டுமல்லாது, வெளியிலும் தொடர்புகொண்டு, சமூக சேவைக்காகச் செயலாற்றிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவர் கணவர் மட்டும் புகழ் பெற்றவர் அல்ல, அவர் சகோதரர் திரு. ஆல்பர்ட் ஜேசுதாசன் அவர்களும் சென்னையிலேயுள்ள தொழிலாளர் இயக்கங்களில் நீண்டநாள் செயலாற்றியவர். அவர் கொண்ட கருத்தில் எங்களோடு அவர் மாறுபட்டிருந்தாலும்கூட, தொழிலாளர் இயக்கத்திலே நீண்ட நாள் இருந்தவர். அவருடைய சகோதரி என்ற முறையிலும், செரியன் மனைவி என்ற முறையிலும், எல்லாவற்றிற்கும் மேலாக பொதுச் சேவையிலே தனக்குரிய பங்கை ஆற்றியவர் என்ற முறையிலும், குறிப்பாக பெண்கள் நலம், குழந்தைகள் நலம் ஆகிய பிரச்சினையில் கவனம் செலுத்தி வாதாடியவர் என்ற முறையிலும் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட உறுப்பினர் இந்த அவையிலிருந்து விடை பெறுகிறார். பெண்களுக்காக அவர் காட்டிய அக்கறையைக் காட்டி வாதாடுவதற்கு இப்போது உறுப்பினர் இல்லையே என்கிற ஒரு வருத்தம் இருக்கிறது. இந்த நேரத்தில் அவருடைய சேவையையும் நினைவுபடுத்திப் பாராட்டுவதில் பெருமைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் இரண்டு முறை இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பது உண்மை. மற்ற உறுப்பினர்களும், தலைவர்களும் சுட்டிக்காட்டியதுபோல, ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினையில் அவர் அதிக ஆர்வம், அக்கறையுள்ளவர். இப்போதும்கூட இந்த அவையில் தொடர்ந்து இருந்து பங்காற்ற முடியவில்லையே என்கிற வருத்தம்தான். இருப்பினும் அவருடைய தமிழ்ப்பற்று, பொதுச் சேவையிலே அவருக்குள்ள ஆர்வம், தொடர்ந்து இங்கே அவர் உறுப்பினராக இல்லாவிட்டாலும் தொடரும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. அவர் இங்கே இருந்து ஆற்றிய சேவை, கோவை, நீலகிரி மாவட்டப் பிரச்சினைகளில் பல்வேறு விதங்களில் ஆர்வத்தோடு அக்கறை காட்டி செயலாற்றிய விதம், குறிப்பாக ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினையில் அவர் ஆர்வம் காட்டிய விதம் போற்றுதற்குரியது. அப்படிப்பட்டவரை இந்த அவையிலிருந்து பிரியவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அவர் நீலகிரி மாவட்டத்தின் பிரச்சினைகளுக்குக் கவனம் செலுத்திய அளவுக்கு வேறெந்த உறுப்பினரும் கவனம் செலுத்தியதில்லை என்கிற அளவுக்கு ஆர்வம் காட்டியிருக்கிறார். அவருடைய சேவைக்கும் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 18] [திரு. ப. மாணிக்கம்]

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள் நீண்ட நாள் உறுப்பினர் என்பது மட்டுமல்ல, குறிப்பாக ஆதி திராவிடர்களின் நலனுக்காகத் தொடர்ந்து சேவை செய்து வருபவர். அப்படிப்பட்டவர், பிரச்சினைகள்மீது இந்த அவையில் அடிக்கடி வாதாடாவிட்டாலும், நேரடியாகவே பிரச்சினைகளை எடுத்துச் சென்று பலன்கள் கிடைக்கப் பாடுபட்டிருக்கிறார். அவர் அவையிலே செயலாற்றியதைவிட மக்கள் மத்தியிலே அடக்கமாகச் செயல்படக்கூடியவர்.

(பிற்பகல் 1-10)

ஒருவர் அடக்கமாகச் செயல்பட்டால், அதற்கு அங்கீகாரம் கிடையாது. அது காலத்தின் மாறுதல். அதில் குறைபட்டுக்கொள்வதிலே நியாயம் இல்லை. ஒரு காலத்திலே அடக்கமாகச் செயல்படுவதற்கு மரியாதை இருந்தது. சில நேரங்களில் ஆர்ப்பரிப்புக்குத்தான் மரியாதை. எனவே அப்படிப்பட்ட நேரங்களில் அடக்கத்திற்கு மரியாதை கேட்பது நியாயம் இல்லை. அவர் அடக்கமான சேவையில் நம்பிக்கையுள்ள உறுப்பினர். ஓர் உறுப்பினர் என்ற முறையில் நாம் அவரைப் பிரிகிறோம். அவருடைய சேவைக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வயதாலும், அனுபவத்தாலும் தன்னுடைய கொள்கையின் உறுதியாலும் சிறப்பான பண்பாட்டு நெறிகளைக் கடைப்பிடித்து வரும் பெரியவர் திரு. அருணாசலம் அவர்களும் நம்மைவிட்டுப் பிரிகிறார். அவர் காந்தியவாதி மட்டுமல்ல, இயற்கை வைத்தியத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவரும்கூட. அவர் இயற்கை வைத்திய முறையைக் கையாண்டவர். அவர் ஆசிரியர் என்ற முறையிலும் தொடர்ந்து சேவை செய்திருக்கிறார். அதுமாதிரி எல்லாவற்றையும்விட இன்னொரு சேவையும் அவரால் நடைபெற்றிருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதிக்கு எதிர்த்தாற்போல் உள்ள அருகாமையிலுள்ள காதி கிராப்ட் உணவு விடுதியில் அவருடைய முயற்சியாலே கைக்குத்தல் அரிசியை சமைத்து விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. நம்முடைய அவையின் உறுப்பினர்களும், வேறு உறுப்பினர்களும் தொடர்ந்து அங்கே சாப்பிட்டு வருகிறார்கள். அவர் நல்ல சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்தார் என்பது மட்டுமல்ல, அவர் இயற்கை வைத்திய முறையில் நம்பிக்கை உள்ளவர் என்ற முறையில் அந்தச் சாப்பாட்டை முறையாகச் சமைத்து விநியோகிப்பதில் ஆர்வம் காட்டினார். சுகாதாரம் என்ற முறையிலே அதிக கவனம் செலுத்தினார். காந்தியவாதிகள் பொதுவாக எளிமையாக இருப்பார்கள். அவர்களுடைய கருத்துக்கள் விஞ்ஞான பூர்வமாக

[திரு. ப. மாணிக்கம்] [1986 ஏப்ரல் 18

இருக்குமா, இருக்காதா என்பதல்ல பிரச்சினை. விஞ்ஞானம் என்பது ஒரு பெரிய பரந்த துறை. எனவே இயற்கை விஞ்ஞானத்திலே நம்பிக்கையுள்ள அவர் பல்வேறு சேவைகளைச் செய்திருக்கிறார். அவைகள் ஒன்றிரண்டல்ல. அவர் மதுரையில் இயற்கை வைத்தியத்திற்கு என்று ஒரு நிறுவனம் வைத்து அதைச் சிறப்பாக நடத்தி வருகிறார். மதுரையில் காந்தி நிறுவனம் இருக்கிறது. அங்கே அலுவலகத்தை அமைத்துக் கொண்டு அந்தச் சேவையைச் செய்து வருகிறார். மருந்து சம்பந்தமான நூல்களை வெளியிட்டுள்ளார். பொது சேவை, கல்வி, மருத்துவம், கிராமப் பொருளாதாரம் இப்படிப் பல்வேறு துறைகளில் அவர் சேவை செய்திருக்கிறார். அவருடைய அனுபவங்கள் அரசினுடைய பார்வையில் படுவதற்காக அவர் உறுதியாகத் தொடர்ந்து வாதாடியிருக்கிறார். ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. "The soft voice of intellectuals will persist continuously". என்று சொல்வார்கள். ஒரு அறிவாளியின் குரல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கும். அதைக் கவனிக்காமலும் இருக்கலாம் அல்லது அலட்சியமாகவும் இருக்கலாம். ஆனால் அந்தக் குரல் வெல்லும் என்பதுதான் உண்மை. அந்த முறையிலே அவர் இந்த அவையிலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே கிராம வாழ்க்கையை அபிவிருத்தி செய்வதற்கு, குறிப்பாக கல்வித் துறையிலே அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு யோசனைகளைச் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு அவைகளை நடைமுறைப்படுத்துவதிலே காலதாமதம் ஏற்படலாம். அல்லது அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாவிட்டாலும் கூட, அரசுக் கொள்கையிலே அந்த நல்ல கருத்துக்களின், பயன்தரத்தக்க கருத்துக்களின் பார்வை வேண்டுமென்று வெளிப்படுத்தியிருக்கிறார். இன்று இல்லாவிட்டாலும், நாளையாவது வெற்றி பெறக்கூடிய கருத்துக்களைச் சொன்ன, அருமையான ஒரு அறிஞரை நாம் பிரிகிறோம். அவருடைய சேவைக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் நல்ல உறுப்பினர் என்பதோடு மட்டுமல்ல, அவருக்குப் பிரிவு உபசாரம் சொல்வதைவிட அவருக்கு வரவேற்பு சொல்வதுதான் முறை. அவர் நம்மை விட்டுப் பிரியவில்லை. நம்மோடு தொடர்ந்து இருக்கப் போகிறார். எனவே அவருடைய சேவைகளைப் பாராட்டுவது நியாயம். இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையிலும், துணைத் தலைவர் என்ற முறையிலும் அவர் ஆற்றியுள்ள சேவைகள் நாம் அறிந்ததே. மீண்டும் அவருடைய சேவை நமக்குத் தொடர்ந்து கிடைக்கும் என்பதுதான் மகிழ்ச்சிக்குரியது. மற்றவர்களை விட்டு நாம் பிரிகிறோம். ஆனால் இவரை நாம் தொடர்ந்து



1986 ஏப்ரல் 18] [திரு. ப. மாணிக்கம்]

பெற்றிருக்கிறோம் என்பதிலே ஒரு மகிழ்ச்சி. அவரும் கூட மருத்துவத் துறையிலே பெரும் சேவை செய்திருக்கிறார். மருத்துவத் துறையிலே பல்வேறு யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார். அவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும்கூட, அவருடைய கருத்துக்களை, நல்ல யோசனைகளை அரசு ஏற்றுக்கொண்டதா, இல்லையா என்று சொல்ல முடியாது. அவர் பல்வேறு சந்தர்ப்பங்களிலே மருத்துவத் துறை சம்பந்தமான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதையெல்லாம் அரசு அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட யோசனைகளைச் சொல்லும்போது, அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும். அதைப் பரிசீலித்து, அவைகளை முழுமையாக நிறைவேற்ற முடியாவிட்டாலும், சிலவற்றின் மீதாவது நடவடிக்கை எடுக்கலாம். அவர் இங்கே இன்னும் 6 ஆண்டுகள் இருக்கப் போகிறார். நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1.15)

சில நேரங்களில் அனுபவமுள்ளவர்கள், சில துறைகளில் தங்களுக்குள்ள அனுபவத்தின் அடிப்படையிலும் அறிவின் அடிப்படையிலும் கருத்துக்களைச் சொல்லும்போது, அதை அரசு சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பது எனக்குப் பெரிய குறையாக இருக்கிறது. இப்போது அப்படிப்பட்ட கருத்தை நான் இங்கே சொல்லலாமா என்றுகூட சிலர் நினைக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், திரு. சுவாமிநாதன் போன்றவர்களின் அனுபவத்தையும் கருத்தையும் அரசு கண்டிப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். திரு. சுவாமிநாதன் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுப்பினர் என்ற முறையில் சில பிரச்சினைகளை இங்கே எடுத்து வைத்துப் பேசியிருக்கிறார்கள். இந்திய மருத்துவத் துறையில் அவற்றையெல்லாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள நல்ல வாய்ப்பு இருக்கிறது. அவர் ஆளும் கட்சியைச் சார்ந்தவர். என்னைப் போன்றவர்கள் சொல்வதை விட அவர் சொல்வதை அரசு நன்றாக ஆய்வு செய்து கவனத்தில் கொண்டு செயல்பட்டால், தமிழகத்திற்கே அது பயன் தரக்கூடியதாக இருக்கும். பயன் தரத்தக்க வகையில் நல்ல பல திட்டங்களையும் தமிழகத்திற்காக உருவாக்க முடியும். அப்படிப்பட்ட கருத்துக்குச் சொந்தக்காரரான திரு. சுவாமிநாதன் அவர்கள் தொடர்ந்து அவையில் இருப்பதால், மகிழ்ச்சி அடைகிறேன். அவர் சேவை செய்திருக்கிறார் என்பது மட்டுமல்ல, அவர் சேவை தொடர்ந்து இருக்கப் போகிறார். எனவே அவர் நம்மோடு தொடர்ந்து நிற்கும் வகையில் அவர் சொல்லுகிற நல்ல கருத்துக்களையும் யோசனைகளையும் அரசு எடுத்துக்

கொண்டு பயன்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே அவருக்குப் பாராட்டு தெரிவிப்பதோடு அவருக்கு இப்போதே வரவேற்பும் கூறிக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையிலிருந்து ஓய்வு பெறுகிறவர்களின் மூத்தவர் என்கிற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அருணாசலம் அவர்கள் ஏற்புரை நிகழ்த்துவார்கள்.

**திரு. க. அருணாசலம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பாராட்டுரைகள் கேட்ட பிறகு, எனக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. திக்கு முக்காடிப் போயிருக்கிறேன். நான் வாழ் நாட்களில் குறைகளையே கேட்டுப் பழகியவன். ஆனால் ஒரேயடியாக இன்றைக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்திருப்பதைக் கேட்டு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. நம்முடைய குறைகளையும் சொல்லுவார்கள், அதன் மூலம் நாம் நம்மைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசும்போது, நிறைய பாராட்டுகளைத் தெரிவித்தார்கள். முழுமையாக என்னைப் பாராட்டினார்கள். மற்றவர்களைப் பற்றி அவர் பாராட்டிய போது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் என்னையும் சேர்த்து அவர்களோடு பாராட்டியதுதான் எனக்கு வியப்பாக இருந்தது. அந்த நல்ல எண்ணத்தோடு நாம் இனி வாழப் போகிறோம். தொண்டு தொடர வேண்டும் வளர வேண்டும் என்று சொன்னதை நான் அப்படியே ஏற்றுக்கொள்கிறேன்.

அடுத்து, குட்டித் தம்பி டாக்டர் சனார்த்தனத்தைப்பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும். அவருடைய தாயார் தகப்பனார் ஆகிய இருவரையும் எனக்கு நன்றாகத் தெரியும். எனக்கு இருவரும் மிகவும் வேண்டியவர்கள். நான் கோவையில் இராமகிருஷ்ணா வித்யாலயாவில் இருக்கும்போது, அவர்களிடம் உதகமண்டலத்திற்கு அதிகம் செல்வது உண்டு. அப்போது இந்தக் குட்டித் தம்பியைப் பார்த்திருக்கிறேன். அவர் செய்யும் காரியத்தைப் பார்த்து பெரிய நம்பிக்கையோடு இருந்தேன். அது உண்மையாகிவிட்டது. அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களையும் நான் நன்கு அறிவேன். அவர் குட்டியாக இல்லாவிட்டாலும், அவரும் இராமகிருஷ்ணா வித்யாலயாவில் பயின்றபோது, நான் வேறு ஒரு நிலையில் இருந்தேன். அவர் அங்கேதான் பயிற்சி பெற்றார். அப்போதே அவரை எனக்குத் தெரியும். அவரெல்லாம் இங்கே வந்து சிறப்பாக பணி புரிவது நம் நாடு செய்த தவப்பயன் என்பதுதான் சொல்ல வேண்டும். நம்





நாட்டில் பெரிய பெரிய மகான்கள் இருந்திருக்கிறார்கள். காந்தியடிகள் நம் காலத்தில் இருந்தார். அண்ணா இருந்தார். கலைஞர் கருணாநிதி அவர்களையும் நான் சேர்த்துத்தான் சொல்ல வேண்டும். அவர்தான் எனக்கு என் மீதுள்ள அன்பினால் கொஞ்சம் தடை செய்தவர். தினமும் காவல் நிலையத்திற்கு எமெர்ஜென்சி காலத்தில் போலீஸ்காரர்கள் என்னைக் கொண்டு போவார்கள். அது நெருக்கடி நேரம். என்னைக் கண்ட்ரோல் ரூமுக்கு சப் இன்பெக்டர் அழைத்துப் போவார். "முதல்வர் கருணாநிதி அவர்கள் செய்வதைவிட நான் என்ன அதிகமாகச் செய்து விடப் போகிறேன். அவரையே வேண்டுமானால் கேளுங்கள்" என்றேன். "அவரை எதற்காகப் பிடித்துக் கொண்டு வம்பு செய்கிறீர்கள், விட்டுவிடுங்கள்" என்று (Control Room) மூலம் கலைஞர் சொல்லி விட்டார். அவர்களும் விட்டுவிட்டார்கள். இருந்தும் நான் வீட்டிற்குச் செல்ல விரும்பாமல் 4 மாதம் வரை எங்கே போவது என்றே தெரியாமல் ஊர் ஊராக மேலூர் தாலுகா முழுவதிலும் சுற்ற வேண்டியதாகி விட்டது. உண்மைக்கும் சத்தியத்திற்கும் பாடுபட்டவர்கள் நம் காலத்தில் இன்னும் இருக்கிறார்கள்.

இந்த நாட்டில் அன்பு நெறி தழைக்க வேண்டும். வன்முறைகள் குறைய வேண்டும் என்று பாடுபடுகிறவர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது, நான் பம்பாயில் காதி அண்டு விலேஜ் இன்டஸ்ரீஸ் கமிஷன் உப தலைவராக இருந்தேன். திரு. தேபர் அவர்கள் தலைவர். அவர் என்னுடைய அறைக்கு வந்தார். அவர் தலைவராக இருந்தும் என் அறைக்கு வந்தார். வந்து "என்ன அருணாசலம், திரு. அண்ணாதுரையை உங்களுக்குத் தெரியுமா?" என்றார். நான் அவரைப் பார்த்து "எனக்குத் தெரியும், ஆனால் அவரோடு நேரடியாகப் பழக்கமில்லை" என்று சொன்னேன். "என்ன அப்படி, அவர் கதரை 'பொலிட்டிகல் பிராட்' என்று

(பிற்பகல் 1.20)

சொல்லியிருக்கிறாரே, அது சம்பந்தமாக அவரைப் பார்க்க வேண்டுமே" என்று சொன்னார். எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்று தெரியாது. நிச்சயமாக அவர் கதர் இயக்கத்திற்கு உதவியாக இருப்பார் என்று சொன்னேன். பின் இருவரும் சென்னை வந்தோம். அப்போது "அலுவலகத்திற்கு வரவேண்டாம், வீட்டிற்கு வாருங்கள்" என்று எங்களை வீட்டுக்குக் கூப்பிட்டு உபசரித்துச் சொன்னார்கள், "நீங்கள் காங்கிரஸ்காரர் (திரு. தேபரைப் பார்த்து) நான் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவன். நீங்கள் காங்கிரஸ்காரர் சொல்வதை எப்படி ஒத்துக்கொள்வது? நீங்கள் ஏதாவது அரசியல் லாபத்

திறமாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள்'' என்றார். அப்போது திரு. தேவர் தன்னுடைய நிலையை விளக்கினார். ''நான் எம்.பி. யாக இருந்தவன். அதை இராஜிநாமா செய்து விட்டு இந்த வேலையைச் செய்கிறேன். கட்சிக்கும் எனக்கும் தொடர்பு கிடையாது. அரசின் உதவி கொண்டு நாட்டில் உள்ள ஏழை எளியவர் நன்மைக்காக செய்து கொண்டிருக்கிறேன்'' என்று சொன்னார். அப்போது அண்ணா ''நீங்கள் செய்ததைவிட அதிகமாகச் செய்வேன், நீங்கள் செய்ததிலிருந்து கொஞ்சமும் குறைவாகச் செய்துவிட மாட்டேன் என்று உறுதி கொடுக்கிறேன்'' என்று சொன்னார்.

அதற்குப் பிறகு ஒரு நிகழ்ச்சியில் — அப்போது கலைஞர் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தார்—அண்ணா அவர்கள் இருந்தார்கள். அவருக்கு அந்தப் பக்கம் திரு. தேவர் இருந்தார். அப்போது எனக்குப் பக்கத்திலே வந்து இரகசியமாக 'கட்டிடம் இவ்வளவு பெரிய கட்டிடமாக இருக்கிறதே; இது யாருக்குச் சொந்தம்?' என்று கேட்டார். அப்போது எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. மக்களுக்குச் சொந்தம் என்று சொன்னேன். அதைத் தொடர்ந்து இந்தப் பணி சிறப்பாக நடக்க வேண்டும் என்பதற்காக என்னென்ன வசதிகளும் வாய்ப்புகளும் வேண்டுமோ அவற்றையெல்லாம் கலைஞர் முதல் மந்திரி ஆனதும் செய்தார். எல்லா அரசாங்கங்களும் அதே மாதிரி தொடர்ந்து செய்து வந்திருக்கின்றன. திரு. காமராஜ் அவர்களும் செய்தார்கள். அதைத் தொடர்ந்து மற்றவர்களும் செய்தார்கள். இப்போதும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதிலே எங்களுக்கு மன நிறைவு உண்டு. இந்தப் பணி தொடர்ந்து நடைபெற வேண்டும்.

நான் அரசியலுக்கு அப்பாற்பட்ட தொண்டு வர வேண்டுமென்று கனவு காண்பவன் ''என்னை மேலவைக்கு அனுப்புகிறார்களே, நான் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டேன். இருக்கட்டும் வாருங்கள் என்று சொன்னார்கள். நான் அதிகமாகக் கொடுக்க முடியாவிட்டாலும், தலைவர் அவர்களே, உங்களுடைய தலைமையில் எவ்வளவோ பாடங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறேன். இதற்கு முன்பும் கற்றிருக்கிறேன். கால அளவு குறித்து தாங்கள் கட்டுப்பாடாக இருந்தது பற்றியும். சிக்கல்களைச் சமாளித்து, வெற்றி தோல்வியில்லாமல் எல்லோரும் சமம் என்ற எண்ணத்திலே தாங்கள் இந்த அவையை நடத்தியிருக்கிறீர்கள் என்பதையும் பார்க்கும்போது, எதிர்காலத்திலே நிச்சயமாக கட்சியை மறந்து செயல்படுகிற நிலைமை வந்தே தீரும்— அப்போது நாம் கட்சிகள் இருக்கும் என்றாலும் — உலகத்திற்கே தமிழகம் வழி காட்டியாக இருக்கும் என்று கருதுகிறேன். மேல்சபைகளை எடுத்துக்



கொண்டிருக்கும் காலத்திலே தமிழக மேல்சபை இருக்குமா என்று சந்தேகப்பட்டார்கள். ஆனால் தங்களுடைய தலைமையில் சிறப்பாக நடக்கும் இந்த மேல்சபை உலகத்திற்கு வழிகாட்டியாக இருக்கும் என்ற அளவிற்கு தாங்கள் நம்பிக்கையை ஊட்டி வருகிறீர்கள். இன்னும் சிறப்பாக நடை பெறும் என்று சொல்லி, நான் இந்த அவைக்கு வெளியே இருந்தாலும் உள்ளே இருந்தாலும், இந்தத் தொண்டு நடைபெற வேண்டும் என்று சொல்லி எனக்கு இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, இன்று நம்மிடமிருந்து விலகுபவர்கள் பார்லிமெண்டரி அரசியலிலிருந்து ஓய்வு பெறுபவர்கள் அல்ல. திரும்பவும் இந்த அவைக்கோ அல்லது அந்த அவைக்கோ வரலாம் அல்லது டில்லிக்கோ செல்லலாம். இங்கேயிருந்து பெற்ற சிறந்த பாரம்பரியம் உள்ள இந்த அவையில் அனுபவம் பெற்றவர்கள். அவர்களில் எனக்குத் துணையாக, இந்த அவையின் துணைத் தலைவராக இருந்து பணியாற்றியவர், என்னுடைய பெருமதிப்பிற்குரிய திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள், மூன்று ஆறாண்டுக்காலம் தொடர்ந்து பதவி வகித்தார். இரண்டு முறை இடைவெளி விட்டு இந்த அவையின் துணைத் தலைவராக இருந்திருக்கிறார். நான்காவது ஆறாண்டுக் காலத்திற்கு நியமனம் பெற்றிருக்கிறார்கள். நான்காவது, ஆறாண்டுக் காலம் நிறைவு பெற்றால் 24 ஆண்டுக் காலம் இந்த அவையிலே அவருக்கு அனுபவம் ஏற்படுகிறது. அதிலே என்னைவிட மூத்தவராக இருக்கிறார். நான் இரண்டு ஆறாண்டுக் காலம் பதவி வகித்தேன். இப்போது மூன்றாவது ஆறாண்டுக் காலத்திற்கு இந்தப் பதவியில் வந்திருக்கிறேன். அதற்கு முன்பு 1952-இல் இருந்து இரண்டாண்டுக் காலம் இந்த அவையில் இருந்ததையும் சேர்த்தால், மொத்தம் 20 ஆண்டுக் காலம் எனக்கு அனுபவம். ஆனால் அவருக்கு 24 ஆண்டுக் காலம் அனுபவம். அவர் வயதிலே இளையவர் அவருக்குப் பாராட்டுச் சொல்வது துணைத் தலைவர் என்ற முறையில் தான். இரண்டு முறை இடைவெளிவிட்டு இரு முறை துணைத் தலைவராக இருந்த காலங்களில் அவர்கள் என்னோடு பரிபூரணமாக ஒத்துழைத்தார்கள். நான் குறைபட்டுக்கொள்ளும் அளவிற்கு ஒரு சந்தர்ப்பத்தையும் எனக்கு அவர் கொடுத்ததில்லை. என்னிடம் குறை காணும் அளவிற்கு நானும் அவருக்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்க மாட்டேன் என்று நம்புகிறேன். அதற்கு அவரும் தலையசைக்கிறார் என்பதை காணாதவர்களுக்குக் காட்டுகிறேன். இந்த நிலையில் நட்பு ஏற்படக் காரணம், கலைஞர் அவர்கள் பேசும்போது குறிப்

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1986 ஏப்ரல் 18

(பிற்பகல் 1.25)

பிட்ட மாதிரி, அவர் மாணவராக இருந்தபோதே தமிழரசுக் கழகத்தில் மிகத் தீவிரமாகப் பாடுபட்டவர். அவர் மருத்துவத் துறையில் பி. பார்மசி படித்துக் கொண்டிருந்தபோது, தமிழரசுக் கழகத்தில் சேர்ந்தார். அப்போதே ரொம்ப துடிப்பு மிக்கவர். மேடையிலே துடிப்பாகவே பேசுவார்கள். அது மட்டுமல்ல. அவரிடம் 'ஆர்கனைசிங்' திறமை அதிகமாக இருந்தது. ஒரு பொறுப்பை எடுத்துக்கொண்டால், இரவு பகலாக உழைத்து நடத்துபவர்கள். மகாநாடோ ஒரு கூட்டமோ ஏற்பாடு செய்வதில் மிக சுறுசுறுப்பாகச் செயல்படுபவர். திரு. இராஜாஜி அவர்கள் சுதந்திரா கட்சி தொடங்கியபோது, என்னையே இழுத்துவிடப் பார்த்தார். அது முடியவில்லை. என்னிடமிருந்து ஒவ்வொரு வராக எடுக்கப்பார்த்தார். அதிலே வெற்றி அடைந்தார். அவருக்கு மகிழ்ச்சி தந்து வெற்றி தந்ததிலே திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒருவராக இருந்தார். ராஜாஜி அவர்கள் சொல்வார்கள். சாமர்த்தியத்திற்கு ஒரு பெரிய அடையாளம் நண்பர் சுவாமிநாதன் என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு சுவாமிநாதனைப் பொறுத்த அளவில் நல்ல மதிப்பு வைத்திருந்தார். என்னிடம் எந்த அளவுக்கு மதிப்பு பெற்றிருந்தாரோ அந்த அளவுக்கு அவர் ராஜாஜி அவர்களிடம் பெருமதிப்புப் பெற்று இருந்தார். அவர்களிடம் திரு. சுவாமிநாதன் அவர்கள் நல்ல மதிப்பைப் பெற்றிருந்தார்கள் என்பதையும் நான் அறிவேன். இவ்வளவு காலம் என்னுடன் ஒத்துழைத்ததற்காக அவருக் கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருமதி தாரா செரியன் அவர்கள்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர் ஒரு பெரிய மாநிலத்தினுடைய ஆளுநர் அவர்களு டைய மனைவி என்ற முறையிலே மட்டுமல்லாமல், இந்த மேலவையிலேயே இரண்டு முறைகள் தலைவராக இருந்த ஒருவருடைய மனைவியாக இருந் தார்கள். அதையும் விட சிறப்பாக இந்த மாநகராட்சியின் வரலாற்றிலே முதல் பெண் மேயர் என்ற முறையிலே பதிவாகியவர்கள். ஆனால் முதன் முதலாக 1952-லே நானும் பெருந்தலைவர் காமராசர் அவர்களும் அவருடைய வீட்டிற்குச் சென்று அவர்களை மாநகராட்சி ஆல்டர் மெனாக இருக்க வேண்டும் என்று காங்கிரஸ் சார்பில் அழைத்தோம். முன்னோடி நிகழ்ச் சியாகச் சென்று நாங்கள்தான் அவரை அழைத்தோம். அவரும் வந்தார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்ல, அவருடைய தாயும் தந்தையும் எனக்கு ரொம்பவும் அறிமுகமானவர்கள். அவர்கள் கடிதம் எழுதி யிருக்கின்றார்கள். வர முடியாததற்கு வருத்தம் தெரிவித்து "குடும்ப நிகழ்ச்சி காரணமாக நான் வெளியூர் செல்கிறேன். அதனால் வர முடியவில்லை.



1986 ஏப்ரல் 18] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

அவையினருக்குத் தெரிவியுங்கள்" என்று எழுதியிருக்கின்றார்கள். அதிலே அப்படி குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவர்கள் எங்கள் குடும்ப நண்பர் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவருடைய தாயையும் தந்தையையும் எனக்குத் தெரியும். அவர்கள் வீட்டிலேதான், பெற்றோர்கள் வீட்டில் முதல் முதலாக அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்தேன். அவர் வீட்டிலே நானும் அண்ணாவும் பலமுறைகள் சாப்பிட்டிருக்கிறோம். நண்பர் ஆல்பர்ட் ஜேசு தாசன் அண்ணாவுக்கு, கலைஞர் அவர்கள் சொன்னதுபோன்று, ரொம்ப அருயிர் நண்பர். அதன் காரணமாகவும் அன்னாரிடம் நட்பு கொள்ள முயன்றோம். இப்படி ஒரு குடும்ப நண்பராக இருந்தவர் இங்கு உறுப்பினராக இருந்தபோது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். தமிழ் குடும்பம் என்றாலும் கூட கணவர் காரணமாகவும் குடும்ப வளர்ச்சியின் காரணமாகவும் ஆங்கிலத்திலேயே பேசிப் பழக்கப்பட்டவர் என்பதாலும், என்னைத் திருப்தி செய்ய வேண்டும் என்பதற்காகவே பல சந்தர்ப்பங்களிலே மணிப்பிரவாளமாக ஆங்கிலத்திலும் தமிழிலும் கலந்து பேசியிருக்கிறார்கள். என்னிடம் உள்ள அன்பின் காரணமாகவே அவர்கள் பேசினார்கள். அத்தகைய நண்பர் விடை பெறுகின்றார்கள். அவர்கள் சமூக சேவைப் பொறுப்பில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிறுவனத்தின் பொறுப்பாளராக இருக்கின்றார் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

இங்கே இப்போது விடைபெறுகின்றவர்களிலே மூத்தவராக இருக்கின்றவர் நண்பர் திரு. க. அருணாசலம் அவர்கள். அவரை நான் பல ஆண்டுகளாக அறிவேன். நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் சொன்னார்கள். அடக்கமாக இருப்பவர்களுக்கு இது காலம் அல்ல, அதற்குக் காலம் வரும் என்று சொன் னார்கள். ஏன், இப்போதே காலம் தான். அடக்கமாக இருப்பவர்கள் என்பதற்கு அடையாளம் திரு. மாணிக்கம் அவர்கள் உறுப்பினராக வந்திருப் பதும், திரு. அருணாசலம் அவர்கள் உறுப்பினராக வந்ததும், திரு. முனு சாமி உறுப்பினராக இருப்பதும். அடக்கமாக இருப்பவர்களுக்கு காலம் இருக்கின்றது என்பதைக் காட்டுகிறது. ஒருவருக்கு மூவராக இங்கே உறுப்பி னர்களாக இருந்திருக்கின்றார்கள். அதிகாரம் இல்லை என்று வேண்டு மானால் சொல்லலாம். அந்த அதிகாரம் வருகின்ற காலம் வரும் என்று சொல்லிக்கொள்கிறேன். நண்பர் திரு. அருணாசலம் அவர்கள் அப்படி ஆறுதல் அடைய வேண்டும். அவர்கள் சிறந்த காந்தியவாதி. காந்தியவாதி என்பதற்காக அவருக்கு ஜனநாயகம் அந்நியம் அல்ல. ஜனநாயகத்திலே அதிக உறுதிப்பாடுடையவர் என்பதனாலேயே தேசியப் போராட்டத்தில் அவர் புகவேண்டியதாக இருந்தது. அதை நான் நினைவூட்டியே ஆகவேண்டும்,

அவர் இந்த அவையிலே பேசியபோதெல்லாம் நான் இருக்கமுடியாத நேரத்திலேகூட, என் அறையிலே இருந்து ஒரு வார்த்தை தவறாமல் கேட்பதிலே நான் ஆர்வம் காட்டியவன். அவர்களுக்கும் என்னுடைய பாராட்டு.

டாக்டர் சனார்த்தனம் அவர்களைப்பற்றி எல்லோரும் சொன்னார்கள். ஸ்ரீலங்கா தொடர்பு, ஸ்ரீலங்கா தொடர்பு என்று சொல்லிக்கொண்டிருப்பார். அவர் இங்கேவிட்டுப் போனாலும்கூட ஸ்ரீலங்காவை விடமாட்டார்கள். ஸ்ரீலங்காவிலே ஈழத் தமிழ்நாடு ஏற்பட்டாலும்கூட ஒருவேளை அங்கே பொறுப்பேற்க குடியுரிமை எடுத்தாலும் எடுக்கலாம். அவ்வளவு ஆர்வத்தோடு இருக்கின்றார்கள். எதை எடுத்தாலும் ஸ்ரீலங்கா பற்றிச் சொல்வார். நேற்றுக்கூட ஒரு கேள்வி கேட்டார். கேள்வி கேட்கின்ற நேரத்திலே ஸ்ரீலங்கா பற்றி புகுத்திக் கேட்டார்கள். இரண்டு பேர்கள், திரு. அனகாபுத்தூரார் சி. இராமலிங்கம் அவர்கள். அவர் பேசுகின்றபோது கைத்தறியாளர்கள் பிரச்சினை வராமல் இருக்காது. அப்படியே டாக்டர் சனார்த்தனம் அவர்கள் எதைப் பேசினாலும், ஸ்ரீலங்கா பற்றி வராமல் போகாது. அப்படித்தான் ஒவ்வொருவரும் இருக்க வேண்டும். தனிச் சிறப்பாக எடுத்து ஒன்றைப் பேச வேண்டும். அவர்களே அதில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். அவர்களைப்பற்றி எப்போது நினைத்தாலும் அந்த நினைப்பு நமக்கு வருகின்றபடி தனியாக்கிக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு என்னுடைய பாராட்டு.

அடுத்தபடியாக, செல்வி லீலாவதி அவர்கள். அவர்களும் இங்கேயிருந்து விடைபெறுகின்றார்கள். அவர்கள் ஒரு முறைதான் இருந்தார்கள் என்றாலும், அவர்கள் அடக்கமாக இருக்க பழக்கப்படுத்திக்கொண்டவர்கள்தான். அதற்கு அடையாளமாகவே அவர்கள் இருந்தார்கள். அவர்கள் அமைதியாகவும் நல்ல உறுதியான முறையிலும் இருந்தார்கள். அவர்கள் சொன்னது போன்று, அரசியல் கட்சி அல்லாமல்தான் இங்கு வந்தார்கள். பின்னர்

(பிற்பகல் 1-30)

அரசியல் கட்சியைச் சார்ந்துவிட்டாலும்கூட, அந்த நிலையிலும்கூட ஆசிரியர் பணிதான் முக்கியம் என்று ஆளும் கட்சியாலே—தான் இருக்கிற கட்சியாலே —சிறை பிடிக்கும் நிலைக்கு தன்னை ஆட்படுத்திக் கொண்டவர். ஆசிரியர்கள் என்றென்றும் நன்றியோடு நினைக்கத்தக்க ஒன்றாகும். அவருக்கும் என்னுடைய பாராட்டு.



அடுத்து, திரு. முனுசாமி அவர்கள் நீண்ட காலமாக என்னுடைய நண்பர். ரொம்ப அடக்கமானவர். அடக்கம் என்றால் அவரைவிட அடக்கமான ஒருவரைப் பார்க்க முடியாது என்ற அளவுக்கு நல்ல அடக்கமானவர். ஆறு ஆண்டுக்காலம் நம்மோடு இருந்து, இன்று விடை பெறுகிறார். அவருக்கும் பாராட்டு.

அடுத்து, நண்பர் திரு. தாமஸ் அவர்கள். நான் நினைத்தேன், நாம்தான் திரு. தாமஸ் பற்றிச் சொல்லப்போகிறோம், மற்றவர்கள் விட்டுவிடப் போகிறார்கள் என்று. பேச்சாளர்களுக்கு இது வழக்கம். மற்றவர்கள் சொல்லாததை நாம் சொல்ல வேண்டும் என்று எண்ணுவார்கள். கலைஞருக்கும் அது வழக்கம். எனக்கும் அது உடன்பிறப்பே. முதலில் அவர் அதை எடுத்துவிட்டார்கள். மற்றவர்களும் பேசினார்கள். இருந்தாலும், திரு. தாமஸ் அவர்கள் இன்று வராமல் போனதில் எனக்கு வருத்தம். அமைதியாக, பண்போடு நடந்துகொள்வதில் அவர் ஒருவர். காலம் வரும். திரும்பவும் இந்த அவையில் அவரைச் சந்திக்க முடியும் என்ற நம்பிக்கையோடு அவருக்கு நம்முடைய பாராட்டுக்களை, எல்லோருடைய சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று மாலை அவர்களுக்கு விருந்து அளிக்கிறோம். இது ஒரு புதிய மரபு. நம்முடைய கொரடா அவர்கள், இப்படி ஒரு விருந்து அளிக்க வேண்டுமென்று என்னை அழைத்தார். அவர்கள் என்னிடம், இதுவரையில் இல்லையே, ஒரு புதிய மரபு படைக்கிறோமே என்று சொன்னார். ராஜாஜி அவர்களிடம் நான் கற்றுக்கொண்ட ஒரு பழக்கம். ஏதேனும் புதிதாகச் செய்ய வேண்டுமென்றால், அது மரபாகிவிடுமே என்று அவர் சொல்லுவார். நல்லது செய்வதைத் தடுப்பதற்கு அவருக்கு இது ஒரு பழக்கம். நான் அவரோடு பழகியவன். இருந்தாலும் எல்லோரும் வற்புறுத்திச் சொன்னார்கள். இன்று மாலை விருந்து வைத்திருக்கிறார்கள். நம்முடைய கலைஞர் அவர்களும் அதிலே கலந்து கொள்ள வேண்டும். கொரடா அவர்களும் வேண்டுகோள் விடுத்தார்கள். நானும் சேர்ந்து கேட்டுக்கொண்டேன். அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கேட்டபோது, மவுனமாக இருந்துவிட்டார்கள். இப்போதும் கேட்கிறேன். நிகழ்ச்சி இருந்தாலும்கூட, இடையிலே வந்து ஏதேனும் பானம் அருந்திவிட்டுச் செல்லலாம். பிறகு நாங்கள் போஜனம் செய்கிறோம். இன்னும் ஒரு முறை கேட்கிறேன். நல்ல மரபைப் படைக்கும்போது, முழுதாகப் படையுங்கள். வந்து பானம் அருந்திவிட்டுப் போங்கள். நல்ல பானமாகத் தருகிறோம். (சிரிப்பு) ஆக எல்லோருக்கும் பாராட்டும், நன்றியும் தெரிவித்துக்கொள்கிறேன். ஓய்வு பெற இருக்கும்

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1986 ஏப்ரல் 18

உறுப்பினர்களுக்கு இன்று 7.30 மணிக்கு ஓட்டல் சோழாவில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை நினைவுபடுத்தி, உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 23—4—1986 புதன்கிழமை காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.*

(பிற்பகல் 1-33)

### 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

206. பெரியார் அங்காடி குழுவினை அமைப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 14—8—1985 ஆம் நாளிட்ட 1451 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

121. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சாராவி கலந்த தயாரிப்புப் பொருட்கள் (பன்மாநில தொழில்—வர்த்தக) கட்டுப்பாட்டு விதிகளை வகுப்பது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 22—8—1985 ஆம் நாளிட்ட 842 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

* 122. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

123. மாநில ஆயத்தீர்வை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

124. மானியக் கோரிக்கை எண். 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிருவாகம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

125. கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

126. பள்ளிக்கல்வி, கல்லூரிக்கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி பற்றிய செயல்முறைத்திட்டம் 1986-87 (ஆங்கிலம்).



1986 ஏப்ரல் 18]

127. தமிழ்நாடு அரசின் அறிவியல்—தொழில் நுட்பவியல் மீதான கொள்கை தீர்மானம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

128. 'கல்வி—ஒரு சவால்—ஒரு கொள்கை தொலை நோக்கு' என்கிற புத்தகம் (தமிழ்).

129. கல்வி ஒரு சவால்—ஒரு கொள்கை தொலை நோக்கின் பின் இணைப்புகள் (தமிழ்).

130. 7 முதல் 11 வரையிலான உடுக்குறியிடப்படாத வினாக்களுக்கான பதில்கள்.

### இணைப்பு.

(326 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (1986-87) கொள்கை விளக்கக் குறிப்பு.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, ஒவ்வொரு
குடும்பத்திற்கும் அவர்களது திறனுக்கு ஏற்றவாறான குடியிருப்புகளை
அமைத்துத் தருவதே அரசின் நீண்ட நாளைய வீட்டுவசதிக் கொள்கையாகும்.
இதற்கென, பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள், வீடுகள் அல்லது மேம்
படுத்தப்பட்ட மனைகளை ஏற்படுத்தித் தர ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இது
தவிர பல்வேறு சமூக நலப் பிரிவு மக்களையும் அவர்களாகவே வீடுகள் கட்டு
மானத்தில் ஈடுபட பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் நிதியுதவி பெற்றுத்
தருவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. ஒவ்வொரு
வருக்கும் வீட்டினை ஏற்படுத்தித் தருவதை அரசாங்கமே நிறைவேற்ற
இயலாது என்றாலும், இத்துறையில் பொது நிறுவனங்களை ஈடுபடுத்துவதன்
மூலம், நடைமுறையில் வீடுகள் மற்றும் மனைகளின் பொதுவான விலை
நிலையை தனியார் துறையிலும் கட்டுப்படுத்தலாம் என்று நம்பப்படுகிறது.

மேற்சொன்ன கொள்கையை நிறைவேற்றும் முகத்தான் கீழ்வரும் மிக முக்கியமான நடைமுறைகளை அரசு நிர்ணயித்துள்ளது :—

(அ) பல்வேறு வருமான வரம்பு உள்ளவர்கள் பயன் பெறும் வகையில் வீடுகளையும், மனைகளையும், "உடனடி விற்பனை" மற்றும் "தவணை முறை விற்பனை" அடிப்படையில் ஏற்படுத்தித் தருவது.

* 17—4—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

(ஆ) மனைகளை மேம்படுத்தி அத்தியாவசியமான அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டு மனைகளை ஏற்படுத்துவது.

(இ) தனிப்பட்டவர்களே அவர்களுக்கு ஏற்றவாறு வீடுகளைக் கட்டிக் கொள்ளத் தேவையான நிதி உதவிகளை தக்க நிறுவனங்களிடமிருந்து பெற்று உதவுவது.

(உ) குடிசைப் பகுதிகளை அகற்றி, அப் பகுதிகளில் அடுக்கு குடியிருப்புகளை அமைத்து குடிசை வாழ் மக்களுக்கு மறு வாழ்வளிப்பது.

(ஊ) குடிசைப் பகுதி வாழ் மக்கள் தங்கள் குடியிருப்புகளை மேம்படுத்திக்கொள்ள மேம்பாட்டுக் கடனுதவி அளிப்பது.

(எ) நகர்ப்புற மற்றும் கிராமப்புற வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது உறுப்பினர்கள் வீடு கட்டிக்கொள்ளத் தேவையான கடனுதவியை அளிக்கத் தக்க நிதி ஆதாரங்களுக்கு வழிவகை செய்து கொடுப்பது ; மற்றும்

(ஏ) அரசு ஊழியர்களுக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கென வீடுகளைக் கட்டுவது.

மேற்கூறப்பட்ட திட்டங்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட கீழ்வரும் மூன்று பொது நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன :—

1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

2. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.

3. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம்.

இவை தவிர, மாநிலத்தில் வேறுசில துறைகள் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. ஊரக மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோருக்கான திட்டங்களை ஊரக வளர்ச்சித் துறையும், மீனவர்களுக்கான வீட்டுவசதித் திட்டம், கைத்தறி நெசவாளர்களுக்கான வீட்டுவசதித் திட்டம், காவலர் வீட்டுவசதித் திட்டம் மற்றும் ஆதி திராவிடர் வீட்டுவசதித் திட்டங்களை அந்தந்தத் துறைகளும் நிறைவேற்றுகின்றன.



வறுமைக் கோட்டில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு மாபெரும் வீட்டுவசதித் திட்டத்தை நிறைவேற்ற அரசு கொள்கையளவில் முடிவு எடுத்துள்ளது. வரும் ஆண்டுகளில், வறுமைக் கோட்டில் உள்ள அனைத்து மக்களும் அரசு ஆதாரவுடன் சொந்தமாக வீடுகளைப் பெற வேண்டும் என்பதே இத்திட்டக் குறிக்கோள் ஆகும். இத் திட்டம், பல் வேறு நிறுவனங்கள் மற்றும் துறைகள் மூலம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் ஒருமித்த மேற்பார்வையில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டச் செயல்முறைகள் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்கான பல்வேறு செயல் முறைகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களையும், நிதி நிறுவன உதவிகளையும் கண்டறிய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. அரசின் பொதுவான வினை முறைத்திறன், கொள்கை விளக்கக் குறிப்பின் பின் பகுதியில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நிறுவனங்களின் செயல் திட்டங்கள் பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

இட்டமிட்ட வீட்டுவசதித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் உருவாக்கப்பட்டது. மேம்படுத்தப்பட்ட மனைப் பிரிவில் தேவையான வசதிகளுடன், குறைந்த நடுத்தர மற்றும் உயர் வருமானப் பிரிவினரான அனைத்து சமூகப் பிரிவினரும் வீடுகளைப் பெற வேண்டும் என்ற நோக்கில் வீட்டு வசதி வாரிய செயல்முறை வகுக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் செயல்பாடு, நகர்ப்புறத்தில் வீட்டுமனை தொடர்பான ஊக வாணிபத்தைக் குறைத்து, குறைந்த விலையில் போதிய மனைகள் கிடைக்க உதவும் என்று நம்பப்படுகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அதன் துவக்க காலத்திலிருந்து 1985—86 ஆம் நிதியாண்டு முடிய பல்வேறு வருமான வரம்பு அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் தகவல்களும் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் நிதி

யாண்டில் மொத்தம் 16,400 வீடுகள்/மனைகள் உருவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளன. இதற்காகும் மொத்த செலவு ரூ. 3742.50 இலட்சம் அரசின் நிதி உதவி ரூ. 1567.50 இலட்சமாகும். இதன் விவரங்கள் கீழ்வருமாறு—

| | குடியிருப்பு எண்ணிக்கை. | 1986-87ஆம் ஆண்டின் ஒதுக்கீடு. | அரசின் நிதி உதவி |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 1. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்தின் கீழ்) .. | 7,200 | 700.00 | 600.00 |
| 2 குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம் | 96 | 67.50 | 67.50 |
| 3 குறைந்த வருவாய்ப் பிரிவினர் .. | 1,300 | 300.00 | 100.00 |
| 4 நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் | 5,016 | 1,875.00 | |
| 5 அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு | 2,788 | 300.00 | 800.00 |
| மொத்தம் .. | 16,400 | | |

**பல்வேறுபட்ட வருமான வரம்பினருக்கான திட்டங்கள்.**

வீட்டுவசதித் திட்டங்கள் பல்வேறு வருவாய்த் தொகுதியினருக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**குறைந்த வருவாய்த் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டம்.**

இத் திட்டம், மாத வருமானம் ரூ. 701 முதல் 1,500 வரை பெறுபவர்கள் பயனடைய என உள்ளது. இத்திட்ட வீட்டின் உச்ச வரம்புச் செலவு ரூ. 30,000 ஆகும். வீட்டின் செலவினத்தில் 25 சதவீதம் உடனடியாக முன் பணமாகவும், மீதமுள்ள தொகை 13 ஆண்டுகளில் (பயன்தரும் காலமாக இரண்டு ஆண்டுகள் தவிர) மாதத்தவணைகளாக செலுத்தப்படல் வேண்டும். இத்திட்டத்தின் கீழான வட்டி விகிதம் 9 சதவீதம். வீட்டுவசதி வாரியம்,



இத்திட்டத்தின் கீழ் 25,865 வீடுகளை ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவு வரை கட்டியுள்ளது. 1985-86 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி 1986 முடிய 2,251 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டிற்கான குறியீடாக 1,300 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இவ்வாண்டு வரவு செலவு திட்டத்தில் அரசு தரப்பில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

**நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினர் வீட்டுவசதித் திட்டம்.**

நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டுவசதித் திட்டம், மாத வருமானம் ரூ. 1,501 முதல் 2,500 வரை உள்ளவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் முதல் பிரிவு வீட்டிற்கான விலை உச்சவரம்பு ரூ. 60,000 ஆகும். இரண்டாம் பிரிவு வீட்டிற்கான உச்ச வரம்பு ரூ. 1 இலட்சம் ஆகும். மொத்தச் செலவினத்தில் 30 சதவீதம் முன் பணமாகவும், மீதமுள்ள தொகை 13 ஆண்டுகளில் மாதத் தவணைகளாக வசூலிக்கப்படுகிறது (பயன்தரும் காலமான இரண்டு ஆண்டுகள் சேர்க்கப் படாமல்). முதல் பிரிவிற்கு வட்டி 11 சதவீதம். இரண்டாம் பிரிவிற்கு வட்டி 12½ சதவீதம்.

உயர் வருவாய்த் தொகுதியினர் வீட்டுவசதித் திட்டம், மாத வருமானம் ரூ. 2,500 க்கு மேல் உள்ளவர்களுக்கானது. இத்திட்டத்தின் கீழ் கட்டப் படும் வீட்டின் தற்போதைய விலை உச்சவரம்புச் செலவு ரூ. 2,50,000 ஆகும். மொத்த செலவினத்தில் 30 சதவீதம் முன்பணமாகவும், மீதமுள்ள தொகை மாதத் தவணைகளாக 13 ஆண்டுகளில் (பயன்தரும் காலமான இரண்டு ஆண்டுகள் இணைக்கப்படாமல்) வசூலிக்கப்படுகிறது. இத் திட்டத்திற்கான வட்டி வீதம் 13½ சதவீதம்.

1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 20,081 வீடுகள் இவ்விரு திட்டங் களின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில், 3,661 வீடுகள் 1986 பிப்ரவரி முடிய கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் 5,016 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு ரூ. 3742.50 இலட்சம்.

**நிலம் கையகப்படுத்துதல் மற்றும் வீட்டு மனை மேம்பாட்டுத் திட்டம்.**

நிலத்தின் விலைகளில் ஊக வாணிபத்தைத் தடுக்கும் பொருட்டும், நிலத் தின் விலையைக் குறைக்கும் பொருட்டும், வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்துவரும்

[1986 ஏப்ரல் 18

நகரங்களின் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும், நிலங்களைப் பெருமளவில் முன்னதாக கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். என்றாலும், பல்வேறு காரணங்களினால் நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதி நிலச்சொந்தக்காரர்களிடமிருந்து, நிலம் கையகப்படுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கக் கோரும் கோரிக்கை மனுக்கள் பெறப்படுவதாலும், பல நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்தில் ரிட்மனுதாக்கல் செய்து தற்காலிகத் தடை பெற்று விடுவதும் இத்திட்ட முன்னேற்றத்தில் சிறிது தாமதத்தை ஏற்படுத்துகிறது. 1986-87 ஆம் ஆண்டில் 230 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்தி மேம்படுத்த வீட்டு வசதி வாரியம் உத்தேசித்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இப்பணிகளுக்கென ரூ. 150 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டம்.**

உலக வங்கி உதவி பெறும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் மிகவும் முக்கியமான திட்டம் தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டமாகும். இத்திட்டம், நிலத்தினை மேம்படுத்தவும், சாலைகள், குடிநீர் வசதி, சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகள் கொண்ட வீட்டு மனைகள் வழங்க உருவாக்கப்பட்டதாகும். இத்திட்டம், சென்னை மாநகரத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரின் வீட்டுப் பிரச்சினையைப் போக்க மிகவும் அதிக அளவில் உதவுகிறது. இத்திட்டத்திற்காகும் செலவினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு மானியமாக அரசு அளிக்கிறது. இத்திட்டத்தில் பயனடைபவர்களிடமிருந்து பெறப்படும் வசூல் தொகை ஒரு 'சுழல் நிதிக்கு' போய்ச் சேரும். இத் தொகையிலிருந்து வருங்கால தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க இயலும்.

தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்தின் சிறப்பு அம்சம் பல்வேறு விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகும். இத் திட்டத்தின் கீழ், தொழிற்சாலை, வாணிபம் மற்றும் உயர் வருமானப் பிரிவினருக்கான மனைகள், இம் மனைகளை மேம்படுத்த ஆகும் செலவைவிட அதிக விலைக்கு விற்கப்படுகிறது. அவ்வாறு கிடைக்கும் அதிகத் தொகை, பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு மானியத்தொகை வழங்க பயன்படுகிறது.

அதனால், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு அவர்கள் வாங்கும் சக்திக்கேற்ப வீட்டுமனை வழங்க முடிகிறது.



1986 ஏப்ரல் 18]

தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வீடு களின் எண்ணிக்கை, நில அளவு, திட்டச் செலவு முதலிய விவரங்களை அட்டவணை இரண்டில் காணலாம்.

இத்திட்டத்திற்காக 1986-87 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் ரூ. 600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டிலேயே 7,459 மனைகள் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—I**

சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் ஒன்றின் கீழ், தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டம் அரும்பாக்கம், வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூர் ஆகிய மூன்று இடங்களில் ரூ. 763 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படுகிறது. திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவடைந்து விட்டன.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—II**

**(அ) மொகப்பையர்.**

இத்திட்டத்தின் கீழ், பணிவசதி பெற்ற குடியிருப்பு மனைகள் 4,172, குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான மனைகள் 1,275, நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான மனைகள் 152, உயர்வருவாய்த் தொகுதியினருக்கான மனைகள் 72 மற்றும் 86 தொழிற்சாலை மனைகள் ரூ. 909.85 இலட்சம் செலவில் மேம்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. திட்டப்பணிகள் முடிவுறும் தருவாயிலுள்ளன.

**(ஆ) மதுரவாயல்.**

நெற்குன்றம் பகுதியில் போதிய நிலம் கைகயப்படுத்த முடியாததால், நெற்குன்றம் தன்னிறைவு வீட்டுமனைகள் திட்டத்திற்கு மாற்றாக மதுர வாயல் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் மதுரவாயல் திட்டப் பகுதியில் கூட 25 ஹெக்டர் நிலம் மட்டுமே கையகப்படுத்த முடிந்தது. இந்நிலத்தில் 1985-86 ஆம் ஆண்டு 400 மனைகளும், 1986-87 ஆம் ஆண்டு 1,196 மனைகளும் மேம்படுத்தப்படும்.

**(இ) மணலி.**

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டினை செயற்படுத்த மதுர வாயலில் அதிக அளவு நிலம் கையகப்படுத்த முடியாமற்போனதால் மணலி திட்டம் ஒரு மாற்றுத்திட்டமாக உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தில்

[1986 ஏப்ரல் 18

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு பணிவசதி பெற்ற 2,115 மனைகளும் குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கு 692 மனைகளும், நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கு 178 மனைகளும், உயர்வருவாய்த் தொகுதியினருக்கு 68 மனைகளும் ரூ. 702.30 இலட்சம் செலவில் 100 ஏக்கர் நிலத்தில் மேம்படுத்தப்படும். 1985-86 ஆம் ஆண்டு 1,110 மனைகளும், 1986-87 ஆம் ஆண்டு 1,853 மனைகளும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின் கீழ் மேம்படுத்தப்படவுள்ளன.

**வெளியூர்களில் குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் அகற்றுதல்.**

அண்மைக் காலம் வரை சென்னை மாநகர எல்லைக்கு வெளியூர்ப் பகுதிகளில் குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் மாற்றும் திட்டம் வீட்டுவசதி வாரியத்தால் செயற்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ், 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 19,852 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. சென்னை மாநகரத்தின் வெளியூர்ப்பகுதிகளில் குடிசைப்பகுதி மாற்றுவாரியத்தின் பணி விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது. வருங்காலத்தில் வெளியூர்களில் குடிசைப்பகுதி மாற்றும் பணியை வீட்டு வசதி வாரியம் செயற்படுத்தாது, நிலுவையிலுள்ள திட்டங்கள் சில தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் முடிக்கப்படவுள்ளன. 1986-87 ஆம் ஆண்டு ஈரோடு மற்றும் மதுரையில் 96 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படவுள்ளன. இத்திட்டத்திற்கு வரவு-செலவு திட்டத்தில் பல்வேறு நிலைகளில் நிலுவையிலுள்ள திட்டங்களை முடிக்கவும், ஏற்கெனவே 'அட்கோ'-விடமிருந்து வாங்கின கடனை திருப்பிச் செலுத்துவதற்காகவும் ரூ. 67.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம்.**

இத்திட்டம், சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையங்களில் பணி புரியும் அரசு அலுவலர்களுக்குச் சலுகை வாடகை அடிப்படையில் வீட்டுவசதி வழங்க உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அரசு சார்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்துகிறது. மேலும், வாரியம், கட்டி முடித்த வீடுகளைப் பேணி பாதுகாக்கவும் செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகள் அரசுக்கு சொந்தமாகும். 1985 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை வாரியம் 15,464 குடியிருப்புகளை கட்டி முடித்துள்ளது. 1986 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் இறுதிவரை 1962 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1986-87 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 800 இலட்சம், 2,788 குடியிருப்புகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 18]

**"வீட்டு வசதித் திட்டங்களுக்கு" வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுக் கழக ([redacted] [redacted] (HUDCO), ) நிதியுதவி.**

பல்வேறு வீட்டு வசதித்திட்டங்களுக்கென பல்வேறு வீட்டு வசதி நிறுவனங்கள் பெறும் கடனுதவியில் "அட்கோ" வின் பங்கு மிக முக்கியமானதும் கணிசமானதும் ஆகும். அட்கோ கடனுதவி, அரசு உத்திரவாதத்தின் (பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், மற்றும் இவை இணைக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பாக) அடிப்படையிலும், வாரியச் சொத்துக்களை அடையாளம் வைப்பதன் மூலமும் பெறப்படுகிறது.

நிதி ஆதாரங்கள் பல்வேறு பிரிவினரிடையே கீழ்வரும் முறைப்படி பாகுபடுத்தப்படல் வேண்டும் :

| பிரிவு. | நிதி ஒதுக்கீடு சதவீதம். |
|---|---|
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் நகர்ப்புறம் (அடிப்படை வசதி திட்டம் உட்பட). | 15 |
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (அடிப்படை வசதித்திட்டம் உட்பட) | 15 |
| குறைந்த வருவாய்ப் பிரிவினர் | 25 |
| மற்ற பிரிவினர் | 45 |

வருமான வரம்பு, கட்டுமான உச்சவரம்பு, கடனுதவியைத் திருப்பிச் செலுத்துவதற்கான விதிமுறைகள் பிரிவுக்கு பிரிவு மாறுபடும். "அட்கோ" நிறுவனத்தால் தற்போது பின்பற்றப்படும் விதிமுறைகள் இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் தனி நபர்கள், கடனுதவியைத் திருப்பிச் செலுத்தப் பின்பற்றும் விதிமுறைகள், வீட்டுவசதி நிறுவனம் அட்கோ நிதியுதவியைத் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளுக்கு சமமாகவே இருக்கும் என்றாலும் பயனீட்டாளர் வீட்டு வசதி நிறுவனத்திற்கு சிறிது சேவைக் கட்டணத்தை கூடுதலாக கட்ட வேண்டிவரும்.

[1986 ஏப்ரல் 18

கீழ்வரும் பட்டியல், அட்கோ நிறுவனத்திடமிருந்து சில ஆண்டுகளில் பெறப்பட்ட நிதியுதவியைக் காட்டும்.

| வருடம். | கடனுதவி. | |
|---|---|---|
| | ஒதுக்கீடு. | பெறப்பட்டது (ரூபாய் கோடியில்). |
| (1) | (2) | (3) |
| 1980-81 .. .. .. | 11.9100 | 13.39 |
| 1981-82 .. .. .. | 13.9200 | 14.34 |
| 1982-83 .. .. .. | 23.5600 | 18.37 |
| 1983-84 .. .. .. | 25.1500 | 22.15 |
| 1984-85 .. .. .. | 26.7500 | 30.25 |
| 1985-86 .. .. .. | 37.4500 | 38.69 |

1986-87 ஆம் ஆண்டில் பல்வேறுபட்ட திட்டங்களுக்கு அதிக அளவு 'அட்கோ' நிதியுதவியைப் பெற அரசு தீவிர முயற்சி மேற்கொள்ளும்.

**எதிர்கால நோக்கம் (வினை முறைத்திறம்).**

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட தன்னிறைவு வீட்டு மனைத்திட்டங்களை மற்ற நகர்ப் புறங்களிலும் செயல்படுத்துமாறு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நடவடிக்கைகளை மாற்றி அமைப்பதே அரசின் எதிர்கால நோக்கமாகும். வாரியம் இம்முயற்சியில் எவ்வளவு தூரம் வெற்றி அடையும் என்பது இத்திட்டத்திற்காக நிலம் கிடைப்பதைப் பொறுத்தே அமையும் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. அட்கோ நிறுவனத்திடமிருந்து ஒரு புதிய திட்டத்தின் கீழ் நேரிடையாக நிதியுதவி (Cash loans) பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால், வீட்டுவசதி வாரியம், வாரியத்தால் மனை ஒதுக்கீடு பெற்றவர்கள் தாங்களாகவே அம்மனையில் வீடுகளைக் கட்டிக்கொள்ள உதவி செய்ய இயலும். இதுவரை பல்வேறு நிறுவனங்களின்பால் வீடு கட்டக் கடனுதவியை நாடிச் செல்ல இயலாத பலரும் இதனால் பெரும் பயனடைய இயலும்.

**தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டம்.**

இத்திட்டத்தின்கீழ் தொழில் நிறுவனங்கள் அந்நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தர கடன் 50 சதவீதம் ஆதரவுத் தொகை 25 சதவீதம் என்ற அளவில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் ஆரம்ப காலம் முதல் 1984-85 முடிய 1,322 வீடுகள் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென கட்டப்பட்டுள்ளன. இதற்கென கடனாக



1986 ஏப்ரல் 18]

ரூ. 36.81 இலட்சமும் ஆதரவுத் தொகையாக ரூ. 17.51 இலட்சமும் இதுவரை தனியார்துறை தொழில் நிறுவனங்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 5.53 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டு 48 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டு மேலும் 20 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது இத்திட்டத்தினை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. தொழில்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென (தனியார் துறையின் திட்டம்) ஒரு புதிய மலிவு வீட்டுவசதித் திட்டம் மாநில அரசால் தொடங்கப்பட உள்ளது.

**மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான மலிவு வீட்டு வசதித் திட்டம்.**
**(மத்திய அரசு நிதியுதவி)**

(தொழிலாளர் துறை ஆணையர் மூலமாக நிறைவேற்றப்படும் திட்டம்).

(தோட்டத் தொழில் நிறுவனங்கள் தனது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தர இத்திட்டத்தின்கீழ் அரசு நிதியுதவி அளிக்கிறது (கடன் 50 சதவீதம் ஆதரவுத் தொகை 37½ சதவீதம்). இத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 1984-85 முடிய 1,078 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்கென கடனாக ரூ. 16.45 இலட்சமும் ஆதரவுத் தொகையாக ரூ. 11.85 இலட்சமும் இதுவரை தோட்ட அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1986-87-ல் 74 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ. 4.62 இலட்சம் இவ்வாண்டின் வரவு-செலவு திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.**

1971 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை மாநகரில் மூன்று குறிப்பிடத்தக்க திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

(1) குடிசைகளை அகற்றுதல் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுதல்.

(2) விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்.

(3) சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்.

[1986 ஏப்ரல் 18

1983-84 ஆம் ஆண்டுவரை குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னை மாநகரத்தில் மட்டும் நடைபெற்றது. பின்பு, இவ்வாரியத்தின் பணிகளை கட்டம் கட்டமாக பிற நகர்ப்புற மையங்களுக்கு விரிவுபடுத்த முடிவெடுக்கப்பட்டது. தற்போது குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னையைத் தவிர 43 நகரங்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

**குடிசைப் பகுதிகள் அகற்றுதல் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுதல்.**

இத்திட்டத்தின்கீழ் குடிசைப்பகுதிகளை அகற்றும் பணி மேற்கொள்ளப் பட்டு, அவைகளில் குடியிருக்கும் குடிசைவாசிகளுக்கென்று குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இக்குடியிருப்புகள் வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போதுள்ள மிகக் குறைந்த வாடகை ரூ. 20 ஆகும். தகுதி வாய்ந்தவர்களுக்கு இக்குடியிருப்புகளை நீண்டகாலத் தவணை முறை யில் அளிக்கலாம் என்று ஒரு கொள்கை முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. இவ் வகையில், 7,170 குடியிருப்புகள் நீண்டகாலத் தவணை முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

1984-85 ஆம் ஆண்டுவரை, சென்னை மாநகரிலும் ஈரோட்டிலும் ரூ. 4,169 இலட்சம் செலவில் 45,980 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. சமீப ஆண்டுகளில் குடியிருப்பு கட்டும் திட்டத்திற்கு அரசு மானியம் மற்றும் அட்கோ கடன் உதவியும் பெறப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், அட்கோவிடமிருந்து ரூ. 557 இலட்சம் கடனாகப் பெற்றுள்ளது.

1985-86 ஆம் ஆண்டில், 1,736 குடியிருப்புகள் கட்டும் பணி ஆரம்பிக்கப் பட்டு, மார்ச் 1986 முடிய 512 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்படும். இதற் கென, அரசு மானியமாக ரூ. 150 இலட்சமும், அட்கோவிடமிருந்து கடனாக ரூ. 188 இலட்சமும் பெறப்பட்டுள்ளது.

1986-87 ஆம் ஆண்டில், 1,250 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும், இத்திட்டத்திற்கான அரசு மானியம் ரூ. 175 இலட்சமாகும். தேவையான கூடுதல் நிதி, அட்கோவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும்.

**குறைந்த விலை வீட்டுவசதித் திட்டம்.**

சமீப ஆண்டுகளில், குடியிருப்பின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. இந்த பிரச்சினையிலிருந்து மீள்வதற்கென நலிந்த பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 18]

சென்னை மற்றும் வெளியூர்ப் பகுதிகளில் உள்ள குடிசைவாசிகளுக்கு, நன்கு திட்டமிடப்பட்டுள்ள வீட்டு மனைப் பிரிவு வசதி செய்யப்பட்ட பகுதி களில் வீட்டு வசதியையும், அடிப்படை வசதிகளையும் அளிப்பதே இத்திட்டத் தின் நோக்கமாகும். முடிந்தவரை உள்ளூரிலேயே கிடைக்கும் கட்டிடப் பொருட்களைப் பயன்படுத்தி, அதிகரித்துவரும் செலவைத் தடுத்து, குறைந்த செலவில் கட்டுவதற்கான தொழில் நுட்பத்தை மேற்கொள்ளப்பட உள்ளது. இவ்வீடுகள், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைப் போல் வாடகை முறையிலோ அல்லது நீண்ட காலத் தவணை முறையிலோ ஒதுக்கீடு செய்யப்படும்.

1985-86-ம் ஆண்டில், மதுரையில் பெரியார் நகரில், ரூபாய் 232 இலட்சம் செலவில் 2,010 வீடுகளை, நலிவுற்ற குடிசைவாசிகளுக்கு கட்டுவதற்கான இத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டம், 1986-87 ஆம் ஆண்டில் முடிவுபெறும். 1986-87 ஆம் ஆண்டில் மற்ற இடங்களில் சுமார் 10,000 வீடுகளை அளிப்பதற்கென, குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டங்களுக் கான செய்முறைகளை வகுத்து வருகிறது.

**தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம்.**

குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் கைவசமுள்ள சிலகாலி நிலங்களில், தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 86.49 இலட்சம் மதிப்பீட்டில் 1,842 மனைகள் மேம்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கென அட்கோ நிறு வனம் ரூ. 40 இலட்சம் கடன் அளிக்க உள்ளது. இதில்; 800 மனைகள் 1985-86 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. மேலும், மீதமுள்ள 1,042 மனைகள் 1986-87 ஆம் ஆண்டில் முடிவுபெறும்.

**விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டம்.**

இத்திட்டத்தின்கீழ், குடிசைப்பகுதியென அறிவிக்கை செய்யப்பட்ட குடிசைப்பகுதிகளில், சாலைகள், பொதுக் குடிநீர் வசதி, தெரு விளக்குகள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப் படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டுவரை, 64,448 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் ரூ. 425 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1985-86-ம் ஆண்டில், மேலும் 7,250 குடும்பங்கள் ரூ. 70 இலட்சம் செலவில் பயனடைவார்கள். 1986-87 ஆம் ஆண்டில், 8,000 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் செயல் படுத்தப்படும். இதற்காக ரூ. 70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் கூடுதல் மேம்பாட்டுத் திட்டம் (மத்திய அரசு வழங்கும் தொகை).

1983-84 ஆம் ஆண்டு முதல், குடிசைப்பகுதி சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நகர்ப்புறப் பகுதிகளுக்கு உதவியளிக்க மைய அரசு முன் வந்துள்ளது. 1984-85 ஆம் ஆண்டு வரை, ரூ. 72.94 இலட்சம் வரப்பெற்று, ரூ. 56 இலட்சம் செலவில் 34,324 நபர்கள் பயனடைந்தனர். 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 17 இலட்சம் செலவில் 7,255 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். 1985-86 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு இத்திட்டத்தை நிறுத்தி விட்டது.

### சென்னைப் பெருநகர் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் (உலக வங்கி நிதியுதவித் திட்டம்).

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் முக்கியப்பகுதி குடிசைப்பகுதி மேம்படுத்தும் பணியாகும். இத்திட்டம், சுற்றுப்புற மேம்பாடு, நில உரிமை வழங்கல் மற்றும் குடிசைவாழ் குடும்பங்களின் வருமானத்திற்கேற்ப ரூ. 1,500 முதல் ரூ. 3,500 வரை மேம்பாட்டுக் கடன் வழங்குதல் முதலியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் பாகம் 1-ன் கீழ் ரூ. 403 இலட்சம் செலவில் 24,862 குடும்பத்தினர் பயனடையும் வகையில் மேம்பாட்டுப் பணியை மேற்கொண்டது. 1977 ஆம் ஆண்டு தொடங்கிய இத்திட்டம் 1982-ம் ஆண்டு முடிவடைந்தது. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் பாகம் 2-ன் கீழ், ரூ. 2,780 இலட்சம் செலவில் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டு முடிய ரூ. 1,416 இலட்சம் செலவில் 32,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

1986-87-ம் ஆண்டில் 10,000 குடும்பங்கள் பயனடைவதற்கென ரூ. 270 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டு வரை, வீடு கட்டுவதற்காக ரூ. 477 இலட்சம் கடன் வழங்கப்பட்டு, 25,146 குடும்பங்கள் பயனடைந்தனர்.

1985 ஆம் ஆண்டில், வீடு கட்டுவதற்காக, 2,350 குடும்பங்களுக்கு ரூ. 130 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் பாகம் 1-ன்கீழ், இப்பணிக்கென ரூ. 130 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



இத் திட்டத்தின் மூலம், சென்னைப் பெரு நகரில் பெரும் வெள்ளம் ஏற்படும் போது குடிசைவாழ் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்காமலிருக்க சென்னை மாநகராட்சி சிறு வடிகால்களையும், பொதுப்பணித் துறை உட்புற வடிகால்களையும், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டித் தருகின்றன. 1984-85 ஆம் ஆண்டு வரை, இத் திட்டத்தின்கீழ், ரூ. 422 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில், ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியாலும், பொதுப்பணித் துறையினாலும் நிறைவேற்றப்படும் திட்டங்கள் முடிவடையும் போது தாழ்வான பகுதிகளில் வெள்ள அபாயத்தை எதிர் நோக்கி வாழும் பெரும்பாலான குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இணைப்பு நான்கில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் இந்நாள் வரையிலான சாதனைகளையும் மற்றும் 1986-87 ஆம் ஆண்டின் இலக்குகளையும் விளக்குகின்றது.

### கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்.

மாநிலம் முழுவதிலும் உள்ள 104 வட்ட மற்றும் கோட்ட அளவிலான பிரதம கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் வாயிலாக இம் மாநிலத்தில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. பிரதான சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், இச்சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது. 1—4—1983 முதல் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டித்தரப்படும் குடியிருப்பு ஒன்றின் உயர்ந்தபட்ச கட்டுமான மதிப்பு ரூ. 6,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் உயர்ந்தபட்ச கட்டுமான மதிப்பு பின்வரும் முறையில் அளிக்கப்படுகிறது :—

| | ஆதி திராவிடர்கள். (ரூபாய்.) | மற்றவர்கள். (ரூபாய்.) |
|---|---|---|
| 1. கடன் | 3,500 | 4,500 |
| 2. மூலதனத்தில் மானியம் | 1,000 | — |
| 3. பயன்பெறுவோர் செலுத்தும் தொகை. | 1,500 | 1,500 |
| | 6,000 | 6,000 |

[1986 ஏப்ரல் 18

மலைப் பகுதிகளிலும் இராமேஸ்வரம் தீவிலும் கட்டப்படும் வீடுகளின் உயர்ந்தபட்ச கட்டுமான மதிப்பு ரூ. 7,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தினால் மொத்தம் ரூ. 5,440 இலட்சம் கடனாக வழங்கப்பட்டு 1,86,523 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. இதில் 1,53,453 வீடுகள் ஆதி திராவிடர்களுக்காகவும் 33,070 வீடுகள் மற்றவர்களுக்காகவும் கட்டப் பட்டுள்ளன.

1984-85 ஆம் ஆண்டுவரை அரசு, கிராமப்புற வீட்டுவசதி சங்கங்கள் மூலமாக ஆதி திராவிடர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கும் கூட வீடு கட்டுவதற்குப் பண உதவி வழங்கி வந்தது. 1985-86 முதல் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம், சமூகநலத்துறையும் கிராமப்புற மேம்பாட்டுத் துறையும் செயல்படுத்தி வரும் வேறு திட்டங்களின்கீழ் செயல் படுத்தப்படுகிறது. எனவே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் வாயிலாக ஆதி திராவிடர் அல்லாத பிறருக்கு மட்டும் 25,000 வீடுகள் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 1985-86 ஆம் ஆண்டில் ஏற்கனவே முடிக்கப்படாமல் உள்ள 8,680 வீடுகள் தவிர மேலும் 5,000 வீடுகள் கட்ட உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது.

1985-86 ஆம் நிதி ஆண்டில் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை ரூ. 536.05 இலட்சம் மாநில தலைமைக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இக்காலக் கட்டத்தில் 11,359 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ் மூலதன மற்றும் வட்டி மான்யம் வழங்குவதற்கென 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 300 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

1986-87 ஆம் ஆண்டில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 5,000 வீடுகள் கட்டப்படும். இத்துடன், ஆயுள் காப்புறுதிக் கழகம் மற்றும் பொது காப்புறுதிக் கழகம் வழங்கும் ரூபாய் 300 இலட்சம் கடன் உதவியை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு அளித்து அதன் வாயிலாக மதுரை, கோயம்பத்தூர் மற்றும் திருச்சி நகரங்களின் புற எல்லைப் பகுதிகளில் 3,000 வீடுகள் கட்ட அரசு உத்தேசித்துள்ளது. இதன்கீழ் தனி நபர்களின் உச்சவரம்புத் தொகை ரூ. 10,000-மாக உயர்த்தப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 18]

## நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் நகர்ப்புறங்களிலுள்ள கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கும் கூட நிதி உதவி அளித்து வருகிறது. இதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் ஆயுள் காப்புறுதிக் கழகத்திட மிருந்து நிதி உதவி பெறுகிறது. பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருமான பிரிவினர் மற்றும் உயர்ந்த வருமான பிரிவினர் ஆகியோருக்கு ரூ. 10,000 முதல் ரூ. 80,000 வரை கடனாக வழங்குகின்றன. இத் தலைமைச் சங்கம் துவக்கப்பட்ட நாள் தொடங்கி பிரதான வீட்டுவசதி சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கியதன் வாயிலாக 1984-85 வரை 59,490 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்காக, தலைமைச் சங்கம் பிரதான சங்கங்களுக்கு ரூ. 16,671.35 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. 1985-86 ஆம் நிதி ஆண்டில் 1986 பிப்ரவரி மாதம் முடிய தலைமைச் சங்கம் பிரதான சங்கங்களுக்கு ரூபாய் 1,848.32 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. மேலும் 4,040 வீடுகள் கட்ட நிதியுதவி அளித்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டு நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்திற்கு ஆயுள் காப்புறுதிக் கழகம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு ரூபாய் 13 கோடி கடனுதவி வழங்கி யுள்ளது.

## அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட முன் பணம்.

அரசு ஊழியர்களுக்கு மனை வாங்கி வீடு கட்ட, முன்னரே வாங்கியுள்ள சொந்த மனையில் வீடு கட்ட, கட்டிய வீடு வாங்க, மற்றும் வீட்டை விரிவு படுத்த/மேம்படுத்த முன் பணம் வழங்கப்படுகிறது.

வீடுகட்ட முன் பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் மாநில அரசு ஊழியர் களுக்கு தற்போது பெருமக் கடன் ரூ. 1,75,000 வழங்கப்படுகிறது. இந்த உச்சவரம்புக்குட்பட்டு, வீட்டை விரிவுபடுத்த மற்றும் மேம்படுத்த ரூ. 75,000 வரை கடன் பெறலாம்.

1985-86 ஆம் ஆண்டில் வீடு கட்ட முன் பணம் வழங்க ரூ. 1,280 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1986-87 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் வீடு கட்ட முன்பணம் வழங்க ரூ. 1,290 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 18

## வீடு கட்ட முன்பணம்—குடும்ப நலநிதி சிறப்புத் திட்டம்.

வீடு கட்ட முன்பணம் வழங்க விதிகளின்படி, அரசு ஊழியர் வீடு கட்டுவதற்கு முன்பணம் பெற்று அக்கடனை முழுதும் திரும்ப செலுத்து வதற்கு முன் அகால மரணமேற்பட்டு இறக்க நேரிட்டால் அவர் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் பாக்கித் தொகையுடன் வட்டியும் சேர்த்து அரசுக்கு அவரது குடும்பத்தினர் செலுத்த வேண்டும். மேற்கண்ட விதியினை நடைமுறையில் அமுல்படுத்துவதால் பல குடும்பங்கள் மிகவும் அவதி யுறுகின்றன. அவ்வாறு அவதியுறும் குடும்பங்களின் அவல நிலையைப் போக்க முன்பணம் பெற்ற அரசு ஊழியர்களுக்கென ஒரு தனி குடும்ப நலத்திட்டத்தை அரசு இப்போது ஆரம்பித்திருக்கிறது. வீடு கட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர்களும், ஓய்வு பெறுவதற்கு முன்பு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணிக் காலம் உள்ளவர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு அவர்கள் மாதந்தோறும் செலுத்தும் கடன் தொகையில் ஒரு தனி விழுக்காடு தொகையினை மேற்கண்ட குடும்பநலநிதித் திட்டத்திற்கு தவணையாக செலுத்த வேண்டும். இத்திட்டம், வீடு கட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர் அகால மரணம் ஏற்பட்டு இறக்க நேரிட்டால் அவர் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் பாக்கித் தொகையை வட்டியுடன் தள்ளுபடி செய்ய வழிவகை செய்கிறது. இதற்காகும் செலவினை அரசு ஊழியர் மாதந்தோறும் செலுத்தும் தொகையிலிருந்து ஈடுசெய்யப்படும். இத்திட்டத்தை 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து அமுல்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கான சிறப்பு வீட்டுவசதித் திட்டம்.

மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்காக பெரும் வீட்டுவசதித் திட்டம் ஒன்றைத் துவங்குவதுபற்றி அரசு அண்மையில் அறிவித்துள்ளது. வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ள அனைத்து குடும்பங் களும், அவர்களுக்கென்று சொந்தமாக ஒரு குடியிருப்பை உண்டாக்கிக் கொள்வதற்கு, அரசு உதவி புரிவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இப்பெரும் திட்டத்திற்கு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (HUDCO) வீட்டுவசதி வளர்ச்சி நிதிக் கழகம் (HDFC), மற்றும் வணிக வங்கிகள் (Commercial Banks) போன்ற நிறுவனங்களின் நிதியுதவி பெருமளவில் தேவைப்படும். இதுவரை



1986 ஏப்ரல் 18]

பெற்றதைவிட அதிக அளவில் கணிசமான ஒதுக்கீட்டினைப் பெற்று இத்திட்டத்தை செவ்வனே செயல்படுத்த இந்நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் பல்வேறு முகமைகள் மற்றும் அரசுத் துறைகளால் செயல் படுத்தப்படும். மேலும் ஆதிதிராவிடர், மீனவர் மற்றும் நெசவாளர் போன்ற குறிப்பிட்ட வகையினருக்காக சம்மந்தப்பட்ட துறைகளால் திட்டப்பட்டு செயல்படுத்தப்படும். குறிப்பிட்ட திட்டங்கள் தவிர, வீட்டுவசதி சிக்கலை நான்கு விரிவான பிரிவுகளில் சமாளிப்பதே இத்திட்டத்தின் பரந்த வினை முறைத்திறமாகும் (broad strategy)

### (அ) குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் தற்போதிருக்கும் குடிசைப்பகுதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டு சுற்றுப்புற சூழ்நிலையை மேம்படுத்தும் பொருட்டு கழிவுநீர், சாலைகள் மற்றும் பொது குடிநீர் வசதி போன்ற வசதிகள் செய்து கொடுக்க முதலீடு செய்யப்படும். வீட்டுமனைகள் வரையறுக்கப்பட்டு குடிசைவாசிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்படும். அம்மனைகளில் வீடுகளைக் கட்டிக் கொள் வதற்காக வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கப்படும்.

### (ஆ) நகர்ப்புறங்களில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு வீடுகள் :

நகராட்சி குடிசைப்பகுதிகளில் வசிப்பவர்கள் தவிர பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த பல குடும்பங்கள் வேறெங்கிலும் வாடகை குடியிருப்பு களில் வசித்துவரலாம். அத்தகைய நபர்களுக்கு வீட்டு மனைகளாக வழங்கத்தக்க நிலங்களை தேர்ந்தெடுத்தல் அரசின் குறிக்கோளாகும். இந்த மனைகளை வீட்டுவசதி வாரியம் அல்லது கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மேம்படுத்தலாம். வீட்டுமனை வழங்கப்பட்டபின், அவர்கள் வீடு கட்டிக் கொள்ள கடனுதவி நீட்டிக்கப்படும்.

### (இ) பெரிய நகரங்களின் புறநகர்ப்பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு வீட்டுவசதி:

பெரிய நகரங்களின் புறநகர்ப்பகுதிகளில் இருக்கும் பல ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வீடுகள் கட்ட நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலமாக கடனுதவி அளிப்பதும் அரசின் நோக்கமாகும்.

### கிராமிய வீட்டுவசதி

மேலே குறிப்பிட்டவைகளைத் தவிர வீட்டுவசதி அளிப்பதில் பெரும் பகுதி கிராமப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும். கிராமப் பகுதிகளில் வேறுவகையான பிரிவினருக்கு உதவி அளிக்க வேண்டி வரும். வறுமை கோட்டிற்குக் கீழே உள்ள வீட்டுமனை இல்லாத ஏழை மக்களுக்கு தக்க நிலங்களை தேர்ந்தெடுத்து தேவை இருப்பின் கையகப்படுத்தி அவர்களுக்கு வீட்டுமனைகளாக வழங்குதல் அரசின் முதல் நோக்கமாகும். கிராமப்புறங்களில் வீட்டுமனை வழங்கப்பட்டு நிதியின்மையினால் வீடுகட்டமுடியாத நிலையில் பலர் உள்ளனர். அவர்கள் வீடு கட்டிக் கொள்ள வசதி செய்து தரும் வகையில் அவர்களுக்கென்று மானியம் மற்றும் கடன் அடிப்படையில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். மற்றும் தொழில் நுட்ப அறிவுரை, கட்டுமானப் பணியை ஏற்க உள்ளூர் தச்சர்கள் மற்றும் கொத்தனார்கள் ஆகியோருக்கு பயிற்சி மற்றும் வீடுகட்டத் தேவையான கட்டிடப் பொருட்கள் விநியோகம் முதலிய உதவிகளை அரசு அளிக்கும். மற்றும் கிராமப் பகுதிகளில் வீட்டு மனையும் அதில் பெயருக்கு வீடு என்று உள்ளவர்களுக்கு அரசு உதவியளிக்க வேண்டிவரும். இத்தகைய வீடுகள் பெரும்பாலும், மிகவும் மோசமான நிலையில் இருக்கும். இத்தகைய வீடுகளை மேம்படுத்திக் கொள்ள அவர்களுக்கு கடன் மற்றும் மானியம் அடிப்படையில் உதவி நீட்டித்தல் அவசியமாகும்.

இத்திட்டங்களில் செயல்முறை, செயல்படுத்தும் முகமைகள் மற்றும் பல்வேறு திட்டங்களுக்கு எம்மாதிரியான நிதியுதவி அளிக்கப்பட வேண்டும் என்பவை வகுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் செவ்வனே செயல்பட 1986-87 ஆம் ஆண்டிலேயே முழு முயற்சிகள் எடுக்கப்படும்.

### நகர்ப்புற வளர்ச்சி.

### தமிழ் நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி :

மாநிலத்தில் உள்ள 48 மில்லியன் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியான 16 மில்லியன் மக்கள் நகர்ப்பகுதிகளில் வாழ்கின்றனர். இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ் நாட்டில் தான் மிக அதிகமாக 434 நகர மையங்கள் உள்ளன. இவைகள் 34 நகரக் கூட்டுத் தொகுதிகளாகவும், மற்றும் 211 நகர்ப் பகுதிகளாகவும் உள்ளன. இவைகளில் 21 நகரங்கள் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. சென்னைப் பெருநகரம் 3.4 மில்லியன் மக்கள் தொகையும், ஏனைய நான்கு பெருநகரங்களான மதுரை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் சேலம் 2.9 மில்லியன் மக்கள் தொகையினை கொண்டுள்ளன. இவ்வைந்து பெருநகரங்களில்,



நகரப் பகுதியில் வாழும் மக்களில் 40 சதவீதம் வாழ்கின்றனர். எனவே இவ்வைந்து பெருநகரங்களில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு அடிப்படை வசதிகளை செய்திட தனிக்கவனம் செலுத்தி திட்டமிட வேண்டியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதின் மூலம் இவ்வைந்து பெரு நகரங்களில் பெருகிவரும் மக்கள் தொகையினை கட்டுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராமப்புறங்களிலிருந்து பெரு நகரங்களை நோக்கி வரும் மக்களை கட்டுப்படுத்தி மாநிலம் முழுவதும் பரவலான வளர்ச்சிக்கு வழிகோலும்.

மண்டல வளர்ச்சி முனைகள் மற்றும் வளர்ச்சி மையங்களை தேர்ந்தெடுத்து ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சிக் கொள்கையை உருவாக்கி மேற்படி நகர்ப்புற மையங்கள் வளர்ச்சியுறும் வகையில் திட்டமிடுதலும், முதலீடு செய்தலும் வேண்டும். இதற்காக மண்டலங்களளவிலும், நகரங்களளவிலும் பல்வேறு வகையான திட்டங்களை உருவாக்குதல் இன்றியமையாததாகிறது. இதே சமயத்தில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் பெருகி வரும் மக்கள் தொகையின் அடிப்படை வசதிகளின் வளர்ச்சிக்கு நிதியுதவியும் செய்வது அவசியமாகும். மேலும் நகரங்களில் வளர்ச்சிகளை ஒழுங்குபடுத்த வேண்டி கட்டுப்பாட்டு முறைகளை நிர்ணயித்து தக்க விதிகளின் மூலம் அவைகளை அமுலாக்குவதும் அவசியமாகிறது. சென்னைப் பெருநகரத்தைப் பொறுத்தவரை மேற்படி கடமைகளை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும், மாநிலத்தின் இதர பகுதிகளுக்கு நகர் ஊரமைப்பு இயக்ககமும் செய்து வருகின்றன.

### நகர்—ஊரமைப்பு இயக்ககம் (கொள்கையும் நோக்கமும்).

நகரங்களின் திட்டமிட்ட சீரான வளர்ச்சி, தூய்மை மற்றும் சுகாதாரமான சூழ்நிலையில் மக்கள் வாழ வகை செய்யும் நோக்கத்துடன் மாநிலத்திலுள்ள திட்டக் குழுமங்கள் நகர ஊரமைப்புச் சட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து அமுலாக்குவதற்கு வேண்டிய உதவிகள் புரிவதும், 1971 ஆம் ஆண்டின் நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தை நிர்வகிப்பதும், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் கொள்கையும் நோக்கமுமாகும். இது தவிர, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், கிராமச் சட்டம் மற்றும் பொது சுகாதார சட்டத்தில் உள்ளபடி, தனியார் நிலங்களை வீடு மற்றும் தொழிற்சாலை உபயோகங்களுக்காக அபிவிருத்தி செய்வதற்குரிய தேவையான கட்டுப்பாடுகள், குடியிருப்பு பகுதிகள் தொழிற்சாலைக்கான பகுதிகள் ஆகியவற்றை நிர்ணயிப்பது, கட்டிட விதிகளின் மூலம் கட்டிடங்களை ஒழுங்கு படுத்தல் போன்ற அம்சங்களை நிர்வகிக்கும் பொறுப்பும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பொறுப்பிலுள்ளது.

### குறுகிய மற்றும் நீண்டகால செயல் திட்டங்கள் :

மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்து அமுலாக்கு வதின் மூலம், 1971 ஆம் ஆண்டு நகர ஊரமைப்புச் சட்டத்தின் பெரும் நோக்கங்களை நிறைவேற்றலாம். அறிவிக்கப்பட்ட மண்டல திட்டப் பகுதி களுக்கு மண்டல திட்டத்தில் வளர்ச்சி மையங்களின் வரிசை, (Hierarchy of Settlements) ) பெரிய போக்குவரத்து தடங்கள், தொழில் மற்றும் விவசாயத்திற்கு உகந்த பகுதிகள் மற்றும் ஏனைய அபிவிருத்தி இனங்கள் இடம் பெறும். உள்ளூர் திட்டப்பகுதிகளுக்கு தயாரிக்கப்படும் முழுமைத் திட்டங்களில் நிலங்களை எவ்வாறு உபயோகிப்பது, பல்வேறு வகைப்பட்ட உபயோகங்களுக்கு நில ஒதுக்கீடு செய்தல், சீரான முறையில் போக்குவரத்து தடங்கள் அமைத்தல் மற்றும் விரிவான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்க வேண்டிய பகுதிகள் ஆகியன இடம் பெறும். தொழில் மற்றும் சுற்றுலா வளர்ச்சியடைந்து வரும் பகுதிகளான ஒசூர், மாமல்லபுரம், பல்கலை நகர், தாவல்பட்டு, குறிச்சி போன்ற இடங்களுக்கு புதுநகர் அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நகரங்களின் அபிவிருத்தியடைந்து வரும் பகுதிகளுக்கும், அண்மையில் அபிவிருத்தியடைய சாத்தியக்கூறுகள் உள்ள குறிப்பிட்ட பகுதிகளுக்கும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இத்திட்டம் விரிவான முறையில் குடியிருப்புப் பகுதிகள், சாலைகள், விளையாட்டு மைதானங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் இதர உபயோகங்களுக்கான ஒதுக் கீடுகளை விவரிக்கும்.

### முழுமைத் திட்டங்கள் :

முழுமைத் திட்டங்கள், நகரம் மற்றும் அதன் அருகாமையிலுள்ள பகுதி களில் சீரான முறையில் நகர நிலங்களை பயன்படுத்தும் வகையில் பொது வான நில உபயோக கொள்கையை உடையது. இத்திட்டம் நகரத்தில் குடியிருப்புப் பகுதியை விரிவாக்குதல், கடை, தொழில்கள் மற்றும் ஏனைய உபயோகங்களுக்காக பொருத்தமான இடங்களை ஒதுக்கீடு செய்வதுடன் மிகவும் உயர்ந்த விவசாய நிலங்கள் நகர அபிவிருத்தியால் பாதிக்கப்படாமலி ருக்கவும் உறுதி செய்கின்றது.

இம் முழுமைத் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்தும்போது அவை நகரத்தின் பிற்கால வளர்ச்சி ஒழுங்கான முறையில் அமைய வழிகாட்டியாக அமைவதோடு, வேகமான நகர அபிவிருத்திகளால் காணப்படும் போக்கு வரத்து நெரிசல், ஒருபுற வளர்ச்சி ஆகியவைகளை தவிர்க்க உதவும்.





இதுவரையில் தயாரிக்கப்பட்டு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள
முழுமைத் திட்டங்கள் ஒரு பொதுவான நில உபயோக திட்டமாக மட்டுமே
உள்ளன. மேற்கொண்டு அவற்றின் அடிப்படையில் இரண்டாம் கட்ட மற்றும்
மூன்றாம் கட்ட முழுமைத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது.
முழுமைத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, பூங்காக்கள் மற்றும் விளை
யாட்டுத் திடல்கள், நூலகங்கள், அங்காடிகள் போன்றவற்றை அமைப்பதற்
கான திட்டம் தயாரித்தல் மற்றும் முழுமைத் திட்டத்தின் மூன்றாம் கட்டப்
பணியாக, போக்குவரத்து வசதிகள் அமைத்தல், அரசு அலுவலகங்கள்
மற்றும் குடியிருப்புகளுக்கு நிலங்களை தேர்வு செய்தல், குடிநீர் மற்றும்
வடிகால்கள் அமைப்பதற்கான திட்டங்கள் தயாரித்தல் போன்றவை மேற்
கொள்ளப்படும். இவ்வாறு செயற்திட்டங்களை தீட்டுவது, இத்திட்டங்களை
செயல் படுத்தவிருக்கும் நிறுவனங்களுக்கு நில கையெடுப்பு செய்தல், கட்டு
மான பணிகள் குழாய் மற்றும் வடிகால்கள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு
உதவ வகை செய்யும். முதலில் இராமநாதபுரம் நகரத்தின் முழுமைத்
திட்டத்தின்கீழ் மேற்கண்ட இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட செயல்
திட்டங்கள் மேற்கொள்ளப்படும். தமிழ் நாட்டில் 112 உள்ளூர் திட்டப் பகுதி
களும், 8 புதுநகர் பகுதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டு
கால இறுதிவரை 76 உள்ளூர் திட்டப் பகுதிகளுக்கு முழுமைத் திட்டங்கள்
தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள உள்ளூர்
திட்டப் பகுதிகளுக்கும் 1986-87 ஆம் ஆண்டு கால கட்டத்தில் முழுமைத்
திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்படும்.

### விரிவு அபிவிருத்தித் திட்டம்.

நகர் ஊரமைப்பு இயக்குநரால் ஒப்புதல் ஒப்பளிக்கப்பட்டு 251 விரிவு
வளர்ச்சித் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல் படுத்தப்பட்டு
வருகின்றன. உள்ளூர் திட்டக்குழுமங்கள் போதிய வருவாயை ஈட்டிக்
கொள்ள முடியாத நிலையில் இருப்பதால் இத்திட்டங்களைச் செயல்படுத்து
வதில் தேக்க நிலை உள்ளது. மேலும் 919 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்
தொடக்க நிலையில், அதாவது தற்போதைய நில உபயோகத்தைத்
தெரிவிக்கும் வரை படம் எண் 1 தயாரித்தல் நிலையில், உள்ளன.
1986-87 ஆம் ஆண்டில் 20 விரிவு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒப்புதலும்,
20 திட்டங்களுக்கு முடிவான அங்கீகாரமும் அளிக்கப்படும்.

[1986 ஏப்ரல் 18

**மண்டலத் திட்டங்கள் :**

மண்டலத் திட்டம் தயாரிக்க வேண்டி, இம்மாநிலம் 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 8 மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1983 ஆம் ஆண்டில், மாவட்ட அளவில் மண்டலத்திட்டம் தயாரிக்க அரசு முடிவு எடுத் துள்ளது. அண்மையில் நிர்வாகப் பணியில் முன்னேற்றம் ஏற்பட சிறிய மாவட்டங்களை உருவாக்க அரசு முடிவு எடுத்து, மாவட்டங்களைப் பிரித்து வருவதுடன் மேற்கொண்டும் சில மாவட்டங்களை பிரிக்க இருப்பதால், மாவட்ட அளவிலான மண்டலத் திட்டங்களைத் தயாரிப்பது உசிதமாகுமா அல்லது பல மாவட்டங்களைக் கொண்ட ஒரு மண்டலத் தொகுதிக்கு மண்டலத் திட்டமே உகந்தது என்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருந்து வரு கிறது. 1986-87 ஆம் ஆண்டில் இதற்கு ஒரு முடிவு காணப்படும். அம்முடி வின் அடிப்படையில், மண்டலத் திட்ட குழுமங்கள் நிறுவப்பட்டு மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதற்கட்டமாக பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மண்டலத் திட்டம் தயாரிக்கப்படும். இதற்கான ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. நிலப் பயன் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை பின்னணியாகக் கொண்டு, மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

**புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் :**

ஓசூர் நகரத்திற்கு புதுநகர் வளர்ச்சித் திட்டம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டது. 1985-86 ஆம் ஆண்டு காலத்தில் மாமல்லபுரம், மற்றும் மதுரை பல்கலைநகர் ஆகியவற்றிற்கு புதுநகர் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டது. இத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் குறிச்சி, நாவல்பட்டு, ஆகிய நகரங்களுக்கு புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப் படும்.

**ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம்**

**மத்திய அரசின் உதவியுடன் செயற்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம்.**

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் நகர்ப்புறங்களில் கிடைக்கும் அனைத்து வசதிகளையும், கிராமப் புற மக்களுக்கு அவ்வசதிகள் எளிதாகக் கிட்டும் வகையில் அமைக்க வழிசெய்யும் கொள்கைகளை அரசு இதுகாறும் பின்பற்றி வருகிறது. இக்கொள்கையின் அடிப்படையில் அரசு, ஆறாவது



1986 ஏப்ரல் 18]

திட்டகாலத்தில் ஒரு லட்சம் மக்கட் தொகைக்கு குறைவாயுள்ள 28 சிறிய
மற்றும் நடுத்தர நகரங்களைத் தேர்வு செய்து, அவற்றில் மத்திய அரசின்
நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை செயலாற்றி
வருகிறது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நகரங்
களில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த
ஒவ்வொரு நகரத்திற்கும் தலா அதிகபட்சக் கடன் தொகையாக ரூ. 80.00
இலட்சம் என நிர்ணயித்து இதனை மத்திய மற்றும் மாநில அரசுகள்
சமபங்காக வழங்குகின்றன. இத் தகவல்கள் அடங்கிய பட்டியல்
இணைப்பு V ல் இணைக்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மத்திய மாநில அரசுகள்
இணைந்து ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பேருந்து
நிலையம் கட்டுதல், கடைப் பகுதிகள், அங்காடித் தொகுதிகள், குறைந்த
செலவிலான துப்புரவு வசதிகள், வசதியுடன் கூடிய மனைப் பிரிவுகள் போன்ற
வற்றிற்காக, ரூ. 1,789.95 லட்சம் வழங்கியுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில்
மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் 313.44 லட்சம் மேலும் கடன் வழங்கி
மீதமுள்ள பணிகளை நிறைவேற்ற நிதியுதவி செய்தன. ஒப்புதல் அளிக்கப்
பட்ட 171 திட்டப் பணிகளில், 88 பணிகள் முடிக்கப் பெற்று பொது
உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டு விட்டன. மீதமுள்ள திட்டப் பணி
களில் 23 திட்டப் பணிகள் இவ்வாண்டு மார்ச்சு மாதம் இறுதிக்குள் முடிக்கப்
பெற்று விடும். இவை போக மீதமுள்ள பணிகள் 1986-87 ஆம் ஆண்டில்
முடிக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசின் உதவியுடன் கூடிய சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின்
ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தித் திட்டம், ஏழாவது ஐந்தாண்டு திட்டக்
காலத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். குற்றாலம்-தென்காசித்
தொகுதி, திருமங்கலம் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய மூன்று நகரங்களில்
இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டப் பணிகளுக்கான
திட்ட அறிக்கையை அரசு மத்திய அரசிற்கு அனுப்பி வைத்துள்ளது.
இன்னும் சில நகரங்களைத் தேர்வு செய்யும் பணியும் தீவிரமாக மேற்
கொள்ளப்பட்டு வருகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இத்
திட்டத்திற்கு நிதியுதவி வழங்குவதில் புதிய வழிமுறைகள் அறிவிக்கப்
பட்டுள்ளன. இதன்படி ஒவ்வொரு நகரத்திற்கும் மாநில அரசின் சமபங்கு
உதவியுடன்சேர்த்து ரூ. 120 லட்சம் (மத்திய அரசு ரூ. 60 லட்சம், மாநில
அரசு ரூ. 60 லட்சம்) கடன்தொகை வழங்கப்பெறும். இத்தொகையில்,

ரூ. 12 லட்சம் குறிப்பாக குறைந்த செலவிலான துப்புரவு வசதிகளுக்காக ஒதுக்கப்படும். மாநில அரசு விரும்பினால் மேற்படி இச்செலவினத்திற்கு மேலும் 16 லட்சம் ரூபாயைச் செலவிடலாம். 1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டப் பணியினை மேற்கொள்ள மொத்தம் ரூ. 400 லட்சம் கோரப் பட்டுள்ளது.

**மாநில அரசின் ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தித் திட்டம் :**

மாநில நகர்-ஊரமைப்பு வளர்ச்சி நிதிமூலம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வருமானம் தரும் ஆக்கப் பணிகளை மேற்கொள்ள மாநில அரசு தனது உதவிகளை தொடர்ந்து அளிக்கும். இத்திட்டத்தின்கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் ரூ. 900 லட்சம் மதிப்பீட்டில் 172 திட்டப்பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 31-3-1985 வரை ரூ. 744.28 லட்சம் பல்வேறு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மேற்படி திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக வழங்கப் பெற்றுள்ளது. 172 திட்டப் பணிகளில் 131 பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் உபயோகத்திற்கு கொண்டு வரப் பெற்றுள்ளன. 5 திட்டப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. மீதமுள்ள 36 திட்டப் பணிகள் 1986-87 ஆம் ஆண்டில் முடிக்கப் பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்தின் கீழ் திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ. 600 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வளர்ச்சி வாய்ப்பினை உள்ளடக்கியிருப்பதால், பேரூராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளது. 600-க்கு மேற்பட்ட பேரூராட்சிகள் தமிழ்நாட்டில் உள்ளன. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 32 பேரூராட்சிகளில் இத்திட்டங்களை நிறை வேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ. 163.00 லட்சம் கோரப்பட்டுள்ளது.

**போக்குவரவு தொடர்பான ஆய்வுகள் :**

இம்மாநிலத்தில் மக்கள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக சிறந்த போக்குவரத்து வசதிகள் இருந்தபோதிலும், எதிர்காலத்தில் மக்கள் பெருக்கத்தினை கருத்திற்கொண்டு தற்போது போக்குவரத்து அமைப்பில் உள்ள குறைகளையும் இடர்பாடுகளையும் ஆராய்வதின் மூலம் போக்குவரத்து வசதிகளை இன்னும் சிறப்பாக அமைத்துக்கொள்ள இயலும். இதற்காக போக்குவரத்து தேவைகள், இன்றைய போக்குவரத்து குறைபாடுகள் ஆகியவற்றை உன்னிப்பாக ஆராய வேண்டியுள்ளது. இவ்வாய்வுகளின் அடிப் படையில் உற்பத்தி மையங்களிலிருந்து விற்பனை மையங்களுக்கு பொருட்





களை கொண்டு செல்ல சாலைகளை அபிவிருத்தி செய்தல், தொலைதூர கிராமப் பகுதிகளை பணிமையங்கள், நிர்வாக மையங்கள் இவற்றுடன் இணைத்தல், அகலப்பாதைகளை அமைத்தல் மற்றும் வாகன-நிறுத்த மையங்களை அமைத்தல் ஆகியவற்றிற்காக விரிவான திட்டங்கள் மேற் கொள்ளப்பட உள்ளது. பேருந்துகள் மற்றும் பாரஉந்துகள் வசதிக்காக நெடுஞ்சாலைகளில் ஆங்காங்கே அனைத்து வசதிகளுடன் கூடிய தங்கும் மையங்களும் வாகனநிறுத்துமிடங்களும் தேவை என்பது தற்போது உணரப்படு கிறது. இதற்காக தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுக்கும் பணி மேற்கொள்ளப் பட்டு வருகிறது. 1986-87 ஆம் ஆண்டில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப் படும்.

**வான்வழி நிழற்படமும், நில அமைப்புப் பிம்பமும் :**

வான்வழி நிழற்படம் மற்றும் தொலைகோள் மூலமாக நில அமைப்பு பிம்பம் போன்ற நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி நில பயன்பாட்டு வரைப்படங்களை தயாரிக்கும் பணி ஏற்கெனவே அறிமுகமாகி உள்ளது. (தமிழ் நாட்டில் அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள) தொலை உணர்வு மையத்தில் உள்ள நிபுணத்துவம், மற்றும் வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு மேற்படி தொழில் நுட்பத்தை மேலும் ஆக்கப்பூர்வமாகப் பயன் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நிதி கோரப்பட்டுள்ளது.

**உள்ளூர் திட்ட கூட்டுக் குழுமங்கள் :**

1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் கீழ், தமிழ் நாடு அரசு 14 கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்களை அமைத்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் கூட்டுக் குழுமத்திற்கு திட்டப் பணிகளை மேற்கொள்ள வழிசெய்யும் வகையில் தொழில் நுட்ப பணியாளர் களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் :**

சென்னைப் பெருநகர் என்பது, சென்னை மாநகரம் அதைச் சுற்றியுள்ள 4 நகராட்சிகள், 6 நகரியங்கள், 21 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் கொண்டதாகும். இதன் பரப்பளவு 1,167 சதுர கி.மீ. ஆகும். இப்பகுதியில் நீண்ட கால திட்ட அமைப்பு மற்றும் வளர்ச்சியின் பொறுப்பு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 இன் கீழ் உருவாக்கப்பட்ட சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 18

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முக்கிய கொள்கை குறிக் கோள்களாவன :—

1. சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதியின் அடிப்படை வசதிக்கான திட்டக் கட்டிட அமைப்புகளுக்கு திட்டமிடல் மற்றும் பொருளாதார வளர்ச்சி.

2. சென்னைப் பெருநகர் பகுதிக்கான முதன்மைத் திட்டத்தையும் மற்றும் முதன்மை திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளையும் செயல்படுத்தல்.

3. பெருநகர் வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்குதல், ஒருங் கிணைத்தல் மற்றும் செயல்படுத்தல்.

கொள்கை குறிக்கோள்களை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. உருவமைப்பு திட்டத்தில் (Structure Plan) ) உள்ள பரிந்துரை களைச் செயல்படுத்தல் ;

2. முதன்மைத் திட்டத்தைச் செயல்படுத்தல் மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளை நடைமுறைப்படுத்தல் அத்துடன் நில உபயோகப்பகுதிப் பிரிவு மற்றும் மறுபகுதிப் பிரிவு தொடர்ந்து செய்தல், விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல் அனுமதியில்லாத வளர்ச்சிகளை கட்டுப்படுத்தல் உள்ளாட்சிகள் வழங்கிய திட்ட அனுமதிகளை மறுபார்வையிடல் ;

3. வீட்டு வசதி, போக்குவரத்து மற்றும் போக்குவரத்து வசதிகளில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முக்கிய வளர்ச்சி நிதிக்கு உதவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டங்களுக்குத் திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் உருவாக்குதல் ;

4. வளர்ச்சிப்பணிக்கு முக்கியமாக உதவும் உருவமைப்பு மற்றும் முதன்மை திட்டங்கள் தற்போதைய நிலைக்கேற்றவாறு மாற்றியமைத்தல்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் திட்டமிடும் மற்றும் வரன்முறைப் படுத்தும் நிறுவனமாக ஏற்படுத்தப்பட்ட போதிலும், கோயம்பேடு மொத்த அங்காடி, சாத்தாங்காடு எஃகு மற்றும் இரும்பு சாமான் மொத்த அங்காடி மற்றும் பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் முடிவிடம் அமைத்தல் ஆகிய சில முக்கிய வளர்ச்சிப் பணிகளையும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் எடுத்துச் செய்யவேண்டிய அவசிய மேற்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 18]

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்களின் முக்கியாம்சங்கள் அவற்றின் முன்னேற்றங்கள் கீழ்க்கண்ட வாறு உள்ளன :—

**கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி :**

சென்னை நகரின் மத்திய வணிகப்பகுதியில் உள்ள நெரிசலைக் குறைப் பதும், திட்டமிடப்பட்ட நவநாகரிக கட்டிடங்களில் துணி, உணவு தானியம் மற்றும் அழுகும் பொருட்களின் மொத்த வியாபாரம் செய்ய அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பது நகருக்கு 15 கி.மீ. வெளியே கோயம் பேட்டில் உருவாக்க இருக்கும் மொத்த விற்பனை அங்காடித் திட்டத்தின் நோக்கமாகும். சுமார் 230 ஏக்கர் நிலத்தில் சுமார் 3,000 கடைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் தனியாருக்கு சொந்தமான 204 ஏக்கர் நிலத்தில் 160 ஏக்கர் இதுவரை கையகப்படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்ட வேலைகளாக மண் ஆய்வு, நிலத்தடி நீர் ஆய்வு முதலிய வேலைகள் முடிந்துள்ளன. சாலை அமைத்தல், வடிகால்கள் அமைத்தல், மண் நிரப்பும் பணி போன்ற வேலைகள் நடைப்பெற்றுக்கொண்டு இருக்கின்றன. இத்திட்டத்தின் மதிப்பீடாக ரூ. 432 இலட்சத்தில் இதுவரை ரூ. 333 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்தில் இருந்து அங்காடி வளாகத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்க குழாய்கள் போடும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

நடப்பு நிதி ஆண்டு 1986-87-ல் சாலை அமைத்தல், வடிகால், தண்ணீர் குழாய் அமைத்தல் போன்ற பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மேலும் முதற்கட்டமாக அழுகு பொருள் அங்காடிக்கான மேல் கட்டுமானப் பணி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அழுகு பொருள் அங்காடி அமைக்கும் பணி 1989 ஆம் ஆண்டு முடிவுற்குள் முடியும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஏழாவது திட்டத்தில் ரூ. 1,700 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டு 1986-87-ல் ரூ. 300 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**புறநகர் பேருந்து மற்றும் சுமை வண்டிகள் நிலையங்கள் :**

நகர்ப்புற வளர்ச்சிப் பணியின் ஒரு பகுதி நடவடிக்கையாக சென்னை மாநகரத்தின் வெளிபுறத்தில் பேருந்து மற்றும் சுமை வண்டி நிலையங்கள் அமைக்கவும் நகரின் மத்தியப்பகுதியில் தற்போதுள்ள முடிவிடங்களை மாற்றியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரத்தின் மத்தியப் பகுதியை நோக்கி குவியும் முக்கிய சாலைகளில் பேருந்து மற்றும் சுமை வண்டிகளின் போக்குவரத்தை தவிர்ப்பதின் மூலம் நகரத்தின் சாலை போக்கு வரத்தைக் கணிசமாகக் குறைக்க உதவும். இதற்காக முக்கிய சாலைகளில்

உள்வட்டச்சாலை சந்திக்கும் மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அம் மூன்று இடங்கள் ஆலந்தூர், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகும். இத்திட்டம் 205 ஏக்கர் பரப்பளவில் அமையும். ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து தேவையான வசதிகளை அந்த இடங்களுக்கு செய்து தருவதால் அவைகள் நவீன பேருந்து மற்றும் சுமை வண்டி நிலையங் களாக திறமையாக இயங்க முடியும். இந்த முடிவிடங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தி மேம்படுத்தும் பணி முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

இத்திட்டங்களுக்குத் தேவையான 205 ஏக்கர் நிலத்தில், 110 ஏக்கர் தனியார் நிலமாகும். 1986-87 ஆம் ஆண்டு 65 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோயம்பேட்டில் இத்திட்டத்திற்கான வளர்ச்சிப் பணி ஆரம்பமாகிவிட்டது. இத்திட்டங்கள் ஏழாவது திட்ட முடி விற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாவது திட்டத்தில் இத்திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 300 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ. 38 லட்சம் இத்திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. ரூ. 200 லட்சம் மதிப்புள்ள வளர்ச்சிப் பணிகள் 1986-87 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசிடமிருந்து ரூ. 50 லட்சம் 1986-87 ஆம் நிதி ஆண்டு வரவு செலவு திட்ட உதவியாக இருக்கும்.

எஃகு மற்றும் இரும்பு மொத்த அங்காடி—சாத்தங்காடு :

பெரும்பான்மையான இரும்பு மற்றும் எஃகு சாமான்கள் வியாபாரம் நெருக்கடியான தொழில் மிகுந்த மத்தியப்பகுதியில் அமைந்துள்ளதால் தடை யற்ற போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக உள்ளது. இத்திட்டம் SAIL, TISCO மற்றும் IISCO போன்ற இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி செய்யும் பெரிய நிறுவனங்களுக்கு நவீன கிடங்கு அமைக்க இத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியில் உள்ள இரும்பு மற்றும் எஃகு சாமான்கள் வியாபாரத்தை 750 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளில் மாற்றி அமைக்க வகை செய்யப்பட் டுள்ளது. இந்த அங்காடியின் மொத்த நிலப்பரப்பு 203 ஏக்கர். இத்திட்டம் நில அபிவிருத்தி பணியை மட்டும் கொண்டதாகும். சாலை அமைத்தல், வடிகால் அமைத்தல், தடுப்பு சுவர் அமைத்தல் ஆகிய வேலைகள் மேற் கொள்ளப்பட்டு 1986-87 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 1,830 இலட்சமாகும். இத்திட்டத்திற்கு ஏழாவது திட்டத்தில் ரூ. 300 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 77 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீடு உதவி ரூ. 15 இலட்சம். மேலும் கூடுதல் செலவு மற்ற வருவாய் மூலம் சரி செய்து கொள்ளப்படும்.



மணலி புதுநகரம் :

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மணலி தொழிற்பேட்டையில் பணி புரியும் பலதரப்பட்ட வருவாயுள்ள தொழிலாளர்களின் வீட்டுவசதி தேவையை பூர்த்தி செய்வதாகும். இதுவரையிலும் சாலை, குடிநீர் வடிகால் மின்சார வசதிகளுடன் 210 ஏக்கர் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் 65 ஏக்கர் நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டு அனைத்து வசதிகளுடன் கூடிய சுமார் 1,000 மனைகள் உருவாக்கப்படும். ஏழாவது திட்ட காலத்தில் 300 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்ய ரூ. 750 லட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது. 1985-86-ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 100 லட்சம் செலவழிக் கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1986-87-ம் ஆண்டிற்கு இத்திட்டச் செலவு ரூ. 125 லட்சமாக இருக்கும். இதில் அரசின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு உதவி ரூ. 100 இலட்சமாகும். இதுவரையில் ஆயத்த நிலை வீடுகள் 1760-ம் துப்புரவு வசதிகளுடன் கூடிய மனைகள் 580-ம் கட்டப்பட்டுள்ளன, 164 மனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

மறைமலைநகர் புதுநகரம் :

மறைமலைநகர் திட்டத்தை அபிவிருத்தி செய்வதின் முக்கிய நோக்கம் மற்ற பகுதிகளிலிருந்து சென்னை மாநகரத்திற்கு குடிபெயர்ந்து வருவதை தடுப்பதேயாகும். இத்திட்ட முடிவில் இந்நகரை 1 லட்சம் மக்கள் தொகை கொண்டதாகவும் அனைத்து வசதிகளுடன் வணிகம் மற்றும் தொழிற்சாலை மனைகள் இத்திட்டப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித்தரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது வரையில் 200 ஏக்கர் பரப்பளவு நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் 463-ம் துப்புரவு வசதிகளுடன் கூடிய மனைகள் 360-ம் 1,632 ஆயத்த நிலை வீடுகளும் பொதுமக்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. ஏற்கெனவே 456 ஏக்கர் நிலம் தொழிற் கூடங்களுக்காக அபிவிருத்தி செய்யப்பட்டு 36 தொழிற்கூட மனைகள் வழங்கப்பட்டுள்ளன. சிட்கோவின் 60 கூடங்களுடன் மேலும் 35 கூடங்களும் செயல்பட ஆரம்பித் துள்ளன. இத்திட்டத்திற்கு ஏழாவது திட்டத்தில் ரூ. 725 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 190 லட்சம் 1985-86-ம் ஆண்டு இத் திட்டத்திற்கு செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1986-87-ம் ஆண்டு ரூ. 100 லட்சம் மதிப்பீடுள்ள அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள அரசின் வரவு-செலவு திட்ட உதவி ரூ. 75 லட்சம்.

[1986 ஏப்ரல் 18

மணலி மற்றும் மறைமலைநகர் திட்டப்பகுதிகளில் வீடுகள் கட்டும் திட்டம் உத்தேசிக்கப்படவில்லை. இனிமேல் அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டு மனைகள் மட்டும் தனிபட்டவர்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்-1.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் மலிவு விலை வீடுகள் மூலம் ஏராளமான நகர்ப்புற ஏழைகளின் முன்னேற்றத்திற்கு தீர்வு காண்பதாகும். இத் திட்டம் 1977-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்ட மூல மதிப்பீடு ரூ. 46,82 லட்சம். அதில் உலக வங்கியின் நிதியுதவி 21,60 லட்சம் ஆகும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1-ல் கீழ்க்காணும் திட்டங்கள் உள்ளன :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் .. | 9,33 |
| 2. குடிசைப்பகுதி மேம்பாடு .. .. .. | 6:06 |
| 3. சிறு தொழில் வளர்ச்சி .. .. .. | 2,85 |
| 4. தாய்சேய் நலம் .. .. .. | 85 |
| 5. குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் .. .. | 1,125 |
| 6. சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாடு .. | 9,18 |
| 7. பேருந்து போக்குவரத்து .. .. | 6,88 |
| 8. தொழில் நுட்ப உதவி .. .. .. | 72 |
| மொத்தம் .. .. | 4,682 |

இத்திட்டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ. 5,780 லட்சம். இதில் ரூ. 5,042 லட்சம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்கள் 1982-ம் ஆண்டு இறுதிக்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம், கட்டுமானப் பொருட்கள் கிடைக்காமை, வேலையை முடிப்பதில்



1986 ஏப்ரல் 18]

தவறிய ஒப்பந்தக்காரர்கள் போன்ற காரணங்களால் ஒரு பணி மனைத்திட்டமும், உள்வட்டச்சாலையின் சிறுபகுதி (1.5 கி.மீ.) மற்றும் ஒரு இரயில்வே மேம்பாலம் முடிக்கப்பட முடியவில்லை. உலக வங்கியின் நிதி உதவியான ரூ. 2,160 லட்சமும் ஏற்கனவே பெறப்பட்டுவிட்டது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்கள் மாநில நிதியுதவி கொண்டு முடிக்கப்பெறும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித்திட்டம் 1 இன் கீழ் ஒவ்வொரு திட்டத்திற்கும் செலவழித்துள்ள விபரங்கள் இணைப்பு VI -ல் கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 2.

இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1 இல் ஏற்கனவே நகர்ப்புற பிரச்சனைக்கு மலிவு விலை மூலம் குறிப்பாக வீட்டுவசதியில் தீர்வு காணும் முயற்சியில் அபிவிருத்தி மற்றும் மேலும் விரிவாக்கம் செய்வதாகும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 7,390 லட்சம். இதில் உலக வங்கி 3,528 லட்சத்தை கடனாக வழங்கும். இத் திட்டம் 1981 ஏப்ரல் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் விவரங்கள் :—

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| அ. மனைகளும் பணிகளும்— | |
| பெரும்பாலும் பொருளாதார நிலையில் நலிந்த பிரிவினருக்கு 15,000 வீடுகள் (மொகப்பேர் நெற்குன்றம் ஆகிய இரண்டு இடங்களில் சுமார் 83,000 பேருக்கு). | 2,380 |
| ஆ. குடிசைப்பகுதி மேம்பாடு— | |
| சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1-இன் கீழ் 50,000 வீடுகளடங்கிய குடிசைப்பகுதிகளை மேம்படுத்தல் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1இன் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட குடிசைப் பகுதிகளில் உள்ள குடிசைகளுக்கு வீட்டு அபிவிருத்தி கடன் வழங்குதல். | 2,780 |
| இ. போக்குவரத்து— | |
| 555 பேருந்துகள் விடுதல், 6 கிலோமீட்டர் நீள உள்வட்டச் சாலை அமைத்தல், சென்னை —திருவள்ளூர் நெடுஞ்சாலையை மேம்படுத்தல். | 1,790 |

| | |
|---|---|
| ஈ. இடக்கழிவுப் பொருட்களைச் செவ்வையாகப் பயன்படுத்தல்— | |
| கழிவுப் பொருட்களை மேம்படுத்துவதற்குச் சாதனமும் கட்டிடப் பணிகளும். | 310 |
| 2. தொழில் நுட்ப உதவி— | |
| முன்னுரிமை வழங்க வேண்டியதைக் கண்டறியவும் நீண்டகால முதலீடுகள் செய்வது குறித்து திட்டம் வகுக்கவும், நிறுவனத்தை வலுப்படுத்தவும் பயிற்சி அளிக்கவும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பல்லவன் போக்குவரத்துக் கழகம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், சென்னை மாநகராட்சி ஆகியவற்றுக்கு தொழில் நுட்ப உதவியளித்தல் | 130 |
| மொத்தம் .. .. | 7,390 |

இத்திட்டத்தின் கீழ் பெற்றுள்ள முன்னேற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம்—**

இக்கொள்கை விளக்கக்குறிப்பில் முற்பகுதியில் ஏற்கனவே கூறப்பட்டுள்ள தன்னிறைவு வீட்டு மனைத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துடன் பள்ளிகள், மருத்துவநல நிலையங்கள், சந்தைகள் போன்ற வசதிகள் போதுமான எண்ணிக்கையிலும் தொழிற்சாலைகளும் உருவாக்கப்படவுள்ளன. தன்னிறைவு வீட்டுமனைப் பகுதிகளில் வேலை வாய்ப்பை பெருக்கும் அளவில் சிறு தொழில்கள் ஏற்படுத்த மனைகள் தொழிற் கூடங்கள், இயந்திரங்கள் வாங்க கடன் உதவி போன்ற பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ. 100 லட்சம் 1985-86 ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 200 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது மொகப்பேர் பகுதிகளில் இதை செயல்படுத்த ரூ. 478 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.





குடிசைப்பகுதி மேம்பாடு—

குடிசைப்பகுதி மேம்பாடுத் திட்டங்களில் அமைந்துள்ள முன்னேற்றங்கள் இக்கொள்கை குறிப்பில் முற்பகுதியில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளில் முன்னேற்றம் செய்தல், சுமார் 188 பாலர் பள்ளிகள் கட்ட திட்டமிடப்பட்டு, 175 பாலர் பள்ளிகள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. 4 பாலர் பள்ளிகள் கட்டப்பட்டு வருகின்றன.

பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் வாழும் பகுதிகளை வெள்ளப் பாதிப்பு மற்றும் கழிவு நீர் தொல்லைகளிலிருந்து பாதுகாக்க கழிவுநீர் வடிகால் வசதிகளும் மற்றும் கழிவுநீர் உபவடிகால்களும், 480 லட்சம் செலவில் அமைக்க அல்லது சீர்படுத்தப்பட உள்ளது. மாம்பலம், நந்தனம், விருகம்பாக்கம், சாலிகிராமம் மற்றும் அரும்பாக்கம் பகுதிகளில் உள்ள வடிகால்கள் சீர்படுத்தப்படுகின்றன. சென்னை மாநகராட்சிப் பகுதியிலுள்ள சுமார் 19,000 குடும்பங்கள் பயனடையும் அளவில் கழிவுநீர் வடிகால்கள் பழுது பார்த்தல், தூர் நீக்குதல் மற்றும் உபவடிகால்கள் அமைத்தல் போன்ற பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பணிகள் செயல்பட்டு வருகின்றன.

சாலை மற்றும் பேருந்து போக்குவரத்துகள்—

555 பேருந்துக்காக அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டு, மேற்கூடுகள் கட்டப்பட்டு சாலைகளில் விடப்பட்டுள்ளன. ஒரு பணிமனை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பாடி-லூக்காஸ் முதல் மாதவரம் வரை 6 கி.மீ. உள்வட்டச் சாலை அமைத்தல் மற்றும் 13.6 கி.மீ. சென்னை-திருவள்ளூர் சாலையை பாடி-லூகாஸ் முதல் ஆவடி வரை அபிவிருத்தி செய்தல், ஒரு இரயில் பாதை மீது மேம்பாலம் ஒன்று கட்டுதல் ஆகிய திட்டங்கள் போக்குவரத்து திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான வேலைகள் முன்னேறி வருகின்றன.

இடக்கழிவு பொருள்களை செவ்வகையாக கையாளுதல்—

இத்திட்டம் சென்னை மாநகராட்சி கழிவு பொருள்களை சேகரித்து ஆவண செய்தல், பணிகளுக்கு தேவையான கருவிகளையும், வாகனங்களையும் வாங்குதல், ஒரு மாற்று நிலையம் அமைத்தல், 8 பணிமனைகளை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகளை ரூ. 1.61 இலட்சம் செலவில் நிறைவேற்றிட

உதவும் நகராட்சி பணிகள் மற்றும் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் இரண்டாம் நிலை சாலைகள், நடைபாதைகள், கழிவுநீர் வடிகால்கள், தெரு விளக்குகள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் ஆகிய பணிகளை நிறைவேற்றிட ரூ. 1.47 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது. தேவையான கருவிகள் வாங்குதல் மற்றும் ஒரு மாற்று நிலையம் முடிக்கப்பட்டுள்ளது. இரண்டு வாகன பணி மனைகள் கட்டப்பட்டு வருகின்றன.

**தொழில் நுட்ப உதவி—**

இரண்டாவது சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியான தொழில் நுட்ப உதவி துணைப் பிரிவில் பல ஆலோசனை ஆராய்ச்சிகள் 1985-86 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு 1986-87-ல் முடிவுற இருக்கிறது. அந்த ஆராய்ச்சி படிப்புகளில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் வளர்ச்சிக்காக மேற்கொண்டுள்ள பஸ் வழித்தடங்களைப் பற்றி விஞ்ஞானப் பூர்வ முறையில் படித்தல் என்ற ஆராய்ச்சிப் படிப்பு முக்கியமான தொன்றாகும். இது தவிர, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் போன்ற நகரங்களின் நிதிநிலை ஆராய்ச்சியும் சாலை போக்குவரத்து பகுதியின் ஆராய்ச்சியும் குடிசைப் பகுதிகளைப் பற்றிய சர்வே ஆராய்ச்சியும் குறிப்பிடத்தக்கவைகளாகும். இதற்காக 1986-87 நிதியாண்டில் ரூ. 28 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கின்றது. இந்த துணைத் திட்டம் 1986-87 நிதியாண்டில் முடிவுறும்.

இரண்டாவது சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 11-ன்-கீழ் திருத்திய மதிப்பீடு ரூ. 7,466 இலட்சம். இதில் ரூ. 4,796 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 31—1—1986 முடிய ஏற்பட்டுள்ள பொருளாதார முன்னேற்றம் இணைப்பு VII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—**

இவ்வரசு ஏற்கனவே மத்திய அரசிற்கு உலக வங்கியின் நிதியுதவிபெற இரண்டு திட்டங்களை அதாவது ரூ. 13,010 இலட்ச மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் பகுதியின் வளர்ச்சிக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 3. மற்றும் ரூ. 50,974 இலட்ச மதிப்பீட்டில் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி நகரங்களின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தையும் அனுப்பியுள்ளது. இத்திட்டங்களுக்கு உலக வங்கியின் நிதி உதவியின் அளவு ஒரு குறிப்பிட்ட அளவே உள்ளதால் இந்த ஆண்டு திட்டங்களையும் உலக வங்கியின் நிதியுதவிபெற அனுப்ப இயலாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே இக்கருத்தினை கவனத்திற் கொண்டு, மறு பரிசீலனை செய்து மேற்படி இரண்டு திட்டங்களையும் இணைத்து தமிழ்நாடு "நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்" ஒன்றை மேற்கூறிய 5 நகரங்களின் அபிவிருத்திக்கு தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 42,800 இலட்சமாகும். உலக வங்கிக்கு அனுப்பப்பட உள்ள திட்டம் இறுதியாக்கப்பட்டு வருகிறது. இத் திட்டம் உலக வங்கியால் நவம்பர் 1986-ல் மதிப்பிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ்வரும் பல்வேறு திட்டங்களின் பணிகள் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்க முன் நடவடிக்கையாக இத்திட்டங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.



**சென்னை துரித இரயில் போக்குவரத்து திட்டம்.**

சென்னை துரித இரயில் போக்கு வரத்து திட்டம் சென்னை கடற்கரையிலிருந்து மைலாப்பூர் லஸ் வரை 8.45 கி.மீ. தூரம் இருக்கும். இதில் 2.93 கி.மீ. தூரம் தரைமட்டத்திலும் மீதியுள்ள 5.52 கி.மீ. தூரம் 18 அடி உயர மேல் மட்டத்திலும் அமையும். ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அறிக்கையின்படி, இத்திட்டம் 1989-90 ஆண்டிற்குள் முடிவடைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்திற்கான வேலை 1983-84 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. இத்திட்ட அறிக்கையின்படி 1989-90-ல் முடிவடைய வேண்டுமானால், ஆண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு வருடமும் ரூ. 20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் மத்திய அரசு 1985-86 ஆம் ஆண்டு வரை ரூ. 8 கோடி மட்டும் 1983-84 முதல் 1985-86 முடிய மூன்றாண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 4 கோடியை மட்டும் மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் குறித்த காலத்திற்குள் முடிவடைய வேண்டுமென்று இவ்வரசு ஆர்வமாக உள்ளது. இவ்வரசு இரயில்வேயிக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்துள்ளது. மேலும் இத் திட்டத்திற்குத் தேவையான அரசு நிலங்களை இரயில்வேக்கு இனாமாக மாற்றம் செய்துள்ளது. இருப்பினும் இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள நிதி போதுமானதாக இல்லை. இத்திட்டத்திற்கு அதிக நிதி கோருவது குறித்து மத்திய அரசுடன் உயர்மட்ட அளவில் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ந. நல்லுசாமி,
வீட்டு வசதித்துறை அமைச்சர்.

## தமிழ் நாடு வீட்டு வசதி 1. வாரியம்—சாதனை விவரம்.

| வரிசை எண். | விவரம். | குறைந்த வருவாய் பிரிவினருக்கான குடியிருப்பு. | நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கான குடியிருப்பு. | தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு. | குடிசைப் பகுதி மாற்றுக் குடியிருப்பு. | தொழிலாளர் மலிவு வாடகைக் குடியிருப்பு. | பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் குடியிருப்பு. | காவலர் குடியிருப்பு. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை— 1960-61 ஆம் ஆண்டு முதல் 5-ஆம் ஐந்தாண்டுத் திட்டம் முடிய (1979-80). | 12,974 | 8,164 | 10,731 | 14,956 | 2,494 | 9,046 | 657 | 59,022 |
| 2 | 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (1980-85). | 10,891 | 11,987 | 4,733 | 4,576 | 636 | 21,656 | 2,479 | 56,888 |
| 3 | 7ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் ஆண்டு கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை (1985-86). | 2,251 | 4,761 | 4,962 | 240 | .. | 5,109 | .. | 13,323 |
| 4 | 7ஆம் ஐந்தாண்டு திட்ட குறியீடு | 17,984 | 23,791 | 6,125 | 2,332 | .. | 53,212 | .. | 1,03,460 |

[1986 ஏப்ரல் 18] 

## இணைப்பு 11.

### சென்னை பெருநகர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்—தன்னிறைவு வீட்டுமனைத் திட்டம்.

வளர்ச்சித் திட்டம் 1.

| இடத்தின் பெயர். | முதலில் உள்ள திட்டத்தின்படி. நில அளவு (ஹெக்டேர்) | வீடுகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்). | சாதனை. நில அளவு. (ஹெக்டேர்). | வீடுகளின் எண்ணிக்கை. | செலவு. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| அரும்பாக்கம் .. | 34.20 | 2,304 | 184.20 | 34.20 | 2,334 | 200.00 |
| வில்லிவாக்கம் .. | 71.55 | 3.750 | 294.26 | 71.55 | 3,751 | 459.91 |
| கொடுங்கையூர் பகுதி 1 | 30.83 | 2,013 | 454.42 | 30.83 | 2,013 | 857.31 |
| கொடுங்கையூர் பகுதி 2 | 51.61 | 4,470 | | 51.61 | 4,105 | |

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 2.

| இடத்தின் பெயர். | முதலில் உள்ள திட்டத்தின்படி. அளவு. (ஹெக்டேர்) | வீடுகளின் எண்ணிக்கை | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்). | திருத்தி அமைத்த திட்டத்தின்படி நில அளவு. (ஹெக்டேர்) | வீடுகளில் எண்ணிக்கை. | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்). | சாதனை (பிப்ரவரி, 1986 முடிய). நில அளவு. (ஹெக்டேர்) | வீடுகளில் எண்ணிக்கை. | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| மொகப்பேர் (கிழக்கு) .. மொகப்பேர் (மேற்கு) .. | 123.50 | 10.230 | 1,271.60 | 74.49 | 5,082 | 803.45 | 74.49 | 5,062 | 765.28 |
| நெற்குன்றம் .. .. | 56.50 | 4,670 | 629.29 | 74.13 | 5,673 | 920.98 | 74.13 | 5,469 | 769.84 |
| மதுரவாயல் .. | .. | .. | .. | 64.00 | 4.760 | 999.12 | 25.83 | 2,048 | 350.00 |
| மணலி .. .. | .. | .. | .. | 41.89 | 3,053 | 702.30 | 41.89 | 2,950 | 520.00 |

இணைப்பு 111—தொடர்ச்சி.

| வகை. | அதிகப் பட்சத் தொகை. | வட்டி விகிதம். | திருப்பிச் செலுத்தும் காலம். | உதவியின் நிதி அளவு. |
| --- | --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 5. அடிப்படை சுகாதார வசதி— | | | | |
| தனி நபர் அல்லது சமுதாயம் .. .. | .. | 6 சதவீதம் (குறைந்த வருவாய் தொகுதியினர் 5 சதவீதம் மற்றவர்கள் 10 சத சதவீதம்). | 12 | 50 சதவீதம். |
| 6. கிராமப்புற வீட்டு வசதி— | | | | |
| (அ) வீட்டு மனை இல்லாத தொழிலாளர்கள்— | | | | |
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்-1 .. | 6,000 | 6 சதவீதம். | 11 | 50 சதவீதம். |
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்-2 .. | 10,000 | 7 சதவீதம். | 11 | 80 சதவீதம். |



இணைப்பு IV.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
சாதனை மற்றும் நிதி இலக்கு விவரங்கள்

| திட்டத்தின் பெயர். | ஆரம்ப முதல் 1984–85 வரை. | | 1985–86 | | 1986–87 | |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | சாதனை இலக்கு. | நிதி இலக்கு. (ரூ. இலட்சத்தில்) | சாதனை இலக்கு. | நிதி இலக்கு. (ரூ. இலட்சத்தில்) | சாதனை இலக்கு. | நிதி இலக்கு. (ரூ. இலட்சத்தில்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| குடிசைப்பகுதி மாற்று திட்டம் | | | | | | |
| குடியிருப்புகள் கட்டுதல். | 459.80 குடியிருப்புகள் | 4169.00 | 512 குடியிருப்புகள் | 150.00 | 1,250 குடியிருப்புகள் | 175.00 |
| விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம் .. .. | 64,448 குடும்பங்கள் | 425.00 | 7,250 குடும்பங்கள் | 70.00 | 8,000 | 70.00 |
| சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் | 32,000 குடும்பங்கள் | 1,416.00 | 10,000 | 370.00 | 3,500 | 130.00 |
| நகர்புற குடிசைப் பகுதிகளில் கூடுதல் மேம்பாட்டுத் திட்டம் மைய அரசு வழங்கும் மானியம் | 34,324 குடும்பங்கள். | 56.00 | 7,255 | 17.00 | .. | .. |

**APPI**

**5 PERUN**

*B.* SCHE

*Ranges of Scheduled T*

| Nil. | | 0—5 | | |
|---|---|---|---|---|
| L. C. No | Name of Village. | L. C. No | Name of Village. | N |
| (1) | (2) | (3) | (4) | |
| 1 | Pudupalayam | 10 | Thoraravavi | |
| 2 | Mettupalayam | 31 | Palakarai | |
| 3 | Nallag undenpalayam | 54 | Sundakkampalayam | |
| 4 | Kom rage undenpalayam | 59 | Vadamugam | |
| | | | kangayampalayam. | |
| 5 | Kurichi | | | |
| 6 | Nettichipalayam | | | |
| 7 | Settikuttai | | | |
| 8 | Vala apalayam | | | |
| 9 | Garapathipalayam | | | |
| 11 | Madathupalayam | | | |
| 12 | Vettaiankinar | | | |
| 13 | Sungakararpalayam | | | |
| 14 | Thingalur | | | |
| 15 | Karukkapalayam | | | |
| 16 | Nichampalayam | | | |
| 17 | Pandiampalayam | | | |
| 18 | Singanallur | | | |
| 19 | Kailpalayam | | | |
| 20 | Pethampalayam | | | |
| 21 | Palla palayam | | | |
| 22 | Karjikkail | | | |
| 23 | Olapalayam | | | |
| 24 | Mullampatti | | | |
| 25 | Kandampalayam | | | |

| Nil | |
|---|---|
| L. C. No. | Name of Village |
| (1) | (2) |
| 49 | Kammalakuttai |
| 50 | Edayapalayam |
| 51 | Sinnagoundenvalasu |
| 52 | Vattalapathy |
| 53 | Velliampathy |
| 55 | Virumandampalaya |
| 56 | Muthampalayam |
| 57 | Chengappalli |
| 58 | Thenmugamkangay |
| 60 | Sengalipalayam |
| 61 | Kavuthampalayam |
| 62 | Erumakkarampalaya |

| | |
|---|---|
| 51 | Peramlum |
| 52 | Thurambadi |
| 53 | Mulanur |
| 54 | Edakalpadi |
| 55 | Sinnamarudur |
| 56 | Komarapalaya |
| 57 | Kilangundal |
| 58 | Kalipalayam |
| 60 | Veerajimangala |
| 61 | Kalinjivadi |
| 63 | Nanjayampalay |
| 64 | Kannankoil |

| S.C. No. | 26—35 | |
|---|---|---|
| | L.C. No. | Name of Vllage. |
| (11) | (9) | (10) |
| | 27 | Sundakkampalayam |
| | 28 | Velampoondi |
| | 29 | Punjaithalayur |
| | 30 | Kannivadi |
| | 31 | Brasinampalayam |
| | 32 | Pudupai |
| | 33 | Malayampoondi |
| | 34 | Lakkamanaickenpatti |
| | 35 | Pungathurai |
| | 36 | Arathaluvu |
| | 37 | Mudalipalayam |
| | 39 | Kurukkapalayam |

PR 12-2-22

| 16—20 | | 21—30 | | 31+ | |
|---|---|---|---|---|---|
| L.C. No. | Name of Village. | L.C. No. | Name of Village. | L.C. No. | Name of Village. |
| (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1 | Pudupalayam | 3 | Nallagoundanpalayam | 17 | Pandian palayam |
| 5 | Kurichi | 4 | Komaragoundenpalayam | 19 | Kovilpalayam |
| 9 | Ganapathipalayam | 20 | Pethampalayam | 47 | Navakkadu |
| 10 | Thoranavavi | 22 | Kanjikkoil | 52 | Vattalapathy |
| 14 | Thingalur | 23 | Olapalayam | 53 | Velliampahy |
| 15 | Karukkapalayam | 24 | Mullampatti | 68 | Marappanaickenpalayam |
| 18 | Singanallur | 28 | Thiruvachi | 93 | Vadugapalayam |
| 21 | B. Pallapalayam | 31 | Palakarai | 96 | Agraharaperiapalayam. |
| 32 | Nallampatti | 36 | Kallakulam | 98 | Anaipalayam |
| 35 | Umapapalayam | 39 | Polanaickenpalayam | 102 | Ichipalayam |
| 40 | Karandipalayam | 41 | Pappampalayam. | 105 | Kuthampalayam. |
| 42 | Simmavirasangili | 54 | Sundakkampalayam | 112 | Punjai palatholuvu |
| 46 | Velampalayam | 55 | Virumandampalayam | 118 | Basuvapatti. |
| 48 | Karumanjarai | 57 | Chengappalli | | |
| 49 | Kammalakuttai | 58 | Thenmugamkangayampalayam | | |
| 50 | Edayapalayam | 59 | Vadamugamkangayampalayam | | |
| 64 | Attavanai Pallagoundenpalayam | 60 | Sengalipalayam | | |
| 65 | Mukasi pallagounden palayam | 61 | Kavuthampalayam. | | |
| 75 | Pattakarampalayam | 80 | Pungampadi | | |
| 79 | Vadamugam Vellodu | 82 | Thenmugamvellodu | | |
| 81 | Kavundachipalayam. | 85 | Kambiliampatti | | |
| 83 | Mukasi Pulavampalayam | 89 | Puthur Pallapalayam | | |
| 87 | Kongampalayam | 90 | Punjaithalavoipalayam | | |
| 100 | Pallavarayanpalayam | 91 | Reddipalayam | | |
| 103 | Sircar Kanthankanni | 97 | Sircarperiapalayam | | |
| 114 | Orathupalayam | 111 | Nanjaipalatholuvu | | |
| 119 | Kuppichipalayam | 113 | Kodumanal | | |
| | | 115 | Pudupalayam | | |
| | | 117 | Ekkattampalayam | | |



| | |
|---|---|
| 104 | Sirukalanji |
| 107 | Chennimalai |
| 110 | Murugatholuvu |
| 116 | Ellaigramam |

ENDIX IV

NDURAI TALUK

DULED TRIBES

ribe Population (Percentage.)

| 6—15 | | 16—25 | |
|---|---|---|---|
| L. C. No | Name of Village. | L. C. No | Name of Village. |
| (5) | (6) | (7) | (8) |
| 69 | Mungilpalayam | | |

(12)

Nil.

| L.C. No. | Name of Village |
|---|---|
| (1) | (2) |
| 86 | Varapalayam |
| 87 | Kongampalayam |
| 88 | Naduppatti |
| 89 | Puthurpallapalayam, |
| 90 | Punjaidhalavaipalayam |
| 91 | Reddipalayam |
| 92 | Punjaiuthukuli |
| 93 | Vadugapayalam |
| 94 | Kavandampalayam |
| 95 | Morattupalayam |
| 96 | Agrahara Periapalayam |
| 97 | Sircar Periapalayam |

n

ampalayam

m



36—50

Name of Village.

| 51+ | |
|---|---|
| L.C. No. | Name of Village. |
| (13) | (14) |
| 76 | Poonnupuram |
| 77 | Puthur |
| 78 | Chinnakkampalayam |
| 80 | Chittaravuthampalapam |
| 81 | Nallampalayam |
| 82 | Ponnivadi |
| 83 | Manakkadava |
| 84 | Kongur |
| 85 | Alangiam |
| 86 | Bommanallur |

1037/86

# தமிழ் நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 17, 1986-தொகுதி 223 எண் 2.
Thursday, 17th April 1986-Volume 223 No. 2.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.75]

236

## பொருளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள் — விடைகள் | 209—230 |
| 2. உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த மாண்புமிகு முதலமைச்சருக்குப் பாராட்டுரை | 230—232 |
| 3. தகவல் கோரல்— | |
| (1) வானொலியில் சட்ட மன்ற நிகழ்ச்சிகளைத் தவறாக வெளியிடுவது குறித்து. | 232—235 |
| (2) லிபியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து, மேலவை தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரவேண்டுமென்பது குறித்து. | 235 |
| 4. அறிவிப்பு— | |
| (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு | 335—237 |
| (2) மேலவைத் தலைவர் 16—4—1986 ஆம் நாளன்று அவைக்கு வந்தமை குறித்து வானொலிக்கு அறிவித்தல் | 238 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| வேளாண் விளைபொருள் விற்பனைச் சங்க ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்குரிய ஊதியம், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை போன்றவற்றை வழங்க ஆணை வெளியிடாதது குறித்து. | 238—239 |
| 6. அரசின் தீர்மானம்— | |
| தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம். | 239—297 |
| 7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 297—298 |


143552

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1986 ஏப்ரல் 17.

சித்திரை 4, அட்சய—திருவள்ளுவராண்டு, 2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வேலூரில் பலத்த மழையும் காற்றும்.

*161. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 26—4—1985 அன்று, வட ஆற்காடு மாவட்டம், வேலூர் நகரில், பலத்த மழை மற்றும் காற்று காரணமாக உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) காயமடைந்தவர்கள் எத்தனை பேர்?

(உ) சேதமடைந்த பகுதிகளுக்கு, நிவாரணப் பணிகளுக்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?

(எ) மரணமடைந்தவர்களின் குடும்பத்திற்கு, நிவாரணத் தொகை ஏதும் வழங்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 26—4—1985 அன்று வேலூர் நகராட்சி காம்பவுண்டுக்கு எதிரில் ஒரு வேப்பமரத்தின் எதிரில் ஒரு வேப்ப மரத்தின் கிளை முறிந்து நிழற்குடையின் மேல் விழுந்ததில், ஒருவர் தலத்திலேயே உயிரிழந்தார்.

(இ) 5 பேர்கள் காயமடைந்தனர்.

(உ) சேதமடைந்த பகுதி நிழற்குடையாகையால் நிவாரணப் பணிகளுக்காக செலவும் ஒன்றும் செய்யப்படவில்லை.

(எ) உயிரிழந்தவரின் உறவினர் நிதியுதவி வேண்டி விண்ணப்பித்த பின், மாவட்ட ஆட்சித் தலைவர் அதனைப் பரிசீலிக்க அரசுக்கு அறிக்கை அனுப்புவார்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, இந்த பதிலிலே சேதம் அடைந்த பகுதிகளுக்கு நிவாரணப் பணிகளுக்கு என்று தொகை ஏதும் செலவிடப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னதுபோல், அது வேலூர் நகராட்சியில் ஒரு மிக முக்கியமான இடம். அந்த இடத்திலே சேதம் அடைந்த காரணத்தினால், அதற்கு

நிவாரணப் பணிகளுக்காக என் தொகை செலவிடப்படவில்லை என்பதைப் பற்றியும் மரணம் அடைந்தவருடைய குடும்பத்தினுடைய பிரதிநிதிகள் நிவாரணம் பெற இதுவரை முயற்சி மேற்கொண்டிருக்கின்றார்களா அல்லது அந்த முயற்சியின் மீது நடவடிக்கை எடுக்கவில்லையா? அல்லது அதற்காக யாரும் வரவே இல்லையா என்பதைப் பற்றிய விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த நிவாரணப் பணிகள் நிலங்களைப் பொறுத்தும் பயிர் பாழ்படுத்தப்பட்ட நிலையைப் பொறுத்தும், ஆங்காங்கு ஏற்படுகின்ற உடைப்புகள் பொறுத்தும், ஆங்காங்கே சாலைகள் பழுதுபட்டு இருந்தால் அந்த இடங்களில்தான் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் கேள்வியில் குறிப்பிட்டுள்ளது போன்றவைகள், நிவாரணப் பணிகளுக்காக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. வேறு வகையிலேதான் அதைப் பழுது பார்த்து வைக்க வேண்டும். இந்த இறந்துபட்டவர் சார்பாக யாரும் விண்ணப்பிக்கவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டிருக்கின்றார்கள். விண்ணப்பித்தால் அதன் மீது பரிசீலனை செய்யப்படும்.

### மழையும் புயலும்.

*** 162. வினா.—திரு. அ. ப. சிவராமன் (டாக்டர் இரா. சனார்த்தனம் சார்பில்)** : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் 1985 நவம்பரில் பெய்த மழையாலும், வீசிய புயலாலும் இறந்தவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) அவர்களின் குடும்பங்களுக்கு அரசு அளித்த உதவித் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) உயிரிழந்தவர்கள் மொத்தம் 245 பேர்.

(ஆ) 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பெய்த மழை மற்றும் வெள்ளத்தினால் உயிரிழந்த மொத்தம் 245 பேர்களில் பெருமழை மற்றும் வெள்ளத்தினால் 187 பேர்கள் உயிரிழந்தனர். மீதியுள்ள 58 நபர்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள தொண்டி ஆற்றின் மேல் உள்ள பாலத்தில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்தில் பயணம் செய்து, உயிரிழந்தவர்கள் ஆவர். மேற்படி 187 நபர்களில்



172 பேர்களின் வாரிசுதாரருக்கு தலா ரூபாய் 2,000 விதம் ரூ. 3,44,000 வழங்கப்பட்டது. மீதமுள்ள 15 நபர்களின் வாரிசுதாரர்களுக்குத் தக்க விசாரணைக்குப் பின்பு இத் தொகை வழங்கப்படும்.

வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து ஒன்றில் பயணம் செய்து உயிரிழந்த 58 பேர்களில் 30 நபர்களின் வாரிசுதாரருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 5,000 விதம் மொத்தம் ரூபாய் 1,50,000 இதுவரை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 28 பேர்களுடைய வாரிசுதாரர்களின் விசாரணைக்குப் பிறகு மேற்படி நிவாரணத் தொகை வழங்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, இதைப் போன்று புயல் நேரங்களில் பாதுகாப்பு அளிப்பதற்காக முன்கூட்டி எச்சரிக்கையாக இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. வியட்நாம் போன்ற நாடுகளில் 'டைகூன்' என்ற அமைப்புகள் வைத்து இதுபோன்ற புயல் நேரங்களில் முன்னெச்சரிக்கையாக இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கின்றார்கள். யுனைட்டட் நேஷன்ஸ்-ல் சுவிடிஷ் நிறுவனம் போன்ற நிறுவனங்கள் வெளிநாட்டில் உதவிகளைப் பெற்று செய்கின்றது. அந்த நிறுவனங்கள் அப்படி உதவிகளைப் பெற்று நடவடிக்கைகளை எடுக்கின்றன. அதுபோல முன்னேற்பாடான முறையில் விஞ்ஞான பூர்வமான முறையில் நடவடிக்கைகள் எடுக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புயல் காற்று வீசுகின்றபோது, அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள கடற்கரைப் பகுதிகளில், ஓரப்பகுதிகளில் குடிசைகளில் வாழ்கின்ற மக்களுக்குப் புகலிடம் தர, புகலிடக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி கிட்டத்தட்ட 30, 35 கடற்கரை ஓரப்பகுதிகள் இருக்கின்றன. பல ஆண்டுகளாக எந்தெந்தப் பகுதிகளில் புயல் தாக்குதல் ஏற்படுகிறது என்பதைக் கண்காணித்து கண்டறிந்திருக்கிறோம். அந்த இடங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பிற நாட்டினுடைய உதவியோடும், நம் நாட்டினுடைய உதவியோடும் அவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தனிப்பட்ட வகையில் உள்நாட்டுப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில், புயல், மழையைப் பொறுத்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பெரும் மழையினாலும், புயலாலும் சேதம் ஏற்பட்டால், அவ்வப்போது காலத்திற்கு ஏற்ப செய்யப்படுகின்றது. புயல் காலம் மாறி மாறி வருவதால், அவ்வப்போது தேவைக்கேற்ப நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1986 ஏப்ரல் 17

சென்னை மாநகரில், "ஜேசீஸ்" என்ற தனியார் தொண்டு நிறுவனம், நவீன முறையில் குளிர்ந்த குடிநீர் வழங்க புதிதாக துவக்கியுள்ள திட்டத்தைப் போல, கோடையில் தமிழகமெங்கும் நிறுவ, குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவரவர்களே, சென்னை நகரில் 'ஜேசீஸ்' என்ற தொண்டு நிறுவனம் கோடை காலத்தில் குடிநீர் வழங்க ஒரு புதிய திட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள். இது போன்ற திட்டம் தமிழகம் பூராவும் இல்லையென்றாலும், அதாவது குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் ஆரம்பிக்கவில்லை என்றாலும், இப்படிப்பட்ட திட்டத்தைத் தொண்டு நிறுவனங்கள் ஆரம்பிப்பதற்கு அரசு அல்லது வேளாண்மைத் துறை அல்லது குடிநீர் வடிகால் வாரியம் கடன் உதவி அல்லது மற்ற உதவிகளை அளிக்க முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, நாம் இப்போது அடிப்படைத் தேவையான எல்லாப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். நேரடியாக அதை இந்தத் துறை மேற்கொள்கிறது. கோடை காலத்தில் குளிர் நீர் வழங்க, தொண்டு நிறுவனங்கள் போல் முயற்சி மேற்கொள்ளப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். அந்த முயற்சியை நாம் மேற்கொள்வதற்கில்லை.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 162 ஆம் வினாவிற்கு நான் அளித்த விடை குறித்து ஒரு திருத்தம் அறிவிக்கிறேன். அடையாறின் இரண்டு பக்க கரைகளையும் மேம்பாடு செய்ய 1½ கோடி ரூபாயில் திட்டம் குறித்து நான் ஏற்கெனவே அறிவித்தேன். ஆனால் இப்போது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உண்மையான புள்ளி விவரத்தை கொடுத்துள்ள நிலையில் மத்திய அரசின் பங்கு 2 கோடி ரூபாய் என்பதையும், மாநில அரசின் பங்கு 88 லட்சம் ரூபாய் என்பதையும், ஆக மொத்தத்தில் 2 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவில் அடையாறின் கரைகள் வலுப்படுத்தப்படும் என்பதையும் ஏற்கெனவே நான் தெரிவித்த, 1½ கோடி ரூபாய் அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சாலையோர சிற்றுண்டி விடுதிகள்.**

*** 165 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—**



1986 ஏப்ரல் 17]

(அ) தமிழ்நாட்டில். எந்தெந்த இடங்களில், போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், சாலையோர சிற்றுண்டி விடுதிகள் அமைக்கப்பட உள்ளன?

(இ) இத்திட்டத்தின் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) மற்றும் (இ) விவர அறிக்கை@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இதில் குறிப்பிட்டுள்ள இடங்களில் எத்தனை இடங்களில் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன? எத்தனை இடங்களில் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன? ஏதேனும் முடிக்கப்பட்ட இடங்கள் இருந்தால், முடிக்கப்படும் இடங்களில் எல்லாம் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் நடத்தப்படும் கான்டீன்கள் ஏற்படுத்தப்படுமா அல்லது தனியாருக்குக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** 7 இடங்களில் திட்ட வேலைகள் முடிவுற்று பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 40 இடங்கள். மற்ற இடங்களைப் பொறுத்தவரையில், பல இடங்களில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் அதற்கான இடங்களை எடுப்பதற்கான பூர்வாங்க வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஹைவேஸ் மற்றும் தனியாருக்குச் சொந்தமான இடங்களை எடுக்க வேண்டியிருக்கிறது. ஏதோ ஒரு வகையில் 7 இடங்களில் மட்டும்தான் முழுமையாகப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாப் பணிகளும் முடிந்த பிறகு, அவற்றைத் தனியாரிடம் ஒப்படைப்பதுதான் சரியான முடிவாக இருக்க முடியும். போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யும்போது, கேன்டீனை நடத்துவது போன்ற பிற வேலைகளில் கவனத்தைத் திருப்பிவிட்டால், போக்குவரத்தை நல்ல முறையிலே இயக்குவதிலே அதிகமாக கவனம் செலுத்த முடியாத நிலை வந்து விடும் என்பதால், தனியாரிடம் கொடுப்பதாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தனியாரிடம் கொடுத்தால், நடைமுறைப் பிரச்சினைகள் வரும். அமைச்சர் குறிப்பிட்ட 7 இடங்களைப் பொறுத்தவரையில், யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரம் தெரியவில்லை, அதை அறிய விரும்புகிறேன். தனியாருக்குக் கொடுத்தால், பல நடைமுறைப் பிரச்சினைகள் வரும் என்று குறிப்பிட்டேன். உணவுப் பொருள்களை வழங்குகின்ற சிற்றுண்டி சாலைகளில் அவை தரமானதாகவும் நியாய விலையிலும் வழங்கப்படும் என்கிற உத்திரவாதத்தை தனியாரிடம் பொறுப்பை ஒப்படைக்கும்போது, போக்குவரத்துக் கழகங்கள் பெற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அது மட்டுமல்லாமல், கேன்டீன்கள்

@ 299-301 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பயணிகளுக்கும் பயனுள்ளவைகளாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில், சப்சிடி விலையில் பொருள்களை வழங்க போக்குவரத்துக் கழகங்கள் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: சில நடக்க முடியாத பிரச்சினைகள் பற்றி உத்தரவாதம் தர முடியாது. அதுபோல் சப்சிடி தருவதும் இயலாது. எல்லாவற்றையும் சப்சிடி விலையில் கொடுத்தால், பிறகு எப்படி போக்கு வரத்துக் கழகங்களை நல்ல முறையில் இயக்குவது? ஆனால் நியாய விலையில் கேண்டீன்களில் உணவுப் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்பது முக்கியமான விஷயம்தான். அதில் போக்குவரத்துக் கழகங்களும் அக்கறை எடுத்து முக்கியத்துவம் கொடுக்கின்றன. 7 இடங்களைப் பொறுத்தவரையில், யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்கிற கணக்கு விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. பல இடங்களில் நகரை விட்டு தள்ளி கேண்டீன்கள் இருப்பதாலும், பேருந்தில் பயணம் செய்கின்ற பயணிகளை மட்டுமே அவை நம்பி இருப்பதாலும், தனியாரைப் பொறுத்தவரையில், பலபேர் இதனை எடுத்து நடத்தத் தயாராக இல்லை. நடத்த முன்வந்திருப்பவர்களைப் பொறுத்தவரையில், மிகவும் நன்றாக நடத்துவார்கள் என்று நம்பி ஒப்படைத் திருக்கிறோம். சப்சிடி தர இயலாது. ஆனால் நியாய விலையில் உணவுப் பொருள்களை நிச்சயமாகக் கொடுக்க வேண்டும் என்பது குறித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இப்போது போக்குவரத்துக் கழகப் பேருந்து கள் எல்லாம் சில குறிப்பிட்ட ஓட்டல்களுக்கு அருகில் நிற்கின்றன. அந்த ஓட்டல்களில் பேருந்துகளில் வருகின்ற பயணிகள் சென்று உணவு அருந்து கின்ற நிலை இருக்கிறது. சாதாரணமாக நாம் பார்க்கிறோம், உணவு விடுதி கள் ஆரம்பித்து கொஞ்சம் நாட்களுக்குள்ளேயே மிகப் பெரிய அளவில் அவை வியாபாரமாக நடந்து பெரிய பெரிய கட்டிடங்களை புதிதாக அவர்கள் கட்டும் அளவுக்கு வளர்கிறார்கள். நிலைமை இவ்வாறு இருக்கும்போது, தனியாரிடம் கேண்டீன்களை நடத்த ஒப்படைப்பதைவிட, போக்குவரத்துக் கழகங்கள் நடத்துவதானே வியாபாரமானதாக இருக்க முடியும். மேலும் போக்கு வரத்துக் கழகங்களே கேண்டீன்களை நடத்தும் நிலையில் எல்லாப் பேருந்து களும் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் நடத்தப்படும் கேண்டீன்களின் அருகில்தான் நின்று போக வேண்டுமென்ற ஒரு நிலையை ஏற்படுத்தினால், எல்லாப் பயணிகளும் அங்கே செல்கின்ற நிலையும், அதன்மூலம் கேண்டீன்கள் இன்னும் வியாபாரமாக நடக்கக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது அல்லவா? ஆகவே தனியாரிடம் கேண்டீன்களை நடத்துகின்ற பொறுப்பை ஒப்படைக்காமல், போக்குவரத்துக் கழகங்களே அவற்றை நடத்த வேண்டுமென்கிற அடிப் படையில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?



(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, எதையெதை அரசாங்கம் செய்ய வேண்டும், எதையெதை தனியார் செய்ய வேண்டும் என்பதை நாமே முடிவு செய்துகொள்ள வேண்டும். எதையெதை அரசு டைமை ஆக்குவது என்றும் முடிவு செய்ய வேண்டும். எல்லாவற்றையும் அரசுடைமையாக்குவது என்ற நிலைமைக்குப் போனால், தனியாருக்கே வேலையில்லாமல் போய்விடும். இதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம்தான் ஏற்படும். போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிற, பணியாற்றிய சாதாரணத் தொழிலாளர்கள்தான் அதை எடுக்கிறார்கள். பெரிய முதலாளிகள் எடுப்பதாக எண்ணிக்கொள்ளக் கூடாது. சாதாரண தொழிலாளர்கள் கூட இதை எடுத்து நடத்த முன்வருகி றார்கள். இன்னும் சொல்லப் போனால், போக்குவரத்துக் கழகங்களில் வேலை பார்த்து விபத்து காரணமாக இறந்துபோனவர்களின் குடும்பத்தார்கள் கூட இதை நடத்த ஏற்பாடு செய்து வருகிறோம். இப்படி அடிமட்டப் பணியாளர்கள் கூட பயன்பெறும் வகையில் இதை எடுத்துக் கொள்ளலாம். மத்திய அரசும் மாநில அரசும் இதுபோன்ற சாதாரண தொழில் களைச் செய்கிறவர்களுக்கு 'சப்சிடி', வட்டியில்லாக் கடன் போன்றவற்றைக் கூட தருகிறார்கள். இதன்காரணமாக அவர்கள் சுய வேலைவாய்ப்பும் பெறு கிறார்கள். நாங்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று இல்லை. போக்கு வரத்துக் கழகங்களே இவைகளை 'மெல்லாம் ஏற்று நடத்தினால், அவர்கள் என்ன வேலைக்காக இருக்கிறார்களோ அது பாதித்துவிடும். அந்த வேலை ஒழுங்காக நடக்காது என்ற அச்சமும் ஏற்படுகிறது. தனியார்களும் பொறுப் பாக நடந்துகொள்கிறார்கள் என்ற கருத்தும் இருக்கிறது.

**திரு. அ. மயில்சாமி:** தலைவர் அவர்களே, இப்போது போக்குவரத்துக் கழகம் தேர்ந்தெடுத்துள்ள இடங்கள் போக்குவரத்து நெரிசலான பகுதிகளில் இருக்கின்றன. காரணம், எல்லோரும் அந்த நெடுஞ்சாலைகளுக்குச் செல்லக் கூடிய இடங்களாக அமைந்திருக்கின்றன. பேருந்துப் பயணிகளுக்கு என்று மட்டும் இருந்தால் அங்கே நெரிசல் இருக்காது. கூட்டத்தைத் தவிர்ப்ப தற்கு கூட்டம் குறைவான இடங்களில் இடங்களைத் தேர்ந்தெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஊர்களைத்தான் தேர்ந்தெடுத்து குறிப்பிட்டிருக்கிறோம். ஊரின் மையமாக இல்லை. ஊரி லிருந்து இரண்டு கிலோ மீட்டர் தள்ளியிருக்கலாம். பயணிகள் பயன் பெற வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன. பேருந்துகள், கார்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற வாகனங்

களில் வருவோருக்கும் இது பயன்படும். லாரிகளில் வருவோருக்கு தற்காலிக மாக இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இருந்தாலும், எதிர்காலத்தில் அவர்களுக்கு ஒர்க்ஷாப் போன்ற வசதிகளோடு கூடிய இடங்களில் அமைக்க ஏற்பாட்டை அரசு செய்துவருகிறது. எனவே முதல் கட்டமாக இந்தப் பணியைச் செய்கிறோம். ஒரே சமயத்தில் எல்லாப் பேருந்துகளும் வந்து விடவில்லை. நாள்பூராவும் வண்டிகள் ஓடிக்கொண்டிருப்பதாலும், பல்வேறு இடங்கள் இருப்பதாலும், ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் வண்டிகள் தேங்கி விடுவது கிடையாது. ஆகவே அப்படி நெரிசல் பிரச்சினை வராது. இருந் தாலும் நடைமுறையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஏற்ப மாற்று ஏற்பாடு களை அவ்வப்போது செய்யலாம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 40 இடங்களில் போக்குவரத்து சிற்றுண்டிச் சாலைகள் அமைக்கப்பட இருப்ப தாகச் சொன்னார்கள். சென்னை-திருச்சி பிரதான சாலையில் மாமண்டூரில் இதற்கான கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்பட்டும், கடந்த ஓராண்டு காலமாக எந்தக் கட்டுமானப் பணியும் நடக்காமல் இருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் நிறுத்தப்பட்டதற்கு என்ன காரணம்? அதை விரைவில் முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இடையில் அதை ஒரு பெரிய திட்டமாகக் கொண்டுவர வேண்டுமென்று நினைத்தோம். இதற் கிடையில் வெளிநாட்டு அமைப்பு ஒன்றிடம் அதற்கான திட்டத்தைக் கேட் டிருந்தோம். முதலில் கிடைக்கவில்லை. இப்போது கிடைத்திருக்கிறது. அதுபோல் மாற்றியமைக்க வேண்டுமென்று நினைக்கிறோம். அதற்கான உத்தரவுகளை ஒரு மாதத்திற்கு முன்பு போட்டு வேலை தொடங்கியிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, ஊட்டி சாலையில் பர்லியாறு உணவு விடுதியை சேரன் போக்குவரத்துக் கழகம் பெரிய அளவில் எடுத்து நடத்த இருப்பதாக அறிகிறோம். அதற்காக மகிழ்ச்சி. இருந்தாலும் அதை அமைக்க அங்கே போதிய இடவசதி இல்லை. 'ரிவெட்மெண்ட்' அடித்து, அங்கே இடத்தை ஒதுக்கி, பெரிய அளவில் சேரன் போக்குவரத்துக் கழகம் செலவு செய்தாலாவது பயணிகளுக்கு உதவியாக இருக்கும். இப்போது கோடை காலத்தில் ஊட்டியை நோக்கி மக்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். அதன் பலனைக் கருதி இந்த ஆண்டே அரசு இதைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நிலைமையைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிக அளவு செலவு செய்தாவது செய்யலாம் என்று சொல்வதால் பயமாக இருக்கிறது. எந்த அளவுக்குச் செய்ய முடியும் என்று அந்த இடத்தைப் பார்த்து அரசு நடவடிக்கை எடுக்கும்.





**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, சிற்றுண்டிச் சாலையை தனியாரிடம் தருகிறபோது வசதி படைத்தவர்கள் மட்டும்தான் என்றில்லை, அங்கே வேலை பார்த்து நலிந்தவர்களுக்கும் தரப்படும் என்று அமைச்சர் சொன்னார். அந்த வகையில் நலிந்தவர்களுக்கும், ஏழைகளுக்கும், சாதாரண மானவர்களுக்கும் தரவேண்டுமென்று 'நார்ம்ஸ்' வைத்து அந்த அடிப்படை யில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒன்றைச் செய்கிறபோதே, அந்த 'நார்ம்சை' வைத்துத்தான் செய்கிறது. பெரிய பணக்காரர்கள் அவைகளை எடுக்க வாய்ப்பு இல்லை. சாதாரணமான வர்களால் எடுத்து நடத்த வாய்ப்புத்தான் இருக்கிறது. எனவே அந்த வகை யில் அனுமதி கொடுப்போமானால், உணவுப் பொருட்கள் குறைவான விலைக் குக் கிடைக்கும் என நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே சாதாரணமான வர்கள் நடத்தும் வகையில்தான் அவை அமைக்கப்படுகின்றன. வேலை வாய்ப்பற்றவர்களுக்கும் அவற்றைக் கொடுக்க ஏற்பாடு செய்ய இருக்கிறோம்.

**கோத்தகிரி-பாலக்காடு பேருந்து வசதி.**

***166 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) கோத்தகிரி-பாலக்காடு வழித் தடத்தில் பேருந்து விட வேண்டு மென்று, பொது மக்களிடமிருந்து கோரிக்கைகள் ஏதேனும் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) மற்றும் (இ) கோத்தகிரியில் இருந்து பாலக்காடு செல்வதற்கு பேருந்து கோரி பொது மக்களிடமிருந்து வந் துள்ள விண்ணப்பங்களை வைத்து, அவ்வழித் தடத்தில் பேருந்து இயக்கு வதற்கான ஏற்பாடுகள் சேரன் போக்குவரத்துக் கழகத்தால் செய்யப்பட்டுள் ளன. இந்த வழித்தடம் இரண்டு மாநிலங்களை இணைப்பதால், கேரள அரசின் ஒப்புதல் தேவைப்படுகிறது. அதற்கான பேச்சு வார்த்தைகள் நடை பெற்று, ஒப்பந்தம் முடியும் தருவாயில் உள்ளது. இவ்வொப்பந்தம் ஏற்பட்ட பிறகு மேற்படி வழித்தடத்தில் தேவையான பேருந்துகள் இயக்கப்படும்.

(முற்பகல் 10-20)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, நீலகிரிப் பகுதிக்கு, குறிப்பாகக் கோடைக் காலத்தில், நிறைய பேர் வருகிறார்கள் என்பது எல்லோ ருக்கும் தெரியும். அவர்கள் பயணம் செய்வதற்கு, சீசன் நேரத்திலாவது

எந்த எந்த வழித்தடங்களில் அதிக அளவில் பயணிகள் வருகிறார்களோ அந்த வழித்தடங்களில் கூடுதலாக தொலைதூரப் பேருந்துகள் விட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இதுபோன்று பயணிகள் எண்ணிக்கை அதிகமாகி பேருந்துகள் விடவேண்டிய அவசியம் எப்போதெல்லாம் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் நம்முடைய மாநிலத்திற்குள்ளேயே எவ்வளவு பேருந்துகளை வேண்டுமானாலும் இயக்கிக்கொள்வதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. அந்த வகையில் ஏற்பாடுகளையும் நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் பக்கத்து மாநிலங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும் வழித் தடங்களில் அவ்வாறு நாம் செய்வதற்கு நமக்கு உரிமை இல்லை. அவர்களோடு பேசித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. நடவடிக்கையும் எடுக்கபடுகிறது. இவ்வாறு அவசியம் ஏற்படுகிறபொழுது, பேச்சுவார்த்தை நடத்தி, அந்த அடிப்படையிலே வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, கோத்தகிரி-பாலக்காடு வழித்தடத்தில் பேருந்து விடுவதற்கு கேரள மாநிலத்தினுடைய அனுமதி தேவைப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது அம்மாநிலத்திலிருந்து பல பயணிகள் தனியார் பேருந்துகளில் நிறைய அளவில் வந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை நம்முடைய மாநிலத்திலிருந்து இரண்டு பேருந்துகள் அவ்வழித்தடத்தில் விட நாம் ஏற்பாடு செய்தால், அவர்களும் இரு பேருந்துகள் தற்போதுள்ள விதிகளின்படி விட வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு பேருந்துகள் விடுவதற்கு இயலாத நிலையில் இருக்கிறார்கள். எனவே அவர்களுக்காகவும் சேர்த்து நாமே பேருந்துகளை விட, அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நாம் ஒரு பேருந்து விட்டால், அவர்களும் ஒரு பேருந்து விட வேண்டும் என்ற நியதி வைத்திருக்கிறோம். ஆனால் அவ்வாறு பேருந்து விடும்போது, அது அரசுக்குச் சொந்தமானதாகவும் இருக்கலாம், தனியாருக்குச் சொந்தமானதாகவும் இருக்கலாம். அது அந்த அந்த மாநில அரசுகளின் கொள்கைகளை பொறுத்திருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில், அரசுக்குச் சொந்தமான பேருந்துகளை விடுவது என்றுதான் கொள்கை வைத்திருக்கிறோம். அதில் நிச்சயமாக நாம் தயக்கம் காட்டப் போவதில்லை. ஆனால் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்களால் முடியவில்லை என்றால், அவர்கள் தனியாருக்கு அனுமதி தருவார்களானால், நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. இந்த அடிப்படையிலேயே பேருந்துகளைவிட நாம் முயற்சிகளை மேற்கொள்கிறோம்.



## நீலகிரி மாவட்டத்தில் புதிய பேருந்துகள் விடுதல்.

* 167 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஓடும் பேருந்துகள் பழுதடைந்துள்ளதால் புதிய பேருந்துகள் விடும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை, பேருந்துகள் மாற்றப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) தற்போதுள்ள நிலவரப்படி 1977 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட அனைத்து பேருந்துகளும் நீலகிரி மாவட்டத்தின் வழித்தடங்களிலிருந்து நிறுத்தப்பட்டு அவைகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் விடப்பட்டுவிட்டன. 1978 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு தற்சமயம் நீலகிரி மாவட்டத்தில் இயக்கப்பட்டு வரும் சுமார் 60 பேருந்துகளையும் நிறுத்திவிட்டு அவைகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் விடும் செயற்குறிப்பு உள்ளது.

(இ) சாதாரணமாக சேரன் போக்குவரத்துக் கழகம் 4 முதல் 5 ஆண்டுகளுக்கொருமுறை பேருந்துகளை மாற்றுகிறது. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் சில நேரங்களில், பேருந்துகளுக்கான குறுகிய அடிச்சட்டம் கிடைக்காதவரையில், 5 ஆண்டுக்கும் மேற்பட்ட பேருந்துகளும் நல்ல முறையில் பராமரிப்பு நிலையில் வைத்து இயக்கப்படுகின்றது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகம் நீலகிரி மாவட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றுகிறது என்று எல்லோரும் பாராட்டுகிறார்கள். ஆனால் அங்கேயுள்ள மிக முக்கிய நடங்கல் என்னவென்றால், நீலகிரி மாவட்டத்தின் போக்குவரத்து வழிகள் அநேகமாக மலைப் பாதையில் இருப்பதால், திடீரென்று அடிக்கடி பேருந்துகளுக்குப் பழுது ஏற்பட்டு, பாதைப் போக்குவரத்து பாதிப்புக்குள்ளாகிறது. குறிப்பாக அதிக ஜன நெரிசல் ஏற்படும் சமயங்களில் இவ்வாறு ஏற்பட்டு விடுகிறது. எனவே சில கூடுதல் பேருந்துகளையாவது வேறு வழித்தடங்களில் ஓடுபவைகளை இவ்வழித்தடங்களுக்கு மாற்றி ஓட்டினால், உதவியாக இருக்கும். மேலும் புதிய பேருந்துகளை அடிக்கடி விடுவது இப்பகுதிகளுக்கு வசதியாக இருக்கும். இவைகளை அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதற்கு முன்பெல்லாம் 15 ஆண்டு காலம் ஒரு பேருந்தை ஓட விட்டிருந்தோம். அதைப் படிப்படியாகக் குறைத்து, இப்போது குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் அல்லது ஐந்து ஆண்டுகள் என்று கொண்டு வந்திருக்கிறோம். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே மாற்றப்பட வேண்டுமென்று முடிவெடுத்து, அவ்வாறே நடைமுறையில் செய்து வருகிறோம்.

ஆனால், நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையுள்ள பிரச்சினை அங்கே ஓடுகின்ற பேருந்துகளுக்கும் மற்ற இடங்களில் ஓடுகின்ற பேருந்துகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அங்கே ஓடுகிற பேருந்துகள் குறுகிய பேருந்துகளாக இருக்கின்றன. மற்ற இடங்களில் விழாக்காலங்கள் என்றால், அப்பகுதிக்கு நிறைய பேருந்துகளை விடுவது எளிதாக இருக்கிறது. ஆனால் அதைப்போல நீலகிரிப் பகுதிக்கு பேருந்துகளை விடுவதற்கு சாத்தியமில்லாமல் இருக்கிறது. மேலும் இதுபோன்ற குறுகிய பேருந்துகளுக்கான அடிச்சட்டம் போதுமான அளவுக்கு உற்பத்தி இல்லாமலிருக்கிறது. இதனால்தான் இந்தச் சங்கடங்கள் அரசிற்கு ஏற்படுகின்றன. எதிர்காலத்தில் அதைச் சமாளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10-25)

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவரவர்களே, நீலகிரிக்கு இரயில் போக்குவரத்துதான் இருக்கிறது. அது நிலையங்களில் நிற்குமா அல்லது நிற்காதா என்ற நிலையில் பயணிகள் அதில் போகாத நிலைதான் இருக்கிறது. எனவே பயணிகள் பேருந்துகளை நம்பியிருக்கிறார்கள். பேருந்துகள் பழுதுபடுவதால், பாதி வழியிலேயே அவைகள் போக்குவரத்து தடைப்படுகிறது. அந்தத் தடைகளை நீக்குவதற்கு 'ஒயர்லெஸ்' சாதனத்தைப் பயன்படுத்துகிறார்கள். அப்படி பேருந்துகள் பாதி வழித் தடத்தில் பாதிக்கப்பட்டு நின்றுவிட்டால், பயணிகள் அலுவலகங்களுக்குச் செல்ல 2 அல்லது 3 மணி நேரம் தடைப்பட்டு விடுகிறது. பாதி வழியில் தடைகள் ஏற்பட்டாலும் 'ஒயர்லெஸ்' முறையில் பேருந்துகள் உடனே போவதற்கு அந்தத் தடைகளை நீக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, சாதாரணமாக பேருந்துகளைப் பொறுத்தவரையில், 'ஹில் ஏரியா'வில் பேருந்துகள் ஓடும் போது பிரச்சினைகள் வரத்தான் செய்கிறது. சாதாரண வழித் தடத்தில் பேருந்துகள் போவதைவிட, அவைகள் மலைப் பாதையில் செல்லும்போது 'ஸ்ட்ரெய்ன்' அதிகமாக ஏற்படுவதால், சில நேரங்களில் 'பாயில்' ஆகி நின்றுவிடும். அதன் காரணத்தாலே பேருந்து இயக்கங்கள் சரியாக இல்லை என்று





சொல்லிவிடக் கூடாது. 'ஒயர்லெஸ்'சைப் பொறுத்தவரையில், அந்த முறையை ஆய்வு செய்து, அதனால் பயன் ஏற்படுமென்று கருதினால், பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.

## கூடுதல் பேருந்து வசதி.

168. வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி மாவட்டம், கடுவல்காட்டில் உள்ள வெடிமருந்து தொழிற்சாலையில் பணியாற்றும் பணியாளர்கள், மாலை வீடு செல்ல போதிய வசதி இல்லாமல் அவதியுறுவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், கூடுதல் பேருந்து விடும் கருத்துரு ஏதும், அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வெடிமருந்து தொழிற்சாலை அருவங்காட்டில் உள்ளது. இங்கு பணியாற்றும் பணியாளர்கள் பணி முடிந்த பின் எவ்வித இன்னலும் இல்லாமல் மாலை வீடு செல்வதற்காகவே அருவங்காட்டிலிருந்து குன்னூருக்கு நான்கு பேருந்துகளும், அருவங்காட்டிலிருந்து உதகமண்டலத்திற்கு ஒரு பேருந்தும் சேரன் போக்குவரத்து கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இவை தவிர பல்வேறு தடங்களில் செல்லும் 65 பேருந்துகள் 526 நடைகள் அருவங்காடு வழியே செல்கின்றன.

(இ) ஏற்கெனவே அருவங்காட்டிலிருந்தும், அருவங்காடு வழியாகவும் பணியாளர்கள் மற்றும் பயணிகள் தேவைக்கேற்ப மேற்குறிப்பிட்டவாறு போதுமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால், தற்போது கூடுதல் பேருந்துகள் விடக் கருத்துரு ஏதும் இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, அருவங்காட்டில் வெடிமருந்து தொழிற்சாலை இருக்கிறது. அவர்கள் அந்த இடத்திற்குக் குறித்த காலத்தில் சென்று, குறித்த காலத்தில் திரும்ப வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கு போதுமான வீடு கட்டித் தரப்படாத நிலையில், அவர்கள் வேறு இடங்களிலிருந்து அங்கு போய்ச் சேர பேருந்துகளைத்தான் நம்பியிருக்கிறார்கள். அதற்கு சேரன் போக்குவரத்துக் கழகம் பெரிய அளவிலே உதவியாக இருக்கிறது. மீண்டும் ஆய்வு செய்து, மேலும் பேருந்துகள் விடவேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து, தேவை இருக்குமானால், அவைகளை விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, இரண்டு வழித் தடங் களில் 5 பேருந்துகள் அவர்களுக்காக மட்டும் சென்று கொண்டிருக்கிறது. 526 நடைகள் அந்தப் பக்கம் பேருந்துகள் வருகின்றன. அதில் எத்தனை நடை கள் அவர்களுக்குப் பயன்படுமென்று சொல்லிவிட முடியாது. அவர்கள் செல் வதற்கு பேருந்துகள் அதிகமாக வேண்டுமென்று கேட்கும்போது, இருக்கின்ற சங்கடம் என்னவென்றால், அவர்களுக்கு அலுவலக ஆரம்ப நேரம் 10 மணி என்றால் அவர்கள் 9½ மணிக்குத்தான் கிளம்ப வேண்டுமென்று நினைக்கின் றார்கள்; அவர்கள் 9¼ மணிக்குக் கிளம்பினால் பிரச்சினை தீர்ந்துவிடும்; ஆனால் எல்லோரும் அந்த சரியான நேரத்திற்கு (9½ மணிக்கு) பேருந்தில் ஏறுகின்றபோது பிரச்சினை ஏற்படுகிறது. எனவே அங்கு ஓடுகின்ற 4 பேருந்துகளில் அவர்கள் கொஞ்சம் மாற்றிப் போகும் ஏற்பாட்டை அவர் களாகவே செய்து கொள்வார்களானால், இந்தச் சிக்கல் நிச்சயமாக இருக் காது. 6 அல்லது 7 பேருந்துகள் அவசியம் என்றால், ஒரே நேரத்தில் அவைகளை இயக்குவதில் நடைமுறையில் சிக்கல் வரும். எனவே அமைச்சர் களிடம் உறுப்பினர் அவர்கள் சொல்வதைவிட அங்கு சென்று தொழிலாளர் களை அழைத்து யார் யார் எந்த நேரத்தில் வர வேண்டுமென்று ஒரு 'சிப்ட்' முறையை ஏற்படுத்திக்கொண்டால், இந்தப் பிரச்சினை நிச்சயமாக வராது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவரவர்களே, அங்கிருக்கிற சிக்கல் மற்றவர்களுக்கு இருப்பதைப்போல் இல்லை. என்ன ஏற்பாடு செய்தாலும், பேருந்து இல்லை என்றால், அவர்கள் தொழிற்சாலைக்கு வந்து போக முடியாது. அவர்களுக்கு மூச்சுத் திணறல் வந்தால், அவர்கள் வேலை செய்ய முடியாது. அதனாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவிக்கு வருவார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் நேரடியாக வந்து பார்த்து ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இப்போதுதான் சரியான நிலையை எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். இந்த மூச்சுத் திணறல் பேருந்துகளுக்குக்கூட அந்த மலைப் பாதையிலே ஏற்பட்டு விடுகிறது. அதன் காரணமாக, விடப்படுகின்ற பேருந்து களை வைத்து, அதன் நேரத்தை அனுசரித்து அவர்கள் அலுவலகங்களுக்குப் போனால், அந்தப் பிரச்சினைகள் நிச்சயமாகத் தீர்க்கப்படும். ஒருவேளை அவசியம் இருக்குமானால், சேரன் போக்குவரத்துக் கழகம் அதற்கான நட வடிக்கை எடுக்கும்.

## சலவைத் துறைகள்.

* 169 வினா.—**திரு. சி. ஆர். கோலப்பா:** மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—



(அ) சலவைத் துறைகள் போதிய வசதிகள் இல்லாமல் இருப்பதாக, தமிழக அண்ணா சலவைத் தொழிலாளர் சங்கத்தின் மூலம், அரசுக்கு மனு வும் அனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** (அ) மற்றும் (இ) அண்ணா சலவைத் தொழிலாளர் சங்கத்தின் மூலமாக சென்னை நகரில் சலவைத் துறைகள் கட்டவும், பராமரிக்கவும் மனுக்கள் 24—5—1985 மற்றும் 27—5—1985 ஆகிய தேதிகளில் வரப்பெற்றன. மனுக்கள் மீது மேல் நடவ டிக்கை மேற்கொள்ள சென்னை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவல ரையும், சென்னை மாநகராட்சி ஆணையரையும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அவர்கள் பரிந்துரை வந்தவுடன் சலவைத் துறை கட்டுவது பற்றி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. ஆர். கோலப்பா:** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை சலவைத் துறைகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இதுவரை கட்டப்பட்டிருக்கிற டோபிகானா 63. அதற்கான மொத்தச் செலவு 20 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய்.

(முற்பகல் 10-30)

**திரு. சி. ஆர். கோலப்பா:** சென்னை மாநகராட்சியைத் தவிர மற்ற இடங்களில் உள்ள சலவைத் துறைகளை அபிவிருத்தி செய்ய தமிழக அரசு இந்த ஆண்டு ஒதுக்கிய தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைத் தவிர, சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூரிலும் இராமநாத புரம் மாவட்டத்தில் இராமேஸ்வரத்திலும், தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி யிலும், சேலம் மாவட்டத்தில் உள்ள இராமகவுண்டனூர் மற்றும் அம்மாப் பேட்டையிலும் அண்ணா சலவைத் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாக மனுக்கள் வந்திருக்கின்றன. அவற்றை அரசு பரிசீலித்து வருகிறது. மற்ற விவரங்கள் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், விவரமாக பதில் அளிக்கலாம்.

**திரு. சி. ஆர். கோலப்பா:** பல சலவைத் துறைகளில் சுற்றுச் சுவர் எழுப்பப்படவில்லை. தண்ணீர் வசதி இல்லை. துணிகள் வைக்கத் தனி யாகப் பாதுகாப்பான அறைகள் இல்லை. இஸ்திரி போடும் இடத்தி

கோட்டைகள் இல்லை என்று கோரி பல மனுக்கள் அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே இந்த ஆண்டில் அவற்றையெல்லாம் அமலிருத்தி செய்வதற்காக நிதிநிலை அறிக்கையிலேயே ரூபாய் 5 கோடி ஒதுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோலப்பா அவர்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். இதற்கு மிக அதிக அளவில் நிதி தேவைப்படும். எந்த அளவுக்கு சலவைத் துறைகளைக் கட்ட நிதி ஒதுக்க முடியுமோ அதைப்பற்றி அரசு ஆராயும்.

## மீனவர்கள் மீது தாக்குதல்.

* 170 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 12—8—1985 வரை, ஸ்ரீலங்கா கப்பல் படையினர் தாக்குதலால், நமது மீனவர்கள் இழந்துள்ள மீன்கள், வலைகள் மற்றும் படகுகள் ஆகிய வற்றின் மதிப்பு எவ்வளவு?

(இ) அக்கப்பல் படையினர் தாக்குதலால் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்?

(உ) இது தொடர்பாக, ஸ்ரீலங்கா அரசிடம் இருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தர, மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாநில அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) ஸ்ரீலங்கா கடற் படையினரின் தாக்குதலால் நமது மீனவர்கள் இழந்துள்ள மீன்கள், வலை கள் மற்றும் விவரங்கள் உறுதியாகத் தெரிவதில்லை. இத்தகைய தாக்குதல் நிகழ்ச்சிகள் எல்லாம் இரவு நேரங்களில் நடந்துள்ளன. தாக்குதலின்போது பிடித்து வைக்கப்பட்டிருந்த மீன் மற்றும் இரால்களையும், வலைகளையும் அபகரித்துச் சென்றுள்ளார்கள் என்ற விவரம் மட்டும் மீனவர்கள் தெரிவிப்ப தால், அவைகளின் சரியான மதிப்பினை நாம் உறுதியாகக் கூற முடியாது.

(இ) ஏழு மீனவர்கள் இறந்துள்ளனர்.

(உ) இல்லை. என்றாலும் இதுபற்றி மத்திய அரசிடம் கோரலாம்.



டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, இந்த அவையி லிருந்து நான் ஓய்வு பெறுவதற்கு முன்னால் என்னுடைய பல கேள்விகளை இன்றைக்கு எடுத்துக் கொண்டதற்காக மேலவைச் செயலகத்திற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலவையிலிருந்து இளம் வயதிலேயே ஓய்வு பெறுகிறவனாக நான் ஒருவன்தான் இருக்கின்றேன் என்று கருதுகிறேன். அதிலும் நான் மிகவும் விரும்பிடும் கேள்வியும் இன்று எடுக்கப்பட்டிருக்கிறது. நமது பகுதியிலிருந்து மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். அப்படிச் செல்கிறவர்களிடமிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு செல்கிறார்கள். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாகவே நம் முடைய மீனவர்களிடமிருந்து பறிக்கப்படும் மீன்கள் எவ்வளவு, மீன் வலை கள் எவ்வளவு, பிடிக்கப்பட்ட மீனவர் எத்தனை? படகுகள் எவ்வளவு என்று நமது சங்கத்திற்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எழுதிக் கொடுக்கிறார்கள். அதைப்போலவே நம்முடைய மீனவர்களும் தங்களிடமிருந்து பறிக்கப்பட்ட மீன்பிடி படகுகள் எத்தனை, மீன் அளவு எவ்வளவு, வலைகள் எவ்வளவு என்றெல்லாம் விவரங்களை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே நமது பிரதமர் அவர்கள் இந்தியாவுக்கு வந்திருக்கிற ஸ்ரீலங்கா அகதிகளை நாம் ஏற்று பராமரிக்கும் பொறுப்புக்காக ஸ்ரீலங்கா அரசிடமிருந்து நிதி கேட்டிருக் கிறார்கள். அப்படி நிதி கோரியிருக்கும்போது கடந்த 20, 30 ஆண்டுகளாகவே நம் மீனவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட இத்தகைய உடமைகளின் மதிப்பு எவ்வளவு என்று கணக்கிட்டு நம் மீனவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பு எவ்வளவு என்று மீனவர் சங்கங்களிடமிருந்தும் கேட்டுப் பெற்று ஸ்ரீலங்கா அரசிடம் ஏன் கேட்கக் கூடாது? முன்பெல்லாம் அவர்கள் ஸ்ரீலங்கா நேவல் அதிகாரிகள் எழுதிக் கொடுத்து இவற்றைப் பறிமுதல் செய்தார்கள். இப்போது தைரியம் அதிகமாகிவிட்டதால் எழுதிக் கொடுக்காமலேயே எடுத்துச் செல் கிறார்கள். எனவே அத்தகைய விவரங்களையெல்லாம் அரசு கேட்டு அறிந்து நமது மீனவர்களுக்குச் சேரவேண்டிய இழப்புத் தொகையை ஏன் ஸ்ரீலங்கா அரசிடம் மத்திய அரசு மூலமாகக் கேட்கக்கூடாது? இழப்புத் தொகையை முதலில் நமது அரசு மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொண்டு பிறகு மத்திய அரசு ஸ்ரீலங்கா அரசிடம் ஏன் கேட்டுப் பெற்றுக் கொள்ளக்கூடாது? இத்தகைய கருத்தை மைய அரசிடம் நமது அரசு வலியுறுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே, "இது தொடர்பாக இலங்கை அரசிடம் இருந்து நஷ்ட ஈடு பெற்றுத்தர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாநில அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா" என்ற கேள்வி கேட்கப்பட்டதற்கு "இல்லை என்றாலும் மத்திய அரசிடம் கோரலாம்" என்று நான் இங்கே பதில் அளித்திருக்கிறேன். நம்

[1986 ஏப்ரல் 17

முடைய மீனவர்களைப் பொறுத்தவரையில் ஸ்ரீலங்கா அரசு அவர்கள் ஏதோ மீன் பிடிக்கச் செல்வதைப்போல கருதவில்லை. ஸ்ரீலங்கா மீது படை எடுக்கச் செல்வதைப்போல்தான் கருதுகிறார்கள். மீனவர்களையெல்லாம் விடுதலைப் புலிகளாகவே கருதுகிறார்கள். அதனால்தான் அவர்களையெல்லாம் துப்பாக்கியால் சுட்டு, கழுத்தில் கயிற்றால் சுருக்கி கொலை செய்து கடலில் வீசுவது, படகுகளைச் சுட்டு மூழ்கடிப்பது, பிடித்து வைத்துள்ள மீன்களைக் கொள்ளை அடிப்பது போன்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள். இதனால்தான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய வெளி உறவு அமைச்சர் அவர்களுடன் தொடர்பு கொண்டு தவறுதலாக இந்திய எல்லையைக் கடக்கும் மீனவர்கள் அவர்களது உடமைகளுடன் பத்திரமாக இந்தியா திரும்புவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் . . .

(முற்பகல் 10-35)

அதன் பேரில் இந்தியப் பிரதமரின் தனிப் பிரதிநிதி ஸ்ரீலங்கா சென்று ஸ்ரீலங்கா குடியரசுத் தலைவர் திரு. ஜெயவர்த்தனா அவர்களுடன் இது பற்றி பேச்சு வார்த்தை நடத்தி கடலில் தவிப்புக்குள்ளாகும் மீனவர்களை மனிதாபி மானத்துடன் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும், ஸ்ரீலங்கா அரசும் மீனவர்களை அவ்வாறு நடத்த உறுதி அளித்ததாகவும் தகவல் தரப் பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. தொடர்ந்து இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருகிறார்கள். பரந்த நீர்ப்பரப்பில் மீன் பிடிக்கும்போது, அவர்கள் எல்லை யைத் தாண்டிப் போகிறபோது, அவர்களை எச்சரித்து விடலாம் அல்லது தண்டனை தர வேண்டுமென்றாலும் தண்டனை தந்து அனுப்பலாம். அதை விட்டுவிட்டு துப்பாக்கிப் பிரயோகத்திலே ஸ்ரீலங்கா அரசினர் ஈடுபட்டு வரு கிறார்கள். இதை அடிக்கடி மத்திய அரசுக்குச் சொல்லி கண்டித்து வரு கிறோம். ஆகவே இப்படிப்பட்ட பிரச்சினைகளில் அரசு தீவிரமாக இருக் கிறது. மீனவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதிலே இந்த அரசு உறுதி யாக இருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரி வித்தபடி, மீனவர்களைக் காக்க இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம். குறிப்பாக இராமேஸ்வரமே இனி இல்லாமல் அந்தப் பகுதியையே பயன்படுத்த முடியாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆண்டுதோறும் அவர்கள் பிடித்த கணக்கையும், இப்போது அவர்கள் பிடித்துள்ள கணக்கையும் பார்க்கும்போதே, இது தெரியும். இட



1986 ஏப்ரல் 17]

பகுதியில் செல்பவர்கள் இனிமேல் வாலிநோக்கத்திற்குப் போனால், பிறகு இராமேஸ்வரமே இருக்காது. சுற்றுலா பயணிகளும் இத்தகைய தாக்குதலால் இராமேஸ்வரத்திற்கு வர அஞ்சுகிறார்கள். அவர்கள் மீனவர்களையெல்லாம் விடுதலைப் புலிகளைப் போல கருதி செயல்படுகிறார்கள் என்றால், விடுதலைப் புலிகளை அவர்கள் என்ன பாடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்மாலே அறிய முடிகிறது. ஆகவே இதையெல்லாம் மனதிலே கொண்டு இதிலே நாம் உறுதியாக இருந்து, நம்முடைய மீனவர்கள் இழந்த பொருள் களைப் பெறுவதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். ஐ.நா. போன்ற ஸ்தாபனங்களில் இப்பிரச்சினையை மத்திய அரசு எழுப்பி நம்முடைய உரிமை களை நிலைநாட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய முயற்சிகளில் இந்த அரசு ஈடுபட்டு மீனவர்களின் நல்வாழ்வைக் காக்கும் என்று நம்புகிறேன். ஏனென்றால் நாம் இழந்த பொருள்களுக்கு ஆதாரம் இருக்கிறது. பலர் இது அறியாமல் நடந்து விடுகின்ற நிகழ்ச்சி என்று கருது கிறார்கள். அப்படியல்ல என்பதற்கு நம்மிடையே நல்ல ஆதாரம் இருக் கிறது. அதையெல்லாம் வைத்து உலக நீதிமன்றத்தின் மூலமாகவும், ஐ. நா. ஸ்தாபனத்தின் மூலமாகவும் இந்திய அரசின் வாயிலாக எடுத்துரைக்க இந்த அரசு வற்புறுத்துமா? அதைத் தொடர்ந்து இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: நீண்ட காலமாக கச்சத் தீவு இந்தியா வசம் இருந்தது. கச்சத் தீவை எதிர்பாராமல் நாம் அவர்களுக்குக் கொடுக்கப்போக, நம்முடைய இராமேஸ்வரம் பகுதியில் மீனவர்கள் மீன் பிடிக்கும் எல்லை குறுகிவிட்டது; அவர்கள் அந்தப் பகுதியிலே மீன் பிடிக்கச் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நாம் நம்முடைய மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கி அதற்கு அவர்களிடம் அனுமதி வாங்கி நம் முடைய மீனவர்களை மீன் பிடிக்க வைக்க வேண்டும். இல்லையென்றால், மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி, கச்சத் தீவை நம் வசம் ஒப்படைக்க மத்திய அரசின் மூலமாக முயல வேண்டும். இப்படி பல்வேறு பிரச்சினைகளில் அரசு கவனம் செலுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அமைச்சர் அவர்கள் கூறிய விவரங்களி லிருந்து ஸ்ரீலங்காவின் கப்பற் படையின் வலிமை அதிகமாக இருப்பதைப் போலவும், இந்தியத் தரப்பிலே போதுமான கப்பற்படை இல்லாத காரணத் தாலே, நம்முடைய மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது போலவும் கருத்து தோன்றுகிறது. நியாயமான முறையில் மீன் பிடிக்கச் செல்லும் நம் முடைய மீனவர்களைப் பாதுகாக்க மத்திய அரசு போதுமான அளவிற்கு அல்லது அதிக அளவிற்கு கப்பற்படையை அனுப்ப வேண்டுமென்று என் நம்

முடைய அரசு வலியுறுத்தக் கூடாது? அப்படி நம்முடைய அரசு வலியுறுத்தி யிருக்கிறதா? அப்படி வலியுறுத்தியிருந்தால், அதன் மீது மத்திய அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** அதை வலியுறுத்தியதன் காரணமாகத்தான், வெளிவிவகார அமைச்சகத்துக்கும் சம்பந்தப்பட்ட கப்பற்படை மற்றும் கடலோர காவற்படை தளபதிகளுக்கும் தெரிவித்து தீவிர ரோந்துப் பணி செய்ய அரசு உடனுக்குடன் தந்தி மற்றும் துரித கடிதம் மூலம் நடவடிக்கை எடுத்து வந்துள்ளது.

நம்முடைய மீனவர்கள் தக்க பாதுகாப்புடன் மீன் பிடிக்கவும் ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதலை முறியடிக்கவும் இந்திய கடலோர காவற் படை தனது மூன்று பெரிய கப்பல்களையும், மாற்று அடிப்படையில் ரோந்துப் பணி செய்ய கப்பற்படை தனது மூன்று கப்பல்களையும் தயார் நிலையில் வைத்துள்ளது. நிரந்தரமாக ஒரு கடலோர கப்பற்படைக் கப்பலும் ஒரு கப்பற்படைக் கப்பலும் தினந்தோறும் ரோந்துப் பணி செய்கின்றன.

இதற்கிடையில் இந்திய கடலோரக் கப்பற்படையைச் சார்ந்த ஒரு விமானம் வாரத்தில் ஐந்து நாட்கள் இந்திய ஸ்ரீலங்கா கடல் எல்லைப் பகுதி யில் ரோந்துப் பணி பாதுகாப்புக்கென சென்று வருகிறது. இந்திய கப்பற் படையைச் சார்ந்த மற்றொரு விமானமும் தினந்தோறும் ரோந்துப் பணி செய்து வருகிறது. ஆகவே தீவிரமாக நாங்கள் இதிலே கவனம் செலுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த மாண்புமிகு முதலமைச்சருக்குப் பாராட்டுரை.

(முற்பகல் 10-40)

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உலகத் திலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற தமிழர்கள் எல்லாம் பாராட்டுகின்ற வகை யில் உலகத் தமிழ் சங்கத்தைத் தோற்றுவித்த மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கு தங்கள் மூலமாக என் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் வற்புறுத்தல் இல்லாமலேயே நேற்றே இதிலே நான் ஒன்றைச் சொல்வதாக இருந்தேன். ஒரு திருமணத்திற்குப் போயிருந்ததால் சரியான நேரத்தில் வரமுடியாமல் போய்விட்டதால், நேற்றே அதை எடுத்துக் கொள்ள முடியவில்லை. திரு. ஜேப்பியார் அவர்கள் கேட்டுக் கொண்டதற் காக மட்டுமல்ல, அவையில் உள்ள எல்லோருடைய விருப்பமும் அதுவாகத் தான் இருக்கும். என் சார்பிலும் இந்த அவையின் சார்பிலும் நம் முதல்வர் அவர்களுக்கு நம்முடைய வாழ்த்துதலையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே நான் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது முதல் தமிழ்ச் சங்கமா, இரண்டாவது தமிழ்ச் சங்கமா, மூன்றாவது தமிழ்ச் சங்கமா என்றெல்லாம் வாதிக்கப்பட்டிருக்கின்றது. உலகத் தமிழ்ச் சங்கம் என்ற முறையிலே பாராட்டுகிறோம். முன்னே இருந்த சங்கங்கள் எல்லாம் ஆற்றிய நற்பணிகளை நாம் அலட்சியப்படுத்த முடியாது. அந்தந்தக் காலத்திற்கு எது தேவைப்பட்டதோ, அதற்கேற்ப பணியாற்றியிருக்கின்றன. பிற மொழி களின் ஆதிக்கங்களை அகற்றப் பாடுபட்டன முன்பிருந்த சங்கங்கள். அதன் தொடர்பாக இந்த உலகத் தமிழ்ச் சங்கமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே உங்கள் மூலமும் இந்த அவையின் மூலமாகவும் என்னுடைய வாழ்த்துக் களையும் பாராட்டுதல்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் கூறிக் காள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தாங்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தீர்கள். எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் அதைப்பற்றி பாராட்டிச் சொன்னால் சிறப்பாக இருக்குமே என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவர் சார்பிலேயும் நான் சொன்னதாக வைத்துக்கொள்ளலாம். அவர்கள் சொன்னால் நான் அதைத் தடை பண்ணப் போவதில்லை.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்து மாண்புமிகு முதலமைச்சரின் குறுக்கீட்டு முயற்சி காரணமாக இதுவரையிலும் தரப்படவில்லை.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** நான் வேண்டுமென்றால் இரண்டு, மூன்று நாட்கள் கழித்து சொல்கிறேன். இப்போது டாக்டர் கலைஞர் அவர் கள் அதைப்பற்றி அறிவித்தால் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தமிழுக்காக உண்மையிலே பாடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மனதார வாழ்த்தக் கடமைப்பட்டிருக் கிறேன்.

[1986 ஏப்ரல் 17

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** போதும், போதும். இதுவே விவாத மாக ஆகிவிட வேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** அவர்கள் சொன்னதையே அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வழங்கிய பாராட்டாக எடுத்துக்கொண்டு நான் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### 8. தகவல் கோரல்.

### (1) வானொலியில் சட்டமன்ற நிகழ்ச்சிகளைத் தவறாக வெளியிடுவது குறித்து.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வானொலி சம்பந்தமாக தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, விளக் கத்தைத் தெரிந்துகொள்வதற்காக சிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விரும்பு கிறேன். கடந்த 3 ஆம் தேதி அன்று, நம்முடைய அவையினுடைய செய்தி களை வெளியிடுகின்ற வானொலி தொகுப்பு நிகழ்ச்சிக்கு என்று தினந்தோறும் 5 நிமிடங்கள் ஒதுக்குகின்றார்கள், அதிலே தவறு ஏற்பட்டது என்று நான் சுட்டிக்காட்டினேன். அதற்குத் தாங்கள் ஒரு விளக்கத்தைத் தந்து, அதையே நாங்கள் தீர்ப்பு என்று எடுத்துக்கொண்டோம். அடுத்த நாள் 4 ஆம் தேதி அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும், வானொலி சரியான தகவலைத் தரவில்லை என்று எடுத்துரைத்தார்கள். அப்போது அவை முன்னவர் அவர்களும் குறுக்கிட்டு, இந்த அவையினுடைய கண்ணியத்தை வானொலி கெடுக்கிறது என்று பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். அதே நேரத்திலே நம்முடைய அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்களும் அதே கருத்தை ஒட்டி சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களும் அதே கருத்தை ஒட்டி தன் கருத்துக் களைத் தெரிவித்தார்கள். பிறகு தாங்களும் அறிவிப்பைத் தந்திருக்கின் றீர்கள். தாங்கள் கடிதம் எழுதி இந்த அவைக்கு விளக்கம் தருவதாக அறிவித் திருந்தீர்கள். ஆனால் நேற்றையதினம் ஒன்று நடந்தது. இதிலேதான் நாம் கவனிக்க வேண்டும். இந்த அவையை நேற்றையதினம் முழுநேரமாக நடத்திச் சென்றவர் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் என்றும் இடையிலே சிறிது நேரம் நம்முடைய அனகாபுத்தூர் திரு. இராமலிங்கம் அவர்கள் நடத்திச் சென்றார் என்றும் செய்தியை நேற்று 7 முதல் 7-10 மணி வரை வருகின்ற செய்தியிலே குறிப்பிட்டார்கள். ஆனால் தாங்கள் இந்த அவையிலே வந்து அமர்ந்திருந்தீர்கள். தமிழ் நாட்டினுடைய





முதல்வர் அவர்களும் இந்த அவையிலே வந்து அமர்ந்திருந்தார்கள். நீங்கள் அவைக்கு வரவில்லை என்ற தோற்றத்தை நேற்றையதினம் வானொலி தமிழ் நாட்டிற்கு அறிவித்திருக்கின்றது. நாங்கள் அதைப்பற்றி அடிக்கடி இந்த அவையிலே எழுந்து கேட்டுக்கொள்வதும், தாங்கள் விளக்கம் தருவதும் அல்லது கூப்பிட்டுப் பேசுகிறேன் என்று சொல்வதும் ஒரு மரபாக இருந்துகொண்டிருக் கின்றது. நான் தலைவர் அவர்களை மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன். இங்கே தமிழ் நாடு முதல் அமைச்சராக இருந்தாலும் சரி, அது டாக்டர் கலைஞராக இருந்தாலும் சரி, லட்சக்கணக்கான மக்களின் பிரதிநிதி யாக அவர்கள் இருந்தாலும், இந்த அவையிலே "நீங்கள் அமருங்கள்" என்று சொன்னால், அந்த உங்களுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அமர வேண்டிய வர்களாக இருக்கின்றார்கள். அவையிலே உறுப்பினர் யாராவது வரம்பு மீறிப் பேசினால் அவர்களை வெளியேற்றத் தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

(முற்பகல் 10-45)

ஆனால் வானொலிக்கு தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அவர்கள் இப்படிப்பட்ட தவறான தகவல்களைத் தொடர்ந்து தந்து கொண் டிருக்கிறார்கள். இதிலே எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். தலைவரவர்களிடம் சொல்ல விரும்புவது, இப்படி வானொலிக்கு எழுதுகின்றவரை இன்றைய தினமே வெளியேற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தினந்தோறும் வானொலி பற்றிப் பேசிக் கொண்டிருப்பதும், அது இருட்டடிப்பு செய்வதும், தவறான தகவல் களைத் தந்து கொண்டிருப்பதும், தொலைக் காட்சி தொல்லைக் காட்சியாக இருப்பதும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இந்த அவையை என்னவென்று அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்று தங்கள் மூல மாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் என்னைப்பற்றி—இந்த அவையினுடைய தலைமையைப்பற்றி எடுத்துக் காட்டிய செய்தியை, அவர்கள் சொல்லித்தான் நான் அறிகிறேன். இதற்கு முன்னாலே இரண்டு முறை, இரண்டு உறுப்பினர்கள், திரு. சீத்தாபதி அவர்களும், திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவைகளும் கடுமையான குற்றச்சாட்டுகள்தான். அதிலே அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் ஒருமித்த கருத்தாகச் சொல்லி, அதற்குக் கண்டனம் எழுப்ப வேண்டுமென்று சொன் னார்கள். "மத்திய அரசுக்குக்கூட தெரிவிக்கிறோம்" என்று அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு, அலுவலகத்திலிருந்து கடிதம்

போயிருக்கிறது, வானொலித் துறை இயக்குநருக்கு. இவ்வளவு நடந்த பிறகும், செய்தி அறிவிக்கிறவர்கள் இவ்வளவு எச்சரிக்கை இல்லாத நிலையில் இருக்கிறர்கள் என்பது ரொம்ப வருத்தமாக இருக்கிறது. ஒருவேளை இது அவை உரிமைப் பிரச்சினையாகக்கூட இருக்கக்கூடிய பெரிய குறையாகும். எதிர் மறையிலே, அவைத் தலைவர் இன்று வரவில்லை என்று மக்களுக்கு எடுத்துக் காட்ட அறிவிக்கும் முயற்சியாக இது தெரிகிறது. "முழு நேரம்" என்று சொன்னால், முழு நேரம் இரண்டு பேர்தான் நடத்தினார்கள், தலைவர் வரவில்லை என்று எடுத்துக்காட்டும் உள் நோக்கம் இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் சொல்லுவது சரி என்று நம்பிச் சொல்கிறேன். . . .

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவரவர்களே, நான் அதற்குப் பொறுப்பு வற்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆக, இது ரொம்ப தவறான முயற்சி. வானொலி நிறுவனம் தனக்குப் பெருமை தேடிக் கொள்ள வேண்டும். நான் எப்போதும் நம்புகிறேன், வானொலியாக இருந்தாலும், தொலைக் காட்சி நிலையமாக இருந்தாலும், நம்முடைய தமிழ் நாடு சம்பந்தப்பட்ட எழுத்தாளர் கள், கலைஞர்கள் எல்லாம் திறமையானவர்கள், எச்சரிக்கையாக நடப்பவர்கள் என்று எண்ணுபவன். அதற்கு மாறாக அடுத்தடுத்து இப்படி வானொலி நிறுவனம் நடப்பது சரியல்ல. இந்த விஷயத்தில் வானொலி நிலைய இயக்கு நரை அழைத்துப் பேசுகிறேன். அதற்கிடையில் வானொலி நிலைய இயக்கு நரின் பதில் கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது வந்ததும் அவைக்குத் தெரிவிக்கிறேன்.

**திரு. ஜேப்பியார் :** தலைவரவர்களே, ஒரே ஒரு கருத்து சொல்ல விரும்பு கிறேன். வானொலி நிலையத்திற்கும், தொலைக் காட்சி நிலையத்திற்கும் தகவல் தருகிறவர்கள் அங்கே பணியாற்றும் நிரந்தரப் பணியாளர்கள் அல்ல. அப்படி எழுதிக் கொடுப்பவர்கள் சம்பளம் பெற்றுக்கொண்டு, எழுதித் தரு கிறார்கள். அதைத்தான் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே தொலைக் காட்சி நிலையமானாலும், வானொலி நிலையமானாலும் நிரந்தரப் பணியாளர் களை அவர்கள் அனுப்பினால்தான், அவர்கள் பொறுப்பு ஏற்க முடியுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையின் சார்பிலே பேசுகிறார்களா அல்லது அவர்கள் சார்பில் சொல்லு கிறார்களா ?



**திரு. ஜேப்பியார் :** தலைவரவர்களே, இங்கே வருகிறவர்கள் அப்படி எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். அதனால்தான் தவறு நடக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### (2) லிபியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து, மேலவை தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரவேண்டுமென்பது குறித்து

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, இந்த அவைக்கு என்று தனிச் சிறப்பு இருக்கிறது. நேற்று, நாடாளுமன்றத்திலே, அதனுடைய மரியாதை உயரக் கூடிய வகையிலே, எல்லா உறுப்பினர்களும், கட்சி வேறுபாடு இல்லாமல், லிபியா மீது அமெரிக்கா தாக்குதல் தொடர்ந்து, அதன் காரணமாக உலக யுத்தம் வரக்கூடிய அபாயம் இருக்கிறதென்ற காரணத்தால், அதைக் கண்டனம் செய் திருக்கிறார்கள். அந்த அவையினுடைய மரியாதை உயரக்கூடிய அளவுக்கு அதனுடைய தலைவரே அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தங்களுடைய மரியாதை உயர்த்தப்பட வேண்டுமென்பதில் எங்களுக்கு அக்கறை இருக்கிறது. தாங்களும் இந்த அவையிலே அப்படி ஒரு தீர்மானத் தைக் கொண்டுவந்து அந்த ஆக்கிரமிப்பைக் கண்டிக்கலாம். தங்களுக்கு இந்த விஷயங்கள் எல்லாம் அத்துப்படி. ஆகவே தாங்களே அதைப்பற்றி ஓரிரு வார்த்தை சொன்னால், இந்த அவையின் கௌரவம் உயரும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நாடாளுமன்றம் கண்டித்தது என்றால் நாம் எல்லோரும் சேர்ந்து கண்டித்த முறைதான். இது சர்வதேசப் பிரச்சினையானதால் இதற்கு நாடாளுமன்றம்தான் சரியான இடம். அந்த இடத்திலேயே இது கண்டிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய சொந்த அபிப்பிராயம் சொல்லச் சொன்னால், இந்தக் கண்டனத்திலே நம் எல்லோ ருக்கும் பங்கு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்பு.

### (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது :—

| | | |
|---|---|---|
| 18—4—1986 | — | 1. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம். |

2. 20—4—1986 அன்று ஓய்வு பெற விருக்கும் உறுப்பினர்களுக்கு பாராட்டுரை பகர்தல்.

19—4—1986 — கூட்டம் இல்லை.

20—4—1986 — ஞாயிறு—விடுமுறை.

21—4—1986 — கூட்டம் இல்லை.

22—4—1986 — மகாவீர் ஜெயந்தி—விடுமுறை.

23—4—1986 — 1. புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்பு.
2. கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம்.

24—4—1986 — கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம்.

25—4—1986 — கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம்.

26—4—1986 — சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.

27—4—1986 — ஞாயிறு—விடுமுறை.

28—4—1986 — மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.

29—4—1986 — பிற்பட்டோர் நலன், பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.

(முற்பகல் 10-50)

30—4—1986 — தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.



1—5—1986 — மே தினம்—விடுமுறை.

2—5—1986 — கூட்டம் இல்லை.

3—5—1986 — காலை 10 மணி—தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம்.

மாலை 4-30 மணி—சாலைகளும் பாலங்களும் மற்றும் சாலை போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்புரைகள் மீது விவாதம்.

4—5—1986 முதல் 8—5—1986 வரை — கூட்டம் இல்லை.

9—5—1986 — நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவினை ஆய்வு செய்தல்.

10—5—1986 — தனி உறுப்பினர் அலுவல்.

11—5—1986 — ஞாயிறு—விடுமுறை.

12—5—1986 — 1. அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.
2. 26—6—1986 அன்று ஓய்வு பெறவிருக்கும் உறுப்பினர்களுக்குப் பாராட்டுரை.

13—5—1986 மற்றும் 14—5—1986 — அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

18—4—1986 அன்று கேள்வி நேரம் இல்லை. மேலவை வழக்கம்போல் காலை 10-00 மணிக்குக் கூடும்.

(2) மேலவைத் தலைவர் 16—4—1986 ஆம் நாளன்று அவைக்கு வந்தமை குறித்து வானொலிக்கு அறிவித்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே சொன்ன வானொலி பற்றி ஒரு செய்தியை இங்கே சேர்த்துச் சொல்கிறேன். நானே அதுகுறித்து சொல்லாமல் இருப்பது தர்மமாகாது என்பதால் சொல்கிறேன். நேற்றைக்கு நானே அவையில் வந்து அமர்ந்திருந்தேன். காமன்வெல்த் பாராளுமன்ற சங்கம் பற்றிய கூட்டத்தில் கலந்துகொண்டு நான் என் அறையில் தான் அமர்ந்திருந்தேன். துணைத் தலைவர் அவர்கள் நல்ல திறமை வாய்ந்தவர்கள், அதுவும் அவர்கள் கேள்வி நேரத்தில் தலைமை தாங்கியிருக்கும்போது வருவது சரியல்ல என்பதால், அந்த நேரத்தில் வராமல் நான் என் அறையிலேயே இருந்தேன். ஆக, நான் நேற்றைக்கு நாள் பூராவும் இங்கேயே இருந்திருக்கிறேன் என்பது வானொலிக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

**வேளாண் விளைபொருள் விற்பனைச் சங்க ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்குரிய ஊதியம், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை போன்றவற்றை வழங்க ஆணை வெளியிடாதது குறித்து.**

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"வேளாண் விளைபொருள் விற்பனை சங்க ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஏற்று ஆணையிட்டும், அவர்களுக்கு ஊதியம், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை முதலியவைகளை வழங்க ஆணை வெளியிடாதது குறித்து".

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தமிழக அரசின் வேளாண்மைத் துறையால் 17—11—1981 அன்று அரசு ஆணை எண் 2035 மூலம் அனைத்து வேளாண் விளைபொருள் விற்பனைச் சங்க ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கி உத்தரவிட்டது. ஆனால் ஓய்வூதியம், பணிக்கொடை போன்றவைகள் குறித்து தனியாக ஆணையிடப்படும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார்கள். அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து ஊதியம், பணப்படி போன்றவைகள் குறித்து தனியாக ஆணை வெளியிடப்பட்டது.

@ 301-303 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





[illegible] தனியாக ஆணை [illegible] ஆணை வெளியிட இருக் [illegible] விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** [illegible] வெளியிடப்படும். [illegible] பணிக்கொடை, [illegible] கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** பணிக்கொடை, ஓய்வூதியம் போன்றவைகள் [illegible]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : [illegible] செய்யும்.

6. அரசின் தீர்மானம்.

தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம்.

[illegible] @ [illegible]

@ 313-332 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) மேலவைத் தலைவர் 16—4—1986 ஆம் நாளன்று அவைக்கு வந்ததை குறித்து வானொலிக்கு அறிவித்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே சொன்ன வானொலி பற்றி ஒரு செய்தியை இங்கே சேர்த்துச் சொல்கிறேன். நானே அதுகுறித்து சொல்லாமல் இருப்பது தர்மமாகாது என்பதால் சொல்கிறேன். நேற்றைக்கு நானே அவையில் வந்து அமர்ந்திருந்தேன். காமன்வெல்த் பாராளுமன்ற சங்கம் பற்றிய கூட்டத்தில் கலந்துகொண்டு நான் என் அறையில் தான் அமர்ந்திருந்தேன். துணைத் தலைவர் அவர்கள் நல்ல திறமை வாய்ந்தவர்கள், அதுவும் அவர்கள் கேள்வி நேரத்தில் தலைமை தாங்கியிருக்கும்போது வருவது சரியல்ல என்பதால், அந்த நேரத்தில் வராமல் நான் என் அறையிலேயே இருந்தேன். ஆக, நான் நேற்றைக்கு நாள் பூராவும் இங்கேயே இருந்திருக்கிறேன் என்பது வானொலிக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

வேளாண் விளைபொருள் விற்பனைச் சங்க ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்குரிய ஊதியம், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை போன்றவற்றை வழங்க ஆணை வெளியிடாதது குறித்து.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"வேளாண் விளைபொருள் விற்பனை சங்க ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஏற்று ஆணையிட்டும், அவர்களுக்கு ஊதியம், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை முதலியவைகளை வழங்க ஆணை வெளியிடாதது குறித்து".

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தமிழக அரசின் வேளாண்மைத் துறையால் 17—11—1981 அன்று அரசு ஆணை எண் 2035 மூலம் அனைத்து வேளாண் விளைபொருள் விற்பனைச் சங்க ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கி உத்தரவிட்டது. ஆனால் ஓய்வூதியம், பணிக்கொடை போன்றவைகள் குறித்து தனியாக ஆணையிடப்படும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார்கள். அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து ஊதியம், பயணப்படி போன்றவைகள் குறித்து தனியாக ஆணை வெளியிடப்பட்டது.

---

@ 301-303 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ஆனால் ஓய்வூதியம், பணிக்கொடை, விடுப்பு போன்றவைகள்பற்றி ஏற்கெனவே அரசு ஆணையில் சொல்லியிருந்தவாறு இதுநாள் வரை தனியாக ஆணை வெளியிடவில்லை. எப்போது அரசு அதுபற்றி ஆணை வெளியிட இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** அதுபற்றி விற்பனைத் துறை இயக்குநர் மாநில கணக்காய்வுத் தலைவரிடம் சில தெளிவுரைகள் கேட்டிருக்கிறார்கள். அது கிடைக்கப் பெற்ற பிறகு அரசு ஆணை வெளியிடப்படும். அப்படி ஆணை தனியாக வெளியிடப்படா விட்டாலும் கூட, பணிக்கொடை, ஓய்வூதியம் போன்றவைகளை நிறுத்தி வைக்கவில்லை. விற்பனைத் துறையால் அது முறையாக வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** பணிக்கொடை, ஓய்வூதியம் போன்றவைகள் கொடுக்கப்படுகின்றன என்றாலும் புரொவிஷனல் ஆகத்தான் கொடுக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதுபோல் முழுமையாக அவர்கள் கொடுக்கவில்லை. இதுபற்றி திருச்சியிலுள்ள வேளாண் விளைபொருள் விற்பனை இயக்குநருக்கு முறையாக விண்ணப்பித்திருந்தாலும் கூட, அவர்களுக்குச் சரியான தகவல்கள் கிடைக்கவில்லை. தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில்,' 19 பேர் ஓய்வு பெற்றிருக்கிறார்கள். அதில் 3 பேர் இறந்து போயிருக்கிறார்கள். அவர்களும் புரொவிஷனல் ஓய்வூதியம்தான் பெறுகிறார்கள். அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவதுபோல் முழுப் பென்ஷன் அளிக்கப்படவில்லை. அவர்கள் காலம் பூராவும் பணியாற்றிவிட்டு இறுதி நாளில் சந்தோஷமாக இருக்க வேண்டும். அவர்கள் மனநிறைவுடன் வாழ்வதற்காக மிக விரைவில் மாநில கணக்காய்வு அதிகாரியிடமிருந்து தெளிவுரையை வலியுறுத்திப் பெற்று அரசு ஆணையை வழங்குவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அரசு ஆவன செய்யும்.

**6. அரசின் தீர்மானம்.**

**தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம்.**

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்காஒமூஇந்துந் கருஷீடி த.சுதுாபய்டிட்ள்
" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழகத்தின் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

@ 303-332-ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 17

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

(முற்பகல் 10-55)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக்குறிப்பின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பருவ மழையை நம்பியிருக்கிற நம்மைப் போன்ற, தமிழ் நாடு போன்ற மாநிலங்களில் பருவ மழை சீராக இருக்கிற போதும், தேவையான நீர்ப்பாசன வசதி கிடைக்கிற போதும் உணவுப் பிரச்சினை என்பது ஏற்படுவதில்லை. இன்றைய நிலையில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்பதையும், விலைவாசி உயர்வு கட்டுக்குள் இருக்கிறது என்பதையும் விநியோக முறை சீராகவும் சரியான முறையிலும் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிற உணவு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். உணவு அமைச்சரைப் பொறுத்தவரை நெருக்கடியான நேரங்களில்தான் அவருடைய முக்கியத்துவம் வெளியே தெரியும். நெருக்கடி இல்லாத நேரங்களில் உணவு அமைச்சர் இருக்கிற இடமே தெரியாது. உணவுத் தட்டுப்பாடு ஏற்படும்போது, உணவு அமைச்சருக்கு முக்கியத்துவம் ஏற்படும். அப்போதுதான் உணவு அமைச்சரைப் பற்றி வெளியே தெரியும். சாதாரண நிலைமையில் " Everything goes well " என்ற நிலைமை இருக்கும்போது, உணவு அமைச்சர் இருக்கிற இடமே தெரியாது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே, இப்படிப்பட்ட நெருக்கடிப் பிரச்சினை ஏற்படுகிற நிலைமை இன்று தமிழகத்தில் இல்லையென்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். உணவு அமைச்சரும் மகிழ்ச்சியடைவார் என்று எதிர்பார்க்கிறோம். இருந்தாலும் உணவு நிலைமையைப் பொறுத்தவரையில், ஒருசில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில், முதல் பத்தியில் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே மாநிலத்தில் உணவுத்தேவை, உணவு உற்பத்தி பற்றி சொல்லிவிட்டு, கொள்முதல் மற்றும் பற்றாக்குறைக்கான காரணங்களைச் சொல்லிவிட்டு, ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.



1986 ஏப்ரல் 17] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அண்மையில் 1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட சில தட்டுப்பாட்டுக்குக் காரணம்
சொல்கிறபோது, பருவ மழை காலந்தாழ்ந்து பெய்தமையும், மாநிலத்தில்
முக்கிய நீர்த்தேக்கங்களில் உள்ள குறைந்த நீர் மட்டமும் ஆகும் என்று
சொல்லப்பட்டிருக்கிறது. இது தமிழகத்தைப் பொறுத்தவரையில், வாடிக்கை
யான ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. பருவமழை பெய்யும்போது, அந்தப்
பருவ காலத்தில் தேவைக்கு அதிகமான மழை பெய்து வெள்ளச் சேதம்
ஏற்படுவதும், அப்படி பருவ காலங்களில் மழை பெய்யாமல் பல்வேறு பகுதி
களில் வறட்சியை ஏற்படுத்திவிடுவதும் தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும்
ஏற்படுகிற கட்டாய நிலைமையாக இருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்சினையை
ஒப்பிட்டுப்பார்த்தால், காவிரி நீர்ப் பிரச்சினைதான் நம் ஞாபகத்திற்கு வரு
கிறது. இன்றைய நிலையில், காவிரி நீர்ப் பிரச்சினை என்பது, விவசாயப்
பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக இருக்கிறது. இது
தமிழகத்தின் உணவு உற்பத்தியைப் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக இருக்
கிறது. இந்தப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை. இதன் காரணமாக
தமிழகத்தில் தஞ்சை மாவட்டம் மட்டுமல்ல, உணவு உற்பத்தியில் அதிக அளவு
பங்கு வகிக்கக் கூடிய பல்வேறு மாவட்டங்களில் காவிரி நீர்ப் பிரச்சினை முக்கிய
மாக இருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் தமிழக அரசுத் தரப்பில் சொல்லப்
பட்ட ஒரு செய்தியைக் கேள்விப்பட்டோம். " இன்னும் ஒரே ஒரு முறை
இதுபற்றி பேசுவோம். அப்படியும் பிரச்சினை தீரவில்லையென்றால், கோர்ட்
மூலம் தீர்வு காணப்படும்" என்ற செய்தியைக் கேள்விப்பட்டோம். எங்க
ளுக்கு ஒரு சந்தேகம். இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை வரும்போது, அது
கர்நாடக மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் இருக்கிற ஒரு பிரச்
சினையைப் போல மத்திய அரசு கருதி நடந்து கொண்டிருக்கிறதோ என்று
சந்தேகம் இருக்கிறது.

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றியும், தெலுங்கு—கங்கா பிரச்சினை பற்றியும்
சில கருத்துக்களை பிரதமர் அவர்கள் சொன்னார்கள், அண்மையில் ஆந்திரா
விலும் கர்நாடகத்திலும் அவர்கள் சுற்றுப்பயணம் செய்தபோது. இதைச்
சொல்லும்போது, சம்பந்தப்பட்ட இரண்டு மாநிலங்களும் பேசித் தீர்த்துக்
கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். காவிரி நீர்ப் பிரச்சினையில்
கர்நாடகமும் தமிழகமும், தெலுங்கு-கங்கை பிரச்சினையில் கர்நாடகமும்,
ஆந்திரமும் தமிழ் நாடும் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்தை
அவர்கள் சொல்லியிருக்கும்போது, எங்களுக்கு ஒரு சந்தேகம் இயற்கையாக
வருகிறது

பக்ரா நங்கல் பிரச்சினையில், அந்த நீரை மாநிலங்களுக்கிடையே பகிர்ந்து கொள்வது என்ற பிரச்சினை வந்தபோது, மத்திய அரசு எந்த அளவுக்கு அக்கறை காட்டியதோ அந்த அளவுக்கு தமிழகத்தினைப் பொறுத்தவரை காட்டியிருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல முடியும். ஆகவே பக்ரா நங்கல் பிரச்சினையைப் பொறுத்தவரை ஒரு அணுகுமுறை தமிழகத்தைப் பொறுத்தவரை இன்னொரு அணுகுமுறை என்ற அளவுகோல் மத்திய அரசுக்கு இருந்தால், அது சரியான தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் காரணமாக மத்திய அரசுக்கே உண்மையான தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை இருக்கிறதா என்ற சந்தேகமும் எங்களுக்கு இருக்கிறது. இன்றைய தினம் கங்கை நீரைச் சுத்தப்படுத்துவதற்காக மத்திய பட்ஜெட்டிலேயே 100 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற செய்தியையும் நாம் பார்க்கிறோம்.

(முற்பகல் 11-00)

அதே கங்கை நதியின் உபரி நீரை வறட்சி ஏற்படுகிற மாநிலங்களின் பாசனத்திற்கும், குடிநீருக்கும் பயன்படுத்துகிற திட்டத்தைப்பற்றி ஆரம்ப சிந்தனைகூட இல்லாதிருக்கிறதென்றால், மத்திய அரசுக்குத் தேசியக் கண்ணோட்டமே குறைந்து வருகிறதோ, குறுகிய மனப்பான்மையே வளர்ந்து வருகிறதோ என்று சந்தேகம் ஏற்படுகிறது.

பக்ரா நங்கல் திட்டம் என்றால், ஓர் அணுகுமுறை, தெலுங்கு-கங்கா திட்டம் என்றாலோ, காவிரி நீர்ப் பிரச்சினை என்றாலோ வேறொரு அணுகுமுறை என்று மத்திய அரசு பின்பற்றுமானால், இங்கே கட்சிப் பாகுபாடுகள் குறுக்கே வருகின்றனவோ என்கிற சந்தேகம் ஏற்படுகிறது. இங்கே வேறு கட்சிகள் ஆள்வதால் இந்த நிலைமையா என்கிற சந்தேகம் வருகிறது. இதையெல்லாம் நாம் எடுத்துச் சொல்லி பிரச்சினைகளைத் தீர்க்க வாதாடிப் போராட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினை, தமிழகத்தினுடைய உணவு நிலைமையைப் பாதிக்கக்கூடிய அடிப்படையான பிரச்சினை என்பதை உணர்ந்து, இன்னும் வலிமையாக வாதாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், கர்நாடக அரசு யாருடைய ஆட்சியின்கீழ் இருந்தாலும் சரி, அது காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி அல்லது காங்கிரஸ் அல்லாத அரசாக இருந்தாலும் சரி, அங்கேயுள்ள மக்கள் என்ன நினைப்பார்களோ, காவிரி நீரைத் தமிழகத்திற்கு விட்டால் நமக்கு தண்ணீர் இல்லாமல் போய்விடுமோ? தேர்தலில் நாம் தோற்றுப் போய்விடுவோமோ" என்று





எல்லாக் கட்சியினருமே நினைக்கிறார்கள். அந்த அச்சம் அவர்களுக்கிருக்கிற காரணத்தினால், அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள், தாமதம் ஏற்படுத்துகிறார்கள். ஏதேனும் சாக்குப்போக்குச் சொல்லி பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கிற வழிகளிலே நடந்து கொள்கிறார்கள். தமிழக அரசு பல்வேறு முறைகளில் பேச்சு வார்த்தை நடத்தினாலும், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறையாக நான் மேலும் ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். கர்நாடக மாநில மக்களுக்கும், தமிழக மக்களுக்குமிடையே நல்லெண்ணம் ஏற்படுகிற வகையில், கர்நாடக மக்களுக்கும் நம் நல்லெண்ணங்களைத் தெரிவிக்கிற வகையில், தமிழகத்திலிருந்து சர்வ கட்சிக் குழு ஒன்று, கர்நாடக மாநிலம், பெங்களூருக்குச் செல்வதற்கான பயணம் ஒன்றை ஏற்பாடு செய்யலாம் என்ற ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும், இரண்டு மாநிலங்களிலும், அது தமிழகமாக இருந்தாலும் சரி, கர்நாடக மாநிலமாக இருந்தாலும் சரி, எடுக்கப்படக்கூடிய முடிவுகள் ஆளுகிற கட்சியினுடைய முடிவாக மட்டுமில்லாமல், அந்த அந்த மாநிலத்திலுள்ள அத்தனை கட்சிகளையும், இயக்கங்களையும் ஒன்றாகச் சேர்த்தே, சர்வ கட்சிக் கூட்டங்கள் கூட்டித்தான், ஒரே முடிவாகத்தான் எடுத்து வருகிறார்கள். அந்த முறையிலேதான் இரண்டு மாநிலத்திலேயிருக்கக்கூடிய அரசுகளும் முடிவுகள் எடுக்கின்றன. அந்த முடிவுகள் ஆளுகின்ற கட்சிக்கு மட்டும் சொந்தமானதாக இல்லாமல், மாநில சார்பில் அனைத்துக் கட்சிகளின் சார்பில் எடுக்கப்பட்ட முடிவாக இருக்கின்றன. ஆகவே அந்த முறையில் கர்நாடக அரசு மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் அந்த மாநிலத்திலுள்ள எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரஸ் மற்றும் அனைத்துக் கட்சிகளின் ஒப்புதலோடுதான் இருந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், நாம் இந்தப் பிரச்சினையில் ஓய்வு இல்லாமல் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வந்தாலும் கூட, கர்நாடக அரசும் அம் மாநிலத்திலுள்ள கட்சிகளும் வேகமான செயல்முறைக்குத் தங்களை ஆட்படுத்திக்கொள்ளாமல் காலதாமதம் செய்து வருகிறார்கள்;

Soft pedalling முறையை கடைப்பிடித்து வருகிறார்கள். நாம் தீவிரமாக முயன்று விரைந்து பேச்சு வார்த்தை நடத்திட தேதி கேட்டிருக்கிறோம். அவ்வாறு நடைபெறும் பேச்சு வார்த்தையின் முடிவில் வரக்கூடிய முடிவு நமக்கு சரியாக இருக்குமானால், அதை வரவேற்பதென்றும், அந்த முடிவுகள்

நம் மக்களுக்கு ஒவ்வாததாக அமையுமானால், அம் முடிவை எதிர்த்து மேல் நடவடிக்கை மேற்கொள்வதெனவும் ஏற்கெனவே முடிவு எடுத்திருக்கிறோம். அதை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இதில் கூடுதலாக ஒரு முயற்சியாகத்தான் என் கருத்தைச் சொன்னேன். சர்வ கட்சியினரின் ஒப்புதலையும் பெற்ற பிறகுதான் அந்த மாநில அரசு முடிவு எடுக்க வேண்டியிருக்கும். எனவே அந்த மக்களின் ஆதரவையும் அங்குள்ள சர்வ கட்சியினரின் ஆதரவையும் பெறுவதற்கு கர்நாடக மாநில அரசு ஒரு நல்ல முடிவை எடுப்பதற்குத் துணையாக இருக்கும் வகையில் நாமும் நம் சர்வ கட்சியினர் கொண்ட ஒரு தூதுக் குழுவை அங்கு அனுப்பி, அவர்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

(முற்பகல் 11-05)

காரணம் இதிலே campaign தேவை. நல்ல முறையில் campaign செய்தாக வேண்டும். நல்ல முறையிலே ஒரு இயக்கம் நடத்தப்படாவிட்டால், கர்நாடகத்திலேயிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் கொடுப்பதன் மூலமாக கர்நாடகம் பாதிக்கப்பட்டுவிடும், அங்கே விவசாயம் பாதிக்கப்பட்டுவிடும், அங்கே மக்கள் பாதிக்கப்பட்டுவிடுவார்கள் என்ற அச்ச நிலையை அங்குள்ள மக்களிடையே ஏற்படுத்தாமல் இருப்பதற்கும், குறுக்கே முட்டுக்கட்டை போடாமல் இருப்பதற்கும் ஒரு சரியான இயக்கம் நடத்தப்பட வேண்டும் . . .

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** துணைத் தலைவரவர்களே, ஒரு சிறிய திருத்தத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கர்நாடக மாநிலத்திலுள்ள மக்கள் ஏதோ அங்கிருந்து தண்ணீரை வாரிக் கொடுத்து விடவில்லை. தமிழக மக்களுக்கு உரிமையான அந்தக் காவிரித் தண்ணீரைக் கேட்கின்றோம் என்பதை நாம் வலியுறுத்தியாக வேண்டும். கர்நாடகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளாக இருந்தாலும் சரி, அல்லது விவசாய மக்களாக இருந்தாலும் சரி, ஒரு அரசு ஏற்கெனவே கொடுத்துவந்த, அமலில் இருந்த ஒப்பந்தத்தை மீறிக் கொண்டிருப்பது ஒரு அரசுக்கு அழகில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் அளவுக்கு இந்த விவரம் எடுத்துச் சொல்லப்பட வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் . . .





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்றைக்கு உள்ள கொள்கை விளக்கக் குறிப்பு உறுப்பினர் அவர்களுக்கும், உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்டது. ஆனால் இப்போது விவாதம் உறுப்பினர் அவர்களுக்கும், பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே உறுப்பினரவர்கள் விவாதத்தை மாற்றினால் நல்லது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** துணைத் தலைவரவர்களே, உணவுப் பிரச்சினையும் நீர்ப்பாசனத் துறையோடு இணைந்த ஒரு பிரச்சினைதான். சமீபத்தில் கர்நாடகத்தில் சர்வ கட்சிக் கூட்டம் நடந்தபோது, நானும் அதில் கலந்து கொண்டேன். அங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தமிழ் நாடு அரசின் அதிகாரிகள் கொடுத்த குறிப்பிலே, மழைக் காலங்களில் ஏற்படக்கூடிய வெள்ள நீர் கடலிலே சென்று வீணாகிறது ; அந்த நீரையும் அவர்கள் கணக்கு எடுத்துக் கொண்டு குறிப்புக் கொடுத்தார்கள். இங்கே நாம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பயன்படுத்த முடியாத நீர், கடலிலே சென்று கலக்கக் கூடிய நீர் இவைகளின் கொள்ளளவையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அதிகாரிகள் குறிப்பு கொடுத்தார்கள். இதைப் பார்த்து கர்நாடக அரசு, தமிழகத்தில் இவ்வளவு நீர் இருக்கிறதே, எதற்காக கர்நாடகத்திடமிருந்து நீரைக் கேட்கிறார்கள் என்று தவறான குறிப்பைக் கூட கொடுத்தது. அந்தக் கூட்டத்திலே இருந்த நான் அந்தக் கருத்தை எதிர்த்துச் சொன்னேன். அதே தவறான கருத்துக்களைத்தான் அங்கே இருக்கின்ற அதிகாரிகளிடத்திலே, எதிர்க் கட்சிகளிடத்திலே, பொது மக்களிடத்திலே அவர்கள் பரப்பிக் கொண்டிருப்பார்கள். நிலைமையை நாம் சரியான முறையில் விளக்க வேண்டுமென்றால் நம்முடைய அரசின் சார்பாக சரியான முறையில் இயக்கம் நடத்த வேண்டும் ; பிரசாரம் செய்தாகவேண்டும் என்பது என்னுடைய கருத்து.

இன்னொன்று உணவு உற்பத்தி திருப்திகரமாக இருக்கிறது. அதன் விநியோக முறை சரியாக இருந்தாலும் Production.— உம் சரியாக இருக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை, விநியோக முறை சரியாக இருக்கிறது. Structure சரியாக இருக்கிறது. அதில் எந்தவிதக் குறையையும் சொல்ல முடியாது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நியாய விலைக் கடைகள் நடத்தப்படுகின்றன. அண்மையில் கூட அமுதம் போன்ற கடைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் இன்னும் அதிக அளவில் துவக்கப்பட வேண்டும். பல இடங்களில் பரவலாகத் துவக்கப்பட வேண்டும். எங்களுடைய மாவட்டத்தில் நடத்தப்படுகின்ற கடைகள் எல்லாம் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன. எனவே ஏராளமான கடைகள் துவக்கப்பட வேண்டும். அவைகள் நடைமுறையில் செய்யப்படும்போது, அதன் அமைப்பில் சில பிரச்சினைகள் வருகின்றன. அந்தப் பிரச்சினைகளை எல்லாம் மாண்புமிகு

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 ஏப்ரல் 17

உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்குமென்ற வகையில் இதைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது 1500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக உள்ள நியாய விலைக் கடைகள் நட்டத்தில் இயங்குவதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பரவாயில்லை. இது பொதுநல அரசு. பொதுநல அரசு என்று பார்க்கும்போது, சாதாரண மக்களுடைய, பாமர மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது சில இழப்புகள் வருவது தவிர்க்க முடியாது. அதையெல்லாம் அரசு பொருட்படுத்தக்கூடாது. அதை அரசு கணக்கில் கொள்ளாமல் இன்னும் அதிகமான அளவுக்கு நியாய விலைக் கடைகளைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய நிலையில் 20,823 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. இன்னும் அதிகமான நியாய விலைக் கடைகள் தேவைப்படுகின்றன. பல இடங்களில் அவைகள் துவக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே பொது மக்களுடைய நலன்களைக் கருதி, அவர்களுடைய குடும்ப அட்டைகள் குறைவாக இருந்தாலும் கூட, மக்கள் தொகை குறைவாக இருந்தாலும் கூட, அவர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்ப்பதற்காக இன்னும் அதிகமான அளவுக்கு நியாய விலைக் கடைகள் துவக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நியாய விலைக் கடைகளுக்கு பொருட்கள் எல்லாம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து செல்கின்றன. இந்தப் பொருட்களை அந்தக் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கும் சத்துணவுக் கூடங்களுக்கும் கொண்டு செல்கிறார்கள்; கொண்டு செல்கிறார்கள். அப்படி பொருட்களைக் கொண்டு செல்லும்போது, எங்கு கோளாறு ஏற்படுகிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் கோளாறு இருக்கிறது என்ற புகார் மட்டும் வந்து கொண்டிருக்கிறது. நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கிலிருந்து செல்லும் லாரிகள் மற்றும் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படும் பொருட்களின் எடைகள் நியாய விலைக் கடைகள் மற்றும் சத்துணவுக் கூடங்களுக்குப் போய்ச் சேரும்

(முற்பகல் 11-10)

போது குறைவாக இருக்கின்றன. அதற்குக் காரணம் — எங்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சொல்கிறேன் — இத்தகைய தவறுகள் கிடங்குகளிலேயே அதிகமாக நடைபெறுகின்றன. அதோடு லாரியில் போகும் போது கூட பெரிய கோணி ஊசியைப் பயன்படுத்தி, மூட்டைகளைக் குத்தி, அந்தப் பொருள்களை எல்லாம் எடுத்து விடுகிறார்கள் என்றும் சொல்லப்படு கிறது. இடையில் இருக்கிற விஷமிகள்தான் இத்தகைய காரியங்களில் ஈடு படுகிறார்கள் என்றாலும் கூட துறையில் இருக்கிற ஊழியர்கள் மற்றும் அலு



1986 ஏப்ரல் 17] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

வலர்கள் ஆகியோர் பக்க பலமாகக் கூட இருக்கலாம். அப்படி இல்லாமல் இந்தக் காரியங்கள் நடக்காது. இந்தப் பிரச்சினை இன்றைக்கு ஓரளவுக்குப் பரவலாகவே இருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஒரு மாற்று ஏற்பாடாக ஒன்றைச் செய்யலாம் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். கிடங்கு களிலிருந்து லாரிகளில் சத்துணவுக் கூடங்களுக்கும் அல்லது நியாய விலைக் கடைகளுக்கும் பொருள்கள் எடுத்துச் செல்லப்படும்போது, இடையிலேயே ஒரு வகையான சோதனை செய்யும் ஏற்பாட்டையாவது செய்யலாம். இதைச் சாதாரண முறையில் சொல்லவில்லை. போகும் வழியிலேயே திடீர் சோதனை செய்யும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். எந்த இடத்திலும் இத்தகைய வாகனங்கள் சோதனை செய்யப்படலாம் என்கிற நிலைமை இருந்தால்தான், இத்தகைய தவறுகள் போக்கப்படும் அல்லது நீக்கப்படும் என்று கருதுகிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப அட்டைகளைப் பொறுத்த வரையில், நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருள்கள் இவற்றிற்கு போதுமான அளவுக்கு வழங்கப்படுவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களில்தான் இத்தகைய குறைபாடு அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக கிராம மக்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். நம்முடைய அணுகுமுறையை பொறுத்த வரையில்கூட, நகர்ப்புறத்தில் ஏதேனும் பிரச்சினை உருவானால், அது பெரிதாகிவிடும் என்று அஞ்சி, எச்சரிக்கையாகச் செயல்படுகிறோம். ஆனால் கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், மக்கள் பொருள்களை வாங்க பெரும்பாலான நியாய விலைக் கடைகளுக்குச் செல்லும்போது அவர் களுக்குத் தேவையான பொருள்கள் ஸ்டாக்கில் இல்லை என்று சொல்லுகிற நிலையோ அல்லது குறைவாகக் கொடுக்கிற நிலையோதான் இருந்து வருகிறது. அல்லது “ இப்போது இல்லை, இன்னும் 2, 3 நாட்கள் கழித்து வந்து வாங்கிக் கொண்டு போங்கள் ” என்று சொல்லுகிற நிலைமைதான் இருக்கிறது. காரணம் கிராமங்களில் பிரச்சினைகள் உருவானாலும், அது பெரியதாக மாறு வதில்லை, பெரிதாக மாறி மற்றவர்களுடைய கவனத்தையும் அது ஈர்ப்பதில்லை. அதன் காரணமாகத்தான் இந்த நிலைமை நீடிக்கிறதோ என்றுகூட நான் சந்தேகப்படுகிறேன். இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள்தான் என்று சொன்னார் அண்ணல் காந்தி அடிகள். இந்தியாவின் முதுகெலும்பு கிராமங் களில் உள்ள மக்கள்தான் என்றும் சொன்னார்கள். அந்த நிலைமையில் இந்தப் பொருள்களையெல்லாம் உற்பத்தி செய்வதற்கு ஆதாரவாக இருக்கிற கிராமப்

புறத்து மக்களுக்கு இந்தப் பொருள்கள் நியாய விலைக் கடைகள் மூலமாகத்
தேவையான நேரத்தில் தேவையான அளவுக்குக் கிடைக்கவில்லை என்ற
குறைபாடு இருக்கிறது. எனவே இந்தக் குறையைக் களைவதற்கு அரசு தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து, சர்க்கரையைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தற்
போது ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 450 கிராம் சர்க்கரை என்கிற அளவில்
தான் வழங்கப்படுகிறது. இது போதுமான அளவு அல்ல என்பதை நாம்
ஒப்புக்கொள்ளவேண்டும். ஒரு மாதத்திற்கு ஒரு நபருக்கு 450 கிராம் சர்க்கரை
என்பது போதாதென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒப்புக்கொள்
வார்கள். எனவே ஒரு மாதத்திற்கு 450 கிராம் சர்க்கரை வழங்குவதற்குப்
பதிலாக ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ஒரு கிலோ என்ற அளவில் சர்க்கரை
வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டில்
சர்க்கரை உற்பத்தி போதுமான அளவுக்கு இருக்கிறது. சர்க்கரைக்குத் தட்டுப்
பாடு இல்லை என்றுதான் எல்லோரும் சொல்லுகிறார்கள். எனவே ஒருவருக்கு
ஒரு மாதத்திற்கு ஒரு கிலோ சர்க்கரை வழங்குகிற வகையில் நடவடிக்கையை
மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன். அத்துடன் குழந்தைகள், பெரியவர்கள் என்ற பாகு
பாடு சர்க்கரை வழங்கும் முறையில் கையாளப்படுகிறது. உண்மையில் சொல்லப்
போனால், பெரியவர்களைவிட குழந்தைகளுக்குத்தான் சர்க்கரை அதிகமாகத்
தேவைப்படுகிறது. எனவே குழந்தைகள் என்ற காரணத்திற்காக குறைந்த
அளவுக்கு சர்க்கரை வழங்கப்படுவதும் சரியல்ல என்பதையும் சொல்ல விரும்பு
கிறேன். எனவே குழந்தைகளுக்கும் பெரியவர்கள் அளவுக்கு வழங்கப்பட
வேண்டும் அல்லது அதை விட இன்னும் சற்று அதிகமாகவே வழங்கப்பட
வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, எந்த வகையிலும் அவர்களுக்குப்
பாகுபாடு காட்டாமல் கொடுக்க வேண்டும் என்றும் நான் அரசைக் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அரிசி ஆலைகளுக்கு உரிமம் வழங்குவதில் ஒரு பிரச்சினை ஏற்
பட்டிருக்கிறது. ஏற்கெனவே அத்தகைய உரிமம் வழங்கும் அதிகாரம் மாவட்ட
ஆட்சித் தலைவரிடம்தான் இருந்து வந்தது. இப்போது எந்தக் காரணத்
தாலோ அந்த அதிகாரம் தலைமைச் செயலகத்திற்கு வந்திருக்கிறது. துறையின்
செயலாளர் அவர்களையும் சம்பந்தப்பட்ட துணைச் செயலாளர் மற்றும்
இணைச் செயலாளர் ஆகியவர்களைப் பார்க்க வேண்டிய நிலைமை இருக்
கிறது. தற்போது அவர்களுக்குத்தான் அந்த அதிகாரம் வழங்கப்பட்டிருப்



பதாக நான் அறிகிறேன். இது உரிமம் வழங்குவதில் வீண் கால தாமதத்தை உருவாக்குகிறது. எனவே மீண்டும் இத்தகைய உரிமம் வழங்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்போதுதான் இத்தகைய உரிமங்கள் மீதான முடிவை விரைவில் எடுக்க முடியும், அதன் காரணமாக விரைவில் தேவையான அளவுக்கு ஆங்காங்கே அரிசி ஆலைகளை அமைக்க இயலும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே தாமதத்தைத் தவிர்ப்பதற்காகவாவது மீண்டும் இந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கே அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை நகரில் நியாய விலைக் கடைகளை அமைக்க வாடகை இடம் கிடைப்பதில் மிகுந்த சிரமங்கள் இருப்பதால், கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இடங்களை வாங்குவதற்காகவும் கடைகளைக் கட்டுவதற்காகவும் அடையாள ஒதுக்கீடுகூட செய்யப்பட்டிருக்கிறது. எனவே சென்னை போன்ற இடம் கிடைக்காத பகுதிகளில் நாம் ஏன் மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். ஒருவேளை நான் சொல்வது சிக்கலாக இருக்குமானால், அரசு அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைகளைக் கட்டுவதைவிட நடமாடும் வாகனங்களை இந்தப் பணிக்காக நாம் ஏன் பயன்படுத்தக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். மொபைல் வேன்களை நாம் ஏன் பயன்படுத்தக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். பொருளாதார ரீதியில் அது சிக்கலாக இருந்தால் அல்லது கடைகளைக் கட்டுவதைவிட இதில் செலவு அதிகமில்லாமல் இருந்தால் அல்லது இரண்டிற்கும் சமமான செலவாகும் நிலை இருந்தால் அல்லது வித்தியாசம் குறைவாக இருந்தால், நாம் ஏன் நடமாடும் வாகனங்கள் மூலமாகக் கூட்டுறவுச் சங்கங்களைச் செயல்படச் செய்து, உணவுப் பொருள்களை வழங்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இந்தக் கருத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-15)

கோதுமையைப் பொறுத்தவரையில், ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. பொது விநியோக முறையில் அதிக அளவில் வாங்கப்படாமல், நியாய விலைக் கடைகளில் கோதுமை தேங்கி விடுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே தெரிவிக்கப் பட்டிருக்கிறது. தரம் இல்லாமல் கோதுமையைக் கொடுக்கிறோம். நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படும் கோதுமையில் பூச்சிகள் இருக்கின்றன. குப்பைகள் கலந்திருக்கின்றன. அது பழுதுபட்ட பொருளாக இருக்கிறது. இத்தகைய காரணங்களால்தான் கோதுமை சரியாக விற்பனையாகாமல்

தேங்கிப் போய் மேலும் இழப்பை ஏற்படுத்துகிறது. ஆகவே, இந்தக்
கோதுமையில் உள்ள குப்பைகளை அகற்றி, பூச்சிகளை அகற்றி நல்ல தரமான
கோதுமையை நல்ல முறையில் 'பாக்' செய்து மக்களுக்குக் கொடுத்தால் நிச்சய
மாக மக்கள் வாங்குவார்கள். ஏனென்றால் கோதுமையைப் பயன்படுத்து
மனப்பான்மை இப்போது வளர்ந்து வருகிறது. ஆகவே, நியாய விலைக்
கடைகளின் மூலமாக நல்ல சுத்தமான கோதுமையை வழங்க அரசு ஏற்பாடு
செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்
கிறேன்.

மண்ணெண்ணெய் விலையேற்றம்பற்றி இந்தக் குறிப்பிலே குறிப்பிடப்
பட்டிருக்கிறது. நான் இதைப்பற்றி முன்பே சொன்னேன். மத்திய அரசு
பெட்ரோல் பொருள்களின் விலையை ஏற்றியபோது, நாம் சரியான நேரத்தில்
சரியான எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை, சரியான நேரத்தில் சரியான
எதிர்ப்பை நாம் தெரிவிக்கத் தவறிவிட்டோம் என்பதை நான் நிதிநிலை
அறிக்கைமீதான விவாதத்தின்போதே சொன்னேன். எதிர்காலத்திலே
யாவது நம்முடைய மாநில அரசு சொல்ல வேண்டிய கருத்துக்களை தைரிய
மாகச் சொல்ல வேண்டும். மத்திய அரசு என்ன நினைத்துக்கொள்ளுமோ
என்று கவலைப்படக்கூடாது. தோழமை என்பது வேறு, கருத்துக்களை
தைரியமாகச் சொல்வது என்பது வேறு. தோழமை, நட்பு என்பது தைரிய
மாக கருத்துக்களை வெளியிடுவதற்குக் குறுக்கே நிற்கக்கூடாது. அப்படி
குறுக்கே இருந்தால் அது சரியான தோழமை அல்லது சரியான உறவாகாது.
அப்படி தைரியமாக கருத்துக்களைச் சொல்ல வேண்டிய நேரத்தில் மாநில
அரசு சொல்லத் தவறிவிட்டது. எதிர்காலத்திலே அப்படிப்பட்ட நிலைமை
இருக்கக்கூடாது. ஏனென்றால் மத்திய அரசு எடுத்த நடவடிக்கை நம்மை
பாதித்திருக்கிறது. மண்ணெண்ணெய் விலையேற்றப்பட்டிருக்கிறது. இதற்கு
நாம் பதில் சொல்லியாக வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்திலே
கோவனாறு அருகில் மண்ணெண்ணெய் அதிகமான அளவிற்குக் கிடைக்க
வாய்ப்பு இருக்கிறது என்று இப்போது ஆய்வு வேலைகள் நடக்கின்றன.
ஆனால் இதிலே காலதாமதம் ஆகிறது. பூர்வாங்க ஆய்வில் மண்ணெண்ணெய்
ஏராளமான அளவிற்குக் கிடைக்குமென்று தெரிகிறது. அந்த ஆய்வுப் பணிகள்
தாமதமாக நடைபெறுவதால், அதனுடைய பலன்கள் தமிழ் நாட்டிற்கு விரை
வாகக் கிடைக்காமல் போகிறது. ஆகவே அந்த ஆய்வுப் பணிகளை விரைவு
படுத்தி எண்ணெய்க் கிணறு தோண்ட தமிழக அரசு மத்திய அரசோடு
தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.





நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, நியாய விலைக் கடைகள், 'அமுதம்' கடைகள் போன்றவற்றில் ஆரம்பக் காலத்திலே நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. அந்த நஷ்டத்தை சரி செய்ய ஒருபுறம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு மேலும் தேவைக்கேற்ப அந்தக் கடைகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டல் உணவுப் பண்டங்களைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள், சென்னையிலே உள்ள ஓட்டல் உரிமையாளர்களையெல்லாம் கூட்டி, 8—8—1985 அன்று நல்ல முயற்சிகளை மேற்கொண்டார்கள். அந்த முயற்சிக்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். சட்டத்தின் மூலமாகச் செய்வது ஒருபுறமிருந்தாலும், மனமாற்றத்தின் மூலமாகச் செய்ய வேண்டும் என்று கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த முயற்சிகளை நான் வரவேற்கிறேன். சட்டத்தின் மூலமாக மட்டுமல்லாமல், மனமாற்றத்தின் மூலமாக அவர்களே தங்களுடைய பொறுப்புகளை உணர்ந்து தாங்களாகவே முன்வந்து விலையை நிர்ணயிக்க அரசு உதவியாக இருக்கிறது என்ற அளவிலே அமைச்சர் அவர்கள் எடுத்த அந்த நல்ல முயற்சிகளை, அந்த நல்லெண்ணத்தை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்றால், இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், சென்னையாக இருந்தாலும் பிற நகரங்களாக இருந்தாலும், நான் 'ஓட்டல்' என்று சொல்லும்போது, மூன்று-ஸ்டார், ஐந்து-ஸ்டார் ஓட்டல்களைப்பற்றிச் சொல்லவில்லை. அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. வசதி படைத்தவர்கள் எவ்வளவு விலை விற்றாலும் வாங்கப் போகிறார்கள். அதைப்பற்றிப் பிரச்சினை இல்லை. சாதாரண ஓட்டல்களைப் பற்றித்தான் பிரச்சினை. அத்தியாவசியப் பண்டங்களான இட்லி, தோசை, பூரி, காப்பி, தேநீர் போன்றவைகளின் விலையை சரியான நிலையில் நிர்ணயித்திருக்கிறார்களா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இன்றுள்ள உணவுப் பொருள்களின் விலை, உணவு தானியங்களின் விலை, எண்ணெய் விலை ஆகியவற்றைப் பார்க்கும்போது, சந்தையில் அப்பொருள்கள் சரியான முறையில் சீராகக் கிடைக்கிறது என்பதையும் பார்க்கும்போது, கட்டுப்பாடு இல்லாமல் சீராகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெரிய இடைவெளி இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் எங்கெங்கே என்ன விளைந்து வருகின்றது என்ற விவரங்களை இங்கே சொல்ல விரும்பவில்லை. ஆனால் இன்று நிர்ணயித்திருக்கின்ற விலைகள் அவர்களுக்குத் திருப்திகரமாக இல்லை. நுகர்வோர்களுக்குத் திருப்திகரமாக இல்லை. அது

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 ஏப்ரல் 17

(முற்பகல் 11-20)

அவர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை அல்ல. அந்த விலைகளைக் குறைப்பதற்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். தேவைப்பட்டால், சட்டபூர்வமான நடவடிக்கை கூட எடுக்கலாம். அங்கே இருக்கின்ற தரத்தையும் பார்க்க வேண்டும். பொருள்களின் விலைகளை நிர்ணயிப்பது மட்டுமல்லாமல், அங்கே இருக்கின்ற பொருள்களின் தரத்தையும் பார்க்க வேண்டும். தரம் சரியாக இருக்க வேண்டும். அங்கே இருக்கின்ற சுகாதார வசதிகள் சரியாக இருக்க வேண்டும். ஓட்டல்களிலே இருக்கின்ற சுகாதார வசதிகள்கூட சீராக இருக்க வேண்டும். இந்த நிலைமைகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான முறையில் கவனித்து ஆவன செய்ய வேண்டும். ஓட்டல்களிலே சோதனைகள் நடத்தலாம். வெளியூர்களிலே திடீரென்று சென்று பார்க்கலாம். 'சர்பிரைஸ் விசிட்' நடத்தலாம். ஓட்டல்களிலே உள்ள உணவுப் பண்டங்களின் தரத்தை சோதனை போட்டுப் பார்த்து, உண்மை நிலைமைகளைக் கண்டறியலாம். இதில் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கலாம். அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எடுத்திருக்கின்ற முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். இன்னும் நல்லமுறையிலே பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில், தீவிரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவு. மேலும் மதிய உணவு, இரவு உணவு விலைகளைக் கட்டுப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவிலே, பள்ளிகளிலே படிக்கின்ற பிள்ளைகளுக்கு கலப்படத்தினால் ஏற்படும் தீமைகளைப்பற்றி எடுத்துக்கூறி, அதில் பாதுகாப்பை வலியுறுத்தும் அளவுக்கு பிள்ளைகள் பாடத்திட்டத்திலே பாடங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். எல்லா மட்டத்திலேயும் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். கலப்படத்தின் தீமைகளைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கும் பிஞ்சு உள்ளத்தில் பதிய வைப்பதற்கும் இந்த முயற்சிகள் எடுக்கப்படுவதைப் பாராட்டுகிறேன். அது மட்டுமல்ல. 'வேஸ்ட்டேஜ்' பற்றி நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். நம் நாட்டைப் பொறுத்தவரையில், சிக்கனம் என்று சொல்லும்போது, அது பொது இடமாக இருந்தாலும் சரி, வீடுகளாக இருந்தாலும் சரி, பொது நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, ஓட்டலிலே நடக்கின்ற திருமணங்களாக இருந்தாலும் சரி, வேறு வைபோகங்களாக இருந்தாலும் சரி, சரியான



1986 ஏப்ரல் 17] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

முறையில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவில்லை. ஏராளமான பொருள்கள் சேதமாகின்றன. வயிற்றெரிச்சல் என்று சொல்வார்களே அதுபோல, அப்படிப்பட்ட வயிற்றெரிச்சல் ஏற்படுத்துகின்ற வகையில் உணவுப் பொருள்கள் சேதப்படுத்தப்படுகின்றன, வீணாக்கப்படுகின்றன, தெருவிலே கொட்டப்படுகின்றன. இந்தியா போன்ற நாட்டிலே ஒரு பருக்கைகூட வீணாகக்கூடாது என்ற நிலைமைகள் இருக்கின்ற ஒரு நாட்டில், ஏராளமான உணவுப் பண்டங்கள் வீணாகின்ற கொடுமையான நிலைமைகளை தனி வாழ்விலேயும் பொது வாழ்விலேயும் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகள் வரக்கூடாது. சரியான பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பது ஒருபுறம் இருந்தாலும், இந்த இளம் பிஞ்சு உள்ளங்களிலே இந்தக் கருத்துக்களைச் சரியான முறையில் பதிய வைக்க, இந்த 'வேஸ்ட்டேஜ்' கூடாது, சேதப்படுத்தக்கூடாது, பொருள்களை வீணாக்கக்கூடாது என்ற கருத்து சரியான முறையில் பாடத்திட்டத்திலே அம்சமாக சேர்க்கப்படவேண்டும் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

அப்படிப்பட்ட இந்தக் கருத்துக்களைச் சொல்வதற்கு தொலைக் காட்சி சாதனங்களை நல்லமுறையிலே பயன்படுத்தலாம். 'எக், தோ, தீன், சார்' என்று ஒரு படம் டெல்லி தொலைக்காட்சியிலே வாராவாரம் ஒலிபரப்பப்படுகிறது. இந்தியிலே பரப்பப்பட்ட நிகழ்ச்சியாக இருந்தாலும், அது சிறுவர்களுக்கு மிகவும் ரசிக்கும் காட்சியாக இருக்கின்றது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஒலிபரப்புகின்றார்கள். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு பிரச்சினையாக எடுத்துக்கொண்டு அந்தப் பிரச்சினை தீர்வதற்கு, அந்த நான்கு மாணவர்கள், சிறுவர்கள், சமுதாயப் பிரச்சினையை அகற்றுவதற்கு அவர்கள் எப்படி காவல் துறையினருக்கும், பெரியவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உதவியாக இருக்கின்றார்கள் என்பதை அழகான முறையில், உற்சாகமான முறையில் படம் சித்தரிக்கிறது. சென்னையிலே இருக்கின்ற தொலைக்காட்சி நிர்வாகத்தினரோடு தொடர்பு கொண்டு பேசி இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் ஒளி பரப்புவதற்கு நம்முடைய உணவுத் துறை சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த சமயத்திலே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப் பொதுவாகப் பார்க்கின்றபோது, தமிழகத்தின் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கின்றது. மகிழ்ச்சிகரமாக இருக்கின்றது. விலைவாசியும் கட்டுப்பாடான நிலையில் இருக்கின்றது. இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பொறுப்பாக இருக்கின்ற உணவு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டு நான் சொல்லிய கருத்துக்கள் இந்தத் துறையின் மூலம் சரியான முறையில் மேலும் செயல்

படுத்துவதற்கும், மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் அகலுவதற்கும் மேலும் மக்களுக்கு வசதிகளைப் பெருக்குவதற்கும் உறுதுணையாக இருக்கும் என்று சொல்லி, எனக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

(முற்பகல் 11-25)

**மிசா கணேசன் என்கின்ற திரு. ஆர். கணேசன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 'தமிழகத்தில் உணவு நிலைமை' என்கின்ற உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சம்பந்தப்பட்ட இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே என்னுடைய சில கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமி காந்தன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, இந்தத் துறை பொதுவாக உணவு நிலைமையைக் குறிப்பிடுகின்ற துறையாக இருந்தாலும் கூட, எல்லா மக்களும் தெரிந்துகொள்ளக்கூடிய, எல்லா மக்களும் உணர்ந்து கொள்ளக் கூடிய துறை என்பதை முதலிலே தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், ஒவ்வொருவரும் ஒரு பொருளை வாங்குகின்றபோது, அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் எதுவானாலும், அவர்கள் வாங்குகின்ற நேரத்தில், அவர்கள் படுகின்ற இடர்பாடுகளினால், உடனே அரசு எடுக்கும் நிலைமைகளைத் தெரிந்துகொள்ளக்கூடிய துறையாக இந்தத் துறை இருக் கிறது என்பதை முதலிலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னதுபோல, இந்தத் துறையை நிர்வகிக்கின்ற பொறுப்பு என்று வருகின்றபோது, இந்தத் துறையை நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள பல்வேறு அமைப்புகள் சிறப்பாக உள்ளன. இதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கூற முடியாது. ஆனால் அவை ஒழுங்காகச் செயல்படுகின்றனவா என்றால் இல்லை. அந்த அமைப்புகள் செயல்படுவதில் ஏற்படும் தவறுகள் இங்கே நிவர்த்திக்கப்பட வேண்டுமென்பதைத்தான் இங்கே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்தத் துறைக்கு என்று நம்முடைய தலைமைச் செயலகத் திலே 65 பேர்கள் இருக்கிறார்கள் என்ற குறிப்பு நம்முடைய நிதிநிலை அறிக்கையில் 22 ஆம் பக்கத்தில் இருக்கிறது. இந்த ஆண்டு கூடுதலாக 4 பேர் களைச் சேர்த்திருக்கிறார்கள். இந்தத் துறையில் 69 பேர்கள் தலைமைச் செயலகத்தில் பணி புரிகிறார்கள். இது மிகப் பெரிய துறை. புதிய மாவட்டங் களை இந்த அரசு தோற்றுவித்திருக்கிறது. அதனால் விநியோக முறையில் விரிவுபடுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இவ்வளவு குறைவான பேர்



ர வைத்துக்கொண்டு, இந்தத் துறையைச் சமாளிக்க முடியுமா என்பதை ந்ச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தத் றயில் அதிகமான ஆட்களைப் பணி அமர்த்துவதன் மூலம், அதிகமான களை இந்தத் துறைக்கு ஒதுக்குவதன் மூலம், இந்தத் துறை இன்னும் பாகப் பணியாற்ற முடியுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றைக் குறிப்பிட்டிருக் ர்கள். அதாவது, "இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் ஏற்றுக் ள்ளக்கூடிய தரமான அரிசி இருப்பு இல்லாததால், இம்மாநிலத்திற்கு க்கப்படும் மொத்த அரிசியையும் உரிய நேரத்தில் எடுக்க முடிவதில்லை" று பக்கம் 6-லே கூறப்பட்டிருக்கிறது. இந்திய உணவுக் கழகத்தின் கிடங்கு ல் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு தரமான அரிசி இல்லை என்பதை புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால், தரமான அரிசி றுவதற்கு என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய ரும்புகிறேன். இந்த அவையிலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இருக் றார்கள். மத்தியிலிருந்து தரமான அரிசி கேட்பதில் கருத்து வேறுபாடு ருக்குமில்லை. இதிலே கட்சி பார்க்க வேண்டாம். இந்த அவையிலே ருக்கிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், நாடாளுமன்றத்திலே, மாநிலங்கள் வையிலே உள்ள பல்வேறு கட்சி உறுப்பினர்கள் இதற்காகப் போராட்டம் நடத்தலாம். அங்கேயிருந்து வரும் அரிசி சரியாக இல்லை என்னும் போது, தரமான அரிசியைப் பெற எல்லோரும் முயற்சி எடுக்க வேண்டும். தரமான அரிசியாக அது இல்லையென்றால், விநியோகிக்கப்படும் அந்த அரிசி எந்த அளவுக்கு மக்களுக்குப் பயன்படும்? மதிய உணவுத் திட்டம் பற்றிக் கூட இதிலே சொல்லியிருக்கிறார்கள். தரமில்லாத அரிசியை அவர்களுக்கு அளிக்கிறோம். நேற்றைக்கு முன்தினம்கூட மதுரையிலே ஒரு மதிய உணவுக் கூடத்திற்கு முதலமைச்சரவர்கள் சென்றதாகவும், அங்கே அளிக்கப்பட்ட உணவைப் பார்க்கும்போது, அது சரியாக இல்லை என்றும், உடனே அரிசியைக் கொண்டு வந்து பார்த்ததாகவும், அது துர் நாற்றம் உள்ள அரிசியாக இருந்தது என்றும் செய்தியைப் பார்த்தேன். எனவே அரிசி சரியாக இல்லை என்றால், அதை சரியான முறையிலே பெற இந்தத் துறை என்ன செய்திருக்கிறது? அதற்காக கடுமையான போராட்டங்களைக்கூட நடத்தலாம். அரிசியே இப்படி இருக்கிறது என்றால், வேறு பொருள்களைப்பற்றி என்ன சொல்ல முடியும்? "இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரமான அரிசி இருப்பு இல்லாததால், இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்படும் மொத்த

'திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1986 ஏப்ரல் 17
அரிசியை உரிய நேரத்தில் எடுக்க முடிவதில்லை" என்று ஒத்துக்கொண்டிருக்
கிறார்கள். அந்த அடிப்படையிலே, தரமான அரிசி பெற, இந்திய உணவுக்
கழகத்தின் கிடங்கிலிருந்து பெற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

(முற்பகல் 11-30)

அடுத்தபடியாக, பொது விநியோக முறையை நாம் பார்க்கின்றபோது,
ஒரு வீட்டுக்கு 2½ யூனிட் தருகிறார்கள். எத்தனை பேர் ஒரு வீட்டில் இருந்
தாலும், இரண்டு வாரத்திற்கு 6 கிலோ அரிசி தருகிறார்கள். ஆக ஒரு
மாதத்தில் ஒரு குடும்பத்திற்குக் கிடைப்பது 12 கிலோ அரிசி. 10 பேர் இருந்
தாலும், 15 பேர் இருந்தாலும் அந்தக் குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு அதிக
பட்சம் 12 கிலோ அரிசிதான் கிடைக்கும். நபர்களின் எண்ணிக்கை குறையும்
பட்சத்தில் யூனிட் குறையும்போது, அவர்களுக்கு இந்த 12 கிலோவை விட
குறைவாகக் கிடைக்கின்ற நிலைமையும் இருக்கிறது. நிலைமை இப்படி
இருக்கும்போது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே
ஒரு சிறப்பான திட்டம் ஒன்றை மிகச் சிறந்த முறையில் எல்லாப் பத்திரிகை
களிலும் விளம்பரப்படுத்தி அறிவித்தார்கள். 20 கிலோ அரிசி வாங்குகிறவர்
களுக்கு 1 கிலோ அரிசி இலவசமாக அளிக்கப்படும் என்று மிகச் சிறந்த
முறையில் விளம்பரப்படுத்தினார்கள். இன்றைக்கு 2½ யூனிட் என்று சொல்லி
ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு அதிகபட்சம் 12 கிலோ அரிசி வழங்கு
கின்ற நிலையில், யாருமே 20 கிலோ அரிசி, தமிழகத்தைப் பொறுத்தவரையில்,
பெறுகின்ற நிலை இல்லை. ஆனாலும் அந்தத் திட்டம், அந்தக் கருத்து
இன்றைக்கும் இருந்துகொண்டுதான் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பாமாயிலைப் பொறுத்தவரையில், 3 மாதத்திற்கு ஒரு முறை
1 கிலோ வழங்கப்படுகிறது. அதையும் ஆசாகத் தருகிறார்கள். இங்கே
மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் இதிலுள்ள குறைபாடுகளைத்
தெளிவாகச் சுட்டிக்காட்டினார். சர்க்கரை சரியாகக் கிடைக்கவில்லை. 450
கிராம் என்கிற அளவில் வழங்குவது எந்த அளவுக்குப் போதுமானது என்று
நான் அறிய விரும்புகிறேன். 20 கிலோ அரிசி வாங்கினால் 1 கிலோ அரிசி
இலவசமாகப் பெறலாம் என்கிற கருத்து இன்றைக்கும் இருந்தாலும்
தமிழகத்தின் எந்தப் பகுதியிலுள்ள குடும்ப அட்டைக்காரரும் 12 கிலோவுக்கு
மேல் அரிசி பெற முடியாத நிலை இருக்கிறது. சர்க்கரை சரியாக இல்லை.
பாமாயில் 3 மாதத்திற்கு ஒரு முறை 1 கிலோ, செல்கின்ற நேரத்தில் கடை
பூட்டப்பட்டிருப்பதால், அதுவும் கிடையாது.



1986 ஏப்ரல் 17] [திரு. மிசா கணேசன் என்ற திரு. ஆர். கணேசன்]

இன்னொன்றையும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். போலி கார்டுகள் தமிழ் நாட்டிலே நடமாடுகின்றன என்பதை அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறையின் அதிகாரிகள் சோதனை செய்ய வேண்டிய கடைகள், குடும்ப அட்டைகள் போன்றவை எவை எவை என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட அதிகாரியால் அவை கண்காணிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. போலி அட்டைகளைப் பொறுத்தவரையில், கிழக்கு மதுரையில் மட்டும் 3,453 கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது 10 பெர்சென்ட் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக புத்தகத்திலேயே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரால் இவை கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்கள். அப்படி என்றால், போலி கார்டுகள் வாயிலாக, 10 சதவிகித உணவுப் பொருள்கள் போய்ச் சேர வேண்டியவர்களுக்குப் போய் சேராமல் வீணாக எங்கெங்கோ போய்க்கொண்டிருக்கின்றன என்றுதானே பொருள். இப்படிச் சொல்லிவிட்டு, அடுத்து ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு மாநிலம் முழுவதும் முயன்று, போலி கார்டுகளைக் கண்டுபிடித்து நீக்குவதன் மூலம், உண்மையிலேயே கார்டுதாரர்களுக்கு உணவுப்பொருள்கள் போய்ச் சேர முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பரீட்சார்த்தமாக கிழக்கு மதுரையிலே 10 பெர்சென்ட் போலி கார்டுகள் இருப்பதாகக் கண்டு பிடித்ததற்குப் பிறகு, போலி கார்டுகள் இருப்பது உண்மை என்று தெளிவான பிறகு, சர்க்கார் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுத்து மாநிலம் பூராவும் உள்ள போலி கார்டுகளைக் கண்டுபிடித்து அறிவித்திருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்யாமல் "இதுபோன்றே போலி கார்டுகளைக் கண்டு பிடிக்கின்ற காரியத்தைச் செய்தால் உண்மையான நுகர்வோர் சிறந்த பலன் பெற முடியும்" என்கிற ஒரு கருத்தை மட்டும் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக இந்த அரசு இதுகுறித்து இந்த நடவடிக்கை எடுக்கும், அல்லது தமிழகம் பூராவும் இந்தந்த வகையில் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்கிற விவரங்களை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருப்பார்களேயானால், என்னைப் போன்றவர்கள் உள்ளபடியே பாராட்டியிருப்போம்.

(முற்பகல் 11-35)

ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதைப்போல, அரசு இப்படியிருக்கிறதே என்று சொல்லாமல், அதைத் தடுப்பதற்கான பணிகளைச் செய்தால், அது நன்றாக இருக்கும். தடுக்க முடியவில்லை என்று அரசாங்கமே சொல்லக் கூடாது. மொத்த கார்டுகளில் 10 சதவீதம் அளவுக்கு, போலி கார்டுகள்

இருக்கின்றன என்று தெரிந்த பிறகும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் நடவடிக்கை எடுத்த பிறகும்கூட, இதை ஏன் தமிழகம் முழுவதும் செய்யக் கூடாது என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

போலி அட்டைகளைப்பற்றி ஒன்று சொல்கிறேன். "சம்பந்தப்பட்டவர்கள் இந்த அவையில் இல்லை, அவர்களைப்பற்றிப் பேசக்கூடாது" என்று சொல்லலாம். ஆனால் ஒன்றைச் சொல்கிறேன், 50 ரூபாய் கொடுத்தால் ஒரு ரேஷன் கார்டு கிடைக்கும். அமைச்சருக்கே வேண்டுமானாலும், 150 ரூபாய் கொடுத்தால், அவர் பெயரிலேயே மூன்று கார்டுகள் வாங்கித் தர முடியும். அந்த அதிகாரிகள் யார் என்று சொல்ல முடியும்.

**திரு ப. மாணிக்கம்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கே 3 கார்டு வாங்கித் தர முடியும் என்று உறுப்பினர் சொல்கிறார். போலி கார்டுகள் இருக்கின்றன என்பது உண்மை. அவை விலைக்குக் கிடைக்கின்றன என்பதும் உண்மை. அமைச்சருக்கு மூன்று கார்டுகள் தேவையா என்று பார்க்காமல், அமைச்சருக்கே வாங்கித் தருகிறேன் என்று சொல்வது எப்படி என்று புரியவில்லை.

**திரு மிசா கணேசன் என்கிற திரு ஆர். கணேசன்:** எதற்காகச் சொல்கிறேன் என்றால், உணவு அமைச்சராக இன்னார் இருக்கிறாரே என்று கூட தெரியாமல், யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம், ஆனால் ஒரு கார்டுக்கு 50 ரூபாய் வேண்டும் என்பதுதான் நான் சொல்வது. அந்த அடிப்படையில்தான் சொல்கிறேன். அண்ணன் திரு. மாணிக்கம் அவர்கள் கேட்டார்கள். அதற்காகச் சொல்கிறேன், மாநிலங்கள் அவையின் காங்கிரஸ் கட்சி உறுப்பினர், அண்ணன் சிவாஜி அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெயரிலேயே ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், வாக்காளர் பட்டியலில் அவர்களது பெயர் வி. சி. கணேசன் என்று இருக்கிறது. அதிகாரிகள் யாரோ வி. சி. கணேசன் என்று வேறு ஒருவரை ஓட்டுப் போட அனுமதித்துவிட்டார்கள். அமைச்சர் பெயரைக் கூட குறிப்பிடாமல், டி. அரசு என்று கார்டு வாங்கி விடலாம் என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு சு. திருநாவுக்கரசு:** உறுப்பினர் அவர்கள், போலி குடும்ப அட்டைகள் இருப்பதைச் சொல்லி, அவைகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இடையில், அமைச்சருக்கு வேண்டுமானால் மூன்று கார்டுகள் வாங்கித் தருகிறேன் என்றும் சொன்னார்கள். இந்தச் செய்தி பத்திரிகையில் வருமேயானால், பத்திரிகை படிப்பவர்கள் நம்மைப் பற்றி என்ன





நினைப்பார்கள்? அவரைப்பற்றியும் நல்ல அபிப்பிராயம் வராது. அனாவசியமாக என்னுடைய பெயரும் வரும். இப்படியெல்லாம் அந்தத் துறையில் நடக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** என்னுடைய பெய ரையும் கெடுத்துக்கொண்டு அமைச்சருடைய பெயரையும் கெடுக்க வேண்டு மென்ற அடிப்படையில் சொல்லவில்லை. 50 ரூபாய்க்குக் கார்டு விற்கிற நிலைமை இருக்கிறது. இந்தக் குறிப்பில் அமைச்சரே சொல்லியிருக்கிறார்கள். தெளிவாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் நீடிக்குமானால், நுகர்பொருள் வாங்குவோருக்கு சிறந்த பலன் கிடைக்காது என்பதைச் சொல்கிறேன். தொடர்ந்து இப்படிப்பட்ட குற்றங்கள் நடக்கின்றன. அந்த அடிப்படையில்தான் சொல்கிறேனே தவிர, எனக்கும் அவருக்கும் கெட்ட பெயர் வரவேண்டுமென்ற அடிப்படையில் அல்ல. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையைத் தடுக்க வேண்டும். 50 ரூபாய் கொடுத்தால், ஒரு குடும்ப அட்டை கிடைக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் சொன்னேன். இன்னொரு கருத்து, கோதுமை விற்பனையைப் பொறுத்தவரையில் . . . .

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தகவல் தெரிந்துகொள்வதற்காகக் கேட்கிறேன். 50 ரூபாய்க்குக் கார்டு கிடைக்கிறது என்றும், வேண்டுமானால் அவர்கள் பெயரைத் தனியாகச் சொல்கிறேன் என்றும் சொன்னார்கள். எந்தப் பகுதியில், எந்த வட்டத்தில் இப்படி நடக்கிறது, தனிப்பட்ட யாராவது இந்தத் தொழிலில் ஈடுபட்டு செய்கிறார்களா, அதிகாரிகள் செய்கிறார்களா என்று தனியாக எழுதித் தாருங்கள், தக்க நடவடிக்கை எடுக்கிறேன்.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** அதற்காக நன்றி. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** யாருக்கு வேண்டுமானாலும் கார்டு கிடைக்கும், அமைச்சருக்கு வேண்டுமானாலும் வாங்கித் தருகிறேன் என்று சொல்வதானது, அமைச்சருக்கு அந்தத் துறையின்மீது கண்ட்ரோ அல்லது ஆதிக்கம் இல்லையென்பதாகப் பொருள் படுகிறது. யாருக் வேண்டுமானாலும் தரலாம் என்று சொல்வது உறுப்பினர் அவர்கள் கருத் அமைச்சருக்கே கிடைக்கும் என்று சொல்வது அவரது கண்ட்ரோலில் அந்த துறை இல்லை என்பதுபோல் பொருளாகிவிடும். அமைச்சரும் பதி சொல்லிவிட்டார். சொல்கிறபோதே அவருக்கு மரியாதை இல்லாமல் இருப்ப போன்ற பொருள் தொக்கி நிற்கிறது.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** அந்த எண்ணத்தில் நான் சொல்லவில்லை. இந்த நிலையில்தான் அதிகாரிகள் பணியாற்றுகிறார்கள் என்று சொல்கிறேன். ஆனால் அமைச்சருக்கு எந்தவிதமான கெட்ட பெயரும் ஏற்பட வேண்டுமென்ற அடிப்படையில் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 1 :-40)

MR. DEPUTY CHAIRMAN: The only point is that the hon. Member is stating that the Hon. Minister does not have control over his own Department and that the employees of the Department are not afraid of the Hon. Minister to such an extent that they would even issue a bogus card to the Hon. Minister himself. That kind of imputation is not necessary.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர் கணேசன் :** அந்தப் பொருளில் இல்லை என்பதைத்தான் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, இதிலே ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கோதுமையைப் பற்றிச் சொல்கிறபோது. கொள்கை விளக்கக் குறிப்பில் ஏழாம் பக்கத்தில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"மத்திய அரசு, உருளை ஆலைகளுக்கு வழங்கப்படும் கோதுமை விலையை குவிண்டால் ஒன்றுக்கு 172 ரூபாயிலிருந்து 190 ரூபாயாக 1—2—1986 முதலும் 190 ரூபாயிலிருந்து 220 ரூபாயாக 1—4—1986 முதலும் உயர்த்தியுள்ளது" என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் நமக்கு இங்கே இதற்குமுன் வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் ஆங்கிலப் பதிப்பில் 45 ஆம் பக்கத்தில் ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதில்,

" In the case of heat, wheat products, edible oil and tea, there was a decline in price." என்றிருக்கிறது.

கோதுமைக்கும் அதனால் தயார் செய்யப்படுகிற பொருளுக்கும் விலை குறைவாக இருக்கிறதென்று சொல்லியிருக்கிறது. ஆனால் இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லும்போது, மத்திய அரசு கோதுமை விலையை குவிண்டாலுக்கு 172 ரூபாயிலிருந்து 190 ரூபாயாக உயர்த்தியிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிற அந்தக் கருத்து உண்மையானதா அல்லது இப்போதுள்ளபடி இந்தக் கொள்கைக் குறிப்பிலேயுள்ளபடி கோதுமை விலை உயர்த்தப்பட்டிருக்கிறது என்கிற கருத்து உண்மையானதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உணவு நிலைமை" கொள்கை விளக்கக் குறிப்பிலே தரப் பட்டிருக்கிற விவரங்கள், மத்திய அரசு சமீபத்திலே கோதுமையின் விலையை ஏற்றியதன்பின் அதையொட்டி தமிழக அரசும் விலையை ஏற்றியிருப்பதைக்கொண்டு, அதன் அடிப்படையில் தரப்பட்டவையாகும். இது "லேடஸ்ட்" நிலைமைகளைக் கணக்கில் கொண்டு தரப்பட்ட விவரங்களாகும். பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருப்பது பொதுவாக விலைவாசிகளைப்பற்றிக் கூறப்படுகிறபோது சொல்லப்பட்ட குறிப்பாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

**திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிலைமை இருக்கிறது.

அதைப்போல இன்னொன்றும்கூட இருக்கிறது. பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வரும் பகுதிகளில் மலிவு விலையில் உணவு தானியங்கள் விநியோகம் செய்தல் என்ற தலைப்பின்கீழ், ஒரு குறிப்பு இருக்கிறது. இது தொடர்பாக ஏற்கெனவே 13—3—1986 "தினமலர்" பத்திரிகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வரும் பகுதிகளில் மலிவு விலையில் உணவு தானியங்களை விநியோகம் செய்தல் என்கிற திட்டத்தின் மூலம் 38,072 குடும்ப அட்டைதாரர்களுக்குச் செயல்படுத்த முடிவு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று வந்திருக்கிறது. இது நல்ல திட்டம்தான். பாராட்டப்பட வேண்டிய திட்டம். 13—3—1986 அன்றைய "தினமலர்" பத்திரிகையில் 38,072 பேர் என்று வந்திருக்கிறது. ஆனால் இங்கே கொடுக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பிலே "38,000 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று தோராயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கம் ஒரு கருத்தைத் தெரிவிக்கிறபோது, மிகச் சரியாக இருக்க வேண்டும். இதிலே குடும்ப அட்டைகள் எண்ணிக்கை தெளிவாக இருக்கும். பழங்குடியினரின் சான்றிதழ்கள் வாங்கிய எண்ணிக்கை கூட மிகத் தெளிவாக குறிக்கப்பட்டிருக்கும். அப்படி இருக்கிறபோது, ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 38,072 என்று கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தக் கொள்கைக் குறிப்பிலே வெறும் 38,000 குடும்ப கார்டுதாரர்கள் பயனடைவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவெல்லாம் தெளிவாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** பத்திரிகையில் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் சொன்ன பதிலாக இருக்கும் என்று கருதுகிறேன். இதிலே தோராயமாகத் தரப்பட்டிருக்கிறது.

[1986 ஏப்ரல் 17

(முற்பகல் 11-45)

திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : துணைத் தலைவ அவர்களே, அந்த அடிப்படையிலே நான் எடுத்துச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுக் கூடங்களுக்கு தமிழக அரசின் உணவுப் பொருள் கிடங்கிலிருந்தும், மத்திய உணவு கிடங்கி லிருந்தும் வழங்கப்படும் அரிசி சரியானதாக இல்லை என்று சொல்லும்போது, அதே அரிசியைத்தான் அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அரிசியைத் தான் சமைத்து குழந்தைகளுக்கு அங்கே வழங்குகிறார்கள். ஒரு மிகப் பெரிய திட்டத்தை ஏழைக் குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட மதிய உணவுத் திட்டம் என்று சொல்லி, அதற்கு இப்படிப்பட்ட துர்நாற்றம் வீசுகின்ற அரிசியை வழங்கி குழந்தைகளுக்கு சமைத்துப் போடுகிறார்கள். இதை மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களே சென்று பார்த்திருக்கிறார்கள். நாம் சென்று பார்த்துச் சொன்னால், ஏதோ உள்நோக்கத்தோடு சொல்கிறார்கள் என்ற கருத்துக்கள் வரலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இதில் அக்கறை செலுத்தி, அவர்கள் மதுரை சென்ற நேரத்தில், சத்துணவுக் கூடங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறார்கள். அந்த சாதம் நன்றாக இல்லை. பின்னர் அரிசியைக் கொண்டுவரச் சொல்லி, அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். அதுவும் நன்றாக இல்லை. பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருக்கி றார்கள். எனவே இதில் அரசு மிகுந்த கவனம் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, விநியோக முறையில் நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களே ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "Cosumer protection Laws for Tami Nadu soon". என்று ஒரு கருத்தரங்கில் அவர்கள் எடுத்துச் சொல்லியபோது வரவேற்கப்பட வேண்டியது. ஏனென்று சொன்னால், விநியோக முறையிலே நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். பல கருத்தரங்குகளை நடத்த வேண்டும். இந்தத் துறை மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், தவறுகளைச் சுட்டிக் காட்டும் வகையில் சிறந்த முறையில் பணியாற்றும் என்ற செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. ஆனால் அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் பட்ஜெட்டில் ஆயிரம் ரூபாய்தான். இந்த ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு 22 மாவட் டங்களுக்கு . . . . . .



1986 ஏப்ரல் 17]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, அமைச்சர்கள் உட்காரும் இடத்தில் உறுப்பினர்கள் உட்காரலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : எதிர்காலத்து அமைச்சர் களாக இருக்கலாம். (சிரிப்பு).

திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : துணைத் தலைவ ரவர்களே, அதற்கு ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது எப்படி போதும்? 22 மாவட்டங்கள் இருக்கின்றன. ஒரு பெரிய திட்டத்தைச் சொல்லி, ஆயிரம் ரூபாயை ஒதுக்கியிருப்பது உள்ளபடியே அதை நிறைவேற்றப் போதுமானதுதானா என்று கேட்டால், அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் ஒரு நிகழ்ச்சிக்குக் கூட போதாது என்பதைத் தெரிவித்து, அதை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்ற ஐயப்பாட்டை இங்கே நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். விநியோக முறைகளைக் கண்காணிப்பதற்குப் பல குழுக்கள் இருக்கின்றன. அவைகள் பாராட்டப்படவேண்டிய ஒன்று. அந்தக் குழுக்கள் சென்று விநியோக முறையில் இருக்கக்கூடிய இடர்ப்பாடு களைக் கண்டறிந்து நிவர்த்தி செய்யும். அதற்காகப் பல அமைப்புகளை ஏற் படுத்தியிருக்கிறோம் என்று இங்கே சொல்கிறார்கள். ஆனால் அந்த அமைப்புகள் என்ன பணியைச் செய்கின்றன என்று யாரும் சொல்ல முடியாது. உதாரணத்திற்கு சென்னையில் இதற்கென்று ஒரு அமைப்பு இருக்கிறது. ஒவ் வொரு பகுதிக்கும் ஒரு அமைப்பை வைத்திருக்கிறார்கள். "துணை ஆணையர் (நகரம் தெற்கு), உணவுப் பொருள் வழங்கல்-நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை-5, அவர்களின் நடவடிக்கைகள்: முன்னிலை எஸ். அன்சாரி அலி எம்.ஏ., பி.ஜி.எல்." அவர்கள் ஒரு உத்தரவை ஒரு தோழருக்கு அனுப்பி யிருக்கிறார். அதில் குடிமைப் பொருள் நியாய விலைக் கடைகளைக் கண் காணிக்க விழிப்புப் பணிக் குழு உறுப்பினர்களை நியமித்து உத்தரவிடப் படுகிறது. அரசு ஆணை (பலவகை) உணவு மற்றும் கூட்டுறவுத் துறை எண் 248, நாள் 15—1—1983. இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பது நல்லதுதான். அதன்படி உறுப்பினர்களை நியமித்து, அவர்கள் போய் ஏதாவது தவறுகள் நடந்திருக்கின்றனவா என்று கண்டுபிடித்துச் சொல்ல வேண்டுமென்பதற்காக ஒரு பொதுவான அமைப்பாக இருக்கிறது. சமுதாயத் தில் பணியாற்றுகின்ற, பொதுமக்களுக்காகப் பணியாற்றுகின்றவர்களின் பெயர்களைக் குறித்து, அவர்களை அந்தக் குழுவில் உறுப்பினர்களாகப் போடுகிறார்கள் என்று நினைக்கிறேன். நியாய விலைக் கடைகள் திறம்படச் செயல்பட, நுகர்வோர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதற்காக ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் விழிப்புப் பணிக் குழு ஒன்றை அமைக்க பார்வையில் கண்ட அரசு ஆணையில், அரசு உத்தரவிட்டிருக்கிறது. இது

தெளிவான உத்தரவாக இருக்கிறது. அந்த ஆணையில் வழங்கப்பட்டுள்ள அதிகார ஒப்படையைக் கொண்டு இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவரை, "புரசை மண்டலத்தில் பி. ஆர். எம். 17, புருக்ளின் ரோட்டில் உள்ள அங்காடிக்கு" விழிப்புக் குழு உறுப்பினராக நியமித்திருக்கிறார்கள். அதில் அவருக்குள்ள பணி என்னவென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக இதேபோல் ஒரு உத்தரவு அவருக்கு வந்ததாகக் கூறினார். அதற்குப் பிறகு இப்போது சமீபத்திலே உத்தரவு வந்திருக்கிறது. அதை 'எக்ஸ்டெண்ட்' செய்து மீண்டும் 2 ஆண்டுகளுக்குப் போட்டிருக்கிறார்கள். இதுவரைக்கும் அந்தக் குழு கூடவில்லை. அவர் அந்த அதிகாரியைப் போய் பார்த்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு ஆணை வந்திருக் கிறதே, இந்தக் கடிதத்தை வைத்துக்கொண்டு கண்காணிக்கலாமென்று சொல்லப் பட்டிருக்கிறதே, நான் கண்காணிப்பதற்கு என்ன வழிமுறைகள் இருக்கின்றன என்பதற்கெல்லாம் சில குறிப்புகள் அந்தக் கடிதத்தில் குறித்திருக்கிறார்கள். அந்தக் கடிதத்தில் மூன்றாவது பிரிவில் "குழு வாரம் ஒரு முறை கூட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு குழுவை நல்ல நோக்கத்தோடு அமைத்து ஒவ்வொரு ரேஷன் கடைக்கும்—ஒரு பகுதிக்கு, ஒரு வரியாவுக்கு என்றல்ல—என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பியிருக் கிறார்கள். புரசையில் 17, புருக்ளின் ரோட்டில் உள்ள கடையை இந்த உறுப்பினர் பார்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுக் காலமாகவும், இன்று வரையில் அந்தக் குழு கூட்டப்பட வில்லை. யாரையும் போய் சந்திக்கவும் முடியவில்லை. அதிகாரிகளைப் போய்ப் பார்த்தால், "சரிதான் வந்துவிட்டதா, சரி போங்கள்" என்று சொல் கிறார்கள். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால்,

(முற்பகல் 11-50)

இவர் இந்த உத்தரவை எடுத்துக்கொண்டு, அந்த நியாய விலைக் கடைக்குப் போனால், அங்கே இருப்பவர்கள் இவரைக் கேலியாகப் பார்க்கிறார்கள். "இது என்ன பெரிய உத்தரவு என்று எடுத்துக்கொண்டு இங்கே வந்துவிட்டாய்"? என்று கேட்கிறார்களாம். இப்படி நல்ல நோக்கத்தோடு அரசாங்கம் இந்தக் காரியத்தைச் செய்தாலும், செயல்படும்போது, இத்தகைய நிலைமைகள் இருக்கின்றன என்பதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்காகத்தான் நான் இதைக் குறிப் பிடுகிறேன்.

"குழு உறுப்பினர்கள் அடிக்கடி போய் விநியோக அங்காடிகளைப் பார்வையிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்றியமையாப் பொருள்கள் ஒழுங்காக வழங்கப்படுகின்றனவா என்று கண்காணிக்க வேண்டும்.





குழு உறுப்பினர்கள் அங்காடிகளின் அட்டைதாரர்கள் வரிசையாக நின்று பொருள்கள் பெற்றுச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் நியாயவிலைக் கடைகளில் புகார் பெட்டிகள் பொதுமக்கள் பார்வைக்குத் தெரியும்படியாக முக்கியமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அங்காடிகளில் வேறு நபர்கள் அனுமதிக்காதவாறு கண் காணிக்க வேண்டும்" என்றெல்லாம் உத்தரவிட்டிருந்தும்கூட இதைச் செய்ய அந்த உறுப்பினர் முயன்றால், முடியாதவாறு நிலைமைகள் இருந்தால், எப்படி பொருள்களைச் சீராக வழங்க முடியும்?

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் இன்னொன்றையும் இங்கே கொண்டுவர விரும்புகிறேன். இது ஒரு சாதாரண அச்சுப் பிழை என்று கூட சொல்லப்படலாம். இருந்தாலும் சொல்லுவது முறை என்கிற வகையில் நான் அதைக் குறிப்பிடுகிறேன். இங்கே தரப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் "தென்னாற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 5,011 நியாய விலைக் கடைகள் நடத்தி வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு இக்கழகத்தின் மொத்த விற்பனை அளவு ரூ. 526 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1984-85 ஆம் ஆண்டில் இருந்த விற்பனை அளவான ரூ. 443-55-ஐ விட 18.5 விழுக்காடு அதிகமாகும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1984-85 ஆம் ஆண்டில் இருந்த விற்பனை அளவான ரூ. 443.55 ஐ விட என்றால் மொத்த விற்பனை அந்த ஆண்டில் ரூபாய் 443-55 என்றுதான் ஆகும். இப்படி வெறும் ரூபாயாகப் போட்டிருக்கிறதே தவிர கோடி என்று அதிலே குறிப்பிடப்படவில்லை. எனவே அதையெல்லாம் சரியான முறையில் குறிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அரசாங்கம் என்னதான் நல்ல நோக்கத்தில் உத்தரவைப் போட்டாலும், செயல்படும்போது, நான் மேலே சொன்ன மாதிரியான நிலைமைகள் இருந்தால், அதனால் மக்களுக்கு எந்த விதமான பயனும் இருக்காது. ஏற்படுகிற இடர்ப்பாடுகளைக் களைய வேண்டுமென்ற நோக்கத்தில் குழுவை நியமித்து, அதிலே இன்னின்னார் பணி யாற்ற வேண்டுமென்று ஆணையும் பிறப்பித்த பிறகும், அப்படி நியமிக்கப் பட்டவர்கள் அந்தக் குழுவில் பங்கேற்று பணியாற்ற முடியவில்லை என்றால், அதனால் யாருக்கும் லாபமில்லை. அந்தக் குழு கூடவே இல்லை. இப்படி ஒரு நிலைமை இருந்தால், நாம் மக்களுக்கு எப்படி நல்ல வகையிலே சேவை செய்ய முடியும்? குறைகளை எடுத்துச் சொல்லி, அதிகாரிகளை முறையாகச் செயல்படச் செய்ய இத்தகைய சூழ்நிலைகள் உதவாது என்பதைச் சொல்லிக்

[திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1986 ஏப்ரல் 17

கொள்ள விரும்புகிறேன். எனவே குறைகளைக் களையவும் பொருள்களைச் சரியான முறையில் சிறப்பாக விநியோகம் செய்யவும் தேவையான முறையில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைச் சுற்றி பல பகுதிகள் இப்போது உருவாகியிருக்கின்றன. அங்கெல்லாம் உணவுப் பொருள் வழங்கல் துறை மூலமாக மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்க ஏற்பாடுகளை நாம் மேற்கொள்ள வேண்டும். சென்னை பெசன்ட் நகரில் கலாசேத்திரா காலனி போன்ற பகுதிகள் உருவாகியிருக்கின்றன. ஆளும் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. இராகவானந்தம் அவர்கள்கூட அங்கேதான் குடியிருக்கிறார்கள். அங்கே 1,500 குடும்பங்களுக்கு மேல் இருந்தும்கூட, அவர்களுக்கு என்று ஒரு நியாய விலைக் கடை அமைக்கப்படவில்லை. எனவே அவர்களுக்கு என்று தனியாக ஒரு நியாய விலைக் கடையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தை மட்டும் இங்கே தெரிவித்து நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் நல்ல வசதிகளுடன் செயல்படும் இந்தத் துறையின் மூலம் விநியோகம் செய்யப்படும் முறையில் ஒரு சில இடர்பாடுகள் இருந்தாலும், அவைகளைக் களையும் முயற்சியில் நாம் ஈடுபட வேண்டுமே தவிர, அதற்காக முறையையே மாற்றும் முயற்சியில் ஈடுபடக்கூடாது. இன்றைய தினம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடைகள் அனைத்தையும் கூட்டுறவுத் துறையில் உள்ள சங்கங்களுக்கு மாற்ற வேண்டும் என்று சொல்லும் சூழ்நிலை இருப்பதாக நான் அறிகிறேன். எற்கெனவே இந்த அமைப்பில் போதுமான அளவுக்கு வண்டி வாகன வசதிகள் இருக்கின்றன. கட்டிட வசதிகள் இருக்கின்றன. அத்தனை வசதிகளையும் கொண்டு இந்த அமைப்பு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இந்தக் கடைகள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்ற வேண்டும் என்றால், அது நியாயமல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனியாக வாகன வசதிகள் போதுமான அளவுக்கு இல்லை. கட்டிட வசதிகள் போதுமான அளவுக்கு இல்லை. அப்படிப்பட்ட நிலைமையில் இந்தக் கடைகளை அவற்றிற்கு மாற்றுவது என்பது எந்த வகையிலும் சரியில்லை. இந்த அமைப்பில் குறைகள் இருக்கின்றன. இல்லை என்று சொல்லவில்லை. அத்தகைய குறைகளைக் களைய வேண்டும். அதைச் செய்யாமல் கடைகளை எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றுவது சரியாகாது. எற்கெனவே இது குறித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்குப் போட்டிருக்கிறார்கள். இப்போது அது சுப்ரீம்



1986 ஏப்ரல் 17] [திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்]

கோர்ட்டில் பெண்டிங்கில் இருக்கிறது. சென்னையிலே உயர்நீதி மன்றத்தில் போடப்பட்ட வழக்கு காரணமாக இந்த மாற்றுவது என்ற முடிவு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இது அங்கே பணிபுரிபவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்தான் கொண்டு வரப்படுகிறதே தவிர, வேறு எந்த நல்ல நோக்கத்தின் அடிப்படையிலும் அல்ல. மக்களுக்கு இன்னும் நல்ல முறையில் விநியோகம் செய்வதற்காக இந்த மாற்றம் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே பணியாற்றும் ஊழியர்களை எல்லாம் பழி வாங்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவே தவிர, உண்மையிலேயே நல்ல நோக்கத்தின் அடிப்படையில் மக்களுக்குச் சிறந்த முறையில் பொருள்களை விநியோகிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இத்தகைய முறையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கக் கூடாது என்பதை மட்டும் சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-55)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு சில தகவல்கள் விடுபட்டுவிடக்கூடாது என்று அவ்வப்போது மாண்புமிகு உறுப்பினருக்குச் சிலவற்றைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். மொத்தத்திலே 21 ஆயிரம் நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையிலே ஏறக்குறைய 13 ஆயிரத்திற்கு மேற்பட்ட கடைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல, ஐந்தாயிரத்திற்கு மேற்பட்ட கடைகள்தான், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படுகின்றன. இவை எல்லாவற்றையும் கூட்டுறவுத் துறையே நடத்தினால், அதனால் மக்களுக்கு நன்மை ஏற்படும் என்ற நல்ல நோக்கத்திலேதான் இவற்றை கூட்டுறவுத் துறைக்கு மாற்ற வேண்டும் என்று அரசு முடிவு எடுத்தது. பணியாளர்களை பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடோ அல்லது வேறு பாரபட்ச உணர்வோடோ இந்தத் திட்டத்தை அரசு கொண்டு வரவில்லை. மக்களுக்கு நன்மை சீராக கிடைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலேதான் கொண்டுவரப்படுகிறது. வழக்கு சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது. அதன் தீர்ப்புக்குப் பிறகு அதற்கேற்ப முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

[1986 ஏப்ரல் 17

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உணவு பங்கீட்டுக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேச வாய்ப்பளித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் திரு. பிசா கணேசன் அவர்கள் பேசுகின்ற போது, நல்லபல செயல்களை அரசு செய்கிறது என்று சுட்டிக்காட்டி,—பாராட்டு தெரிவிக்காவிட்டாலும்,—பாராட்டுகிற முறையிலே கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நான் பேசுவதற்கேகூட ஒரு சந்தர்ப்பத்தை அவர் பேசியதன் மூலம் எனக்கு உருவாக்கித் தந்தார்கள். 'இந்த அரசு பாரபட்சமற்ற முறையில் குழுக்களை நியமித்திருப்பதாகவும், அரசியல் கட்சிகள் அங்கம் வகிக்காமல் தனி நபர்கள் இருந்து பணியாற்றுகிறார்கள் என்ற கருத்தையும் இங்கே சொன்னார்கள்.

(மாற்றுத் தலைவர் திரு. பி. இராமலிங்கம் தலைமை)

அவர் சுட்டிக்காட்டிய சில தவறுகள் நடக்கக் காரணம் என்ன என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் பல்வேறு சங்கங்களை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கின்ற இயக்கத்தைச் சார்ந்தவர்களும் சங்கத்தை வைத்திருக்கிறார்கள். நான் சார்ந்துள்ள இயக்கத்தைச் சார்ந்த நண்பர்களும் சங்கம் வைத்திருக்கிறார்கள். அவர் பேசி முடிக்கும்போது, கடையாக கூட்டுறவுத் துறைக்கு இந்த நியாய விலைக் கடைகளை மாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமே இதை ஏற்று நடத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றத்திலே, உச்ச நீதி மன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னார். சில இடங்களில் தவறுகள் நடக்கக்கூட இந்த வழக்கே காரணமாக அமைந்திருக்கிறது. ஏனென்றால், இந்த உணவுப் பங்கீட்டுக் கடைகள் கூட்டுறவுத் துறைக்குப் போய்விடும் என்ற காரணத்தைச் சொல்லி, எப்படியாவது இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சங்கங்கள் தொழிலாளர்களுக்குச் சொல்லி, இதற்கு இலட்சக்கணக்கான பணம் நமக்குத் தேவைப்படுகிறது, அந்தப் பணம் நமக்கு இருக்குமானால் நாம் அந்த வழக்கிலே வெற்றி பெற்று நாமே நடத்தலாம் என்று ஆசை வார்த்தை காட்டியதால்தான், அந்தக் கடைகளில் பணத்தைத் திருடுதல் போன்ற தவறுகள் நடக்கின்றன என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. பிசா கணேசன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 17] [திரு. ஜேப்பியார்]

நானே அண்ணா பொது தொழிலாளர் சங்கத்தின் கௌரவத் தலைவராகப் பணியாற்றுகிறேன். நாங்கள் கூட இது போக வேண்டாம் என்று மனு கொடுத்திருக்கிறோம். உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதால், இந்த மனுவின் மீது எந்தவிதமான பரிசீலனையும் இல்லாமல் இருக்கிறது. இதற்குப் பணம் தேவைப்படுவதால், தொழிலாளர்களைத் துன்புறுத்துவதால், இங்கே சுட்டிக்காட்டப்படுகிற தவறுகள் தாராளமாக அங்கே நடக்கின்றன என்பதை இந்தச் சபையின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1974 ஆம் ஆண்டு துவக்கப் பட்டது. ஏறக்குறைய 12 ஆண்டுகள் முடிந்து பதின்மூன்றாவது ஆண்டு துவங்குகிறது. இந்தத் துறையின் மீது பிற துறைகளின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் சற்று மந்தமான சூழ்நிலை, ஒத்துழைப்பு இல்லாத சூழ்நிலை இந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். வருவாய்த் துறையிலே உள்ள அதிகாரிகள் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குள்ளே வருகிறார்கள். இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் பணியாற்றிவிட்டு, தவறுகள் ஏதாவது நடந்தால், உடனே தங்கள் துறைக்கே திரும்பப் போய்விடுகிறார்கள். 1974 ஆம் ஆண்டு துவக்கப்பட்டபோது, புதிய இலாக்கா என்று வந்தார்கள். அப்போது பணியில் வந்தவர்களுக்கு 12 வருட சர்விஸ் ஆகிவிட்டது. அப்படி வந்தவர்களில் டெபுடி தாசில்தார்களானாலும், தாசில்தார்களானாலும் அங்கே ஓராண்டு, இரண்டாண்டு என்று பணியாற்றி விட்டு, தவறுகள் சுட்டிக்காட்டப்படுகிறபோது, தங்கள் தாய்த் துறைக்கே போய்விடுகிறார்கள். ஆகவேதான் அங்கே சில பிரச்சினைகள் இருக்கின்றன. இதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்பிரச்சினையை இங்கே கொண்டு வருகிறேன்.

சிலபேர் இத்துறைக்கு வந்துவிட்டு பொறுப்பில்லாமலே நடந்து கொள்வதும், தொழிற் சங்க நண்பர்கள் "ஏன் தவறு செய்கிறீர்கள்" என்று கேட்கும்போது, "நாங்கள் இன்றைக்கு இருப்போம், நாளைக்குப் போய் விடுவோம், எங்களை ஒன்றும் செய்ய முடியாது" என்று சொல்வதும் நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே மிகச் சாதாரணமாக ஆகிவிட்டது. அந்த நிலைமையை மாற்றி இனிமேல் யாரையாவது வேலைக்கு எடுக்க வேண்டும் என்று முயற்சி பண்ணினால், டி.ஆர்.ஓ., நுகர்பொருள் வாணிபக்

[திரு. ஜேப்பியார்] [1986 ஏப்ரல் 17

கழகத்திற்கு வேண்டிய ஆளை 'அப்பாயின்ட்' செய்து அந்தக் கார்ப்பரேஷன் 'எம்ப்ளாயி' ஆக அங்கே இருந்தால், இந்தத் தவறுகள் நிகழாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் வந்திருக்கின்றது. இருந்தாலும் இந்த மேலவை யிலேயும் சொல்லவேண்டியது என்னுடைய கடமையாக இருக்கின்றது. கடலூரிலே முதுநிலை மேலாளராக ஒருவர் இருக்கின்றார். அவர் மீது விசாரணை வேண்டுமென்று தொழிலாளர்கள் நிர்வாகத்திற்குக் கூறுகிறார்கள். ஒரு தவறு நடந்திருக்கிறது, இதைக் கண்காணிக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள். ஆனால் அந்த நிர்வாகம் அவரைக் கண்காணிப்பதற்கு நிர்வாகத்திற்குள்ளே உள்ள விஜிலென்ஸ் கமிட்டிக்கு அனுப்புகின்றார்கள். அங்கு உணவுத்துறையிலே போலீஸ் இருக்கின்றது. ஐ.ஜி. அந்தஸ்திலே அங்கே இருக்கின்றார்கள். அவர்கள் மூலமாக விசாரித்தால், விசாரணையில் நிலைமை சிக்கிரமாகத் தெரியும். அது என்னவோ தெரியவில்லை. அந்தத் துறை ஏற்பட்டபோதே விதிமுறைகளை வைத்திருக்கின்றார்கள். நிர்வாகத்திலே இருக்கின்ற சில மேலதிகாரிகள் அந்த விஜிலென்ஸ் கமிட்டியிலே இருக்கின்றார்கள். யார் மீது குற்றம் சொல்கின்றார்களோ அவர் மீது அவர்கள் விசாரணை செய்கின்றார்கள். விசாரணையின்போது ஒன்று மில்லை என்று சொன்னால், யார் மனுதாரரோ அவரைப் பழிவாங்கு கின்றார்கள். முதல்நிலை மேலாளர் மேல் ஒரு பகிரங்கமான குற்றச்சாட்டை பணியாளர்கள் தருகின்றார்கள். தந்தவர்கள் பிறகு பழிவாங்கப் படுகின்றார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்கிறேன். அந்த விஜிலன்ஸ் கமிட்டி நிர்வாகத்தில் உட்பட்டு இல்லாமல் தனி காவல் துறைக்கு அனுப்பி, அதன் மூலம் தான் அதைப்பற்றிக் கண்டுபிடிக்க முடியும். அப்படித்தான் விசாரிக்க முடியும். அதன்மேல்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள்தான் அவருடைய இந்தக் காலத்திலேயோ அப்படி முறையைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேறு இலாகாவிலே இருப்பவர்தான் இதை விசாரிக்க வேண்டும். பணியாற்றுகின்ற இந்த இலாகாவிலேயே அவர் இருக்கக்கூடாது. இப்போது இருக்கின்ற முறையில், மனுதாரரை எந்த நேரத்திலும் நசுக்கி விடலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு மேலோங்கி இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், நம்முடைய அந்த நிர்வாகத்திலே ஜாயின்ட் மேனேஜிங்



டைரக்டராக ஒருவர் இருக்கின்றார். அவர் சமீபத்திலேதான் ஐ.ஏ.எஸ். ஆனார்கள். அவர் கோட்டையிலே வேலை செய்கின்றார்கள். அங்கேயும் வேலை செய்கின்றார்கள். அவருக்கு என்ன எண்ணம் வருகின்றது என்றால், நாம் தான் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆகிவிட்டோமே, என்றைக்கு இருந்தாலும் அங்கே போகவேண்டியவன் தானே என்று கருதுகின்றார்கள். இந்த நிலையில் அங்கே இருக்கின்ற நிர்வாகம் ஓடாமல் இருக்கின்றதற்கு வழிவகை ஏற்பட்டிருக்கின்றது. அங்கே பணியாற்றுகின்ற அந்தத் தோழர்களும் அந்த நிர்வாகமும் செம்மைப்படுவதற்கும் இந்த நிர்வாக நிலைமைகளை மாற்றி யமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே எங்கே சென்றாலும் ஒரு சின்ன பிரச்சினை வருகிறது. நாம் இங்கே யாரும் அதைப்பற்றியெல்லாம் அதிகமாகப் பேசுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் இங்கே பேசியிருக்கின்றார்கள். தொழிற் சங்கத் தலைவர் என்ற முறையில் பேசுகின்றார். சர்க்கரையும், சிமெண்டும் லாரியிலே வருகின்றன. அந்தத் தனியாருடைய லாரியிலே அதிலே பணியாற்றுகின்றவன் அந்த சிமெண்ட்டை எடுத்து வருகின்றான். அப்போது அதிலே கொஞ்சம் சிமெண்ட்டை எடுத்து அந்த லாரி உரிமையாளருக்குக் கொடுத்தால்தான், அந்தத் தொழிலாளிக்கு வேலை கிடைக்கிறது. அப்படி இல்லை என்றால் அவனுக்கு வேலை இல்லை. பாரம் தூக்கும் தொழிலாளர்களுக்கு நாம் சங்கம் வைத்திருக்கிறோம். ஆனால் லாரி உரிமையாளர்களுக்கு நாம் தலைவர்கள் இல்லை. நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நல்ல எண்ணத்தோடு சிமெண்டும் சர்க்கரையும் அனுப்பிவைக்கப்படுகின்றன. ஆனால் அந்த சர்க்கரையும், சிமெண்டும் லாரியில் எடுத்துப்போகின்றபோது எடுக்கப் படுகின்றன. லாரியிலே கொண்டு போகின்றவர்கள் அங்கே கடையில் உள்ள தொழிலாளியிடம் அந்த சர்க்கரையையும் சிமெண்ட்டையும், குறைந்த அளவில் இருப்பதை, அங்கே இறக்கி வைத்துவிட்டுப் போய்விடுகின்றார்கள். ஆனால் அந்தத் தொழிலாளி அந்த சர்க்கரையை எடை போட்டுக் கொடுக்கின்றபோது அவர்களுக்குப் பெரும்பாரம் வந்துவிடுகிறது. அளவு குறைந்துவிட்டது என்ற பழி அவர்கள் மீது சுமத்தப்படுகின்றது. குறைந்த அளவு சர்க்கரையின் விலை அவனுடைய சம்பளத்தில் பிடிக்கப்படுகின்றது. அப்படி சிரமப்படுகின்ற ஒரு பயங்கரமான நிலைமையில் அவர்கள் இருக்கின்றார்கள். இப்படியெல்லாம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நடக்கிறது என்பதை அரசியல் ரீதியாக நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**திரு. ப. மாணிக்கம் :** அப்படிப்பட்ட சிமெண்ட், சர்க்கரைச் சாக்குகளை லாரியில் ஏற்றிவருகின்றவர்கள்தான் தருகின்றார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த அரிசியை ஏற்றி அனுப்புகின்றபோது, நம்மிடத்திலே உள்ள போக்குவாத்துக் கழகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நாம் இறக்கும்போது, அந்தச் சாக்குகளைப் பெறுவதற்கு அதிகாரிகள் இருப்பார்கள். எந்த அளவுக்கு சர்க்கரை வந்திருக்கின்றது என்பதைப் பார்த்து பெற்றுக்கொள்ள வேண்டியது அவர்களுடைய பொறுப்பாகிவிடுகின்றது. அப்போது குறைந்தால், அங்குள்ள ஊழியர்கள்

(பிற்பகல் 12-05)

அந்தப் பிரச்சினையிலும் கவனம் செலுத்தலாம். அந்த அதிகாரி பொறுப்பு ஏற்கின்றாரா, இல்லையா என்று. பொறுப்பு அவர்மீதுதான். அந்த விஷயம் ஏன் விட்டுப் போகிறது என்றுதான் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைச் சுட்டிக் காட்டினார்கள். அதை விட்டுவிடச் சொல்கிறார். ஊழியர்களுக்குக் கஷ்டம் வருவது உண்மை. அதை ரிசீவ் பண்ணிய அதிகாரி, 'ரிசீவ்' பண்ணினேன் என்று சொல்ல வேண்டும். அங்கே மோசடி நடந்தால், அதைப் பார்க்க வசதி இருக்கிறதா ?

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, லாரியிலே கொண்டு வந்து, ஒரு கடைக்கு இத்தனை கிலோ என்று நிர்ணயம் பண்ணி, கொடுக்கிறார்கள். அந்தக் கடைகளிலே பணியாற்றுகிறவர்கள் சாதாரண நிலையிலே இருக்கிறவர்கள். 200, 300, 400 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய சாதாரண ஊழியர்கள் அவர்கள். லாரியில் வந்து, இந்தா, 2 மூட்டை, 4 மூட்டை, எடுத்துக்கொள் என்று சொல்லிவிட்டுச் சென்றதற்குப் பிறகு, மேல் அதிகாரிகள் போய் விசாரிக்கும்போது, சர்க்கரை குறைகிறது. இந்தப் பழி எங்கே வருகிறதென்றால், சாதாரண தொழிலாளர்கள்மீதுதான். அந்தத் துறையிலே ஏறத்தாழ 12,000 பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களிலே ஆறாயிரம், ஏழாயிரம் பேர் நிரந்தரமான, நிம்மதியான சம்பளம் வாங்க முடிவதில்லை. இப்படி நடந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், தேவையில்லாத சட்டங்களைப் போடுகிறார்கள். நினைத்தால் சட்டங்களைப் போடுகிற அதிகாரத்தை அந்தக் கார்ப்பரேஷன் வைத்துக் கொண்டிருக்கிறது. நினைத்தால் சட்டம் போடுவார்கள். இதுதான் சட்டம் என்பார்கள். தவறு நடந்துவிடும். உடனே நீதி மன்றத்திற்குப் போகிறோம் என்பார்கள். நீதி



மன்றத்திற்குப் போய்விடுவார்களோ என்று இவர்கள் பயப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி, நேரடியான கவனத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்வி. அதிகாரி அதை வாங்கி, இத்தனை கிலோ வந்தது என்று எழுதினால் தான், இந்தத் தொழிலாளி தப்பிப்பான். ஆயிரம் கிராம் ஒரு கிலோ என்று பள்ளிகளிலே கற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் இங்கேயுள்ள சிலபஸ் அப்படியல்ல. 900 கிராம் ஒரு கிலோ. பள்ளிக் கூடத்திலே படித்தால் 1,000 கிராம், இங்கே 900 கிராம் ஒரு கிலோ. சிலபஸ் மாறுகிறது. இதற்கு யார் காரணம் ? மேலே இருக்கும் அதிகாரிகள்தான். அங்கிருந்து அனுப்புவது, அதை இறக்குவது, இவன் வாங்குவது, அதை விநியோகிக்கும்போது குறைந்து விடுகிறது. 900 கிராம் என்று கொடுக்கும்போது, இந்த ஆட்சியே சரியில்லை, 900 கிராம்தான் கொடுக்கிறார்கள், என்று சொல்லி, ஆட்சியிடம் வருகிறார்கள். பேருந்துகளில் காலை 5 மணிக்கு ஏறி, 20 ரூபாய் நோட்டைக் கொடுத்து, 70 பைசா டிக்கட் கேட்பான். சில்லரை இல்லை என்றால், உடனே எம்.ஜி.ஆர். ஆட்சியே இப்படித்தான் என்பான். காலை 5 மணிக்கு 20 ரூபாய் கொடுத்தால் எவ்வளவு சிரமம் ? அவைகளைப் பற்றிப் பேசினால்தான் நல்லது. நாம் அரசியல் பேசிக் கொண்டிருக்கிறோம். உள்ளே உள்ள அந்த வர்க்கத்தைப் பற்றிப் பேசுவதில்லை. கூட்ஸ் ஷெட்டிலிருந்து சிமெண்ட் வருகிறது. அங்கேயுள்ள தொழிலாளர்களுக்கு வலது கம்யூனிஸ்ட், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் பெருந்தலைவர்கள். என்ன நடக்கிறது என்றால், அங்கேயே திருடுகிறார்கள். யார் திருடுகிறார்கள் ? யாரோ திருடுகிறார்கள். கடைசியாக நுகர்பொருள் வாணிபக் கழகம் கொடுக்கும் போது, சிமெண்ட் குறைந்துவிடுகிறது. பழி அரசாங்கத்தின்மீது. அங்கே நம்மை ஆதரிக்கிறார்கள், சந்தா தருகிறார்கள் என்பதால், இந்தத் தவறுகளை யாரும் சுட்டிக் காட்டுவதில்லை. நேரடியாக கோட்டைக்கு வந்து விடுகிறார்கள். இதை தயவுசெய்து நாம் பரிசீலித்தால்தான், இந்தத் தவறு எங்கேயிருந்து வருகிறது என்று கண்காணித்தால்தான், இதிலே நல்ல நிலைமைகள் ஏற்படும்.

சத்துணவுக் கூடத்திற்கு திடீரென்று இரவு 7 மணிக்கு வந்து "20 மூட்டை அரிசி, எடுத்துக்கொள்" என்று சொல்லுவார்கள். அங்கேயுள்ள ஆயா கையெழுத்து போடுவார்கள். எவ்வளவு அதிலே இருக்கிறது, எவ்வளவு

குறைகிறது என்று யாருக்கும் தெரியாது. இப்படிப்பட்ட நிலைமைகள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருக்கின்றன. அதைப் போக்கியாக வேண்டும். அரசுக்குக் கெட்ட பெயர் வர வேண்டுமென்றே சிலர் இருக்கிறார்கள். தேர்தலில் கூடப் பார்த்தேன். அரசாங்க அதிகாரிகள் 300 வோட்டில் 242 வோட் மாற்றிப் போட்டுவிட்டார்கள். இவர்களை வைத்துத்தான் ஆட்சி நடக்கிறது. சத்துணவுக் கூடத்திற்கு 7 மணிக்கு மூட்டையைக் கொண்டு போய், "7 மூட்டை வந்திருக்கிறது, பாமாயில் வந்திருக்கிறது" என்று சொல்லும்போது, அங்கே 60 ரூபாய் சம்பளம் வாங்கும் உதவியாளர் அதைக் கையெழுத்துப் போட்டு வாங்குவார்கள். இவர்கள் போய்விடுவார்கள். அதை எடை போட்டு கொடுப்பதும் இல்லை,

(பிற்பகல் 12-10)

அவர்கள் எடை போட்டு வாங்க வழியும் இல்லை. இம்மாதிரி குறைகளை எல்லாம் போக்குவதற்கு நுகர்பொருள் வழங்கு துறையிலுள்ள அதிகாரிகள் தான், கொள்கை வகுக்கிற அதிகாரிகள் தான் வழிவகை காண வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாதவாறு பார்த்துக்கொண்டால், அரசுக்குக் கெட்ட பெயர் வராது. அதுபோல் 'குவாலிட்டி கன்ட்ரோல்' என்று தனியாகப் பிரிவு வைத்திருக்கிறோம். அவர்கள் சொல்வது தான் அரிசி. அதைத் தான் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதற்கு மாறாக நடப்பதெல்லாம் அரசுக்குத் தெரியுமா? உடனே இங்கே வந்து விடுகிறார்கள். அல்லது இதுபற்றி தெரிவித்தவுடனே 'லெட்டர்ஸ் டு தி எடிட்டரில்' எழுதி விடுகிறார்கள். எங்கே தவறு நடக்கிறதோ அங்கே சென்று அவர்கள் பார்ப்பதில்லை. நாற்றமுள்ள அரிசி என்று யாராவது சொன்ன உடனே, அதுபற்றி எழுதிவிடுகிறார்கள். யார் இந்த சமுதாயத்திலே உள்ளபடியே தவறு செய்கிறார்கள், எப்படிப்பட்ட அரிசியைத் தருவதாக உத்தரவாதம் தந்தவர்கள் எப்படிப்பட்ட அரிசியைத் தந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி அறிய முயலுவதில்லை. ஆகவே, அதுபற்றி உரிய அதிகாரிகள் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்.

அடுத்து, இந்தத் துறைக்கு வந்து சேர்கிற அதிகாரிகளும் "நாளைக்குப் போய்விடுவோம்" என்கிற நினைப்பில் இருப்பதால், அவர்களும் இதுபற்றி சரியாகக் கண்காணிப்பதில்லை. டெப்யூட்டி கலெக்டர் ராங்கில் அவர்கள் இருந்தாலும், நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால், இங்கேயே நிரந்தரமாக இருக்கும் வகையில் 'அலாட்மென்ட்'



வாங்கினால் நன்றாக இருக்கும். சிமென்ட், சர்க்கரை போன்றவற்றை பொது மக்களுக்கு வினியோகிக்கும்போது தவறு நடக்கிறது என்றால், அப்படிப்பட்ட சமூக விரோத சக்திகளுக்கு எந்த அரசியல் கட்சிகளும் துணை போகக் கூடாது. எல்லா சங்கங்களின் பிரச்சினைகளுக்கும் துணை போகலாம். ஆனால் பொதுமக்களுக்கு வழங்குகின்ற இந்தப் பொருள்களில் தவறு செய்கிறார்கள் என்றால், அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி அல்லது கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், இப்படிப்பட்ட தவறு செய்கிறவர்களுக்கு ஆதரவு காட்டக் கூடாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிமென்ட்டை நிர்வாகமா திருடுகிறது? சர்க்கரையை நிர்வாகமா திருடுகிறது? வாகன்களில் அவைகள் வருகிறபோதே அவற்றைத் திருடுவதற்கு என்றே சிலர் இருக்கிறார்கள். வாகன்களில் வரும்போதே திருடாமல் கண்காணிப்பது மிகத் தலைச் சிறந்த செயலாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன.

அடுத்து, விஜிலன்ஸ் துறையிடம் புகார் கொடுத்தவர்களே காவல் துறையினரால் பழிவாங்கப்படுகிற நிலை இருக்கிறது. கடலூரில் ஏற்கெனவே பி.டி.ஓ.-ஆக இருந்த ஒருவர் இந்தத் துறைக்கு வந்தபிறகு, இங்கேயே இருந்து விட்டார். இங்கே வந்ததற்குப் பிறகு முதுநிலை மேலாளராக இருக்கும் அவர் மீதான புகாரை காவல் துறைக்கு அனுப்பி விசாரிக்க வேண்டுமென்று கேட்டு உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பை ஆதரித்து விடைபெறுகிறேன்.

**திரு. மு. செ. சங்காலிங்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது ஒருசில கருத்துக்களை மட்டும் கூறுகிறேன். கொள்முதலும் பொது வினியோகமும் என்கிற முறையில் இன்றைக்கு தமிழகத்தில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகள் மூலமாக உணவுப் பொருள்கள் பொதுமக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டாலும், வினியோகம் நல்ல முறையில் சரிவர நடைபெறுகிறது என்று ஆளும் கட்சியினரும், வினியோகம் சரிவர நடைபெற வில்லை என்று எதிர்க் கட்சியினரும் இங்கே தங்கள் தங்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஆரம்பத்திலிருந்தே இந்த நியாய விலைக் கடைகளில்

அதேபோல், கோதுமைப் பொருட்கள் கூட விற்பனை அதிகமாக இல்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தை மாற்றியமைக்கிற வகையில் சில நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். மாடர்ன் பிரட் கம்பெனி அதிகமாக இப்போது பிரெட் உற்பத்தி செய்யவில்லையென்று சொல்கிறார்கள். தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமே தன்னிடம் இருக்கிற கோதுமையைக் கொண்டு மாடர்ன் பிரட் போன்ற பொருட்களைச் செய்து விற்கலாம். சத்துணவுத் துறையும் அந்த பிரெட்களை வாங்கி சத்துணவுக்குப் பதிலாகக் கொடுத்தாலும், குழந்தைகளும் நன்றாக வளர்வார்கள் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு அதிகமாகப் பணப் புழக்கம் இந்த சிவில் சப்ளை துறையில் இருந்தும், 1981-82-க்குப் பிறகு கணக்குகள் தணிக்கை செய்யப்படவில்லை என்று பொதுக் கணக்குக் குழு சொல்லியிருக்கிறது. இந்தக் கணக்குகள் 1984-85 வரை தணிக்கைக்கு

(பிற்பகல் 12-20)

வரவில்லை. இவ்வளவு அதிகமாகப் பணம் புரள்கிற ஒரு நிறுவனத்தில் பணம் கணக்கிற்கு வரவில்லை என்றால், அங்கே ஊழல் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அது தணிக்கைக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கழகத்தின் நிர்வாகம் மிகவும் மந்தமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு அறவை மில்லில் தவிடு விற்பனைக்கு வருகிறபோது, நிர்வாக நடைமுறைகள் எல்லாம் முடிந்து அது விற்பனைக்கு வருகிறபோது, தவிட்டின் சத்தே கெட்டு விடுகிறது. அந்த அளவுக்குக் காலதாமதம் இருக்கிறது. தவிட்டை விற்கலாமா வேண்டாமா என்று தலைமைக் கழகத்திற்குக் கீழே இருந்து கேட்பதற்கே ஏழு மாதமாகிறது. அதற்கு இவர்கள் பதில் சொல்வதற்குக் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளாகின்றன. ஆறு ஆண்டுகள் கழிந்து, "நீங்கள் எங்களைக் கேட்கவேண்டாம். இனிமேல் தவிட்டை நீங்களே விற்றுவிடலாம்" என்கிறார்கள். அதற்குள் தவிடு கெட்டுப் போய்விடுகிறது. தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இத்தகவலை உடனே தெரிந்து கொண்டிருக்கக் கூடாதா? தொலைபேசிமூலம் பேசியிருந்தால், பிரச்சினை முடிந்து போயிருக்குமே! இதுபோன்ற நிலைமைகளையெல்லாம் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.





**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உணவு நிலைமை" கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நான் இரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் இப்போது ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடிகளை ஓரளவுக்கு மத்திய அரசு கொடுத்துள்ள உணவு உதவியைப் பயன்படுத்தி சமாளிப்பதற்கு மாநில அரசு முயற்சித்துக்கொண்டு வருகிறது என்பதை முதன்முதலில் நாம் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த உணவு நிலைமையைப் பொறுத்தவரையில், நம்முடைய கையிருப்பை அதிகப்படுத்துவதற்கு நம்முடைய அரசு இன்னும் கூட போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஏனெனில் நம்முடைய கையிருப்பு குறைவாக இருந்தாலும், நம்முடைய விளைச்சலும் சென்ற ஆண்டு ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாகக் குறைந்ததாலும், நாம் மத்திய அரசின் உதவியை முன்பே கேட்டு கையிருப்பை அதிகப்படுத்தியிருக்க முடியும்.

இதிலே இன்னொரு முக்கியமான விஷயம். நெல் விலை சம்பந்தமானது. நெல்லுக்குரிய விலையை சென்ற ஆண்டு கொடுத்ததைவிட இந்த ஆண்டு 5 ரூபாய்தான் கூட்டியிருக்கிறோம். கோதுமைக்கு விலை நிர்ணயிப்பது சம்பந்தமாக வடக்கே சலுகை காட்டப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நெல் வடக்கேயும் உற்பத்தி செய்கிறார்கள். பஞ்சாபில் உற்பத்தியாகும் நெல்லின் 'யீல்ட்' அதிகமாகும். தமிழ் நாட்டில் அவ்வளவு இல்லை என்பது உண்மை.

நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்யும்போது, "Regional Prices"

பிராந்திய அளவிலே உற்பத்திச் செலவைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதை நாம் கொள்கையாக வற்புறுத்த வேண்டும். நம்முடைய தமிழ் நாட்டிற்கும் வட மாநிலங்களுக்குமிடையே உற்பத்திச் செலவில் எந்த அளவுக்கு வித்தியாசம் இருக்கிறதென்பதைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, விலையை நிர்ணயம் செய்ய நாம் போராட வேண்டும். ஐந்து ரூபாயை அதிகப்படுத்துவதென்பது இன்றைய நிலைமையில் நியாயமானதாக ஆகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாநில அரசு ஏற்கெனவே 1978 ஆம் ஆண்டிலேயே நெல்லுக்கு அதிக விலை கேட்டது. அதற்காக சர்வ கட்சிக் குழு போவதாகக்கூட இருந்தது. அப்போது நாம் கேட்ட விலை அதிகம். அதற்குப் பிறகு இவ்வளவு பண வீக்கம் ஏற்பட்டிருக்கிற நிலையில் ஐந்து ரூபாய் தான் உயர்ந்திருக்கிறதென்று

சொன்னால், அதற்குமேல் நிர்ணயிக்க மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்று சொன்னால், விவசாயிகள் நிலைமை மிகவும் மோசமாகிவிடும். நமக்கு உற்பத்திச் செலவு அதிகமாகியிருக்கிற நிலையில், மத்திய அரசை வலியுறுத்தி அதிகம் விலை வாங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நெல் உற்பத்தி செய்கிற விவசாயிகளைக் காப்பாற்றவே முடியாது.

நம்முடைய மாநில அரசுத் துறையைச் சேர்ந்தவர்கள் இக்கொள்கைக் குறிப்பிலே பல்வேறு விஷயங்களைத் தொகுத்தளித்திருக்கிறார்கள். ஆனால் யதார்த்தத்திலே என்று வருகிறபோது, சில நிலைமைகள் மாறுபடுகின்றன. அவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போதைய

(பிற்பகல் 12-25)

'டிரன்ட்', நெல் விவசாயத்திற்குப் போனால் ஆதாயம் இல்லை. வாழைக்குப் போகலாம் அல்லது கரும்புக்குப் போகலாம். கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குச் சரியான விதை கிடைப்பதில்லை. போட்ட பணம் திரும்பி வாராது. கரும்பு உற்பத்தி செய்யும் சில இடங்களிலே அதை விட்டு விட்டு வாழை உற்பத்திக்கு விவசாயிகள் செல்கிறார்கள். எதிலேயாவது கொஞ்சம் பணம் கிடைக்குமா என்று பார்த்து அதற்குப் போகக் கூடிய ஒரு போக்கு இருக்கிறது. விவசாயிகளுக்கு இதில் வேறு வழி இல்லை. இந்தப் போக்கை நம்முடைய அரசு வளர்வதற்கு அனுமதிக்கக்கூடாது. அதற்காக அரசு நிர்வாகத்தை நான் குறை சொல்லவில்லை. நிர்வாகத்தினுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. ஆனால் இப்போதுள்ள உண்மை நிலையை மாநில அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு நெல் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு விலையைக் கூட்டித்தர முயற்சிக்க வேண்டும். மத்திய அரசு தடங்கல் செய்கிறது என்பது உண்மை. ரிசர்வ் பாங்கு அதற்கு அனுமதிப்பதில்லை என்பதும் உண்மை. இருந்தாலும் அது அனுமதிக்கவில்லையே என்று சொல்லிக்கொண்டே இருந்தால், பிரயோஜனம் இல்லை. அதற்கு மாறாக அரசு உற்பத்திப் பொருட்களுக்கு ரீஜனல் பிரைஸ் ஏற்பட வழி வகுத்து உதவி செய்ய வேண்டும். உற்பத்திச் செலவைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். நம்முடைய அரசின் திட்டக் கமிஷன் இருக்கிறது. திட்டக் கமிஷன் வேலையை எனக்குக் கொடுத்தால், நான்கூடச் செய்ய முடியும். அதை எதற்காக வைத்திருக்கிறோமோ அந்த வேலையை அது செய்யவில்லை. நெல்லுக்கு, குறிப்பாக தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் ஆகும் உற்பத்திச் செலவும், திருச்சி மாவட்டத்தில் ஆகும் உற்பத்திச் செலவும், மதுரை மாவட்டத்தில் ஆகும் உற்பத்திச் செலவும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. அதன் உற்பத்திச்



செலவு மாவட்டத்திற்கு மாவட்டம் அங்குள்ள பாசன வசதி, மண்வளம் ஆகியவைகளைப் பொருத்து வேறுபடுகிறது. அதனால்தான் நெல் விலை கட்டுப்படியாகவில்லை என்று விவசாயிகள் கிளர்ச்சி செய்கிறார்கள். இதைக் கண்டறிவதற்காக பரிசிலனைகள், ஏகப்பட்ட சுற்றுப் பயணங்கள், விவரங்கள் எல்லாம் சேகரிக்கப்பட்டன. அந்தக் குழு கூட கூடுதலாக சிபாரிசு செய்த தாகச் சொல்கிறார்கள். ஆனால் என்ன சிபாரிசு என்று தெரியவில்லை. மாநில அரசு நெல்லுக்கு விலையை எப்படியாவது கூட்டித் தரவேண்டுமென்று கூட விவசாயிகள் கேட்கவில்லை; அவர்களுடைய கோரிக்கைதான் அது. நெல் விவசாயம் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதுமாத்திரமல்ல விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை இப்போது தரப்படவில்லை. அவர்கள் அப்படி இருக்கும்போது அவர்களுக்கு இந்த அரசு 'காம்பன் சேஷன்' கொடுத்திருக்க வேண்டாமா? நம்முடைய அரசின் கொள்கையாக அது இருக்க வேண்டாமா? அதனால்தான் இதை மறு பரிசீலனை செய்து நெல்லுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையை நிர்ணயிப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். மத்திய அரசு தடங்கல் செய்கிறது என்று சொல் கிறார்கள். அந்தத் தடங்கலை நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்கு என்னதான் வழி என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, சிவில் சப்ளைஸ் பற்றி நிறைய பேர் சொல்லிவிட்டார்கள். அதுபற்றி நான் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். கடந்த 7, 8 வருடங்களாக இந்த அவையின் முன்னாள் உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும், நானும் பலமுறை இந்தப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறோம். 1981-லிருந்து கடந்த 5 வருடமாக நம்முடைய அரசு அரிசி மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறது. அரசு கொள்முதல் செய் கிறது, விநியோகிக்கிறது என்ற முறையில் அதனுடைய கணக்குகளை கூடிய வரையில் 'அப்டுடேட்' செய்ய முயற்சிக்க வேண்டும். இது முக்கியமானது. அப்படிச் செய்யவில்லை என்று சொன்னால், அதில் ஏற்படக்கூடிய குறைபாடு களை நிவர்த்திக்க முடியாது. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. சங்கர லிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். தவிடு விற்பதற்கு அனுமதி வாங்க ரொம்ப நாள் ஆகிறது. 'நிர்வாகம்' ரெட் டேபிஸம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இந்த மாதிரிப் பொருட்களை, சீக்கிரம் கெட்டுப்போகக் கூடிய பொருட்களை, தவிட்டை யாரும் ரொம்ப நாட்களுக்கு வைத்திருக்க மாட்டார்கள். அது மூன்று மாதம் இருந்தால் புழுத்துப்போகும். அவ் வளவு நாட்களுக்கு யாரும் அதை வீட்டிலே வைத்திருக்கமாட்டார்கள். இந்த விவரம் எல்லோருக்கும் தெரியும். எந்த அதிகாரியாக இருந்தாலும், தமிழ்

[திரு. ப. மாணிக்கம்] [1986 ஏப்ரல் 17

நாட்டில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு இது தெரியாவிட்டால், வீட்டிலுள்ளவர்கள் கூடச் சொல்வார்கள். ஆனால், நிர்வாக அளவில் இது எங்கு போய் இருக்கிறது என்றால், அவ்வளவு நாட்கள் அதை வைத்திருக்கும்போது அது மக்கி, மண்ணாகிப் போய்விடுகிறது. வர வேண்டிய பணமும் போய்விடுகிறது. இது சாதாரண அதிகாரிகளுக்குத் தெரியாததல்ல. அரசினுடைய விதிமுறைகள் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஒரு அதிகாரி உடனே நடவடிக்கை எடுத்தால், எங்கே நாம் மாட்டிக் கொள்வோமோ என்று அவர் நினைத்து, இது இப்படியே போய் போய், கடைசியில் 'பிக்ஸிங் ரெஸ்பான்ஸிபிலிடி' என்பதில் கஷ்டம் வருகிறது. ஒரு நல்ல காரியத்தை ஒரு அதிகாரி செய்திருக்கிறார். அவர் செய்த முறை தவறு. அவர் நல்லது செய்திருக்கிறார் என்று நாம் பாராட்டக்கூடாதா? அதை அவர் ஏன் செய்தார் என்று அவர் மீது 'சார்ஜ் ஷீட்' போட்டிருக்கிறார்கள். ஒரு மேலதிகாரி தப்பு செய்தால் கேட்கவே முடியாது. மேல் அதிகாரிகள், கீழ் அதிகாரிகள் என்பதற்காக நான் சொல்லவில்லை. அவர் ஒரு காரியத்தை அவசரத்தில் செய்திருக்கிறார். அது நல்ல காரியமாக இருக்கிறது. அதைப் பாராட்டலாமே. அதை விட்டுவிட்டு, அவர் ஏன் முறை தவறி செய்தார் என்பது தான் நம்முடைய அரசின் கேள்வி. அதற்குள் அதிகம் போக விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். சில விஷயங்களில் மேலே இருப்பவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் கீழே கடத்தல்காரர்கள் இருக்கிறார்கள். அவர் சொன்னதைத்தான் சொல்கிறேன். அவர்களை கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் தடுக்க வேண்டும். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்வதில்லை. அதுதான் நிலைமை. 15 நாட்களுக்கு முன்னால் திருவள்ளூரில் கடத்தல் செய்திருக்கிறார்கள். அதில் பெரிய வியாபாரிகள் எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். கீழே உள்ள அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அப்படிக் கடத்தல் செய்யும்போதே பிடித்து விட்டார்கள். பிடித்து நடவடிக்கை எடுப்பது என்று வரும்போது, யார் முன்னே வருகிறார்கள்? காவல் துறையில் சில நேரங்களில் வர மறுக்கிறார்கள். கேட்டால் இது எங்கள் வேலையில்லை என்கிறார்கள். விஜிலென்ஸ், புட் செல் என்று எத்தனையோ



1986 ஏப்ரல் 17] [திரு. ப. மாணிக்கம்]

வைத்திருக்கிறோம். அரசாங்க அமைப்பில் நிறைய வைத்திருக்கிறோம். ஆனால் எந்த அமைப்பு எந்த நேரத்தில் செயல்படுகிறது? அதுதான் முக்கியம். திரு. ஜேப்பியார் அவர்கள் சொன்ன உதாரணத்தைக் கேட்டோம். ஒரு கிலோ அங்கேயெல்லாம் 900 கிராம் என்று சொல்லிக் கொடுத்துவிட்டார்கள் என்றார். சில இடங்களில் 800 கிராம் கூட ஆகிவிடுகிறது. அது ஊருக்கு ஊர் மாறுபடுகிறது. சில இடங்களில் ஒரு அமைப்பு முறையிலே சில அதிகாரிகள், ஊழியர்கள் என்று எல்லோரும் சேர்ந்து இதைச் செய்கிறார்கள். அதைக் கண்டுபிடித்து யாராவது கேட்டால், அவர்களுக்கு அடி உதைதான் கிடைக்கிறது. போலீஸ் ஸ்டேஷனில் போய்ச் சொன்னால், அவர்கள் வழக்கை எடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கும் ஒரு பங்கு அதில் கிடைக்கிறது. மிஞ்சிப் போய் அவர்கள் கேட்டால், எண்ணெய் போன்றவை அவர்களுக்குப் ஃபிரியாகப் போய்ச் சேர்ந்து விடுகிறது. இதனால் நான் காவல் துறையையே குறை சொல்லவில்லை. என்னை விட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களுக்கு இந்த நிலைமைகள் மிக நன்றாகத் தெரியும். எனவே நான் அதற்குள் போக விரும்பவில்லை. என்றாலும் கீழே நடக்கிற தவறுகளை நாம் கண்டுபிடிக்கத்தான் வேண்டும். அதற்காகத் தான் கமிட்டிகளைப் போடுகிறோம். அதில் என்ன நடக்கிறது என்றால், பொதுமக்களுக்குச் சம்பந்தமில்லாதவர்களை எல்லாம் கமிட்டியில் போட்டு விடுகிறோம். கன்சியூமர் கவுன்சில் என்று போடுகிறோம். அதில் இருப்பவர்களுக்கு ஏழைகள் படுகிற கஷ்டம் என்னவென்று தெரியாது. அவர்கள் ஒன்றாக உட்கார்ந்து தீர்மானம்தான் போட முடியும். நல்ல பெரிய மனிதர்கள் மரியாதைக்கு உரியவர்கள். அவர்களால் அவ்வளவு தான் செய்ய முடியும். தீர்மானம் போட்டு சர்க்காருக்கு இருக்கிற நிலைமையை எழுதி அனுப்புவார்கள். இந்த மாதிரி யான நிலைமை இல்லாமல் ஸ்தலத்தில் விநியோகம் செய்யும்போது தப்பு நடந்தால் நடவடிக்கை எடுக்கும் வகையில் நிலைமையை உருவாக்க வேண்டும்.

எங்கள் ஊரில் கடத்தல் ஆட்களை நாங்களே பிடித்தோம். ஆனால் அவர்கள் மீது யார் நடவடிக்கை எடுப்பது? அதுதான் கஷ்டமாக இருக்கிறது. புகார் செய்ததன் பேரில் எங்கள் ஊரில் ஒரு அதிகாரி ரொம்ப நாள் கழித்து வந்தார். அவர் எதிரிலேயே மீண்டும் அங்கே இருந்தவன் சர்க்கரையைக் கடத்தினான். அவர் அவனைப் பிடித்து ஏற்கெனவே இருந்ததோடு இன்னொரு கேசைப் போட்டு இரண்டு கேஸ் நடத்தினார். எதற்காக இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், வெறும் கன்சியூமர் கவுன்சிலை நியமித்து விட்டால் மட்டும் போதாது. ஆங்காங்கே கண்காணிப்புக் குழுவை அமைக்க

வேண்டும். அவர்கள் புகார் கொடுத்தால் துரிதமாக நடவடிக்கை எடுக்க
வேண்டும். அப்படிச் செய்தால்தான், நாம் எந்தயாவது உருப்படியாக
அடைய முடியும். ஒரு வாரம், அல்லது 10 நாளில் நடவடிக்கை
நிலை வேண்டும். தவிடு பற்றிய உதாரணத்தை இங்கே எடுக்கும்
அவர்கள் மீது கேஸ் போட்டால், 'புரூவ்' செய்ய சொன்னார்கள்.
செய்வது ? கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள். முடியாது. என்ன
தான் போவார்கள். கோர்ட்டு இருக்கும்போது வசதி உள்ளவர்கள் போகத்
வார்கள் ? ஏழை திருடினால், அவன் போகாமல் என்ன செய்
ஜெயிலுக்குத்தான் போக வேண்டும். கோர்ட்டுக்குப் போக முடியாது. அவன்
அவன் ஜெயிலுக்குப் போக மாட்டான், ஆனால் பணக்காரன் திருடினால்,
றத்தை வசதிக்காரன் பயன்படுத்தத்தான் கோர்ட்டுக்குப் போவான். நீதிமன்
செய்வான்.

ஆனால், நான் சொல்ல விரும்புவது, இந்தத் துறையைப் பொறுத்தவரை
யில், முதலாவது இந்த மாதிரி விஷயங்களில் துரிதமாக நடவடிக்கை எடுக்க
வேண்டும். அடுத்தது தவறு செய்கிறவர்கள் மீது குறைந்தபட்சம் எக்ஸ்பிளனேஷனாவது கேட்க வேண்டும். டெமரேஜ் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள்.
அத்தகைய நிலைமைகளில் நஷ்டத்திற்குப் பொறுப்பாளர்களிடம் 'ரெக்கவரி'
என் செய்யக்கூடாது ? அவர்களை வேலையை விட்டு நீக்க வேண்டாம். ரெக்க
வரியைக் கூடவா செய்யக்கூடாது ?

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் விதிகளை மறுபரிசீலனை செய்து
பொறுப்புகளை நிர்ணயிக்க வேண்டும். அப்போதுதான் தவறு நடப்பதைத்
தடுக்க முடியும். அந்த வகையில் விதிகளில் மாற்றம் கொண்டு வர வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடும்ப அட்டைகளைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்பு
கிறேன். குடும்ப அட்டைகளை வைத்துக்கொண்டு நடக்கும் தவறுகளை
அகற்ற வேண்டும் என்பதில் நான் உடன்பாடு கொண்டவன். இப்போது ஒன்று
மில்லாதவர்கள் கார்டுகளையெல்லாம் அடமானம் வைத்து விடுகிற நிலைமை
இருக்கிறது.

(பிற்பகல் 12-35)

முன்பெல்லாம் வேலை செய்பவர்கள் 11 பேருக்கு ரேஷன் கார்டு வாங்குவார்
கள். ஆனால் இரண்டு பேர்தான் வீட்டில் இருப்பார்கள். அவர்கள் கணக்கு
சொல்லி வாங்குவார்கள். மற்றவர்கள், புருஷன், பெண்டாட்டி வேலைக்குப்
போவார்கள். அவர்கள் அப்படி கணக்குச் சொல்ல முடியாது. ஆகவே
'நாங்கள் நேரில் வந்தோம் நீங்கள் யாரும் வீட்டிலே கிடையாது, நாங்கள்





என்ன செய்வது என்று இந்தத் துறை அலுவலர்கள் சொல்கிறார்கள். பிறகு மறு உத்தரவு போட்டு காலை 9 மணிக்கு வாருங்கள், விசாரணை செய்கிறோம் என்று சொல்லி விசாரணை செய்வார்கள். இப்படி முன்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது முந்தைய கதை.

இப்போது இந்தக் கார்டை 100 ரூபாய்க்கு அடமானம் வைக்கிறார்கள். காரணம் அவருக்கு அவசரமாக 100 ரூபாய் தேவை. ஆகவே போலி கார்டுகள் ஒரு சொத்து மாதிரி. நகை அடமானம் வைப்பதைப் போல அடமானம் வைக்கும் பொருளாக இந்தக் கார்டு மாறியிருக்கிறது. போலி கார்டுகளை அகற்ற வேண்டும். அதற்குக் கண்காணிப்பு தேவை. இதற்கு கடையில் ஒழுங்காக பொருள்களைக் கொடுத்துவிட்டு, இதற்கு மக்கள் ஒத்துழைப்பைக் கேட்டால், சுலபமாக இவற்றைக் கண்டுபிடிக்கலாம். மக்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதில் முக்கியமான அம்சம் என்னவென்றால், விநியோகத்திலே தவறு நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான். அப்படிச் செய்தால் போலி கார்டுகளை கண்டுபிடிக்க மக்கள் ஒத்துழைப்பார்கள். அந்த முறையிலே மக்கள் ஒத்துழைப்பைப் பெற அரசு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனின் விதிமுறைகளில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும். நம்முடைய அரசு நிச்சயமாக நெல் விலையை உயர்த்திக் கொடுக்க புதிய முயற்சிகளை மேற்கொண்டாலொழிய, தமிழ் நாட்டில் நெல் விவசாயம் வளராது, படிப்படியாகக் குறைந்துவிடும் என்று எச்சரித்து நான் அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள் ஐந்து பேர் உணவுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பாராட்டுக்களைத் தெரிவித்தவர்கள் அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போலவே குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியவர்கள், "அத்தகைய குறைபாடு இருப்பதாகக் கருதுகிறேன்" என்று சொல்லி குறைபாடுகளைப் பற்றிக் குறிப்பிட்ட மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக எல்லோரும் சுட்டிக்காட்டியதைப் போல, கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்திலே சரியான நேரத்தில் போதுமான அளவு காவிரி நீர் வராத சூழ்நிலை, வறட்சி அல்லது வெள்ளம் என்று மாறி மாறி வருகிற பருவ சூழ்நிலைகள் ஆகியவற்றுக்கு மத்தியிலேயும் தமிழகத்திலே உணவு நிலைமை

சீராக இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், பொது விநியோக முறையும் சீராக இருப்பதோடு அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளும் கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கின்றன என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசினுடைய முகவராக இருந்து நெல் போன்ற அத்தியாவசியப் பண்டங்களை கொள்முதல் செய்து, பாதுகாத்து, அரைத்து, பொது மக்களுக்கு விநியோகம் செய்கிற பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்த வரைக்கும், 1976-77 ஆம் ஆண்டிலே இந்த நிறுவனத்தின் பர்சேஸ் டர்னோவர் ரூபாய் 79 கோடியாக இருந்தது 1984-85 ஆம் ஆண்டில் சுமார் ரூபாய் 518 கோடியாக உயர்ந்திருக்கிறது.

(பிற்பகல் 12-40)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அது போலவே 1976-77-ல் சேல்ஸ் டர்ன்ஓவர் ரூபாய் 151 கோடியாக இருந்தது. பிறகு ரூபாய் 448 கோடியாகவும், 1985-86 ல் ஏறத்தாழ ரூபாய் 526 கோடியாகவும் உயர்ந்திருக்கிறது. இந்த நிர்வாகம் இத்தோடு மட்டுமல்லாமல், தமிழ் நாட்டில் இருக்கின்ற 66,404 மாண்புமிகு முதலமைச்சருடைய சத்துணவு கூடங்களுக்கும், அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியமான பண்டங்களைக் கொண்டுபோய் விநியோகம் செய்கின்ற பணியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றது. சென்ற ஆண்டு 1,46,000 எக்டேர் நிலப்பரப்பு பயிரிடும் அளவுக்கு பல்வேறு சூழ்நிலையாலே குறைந்திருக்கின்றது. அப்படியிருந்தும்கூட, 1985-86லே குறுவையைப் பொறுத்தவரைக்கும் ஏறத்தாழ 2,96,000 டன்னும் சம்பாவைப் பொறுத்தவரையில், 3,90,000 டன்னும் ஆக சுமார் 6,70,000 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. இப்படி கொள்முதல் செய்யப்படுகின்ற நெல்லுக்கு, குறிப்பாக தஞ்சை மாவட்டம் முழுவதும், தென் ஆற்காடு மாவட்டம், ஆறு தாலுக்காக்கள், திருச்சியிலே சில தாலுக்காக்கள், புதுக்கோட்டை மாவட்டத்திலே சில பகுதிகள் ஏகபோகக் கொள்முதல் இருக்கின்ற இந்தப் பகுதிகளுக்கு நேரடி கொள்முதல் நெல் கொண்டுவந்து தருகின்ற விவசாய மக்களுக்கு இடுபொருள் மான்யமாக ஏறத்தாழ ரூபாய் 35 வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக ஏறத்தாழ 17.17 கோடி ரூபாய் விவசாயப் பெருமக்களுக்கு இடுபொருள் மான்யமாக வழங்கப்பட்டிருக்கின்றது. சுமார் 5.60 லட்சம் ரூபாய் அளவுக்கு விவசாயப் பெருமக்கள் இதனாலே பலன் அடைந்திருக்கின்றார்கள். இப்படி கொள்முதல் செய்யப்படுகின்ற இந்த அரிசியைக் கொண்டு தமிழகத்திலே உள்ள



1,19,65,000-க்கு மேற்பட்ட குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோக முறையிலே இந்த அரிசி வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு சுமார் 20 ஆயிரம் டன் அரிசி மாதா மாதம் வழங்கப்படுகிறது. அது தவிர, ஏறத்தாழ 1,30,000த்திலிருந்து 1,40,000 டன் வரைக்கும் இந்த 1,19,00,000 குடும்ப அட்டைகளுக்கும் பொது விநியோக முறையிலே அரிசி வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா. கணேசன் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் அரிசியினுடைய அளவு குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். சென்னையிலே 12 கிலோ தான் தரப்படுகிறது. 20 கிலோ வாங்கினால் ஒரு கிலோ அதிகமாகத் தரப்படும் என்று முதல்வராலேயே அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் இல்லை என்று, அவர்கள் பேசுகின்றபோது, சுட்டிக்காட்டினார்கள். தொடக்க காலத்திலே ஏதோ 20 கிலோ கொடுக்கப்பட்டு வந்தது போலவும், இப்போது நிறுத்தப்பட்டது போலவும் இங்கே பேசுகின்றபோது சுட்டிக்காட்டினார்கள். ஆனால் 19—9—1984-லேதான் 6 ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை வீதம் அமைக்கப்படும் என்றும் அரிசியினுடைய அளவு ஒரு குடும்ப அட்டைக்கு 20 கிலோ அளவுக்கு உயர்த்தித் தரப்படும் என்றும் ஒரு 20 கிலோ வாங்கினால் ஒரு கிலோ இனாமாகத் தரப்படும் என்றும் சொன்னார்கள் என்றால், அது அப்போது இருந்த திருப்திகரமான, அதிகமான கையிருப்பு நிலையைக் கவனத்திலே கொண்டு அன்றைக்கு அறிவிக்கப்பட்டது.

(பிற்பகல் 12-45)

15—9—1984-க்கு முன்னாலே கிராமப்புறங்களிலே ஒரு குடும்ப அட்டைக்கு மொத்தம் மாதத்திற்கு 6 கிலோ அரிசிதான் தரப்பட்டு வந்தது. கடந்த எல்லாக் காலங்களிலும் அப்படித்தான் தரப்பட்டு வந்தது. 1—11—1985-க்குப் பின்னாலே இருக்கிற சூழ்நிலைகளைக் கொண்டும், குறைவான கையிருப்பைக் கொண்டும் 20 கிலோ என்ற அந்த அளவு குறைக்கப்பட்டது என்பது உண்மைதான். வெளிப்படையாகவே அரசு அதை அறிவித்திருக்கிறது. இப்போது அதிகபட்சமாக 12 கிலோதான் கொடுக்கிறோம். இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இடையிலே 7, 8 மாதங்களில் அதிகமான கையிருப்பு இருந்ததை மனதிலே கொண்டு உபரியாகக் கொடுக்கப்பட்டதுதான், இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏதோ அதிகமாகத் தரப்பட்டு வந்த அந்த அளவு, இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே இப்போது மாண்புமிகு முதலமைச்சரவர்களாலே நிறுத்தப்பட்டிருப்பது போன்ற உணர்வை, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, இங்கே தெரி

வித்தார்கள். அப்படி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையிலே சொல்ல வேண்டுமானால், 6 கிலோ என்று ஏற்கெனவே தரப்பட்டது, இப்போது 12 கிலோவாகத் தரப்படுகிறது. முன்பு சராசரியாக அதிகபட்ச அளவாக 6 கிலோ தரப்பட்டது. இப்போது 12 கிலோ தரப்படுகிறது. முன்பு கொடுத்த அளவு அதிகரித்துத்தான் தரப்படுகிறது. இடையிலே தரப்பட்ட 20 கிலோ அரிசி இல்லாத காரணத்தால் , இலவசமாக ஒரு கிலோ அளிக்கும் திட்டமும் இல்லை. இப்போது 20 கிலோ இல்லை. 12 கிலோதான் தருகிறோம். அதனால் இனாமாகத் தரும் அந்தத் திட்டமும் இப்போது நடைமுறையில் இல்லை. இப்போதிருக்கிற பல்வேறு விதமான சூழ்நிலைகளை மனத்திலே கொண்டு, இந்தத் தற்காலிகமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நான் பல இடங்களிலே சொல்லியிருக்கிறேன். நிலைமை சீரானதற்குப் பின்னாலே, அதிகரித்துத் தர முடியுமானால், நிச்சயமாக இந்த அளவு அதிகரித்துத் தரப்படும். தமிழ் நாட்டிலே நாம் கொள்முதல் செய்திருப்பது, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, ஏறக்குறைய 6¾ இலட்சம் டன் அரிசி தான். பொது விநியோகத்தில் ஒரு அட்டைக்கு 12 கிலோ என்று குறைத்ததற்குப் பின்னாலே, சராசரியாக மாதம் ஒன்றுக்கு 80 ஆயிரம் டன் அரிசி நம் மாநிலத்திற்குத் தேவைப்படுகிறது. சத்துணவுக் கூடங்களுக்கு 24 ஆயிரம் டன் தேவைப்படுகிறது. மாதம் ஒரு இலட்சம் டன் அரிசி என்று எடுத்துக் கொண்டாலும், ஓராண்டுக்கு 12 இலட்சம் டன் அரிசி தேவைப்படும். இந்த நிலைமையைச் சரிக்கட்ட நாம் மத்திய அரசின் உதவியை நாடியிருக்கிறோம். மத்தியத் தொகுப்பிலிருந்து நமக்கு மாதாமாதம் 25,000 டன் அரிசியை மத்திய அரசினர் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். அந்த 25,000 டன் அரிசி போதாது என்று மாண்புமிகு முதல்வரவர்கள் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியதோடு, நேரிலும் சென்று வலியுறுத்தினார்கள். அதற்குப் பின்னாலே, உணவு அமைச்சர் என்ற முறையிலே என்னுடைய தலைமையிலே தலைமைச் செயலாளர், உணவுத் துறைச் செயலாளர், மற்ற அதிகாரிகள் சென்று சம்பந்தப்பட்ட அமைச்சரை நேரிலே சந்தித்துப் பேச வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்கள் விரும்பினார்கள். அதற்கேற்ற நடவடிக்கையை மேற்கொண்ட பின்னால், செப்டம்பர்-அக்டோபர் மாதத்திலிருந்து மாதாமாதம் 35 ஆயிரம் டன் அரிசியையும் அதற்குப் பிறகு சிறப்பு ஒதுக்கீடாக மத்திய அரசு நவம்பர் டிசம்பர் மாதங்களில் மத்தியத் தொகுப்பிலிருந்து 65,000 டன் அரிசியை ஒதுக்கிக் கொண்டிருந்தது. மீண்டும் சனவரி, பிப்ரவரி மாதம் முதல் 40,000 டன் அரிசிதான் ஒதுக்கிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு, சுமார் 1 இலட்சம் டன் அரிசி நமக்கு ஒதுக்க வேண்டும். கேரளா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களுக்குத் தருவதுபோல் தமிழகத்திற்கும், இப்போதுள்ள





நிலைமைகளை மனதிலே கொண்டு அரிசியை வழங்க வேண்டும் என்று மத்திய அமைச்சரவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். மத்திய அரசை நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 12-50)

அரிசியினுடைய விலையைப் பொறுத்தவரையில், சில கருத்துக்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். நான் இது குறித்து பெருமையோடு சொல்ல முடியும். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் 75 பைசாவுக்கு, மிகக் குறைந்த விலையில் பொது விநியோக முறையிலே பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது. மத்திய அரசு நமக்கு சாதாரண ரக அரிசியை 2 ரூபாய் 31 பைசாவுக்குத் தருகிறது. ஆனால் நாம் அதை பொதுமக்களுக்கு ரூபாய் 1.75க்கு விநியோகம் செய்கிறோம். அது போல் சன்ன ரகத்தை, பைன் வரைட்டியை எடுத்துக்கொண்டால் நமக்கு மத்திய அரசு ரூபாய் 2.43-க்குத் தருகிறது. நாம் அதை பொதுமக்களுக்கு ரூபாய் 2.25க்குத் தருகிறோம். மிக சன்ன ரகத்தைப் பொறுத்தவவரையில், மத்திய அரசு நமக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.28 விலையில் தருகிறது. ஆக, மத்திய அரசு நமக்குக் கொடுக்கிற விலையைவிட மிகக் குறைவான விலையில் பொதுமக்களுக்கு பொது வினியோகம் மூலம், குடும்ப அட்டைகள் மூலம் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடையிலே 5 முறை நெல் விலையை ஏற்றிய பிறகு கூட, 1977 ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, அரிசி விலையைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் ஏற்றவில்லை. சமீபத்திலே தான் சிறிது மாற்றம் செய்து கிலோ ஒன்றுக்கு முறையே ரூபாய் 1.75, 2.25, 2.50 ஆகிய விலைகளில் ரகத்திற்கு தகுந்தாற் போல் தந்து கொண்டிருக்கிறோம். மத்திய அரசு தருகிற விலையாக இருந்தாலும் சரி அல்லது மற்ற மாநிலங்களில் வழங்கப்படும் விலையாக இருந்தாலும் சரி, எல்லாரையும் விட தமிழகத்தில் பொது விநியோகத்தில் குறைந்த விலைக்குத் தான் அரிசி வழங்கப்படுகிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கட்டுப்பாட்டுத் துணிகளைப் பொறுத்தவரையில், நியாய விலைக் கடைகளின் மூலம் 1985-86-ல் சுமார் 18 மில்லியன் சதுர கிலோ மீட்டர் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அதுபோல் லெவி சர்க்கரையைப் பொறுத்தவரையில், மாதம் ஒன்றுக்கு மத்திய அரசு ஏறக்குறைய 21,292 டன் ஒதுக்கீடு செய்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நபருக்கு குடும்ப அட்டை மூலம் 1 கிலோ சர்க்கரை வழங்கலாம் என்று தெரிவித்தார்கள். அப்படி ஒரு கிலோ விதம் தந்தால், நமக்கு ஏறக்குறைய 50 ஆயிரம் டன் சர்க்கரை தேவைப்படும். இந்த 450 கிராம் இருக்கிறதே அது கூட தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்டதல்ல. அதை நிர்ணயித்தது மத்திய அரசு. நாம் கூட அதைக் கொஞ்சம் அதிகரித்து நிர்ணயம் செய்தபோது, அது உயர்நீதிமன்றத்திற்குப் போவது என்பது மட்டுமல்ல, மத்திய அரசும் எல்லா மாநிலங்களுக்கும் தருவதுபோல் இங்கேயும் 450 கிராம்தான் தர வேண்டுமென்று சுட்டிக்காட்டியது. அதோடு உயர்நீதிமன்றமும், 450 கிராம்தான் தர வேண்டுமென்று சுட்டிக்காட்டியது. அதைத்தான் நாம் இப்போது தந்து கொண்டிருக்கிறோம். விநியோக முறையில் பெரியவர்கள் சிறியவர்கள் என்று வேறுபாடு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் இங்கே குறிப்பிட்டார். பெரியவர்களாக இருந்தாலும், சிறியவர்களாக இருந்தாலும், குழந்தைகளாக இருந்தாலும், இதிலே வேறுபாடு இல்லை, எல்லோருக்கும் 450 கிராம் சர்க்கரை விதம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில இடங்களில் குடும்ப அட்டைகளுக்கு என்று வழங்கப்படும் சர்க்கரையை வழங்காமல் இருக்கிறார்கள் என்றும், அப்படி வழங்காததை சில இடங்களில் வெளியிடங்களிலும், சில இடங்களில் ஓட்டல்களிலும் விற்கிறார்கள் என்றும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதுபோல் உள்ள குறைபாடுகள் இனிமேல் நிச்சயமாகக் களையப்படும். ஆனால் ஒவ்வொரு இடத்திற்கும் நாம் சர்க்கரையை வழங்கும்போது, எத்தனை அட்டைகள் இருக்கின்றனவோ அந்த அட்டைகளின் தேவைக்கு ஏற்பதான் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் இங்கே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, நியாய விலைக் கடைகளைப் பொறுத்தமட்டில், 2 ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்கிற விகிதத்திலே அவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்தினை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-55)

அதற்குப் பின்னாலே, சென்ற ஆண்டு கணக்கு எடுக்கப்பட்டு ஏறக்குறைய மூவாயிரத்திற்கு மேற்பட்ட கடைகள் புதிதாக தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டன. 1,000 குடும்பங்களுக்கு ஒரு கடை என்ற கணக்குகள் இருந்தாலும் கூட, சராசரியாக தமிழகத்தில் இருக்கிற அளவைப் பார்த்தால், ஒரு கடைக்கு



575 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. மொத்த அளவுக்கு 27,723 கடைகளுக்கும் சராசரியாகப் பார்த்தால், 575 குடும்ப அட்டைகள்தான் வருகின்றன. அதிலே 9,000-க்கு மேற்பட்ட கடைகளில் ஏறக்குறைய 500-க்குக் குறைவான குடும்ப அட்டைகள்தான் சராசரியாக இருக்கின்றன. இது தவிர, ஒரு கடைக்கும் இன்னொரு கடைக்கும் இருக்கிற தூரமும் கணக்கில் கொள்ளப்படுகிறது.

அது மட்டுமல்லாமல், பகுதி நேரக் கடைகளாக பல கிராமங்களில் கடைகள் திறக்கப்பட்டு அவைகளும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. குறிப்பாக தமிழகத்தில் சுமார் 17,000 ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. நம்முடைய நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், ஏறக்குறைய 21,000 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடை என்று மட்டுமல்லாமல், பல இடங்களில் 2, 3 கடைகள் கூட இருக்கின்றன. பொதுவாக எல்லா இடங்களிலும் எல்லா கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக் காட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மலைவாழ் மற்றும் பழங்குடி மக்களைப் பொறுத்தவரையில், சாதாரண பொதுமக்களுக்குக் கொடுக்கப்படுகிற விலையிலிருந்து குறைத்து, அரிசி கிலோ ஒன்றுக்கு 1.40 பைசா விதமும், கோதுமை கிலோ ஒன்றுக்கு 1.50 பைசா விதமும் வழங்கப்படுகிறது. இதனால் ஏறக்குறைய 38,000 குடும்பங்கள் பயனடைகிறார்கள். மண்ணெண்ணையைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலத்திற்கு ஒரு மாதத் தேவை 80 ஆயிரம் கிலோ லிட்டர்கள் ஆகும். ஆனால் மத்திய அரசு நமக்கு 50,000 கிலோ லிட்டர்கள் தான் தருகிறது. அந்த அளவை அதிகரிக்க வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். இந்த நேரத்தில் இந்த மன்றத்தின் வாயிலாக அதைக் கூறி, இந்த ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், சமையல் எண்ணெய். இதைப் பொறுத்தவரையில், ஒரு மாத ஒதுக்கீடு நமக்கு 3,500 டன்தான் செய்கிறார்கள். ஆனால் மொத்தத் தேவை நமக்கு 12,000 டன்னாக இருக்கிறது. ஆகவே சமையல் எண்ணெயை அதிக அளவில் ஒதுக்கித் தருமாறும் இந்த நேரத்தில் மைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரையின் அளவும் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒதுக்கீட்டை அதிகரித்துத் தரவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். நமக்கு கோதுமையைப் பொறுத்தவரையில், சுமார் 30,000 டன் வழங்கப்படுகிறது.

எந்தவிதமான உச்சவரம்பும் இல்லாமல் குடும்ப அட்டைகளுக்குத் தேவையான அளவுக்கு வாங்கிக் கொள்ளலாம் என்று சமீபத்தில் மத்திய அரசு சொல்லியிருக்கிறது. அதற்கேற்ப தமிழக அரசும் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

பொதுவாக பொதுத் துறை நிறுவனங்கள் என்றாலே அவைகள் நஷ்டத்தில் தான் இயங்கும் என்ற நிலைமையை மாற்றி, இப்போது தமிழ் நாடு சேமிப்புக் கிடங்கு என்ற நிறுவனம் ஓரளவுக்கு நல்ல லாபத்திலே இயங்குகிறது. ஓரளவுக்கு நல்ல லாபத்தில் இயங்குகிறது என்பதைச் சுட்டிகாட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன். 1985-86-ல் ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் இலாபம் ஈட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1984-85-ல் 1¼ கோடி ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது. இந்த நிறுவனம் மிகச் சிறப்பாக நல்ல முறையில் இலாபத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை முடியும் வரை அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு** : இப்படி நாம் தமிழகத்திலே கொள்முதல் செய்கிற அரிசி, மத்திய அரசு தருகிற ஒதுக்கீடு ஆகியவற்றை வைத்துக் கொண்டு ஏறக்குறைய ஒரு கோடியே பத்தொன்பது இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும், சுமார் 21,000 நியாய விலைக்கடைகள் மூலமாக அரிசி மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் விநியோகத்தைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறோம். இப்படிச் சிறப்பாக நெட்-வொர்க் மூலமாக எல்லா கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் இருப்பதன் காரணமாக வெளி மார்கெட்டிலேயும் விலைவாசி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு, விலையேற்றம் அதிகமாக இல்லாமல், அரசு கவனித்து வருகிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது, சில குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசுகிறபோது, கடலூர் எஸ். ஆர். எம். பற்றிக் குறிப்பிட்டார். அதுகுறித்து விஜிலன்ஸ் அளவிலே விசாரிக்கப்பட வேண்டும்





என்று கேட்டுக்கொண்டார். அவர் சொல்லியதன் அடிப்படையிலே கடலூர் எஸ். ஆர். எம். அலுவலகத்திலே அவர் தவறு செய்திருந்தால், அதைக் கண்டு பிடித்து உரிய வகையிலே விசாரணை மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசியைப் பொறுத்தவரையில், மத்திய அரசு இந்திய உணவுக் கார்ப்பரேஷன் நமக்குத் தருகிறது. அவர்கள் நமக்குத் தருகிற அரிசி நல்ல தரமான அரிசியாக இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இதற்காக போராட்டமே கூட நடத்தலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் சுட்டிக்காட்டினார்கள். நமக்கு ஒதுக்குகிற அரிசியை, மத்திய அரசு தொகுப்பிலிருந்து ஒதுக்குகிற அரிசியை, உணவுக் கார்ப்பரேஷன் ஒதுக்குகிற அரிசியை, நாம் பார்க்கிறோம். அந்த அரிசி சரியாக இல்லை என்று சொன்னால், அதை நாம் எடுத்துக்கொள்வதில்லை. அதனால் அவர்கள் நமக்கு ஒதுக்குகிற அரிசியை முழுமையாக எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறோம் என்று கொள்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இதை நாம் மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் எடுத்துச் சொல்லி, நல்ல தரமான அரிசியை ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்; தொடர்ந்து வற்புறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல், சுமார் ஒரு இலட்சம் டன் அரிசி—அதாவது கிலோ கணக்கிலே சொல்வதானால், ஏறக்குறைய பத்து கோடி கிலோ அரிசி—நாம் பொது விநியோகத்திலே வழங்குகிறோம். இவ்வளவு பொது விநியோகத்திலே வழங்குகிறபோது, இவற்றைச் சுமார் 21,000 கடைகளின் மூலமாக வழங்குகிறபோது இங்கொன்றும் அங்கொன்றுமாக கடைகளிலே வழங்கப்படுகிற அரிசி தரம் இல்லாமலிருப்பது, கெட்டுப்போயிருப்பது நம் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல், சமீபத்தில் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் திடீர் சோதனை செய்திருக்கிறார்கள். துறை அமைச்சர் என்கிற முறையில் நானும் அதிகாரிகளும் அவ்வப்போதைக்கப்போது சோதனையிட்டும் உரிய வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எங்காவது நாற்றமடித்த அரிசியோ, தரக்குறைவான அரிசியோ இருக்குமானால், அவை உடனடியாக மாற்றப்பட்டு தரமான நல்ல அரிசி கொடுக்கப்படுகிறது; விநியோகம் செய்யப்படுகிறது என்பதையும் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்தவிதமான உச்சவரம்பும் இல்லாமல் குடும்ப அட்டைகளுக்குத் தேவையான அளவுக்கு வாங்கிக் கொள்ளலாம் என்று சமீபத்தில் மத்திய அரசு சொல்லியிருக்கிறது. அதற்கேற்ப தமிழக அரசும் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

பொதுவாக பொதுத் துறை நிறுவனங்கள் என்றாலே அவைகள் நஷ்டத்தில் தான் இயங்கும் என்ற நிலைமையை மாற்றி, இப்போது தமிழ் நாடு சேமிப்புக் கிடங்கு என்ற நிறுவனம் ஓரளவுக்கு நல்ல லாபத்திலே இயங்குகிறது. ஓரளவுக்கு நல்ல லாபத்தில் இயங்குகிறது என்பதைச் சுட்டிகாட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன். 1985-86-ல் ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் இலாபம் ஈட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1984-85-ல் 1¼ கோடி ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது. இந்த நிறுவனம் மிகச் சிறப்பாக நல்ல முறையில் இலாபத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை முடியும் வரை அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு** : இப்படி நாம் தமிழகத்திலே கொள் முதல் செய்கிற அரிசி, மத்திய அரசு தருகிற ஒதுக்கீடு ஆகியவற்றை வைத்துக் கொண்டு ஏறக்குறைய ஒரு கோடியே பத்தொன்பது இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும், சுமார் 21,000 நியாய விலைக்கடைகள் மூலமாக அரிசி மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் விநியோகத்தைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறோம். இப்படிச் சிறப்பாக நெட்-வொர்க் மூலமாக எல்லா கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் இருப்பதன் காரணமாக வெளி மார்கெட்டிலேயும் விலைவாசி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு, விலையேற்றம் அதிகமாக இல்லாமல், அரசு கவனித்து வருகிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது, சில குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மேலவை உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசுகிறபோது, கடலூர் எஸ். ஆர். எம். பற்றிக் குறிப்பிட்டார். அதுகுறித்து விஜிலன்ஸ் அளவிலே விசாரிக்கப்பட வேண்டும்





என்று கேட்டுக்கொண்டார். அவர் சொல்லியதன் அடிப்படையிலே கடலூர் எஸ். ஆர். எம். அலுவலகத்திலே அவர் தவறு செய்திருந்தால், அதைக் கண்டு பிடித்து உரிய வகையிலே விசாரணை மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசியைப் பொறுத்தவரையில், மத்திய அரசு இந்திய உணவுக் கார்ப்பரேஷன் நமக்குத் தருகிறது. அவர்கள் நமக்குத் தருகிற அரிசி நல்ல தரமான அரிசியாக இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இதற்காக போராட்டமே கூட நடத்தலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் சுட்டிக்காட்டினார்கள். நமக்கு ஒதுக்குகிற அரிசியை, மத்திய அரசு தொகுப்பிலிருந்து ஒதுக்குகிற அரிசியை, உணவுக் கார்ப்பரேஷன் ஒதுக்குகிற அரிசியை, நாம் பார்க்கிறோம். அந்த அரிசி சரியாக இல்லை என்று சொன்னால், அதை நாம் எடுத்துக்கொள்வதில்லை. அதனால் அவர்கள் நமக்கு ஒதுக்குகிற அரிசியை முழுமையாக எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறோம் என்று கொள்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இதை நாம் மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் எடுத்துச் சொல்லி, நல்ல தரமான அரிசியை ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்; தொடர்ந்து வற்புறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல், சுமார் ஒரு இலட்சம் டன் அரிசி—அதாவது கிலோ கணக்கிலே சொல்வதானால், ஏறக்குறைய பத்து கோடி கிலோ அரிசி—நாம் பொது விநியோகத்திலே வழங்குகிறோம். இவ்வளவு பொது விநியோகத்திலே வழங்குகிறபோது, இவற்றைச் சுமார் 21,000 கடைகளின் மூலமாக வழங்குகிறபோது இங்கொன்றும் அங்கொன்றுமாக கடைகளிலே வழங்கப்படுகிற அரிசி தரம் இல்லாமலிருப்பது, கெட்டுப்போயிருப்பது நம் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல், சமீபத்தில் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூட சோதனை செய்திருக்கிறார்கள். துறை அமைச்சர் என்கிற முறையில் நானும் அதிகாரிகளும் அவ்வப்போது சோதனையிட்டும் உரிய வகைகளிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எங்காவது நாற்றம் எடுத்த அரிசியோ, தரக்குறைவான அரிசியோ இருக்குமானால், அவை உடனடியாக மாற்றப்பட்டு தரமான நல்ல அரிசி கொடுக்கப்படுகிறது; விநியோகம் செய்யப்படுகிறது என்பதையும் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உணவுப்பொருள் வழங்குவதைக் கண்காணிப்பதற்காகத் தனியாக 'ஃபுட் செல் சி.ஐ.டி.' அதிகாரிகள் இருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் நான் ஒரு விஷயத்தைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

கலப்படம், கள்ளக்கடத்தல் ஆகியவற்றிற்காகத்தான் இதற்கு முன்னாலே பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கடந்த ஓராண்டிலே மட்டும்....

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் கண்ணை மூடிக்கொண்டு சிந்தனை செய்யக்கூடாது என்பது நியதியாகும். (சிரிப்பு).

(பிற்பகல் 1-05)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** காவல் துறை அதிகாரிகளைப் பொறுத்தவரையில், இதிலே மூழு கவனத்தோடு ஈடுபட்டு 3 மாவட்டங்களில் சுமார் 5 பேர்களை, பெரும் வசதி படைத்தவர்கள், கலப்படம் செய்தவர்கள் உணவுப் பொருட்களைக் கடத்திச் சென்றவர்கள், பதுக்கி வைத்தவர்கள் ஆகியோரை ஓராண்டு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் எடை குறைவாக, தரக் குறைவாக விற்ற ஏறக்குறைய 110 பேர்களை அரசு அதிகாரிகளே—அரசுத் துறையில் பணியாற்றுகிற பணியாளர்கள், அலுவலர்கள், தாசில்தார் அதிகாரிகள் உட்பட—இந்த ஓராண்டில் கைது செய்திருக்கிறார்கள். ஆக இந்தத் துறையின் மூலமாக வேகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல், தரத்தைப் பரிசோதனை செய்வதற்காக 9 மாவட்டங்களிலே பரிசோதனை நிலையங்கள் இருக்கின்றன. வரும் ஆண்டில் எல்லா மாவட்டங்களிலும் இது போல் பரிசோதனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் பார்வையாளர் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. நுகர்வோர்கள், தாங்கள் காணுகின்ற குறைபாடுகளை அந்தப் புத்தகத்தில் எழுதி வைக்கலாம். அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னதுபோல், பாடத்திட்டத்தில் 5-வது வகுப்பிலே கலப்படம் போன்றவைகளை எப்படிக் கண்டுகொள்வது என்று அறிந்துகொள்ளவும், ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது அது மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளிலும் பாடத் திட்டங்களாகக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.





ஓட்டல் பண்டங்களைப் பொறுத்தவரைக்கும், அதன் விலையைப் பொறுத்த வரைக்கும், சென்னையைப் பொறுத்தவரையில், உணவுத் துறை அமைச்சர் என்ற வகையில் நானும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஓட்டல் சங்கத்தின் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி, பொதுமக்கள் சாப்பிடக்கூடிய அத்தியாவசியமான 5 வகையான உணவுப் பண்டங்களுக்கு விலை நிர்ணயம் செய்து, அதற்குப் பின்னாலே ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்கிருக்கிற ஓட்டல் சங்கங்களை அழைத்து, அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற விலைவாசிகளை மனதில்கொண்டு, சென்னையில் நிர்ணயித்த விலைக்கும் சற்றுக் குறைவாக நிர்ணயிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டு, அவர்களும் எல்லா மாவட்டங்களிலும் விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். சில இடங்களிலே அந்த விலையை அமல் படுத்துகிறார்கள்; சில இடங்களிலே சரியாக அமல் படுத்துவதில்லை. ஆந்திராவில் இருப்பதைப்போல் தமிழ் நாட்டில் கூட ஒரு சட்டத்தைக் கொண்டுவரலாமா என்று கூடப் பேசினோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமிகாந்தன் பேசும்போது, சட்டத்தைவிட, மன மாற்றத்தால் இவற்றையெல்லாம் செய்ய வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்கள். எமர்ஜென்ஸி காலத்தில் சட்டம் கொண்டுவந்தார்கள். சட்டம் மூலம் அதைக் கொண்டுவரும் போது, ஓட்டலை காலை 8 மணிக்குத் திறந்தால், 8½ மணிக்கு, அரசு சட்டத்தின்படி நிர்ணயித்த உணவுப் பண்டங்கள் தீர்ந்துவிட்டன என்றுகூடச் சொல்லி அவர்கள் தப்பித்துக்கொள்ள முடியும். ஆக இதைச் சட்டத்தாலே மட்டும் கட்டுப்படுத்த முடியாது. அது மட்டுமல்ல. சட்டம் போட்டு நாம் எடையை நிர்ணயிக்கும்போது, தரத்தைப்பற்றிப் பிரச்சினைகள் எழும். 'க்குவாலிட்டி' பற்றிப் பிரச்சினை வரும். நாம் 'க்குவான்டிடி' பற்றித்தான் நிர்ணயம் செய்ய முடியும். ஆக இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தால் நான், குறைந்தது 5 வகையான உணவுப் பண்டங்களுக்கு பொதுமக்கள் குறைந்த விலையில் வாங்கக்கூடிய அளவுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று தொடர்ந்து ஓட்டல் உரிமையாளர்கள் சங்கங்களை வற்புறுத்தி வருகிறோம். அதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரைக்கும் அது நூறு கோடி ரூபாய் நட்டத்தில் இருந்தது. இப்போது இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் ஒரு லட்சம் டன் அரிசியை அரசு பொதுமக்களுக்கும், மதிய உணவுத் திட்டத்திற்கும் வழங்குகிறது. வெளியே நெல்லுக்குக் கொடுத்து வாங்குகிற விலை, அதற்குப் பின்னாலே

அதை அரைவை செய்யும்போது ஏற்படும் செலவு, பின்னர் அதைப் பாதுகாத்து வைத்து அனுப்புவது, டிரான்ஸ்போர்ட், ஹாண்டிலிங் சார்ஜ் இவைகளை எல்லாம் சேர்த்துக் கணக்குப் பார்க்கும்போது, இந்த ஆண்டு ஏறக்குறைய 60-லிருந்து 70 கோடி ரூபாய்வரை அந்த நிறுவனத்திலே நஷ்டம் ஏற்படுகிறது. அதைத்தான் அரசு 'சப்ஸிடியாகக்' கொடுக்கிறது. இதிலே எந்தவிதமான தவறும் இல்லை. வெளிமார்க்கெட்டிலே சன்னரக அரிசி விலை சராசரி 3 ரூபாயிலிருந்து 3½ ரூபாயாக இருக்கிறது. மத்திய அரசு தரும் விலையைச் சுட்டிக்காட்டினோம். அந்த அடிப்படையிலே விலை நிர்ணயம் செய்யும் போது, அரசு மானியம் தரவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி மானியமும் அரசு தந்துகொண்டு, அரிசியின் விலையையும் ஏற்றாமல் அதைச் சீராக வைத்துக்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன குறைபாடுகளைக் களைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்து இந்தக் கொள்கை விளக்க குறிப்பை அவை ஏற்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-10)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசி ஆலைகளுக்கான உரிமம் கொடுக்கிற அதிகாரம் முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தது. இப்போது தலைமைச் செயலகத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் பெரும்பாலான தாமதம் ஏற்படுகிறது. எனவே அதை மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கே கொடுப்பதில் என்ன தயக்கம் என்று கேட்டேன். அதைக் குறித்து அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாகவே அரசின் தலைமைச் செயலகத்திற்கு வந்து தான் அரிசி ஆலை அமைப்பதற்கான என்.ஓ.சி. வழங்கப்பட்டு வருகிறது. லைசென்சுகளைப் பொறுத்தவரையில் டி.எஸ்.ஓ. அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே கொடுத்துவிடலாம். ஆனால் என்.ஓ.சி. பெறுவதற்கு அரசுக்கு வந்துதான் ஆக வேண்டும் என்ற நிலைதான் இருக்கிறது. இது எந்த ஆண்டிலிருந்து இப்படி இருக்கிறது என்ற தகவல் என்னிடம் இப்போது இல்லை. எனக்குத் தெரிந்த வரையில், பல ஆண்டுகளாகவே இப்படித்தான்



இருக்கிறது. இப்படி ஒரு முறை இருந்தாலும் கூட, இதிலே ஒரு வரை முறையை நாம் நிர்ணயிக்கலாம் என்றுதான் கருதுகிறேன். விண்ணப்பம் செய்த 4 மாதங்களுக்குள் மனுதாரருக்கு முடிவு சொல்லப்பட வேண்டும். மனு செய்து அது டி.எஸ்.ஓ. டிஸ்ட்ரிக்ட் சப்ளை ஆபீசர், மாவட்ட ஆட்சித் தலைவர், அதற்குப் பிறகு தலைமைச் செயலகத்திற்கு வர வேண்டும் என்ற நிலைமை இருந்தாலும், ஒரு மாத காலத்திற்குள் அவருக்கு 'உண்டு அல்லது இல்லை' என்ற விவரத்தைச் சொல்லிவிட வேண்டும் என்று இப்போது ஆணையிட்டிருக்கிறோம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம். இது அரசின் முடிவு. ஏற்கெனவே எடுக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருவது. எப்போது எந்தச் சூழ்நிலையில் இந்த முடிவெடுக்கப்பட்டது என்பதையெல்லாம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 18—4—1986 வெள்ளியன்று காலை 10 00 மணிக்குக் கூடும்.

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-11)

**7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

203. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டு அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). (1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619(A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது).

204. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான முதல் ஆண்டு அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). (1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619( ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது).

205. தமிழ் நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தின் 1981 82 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டு அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). (1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619(A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.)

[1986 ஏப்ரல் 17

| | |
|---|---|
| பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகம் | 12. சுங்குவார்சத்திரம். |
| | 13. காவேரிப்பாக்கம். |
| அண்ணா போக்குவரத்துக் கழகம் | 14. தோப்பூர் |
| | 15. கிருஷ்ணகிரி |
| | 16. சங்கரி |
| | 17. நாமக்கல் |
| | 18. ஊத்தாங்கரை |
| சோழன் போக்குவரத்துக் கழகம் | 19. வல்லம்-திருச்சி - தஞ்சை சாலை |
| | 20. பூண்டி, நாகப்பட்டினம்-தஞ்சை சாலை. |
| | 21. அணைக்கரை கும்பகோணம்-சென்னை சாலை. |
| தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் | 22. மாமண்டூர் |
| | 23. விக்ரவாண்டி |
| | 24. குமான்குடில், சேத்தியாதோப்பு அருகில். |
| தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் | 25. கரூர். |
| திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம். | 26. தொழுதூர் |
| | 27. ஹோசூர் |
| | 28. கொட்டாம்பட்டி |
| | 29. பழனி |
| | 30. மூவரை வென்றான் (காட்டூர்-ஸ்ரீவில்லிப்புத்தூர்) |
| | 31. ஏட்டயாபுரம் |
| | 32. லோயர் கேம்ப்—குமுளி |



1986 ஏப்ரல் 17]

| | |
|---|---|
| ஜீவா போக்குவரத்துக் கழகம் | 33. பெருந்துறை. |

மற்ற இடங்கள், ஆனால் முடிவாகவில்லை.

| | |
|---|---|
| பாண்டியன் போக்குவரத்துக் கழகம் | 34. திருமங்கலம் |
| | 35. தேனி |
| | 36. உசிலம்பட்டி |
| கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் | 37. எட்டயாபுரம் |
| பாண்டியன் போக்குவரத்துக் கழகம் | 38. அருப்புக்கோட்டை |
| மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் | 39. பரமக்குடி |
| | 40. மண்டபம் |

(ஆ) நீண்ட தூரம் பயணம் செய்யும் மோட்டார் வாகனங்களின் (லாரி, பஸ், கார், போன்றவை) ஓட்டுநர்கள், பயணிகள் சிறிது நேரம் தங்கி, இளைப் பாறவும், மற்றும் அவர்களுக்கு தேநீர், சிற்றுண்டி முதலியவற்றை அருந்திச் செல்லவும் சாலை ஓர ஓய்வு விடுதி கட்டுவதற்கான திட்டம் ஏற்படுத்தப்பட்டு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் திட்டம் நிறைவேற்றப் படும்.

## இணைப்பு II

(238 ஆம் பக்கத்தில் இனம் 5 க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

விற்பனைக்குழு ஊழியர்களின் பணி 17—11—1981 முதல் அரசுப் பணி என அறிவித்து அரசாணை எண் 2535, வேளாண்மை, நாள் 17—11—1981-ல் உத்தரவிடப்பட்டது. இந்த அரசாணையில், இப்பணியாளர்களின் பணி முறைகள், விடுப்பு வழங்குதல், சம்பளம் மற்றும் படிகள், ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்குதல் தொடர்பான ஆணைகள் தனியாக வெளியிடப் படும் என குறிப்பிடப்பட்டது.

2. இதன் அடிப்படையில் சம்பளம் மற்றும் படிகளை முதலில் அரசு நிதியிலிருந்து பெற்று, பின்னர் விற்பனைக் குழு நிதிகளிலிருந்து அரசுக்கு திருப்பி செலுத்துவது தொடர்பான நடைமுறைகளை வகுத்து அரசாணை எண். 1415, நாள் 24—7—1984-ல் ஏற்கனவே உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நான்காவது ஊதியக்குழு அரசுப் பணியாளர்களுக்கு 1—10—1984 முதல் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்து பரிந்துரை செய்தபொழுதே விற்பனைக் குழுக்களில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதிய விகிதங்களையும் மாற்றியமைத்து பரிந்துரை செய்ததின் அடிப்படையில் அரசு தனது ஆணை நிலை எண். 555, நிதித்துறை, நாள் 10—6—1985-ல் விற்பனைக் குழுக்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் உட்பட அனைத்து அரசு பணியாளர்களுக்கும் ஊதிய விகிதங்களை மாற்றி அமைத்து ஆணை வழங்கியுள்ளபடி, விற்பனைக்குழு பணியாளர்களுக்கும் திருத்திய ஊதிய விகிதங்களில் 1—10—1984 முதல் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

3. 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்-விளைபொருள் விற்பனை விதி 207 (4)-ன்படி விற்பனைக் குழுக்களில் பணிபுரிந்து வரும் அனைத்து ஊழியர்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கு 1933 ஆம் ஆண்டு தமிழ்நாடு விடுப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட விடுப்பு மற்றும் விடுப்பூதியம் வழங்கப்படுவதைப் போலவே விடுப்பு மற்றும் விடுப்பூதியம் ஆரம்ப முதலே வழங்கப்பட்டு வரப்படுகின்றன. விற்பனைக் குழுக்களில் பணிபுரியும் ஊழியர்களை 17—11—81 முதல் அரசு ஊழியர்கள் என அறிவிக்கப்பட்ட பிறகு இது தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

4. இதேபோன்று விற்பனைக் குழுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை முதலியவைகள் மாநில கணக்காய்வுத் தலைவரால் ஏற்பு செய்து, இதனை முதலில் அரசு நிதியிலிருந்து வழங்கி, பின்னர் விற்பனைக்குழு நிதியிலிருந்து மீளப் பெறுவதற்கான நடைமுறைகளும் அரசாணை எண். 1770, நாள் 8—10—1985-ல் வகுக்கப்பட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்துவதற்காக சில தெளிவுரைகளை வேளாண்மை விற்பனை இயக்குநர் மாநில கணக்காய்வுத் தலைவரிடமிருந்து கோரியுள்ளார். அவை கிடைக்கப் பெற்றதும், 17—11—81 முதல் ஓய்வு பெற்ற விற்பனைக்குழு பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்குவதற்கு வேளாண்மை விற்பனை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுப்பார்.

5. விற்பனைக்குழு பணியாளர்கள் பணி விதிகள் தொடர்பாக, இதுவரை, விற்பனைக் குழுவில் பணியாற்றும் பதிவுறை எழுத்தர்களை தமிழ்நாடு பொது சார்நிலை பணி விதிகள் கீழும், அலுவலக உதவியாளர், காவலர்,





தோட்டக்காரர், பெருக்குபவர் மற்றும் அலுவலக ஏவலாளர் போன்ற பதவிகளை தமிழ்நாடு அடிப்படை பணி விதிகள் கீழும், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் போன்ற பதவிகளை தமிழ்நாடு அமைச்சு பணி விதிகளின் கீழும் 17—11—1981-ல் கொணர்ந்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இது தவிர விற்பனைக்குழு செயலாளர், கண்காணிப்பாளர், மேற்பார்வையாளர், களக் கண்காணிகள் போன்ற மற்ற பதவிகளுக்கு தனியாக சிறப்பு விதிகள் வெளியிடவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்பு விதிகள் வெளியிடப்படும் வரையில் தமிழ்நாடு வேளாண்-விளைபொருள் சந்தைகள் விதிகளையே தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## இணைப்பு III

( 239 ஆம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### I. உணவு தானியங்கள் உற்பத்தி மற்றும் கொள்முதல் கொள்கை.

1985-86 ஆம் நிதி ஆண்டின் துவக்கத்தில், மாநிலத்தின் உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருந்தது. 1984 ஆம் ஆண்டு குறுவை மற்றும் 1985 ஆம் ஆண்டு சம்பா பருவங்களில் உணவு உற்பத்தி சிறப்பாக இருந்ததால் வெளிச்சந்தையிலும், அரசிடமும் கணிசமான இருப்பு இருந்தது. 1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பொது விநியோகத்தில் கேட்பு அதிகரித்தது. 1985 ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில், பொது விநியோகத்தில் மட்டும் கேட்பு 1 லட்சம் மெ. டன்களுக்கும் மேல் கூடியது. இதற்கு ஈடான இருப்பு சேர்க்கப்படவில்லையாதலால் கையிருப்பு விரைவில் குறைந்தது. இதற்கு காரணம் பருவமழை காலம் தாழ்ந்து பெய்தமையும், மாநிலத்தின் முக்கிய நீர் தேக்கங்களில் உள்ள குறைந்த நீர் மட்டமும் ஆகும். சென்ற குறுவையில் வழக்கமாக பயிரிடப்படும் பரப்பளவில் 1.46 இலட்சம் ஹெக்டேர் குறைவாக பயிரிடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குறைவினால் ஏற்படக்கூடிய உற்பத்தி இழப்பை ஈடு செய்ய வேண்டியுள்ளது.

நடப்புப் பயிராண்டின் துவக்கத்தில், வழக்கமாக இருந்து வரும் 50 சத வீத வர்த்தகர் லெவி மூலம் கொள்முதல் செய்ய அரசு முற்பட்டது. ஆனால், விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த இடுபொருள் மானியத்தை குவின்

2. இதன் அடிப்படையில் சம்பளம் மற்றும் படிகளை முதலில் அரசு நிதியிலிருந்து பெற்று, பின்னர் விற்பனைக் குழு நிதிகளிலிருந்து அரசுக்கு திருப்பி செலுத்துவது தொடர்பான நடைமுறைகளை வகுத்து அரசாணை எண். 1415, நாள் 24—7—1984-ல் ஏற்கனவே உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நான்காவது ஊதியக்குழு அரசுப் பணியாளர்களுக்கு 1—10—1984 முதல் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்து பரிந்துரை செய்தபொழுதே விற்பனைக் குழுக்களில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதிய விகிதங்களையும் மாற்றியமைத்து பரிந்துரை செய்ததின் அடிப்படையில் அரசு தன்து ஆணை நிலை எண். 555, நிதித்துறை, நாள் 10—6—1985-ல் விற்பனைக் குழுக்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் உட்பட அனைத்து அரசு பணியாளர்களுக்கும் ஊதிய விகிதங்களை மாற்றி அமைத்து ஆணை வழங்கியுள்ளபடி, விற்பனைக்குழு பணியாளர்களுக்கும் திருத்திய ஊதிய விகிதங்களில் 1—10—1984 முதல் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

3. 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்-விளைபொருள் விற்பனை விதி 207 (4)-ன்படி விற்பனைக் குழுக்களில் பணிபுரிந்து வரும் அனைத்து ஊழியர்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கு 1933 ஆம் ஆண்டு தமிழ்நாடு விடுப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட விடுப்பு மற்றும் விடுப்பூதியம் வழங்கப்படுவதைப் போலவே விடுப்பு மற்றும் விடுப்பூதியம் ஆரம்ப முதலே வழங்கப்பட்டு வரப்படுகின்றன. விற்பனைக் குழுக்களில் பணிபுரியும் ஊழியர்களை 17—11—81 முதல் அரசு ஊழியர்கள் என அறிவிக்கப்பட்ட பிறகு இது தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

4. இதேபோன்று விற்பனைக் குழுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை முதலியவைகள் மாநில கணக்காய்வுத் தலைவரால் ஏற்பு செய்து, இதனை முதலில் அரசு நிதியிலிருந்து வழங்கி, பின்னர் விற்பனைக்குழு நிதியிலிருந்து மீளப் பெறுவதற்கான நடைமுறைகளும் அரசாணை எண். 1770, நாள் 8—10—1985-ல் வகுக்கப்பட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்துவதற்காக சில தெளிவுரைகளை வேளாண்மை விற்பனை இயக்குநர் மாநில கணக்காய்வுத் தலைவரிடமிருந்து கோரியுள்ளார். அவை கிடைக்கப் பெற்றதும், 17—11—81 முதல் ஓய்வு பெற்ற விற்பனைக்குழு பணியாளர்களுக்கு மேறு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்குவதற்கு வேளாண்மை விற்பனை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுப்பார்.

5. விற்பனைக்குழு பணியாளர்கள் பணி விதிகள் தொடர்பாக, இதுவரை, விற்பனைக் குழுவில் பணியாற்றும் பதிவறை எழுத்தர்களை தமிழ்நாடு பொது சார்நிலை பணி விதிகள் கீழும், அலுவலக உதவியாளர், காவலர்,

தோட்டக்காரர், பெருக்குபவர் மற்றும் அலுவலக ஏவலாளர் போன்ற பதவிகளை தமிழ்நாடு அடிப்படை பணி விதிகள் கீழும், இளநிலை உதவியாளர், நட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் போன்ற பதவிகளை தமிழ்நாடு அமைச்சு பணி விதிகளின் கீழும் 17—11—1981-ல் கொணர்ந்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இது தவிர விற்பனைக்குழு செயலாளர், கண்காணிப்பாளர், மேற்பார்வையாளர், களக் கண்காணிகள் போன்ற மற்ற பதவிகளுக்கு தனியாக சிறப்பு விதிகள் வெளியிடவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்பு விதிகள் வெளியிடப்படும் வரையில் தமிழ்நாடு வேளாண்-விளைபொருள் சந்தைகள் விதிகளையே தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## இணைப்பு III

( 239 ஆம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### I. உணவு தானியங்கள் உற்பத்தி மற்றும் கொள்முதல் கொள்கை.

1985-86 ஆம் நிதி ஆண்டின் துவக்கத்தில், மாநிலத்தின் உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருந்தது. 1984 ஆம் ஆண்டு குறுவை மற்றும் 1985 ஆம் ஆண்டு சம்பா பருவங்களில் உணவு உற்பத்தி சிறப்பாக இருந்ததால் வெளிச்சந்தையிலும், அரசிடமும் கணிசமான இருப்பு இருந்தது. 1985 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் பொது விநியோகத்தில் கேட்பு அதிகரித்தது. 1985 ஆம் ஆண்டு ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில், பொது விநியோகத்தில் மட்டும் கேட்பு 1 லட்சம் மெ. டன்களுக்கும் மேல் கூடியது. இதற்கு ஈடான இருப்பு சேர்க்கப்படவில்லையாதலால் கையிருப்பு விரைவில் குறைந்தது. இதற்கு காரணம் பருவமழை காலம் தாழ்ந்து பெய்தமையும், மாநிலத்தின் முக்கிய நீர் தேக்கங்களில் உள்ள குறைந்த நீர் மட்டமும் ஆகும். சென்ற குறுவையில் வழக்கமாக பயிரிடப்படும் பரப்பளவில் 1.46 இலட்சம் ஹெக்டேர் குறைவாக பயிரிடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குறைவினால் ஏற்படக்கூடிய உற்பத்தி இழப்பை ஈடு செய்ய வேண்டியுள்ளது.

நடப்புப் பயிராண்டின் துவக்கத்தில், வழக்கமாக இருந்து வரும் 50 சத வீத வர்த்தகர் லெவி மூலம் கொள்முதல் செய்ய அரசு முற்பட்டது. ஆனால், விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த இடுபொருள் மானியத்தை குவிண்

டாலுக்கு ரூ. 15-இல் இருந்து ரூ. 20 ஆக அரசு உயர்த்தியது. இந்த இடு பொருள் மான்யம், எப்பொழுதும் போலவே, காவிரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மட்டும் அவர்கள் தாமாகவே அரசுக்கு அளிக்கும் நெல்லுக்கு உரக் கூப்பன்களாக வழங்கப்பட்டது. பொது விநியோகத்தில் கேட்பு அதிகரித்ததினாலும், கார்டுதாரர்களுக்கு வழங்கவேண்டிய அரிசியின் அளவை கருத்தில் கொண்டும், 50 விழுக்காடு வர்த்தகர் லெவி மூலம் மட்டும் கொள் முதல் செய்து நமது முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலாது என்று கருதப்பட்டது. எனவே 1—11—1985 முதல் காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர் மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டு மன்னார்கோயில் வட்டங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, ஆவுடையார்கோயில், அறந்தாங்கி வட்டங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி, உடையார்பாளையம், லால்குடி, அரியலூர், முசிறி, குளித்தலை வட்டங்களிலும் ஏகபோக கொள்முதல் அமல் செய்யப் பட்டது.

[1986 ஏப்ரல் 17

விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட இடுபொருள் மானியமும் குவிண்டாலுக்கு ரூ. 20 லிருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது. மத்திய அரசால் நிர்ணயிக்கப் பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள விலைகளுக்கும் மேலாக இடுபொருள் மானியம் வழங்கப்படுகிறது.

| ரகம் | குவிண்டால் நெல்லுக்கு. 1984—85 | 1985—86 |
|---|---|---|
| சாதாரணம் | ரூ. 137 | ரூ. 142 |
| சன்னம் | ரூ. 141 | ரூ. 146 |
| மிகச் சன்னம் | ரூ. 145 | ரூ. 150 |

1985 ஆம் ஆண்டு குறுவையில் 3.75 இலட்சம் விவசாயிகளும், 1986 ஆம் ஆண்டு சம்பா பருவத்தில், 15—2—1986 முடிய 1.80 இலட்சம் விவசாயிகளும் இடுபொருள் மானியம் பெற்று பயனடைந்துள்ளனர். குறுவையில் அளிக்கப் பட்ட இடுபொருள் மானியத்தின் மதிப்பு ரூ. 11.62 கோடியும், சம்பாவில் இது வரை அளிக்கப்பட்ட இடுபொருள் மானியத்தின் மதிப்பு ரூ. 5.50 கோடியும் ஆகும்.

குறுவைப் பருவத்தில் ஏகபோகக் கொள்முதல் முறையை அமல்படுத்திய தினால் அரசு சுமார் 2.90 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்தது. 1985 ஆண்டு நவம்பர் மாதத்தில் வெள்ளத்தினால் பயிர்ச் சேதம் ஏற்படாதிருந்தால், குறுவையில் உற்பத்தியும் கொள்முதலும் இன்னும் அதிகமாக இருந்திருக்கும். நமது மாநிலத்தில் மட்டும் கொள்முதல் செய்து பொது விநியோகத்தின்



தேவையையும், முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்கான தேவையையும் பூர்த்தி செய்ய இயலாதென்பதால், மத்திய தொகுப்பிலிருந்து மாதாந்திர ஒதுக்கீட்டை அதிகப்படுத்துமாறு மத்திய அரசை கேட்டுக் கொள்ளப்பட்டது. இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தமிழ் நாட்டிற்கு மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சம் டன்கள் அரிசி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்கள். மேலும், உணவு அமைச்சர் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலாளர் மற்றும் உணவுச் செயலாளர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புது டில்லிக்கு அனுப்பி மைய உணவு அமைச்சர் அவர்களை சந்தித்து நமது கோரிக்கையை வலியுறுத்துவதற்கான ஏற்பாடு களையும் செய்தார்கள். இதன் பயனாக மத்திய அரசும் மாநிலத்தின் உணவு நிலைமையில் ஏற்பட்டிருக்கும் இன்னல்களை கருத்திற்கொண்டு, மத்திய தொகுப்பிலிருந்து, மாதாந்திர ஒதுக்கீட்டை படிப்படியாக அதிகரித்தது. 25,000 டன்களாக இருந்த மாதாந்திர ஒதுக்கீடு உயர்த்தப்பட்டு, 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 35,000 டன்களும், அக்டோபர் மாதம் முதல் 40,000 டன்களும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசு ஒரு முறைக்கான சிறப்பு ஒதுக்கீடாக மாதமொன்றுக்கு 50,000 டன் அரிசியை நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலும், 1986 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் 25,000 டன் அரிசியும் ஒதுக்கிற்று. தமிழகத்தில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றம் வெள்ளமாகவும், வறட்சியாகவும், சம்பா பயிரையும் பாதித்துள்ளது. நடப்பு சம்பா பருவத்தில், 3.025 லட்சம் ஹெக்டேர் பரப்பளவுக்குக் குறைவாக நெல் பயிரிடப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதனால், நெல் உற்பத்தியில், 9.85 லட்சம் டன் குறைவு ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உற்பத்திக் குறைவை முன்னிட்டும், திருப்திகரமற்ற குறுவை கொள் முதலை கருத்திற்கொண்டும் ஏகபோக கொள்முதல் முறையை 1986 சம்பா பருவத்திலும் தொடர அரசு முடிவு செய்தது. நடப்பு சம்பாவில் 15—3—1986 முடிய மொத்த கொள்முதல் 3.14 லட்சம் அரிசி டன்களாகும்.

மொத்த இருப்பு, பொது விநியோகத்தில் ஏற்பட்ட அதிகப்படியான கேட்பு, வெளிச்சந்தை விலைக்கும் பொதுவிநியோகத்தில் கொடுக்கப்படும் விலைக்கு மிடையே இருக்கும் வித்தியாசம் மற்றும் இதனால் ஏற்படக்கூடிய முறைகேடு களை குறைக்க வேண்டியதின் அவசியம் போன்றவற்றை கருத்திற்கொண்டு அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 15—9—1984-க்கு முன்னர் கிராமப் புறங்களில் குடும்ப அட்டை ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு, அதிக பட்சமாக 6 கிலோ அரிசியும் நகர்ப்புறங்களில் 12 கிலோ அரிசியும் வழங்கப் பட்டது. அவ்வாண்டில், உணவு உற்பத்தி மற்றும் கொள்முதல் நல்ல முறையில்

அமைந்தபடியால், 15—9—1984 முதல் அனைத்து கார்டுகளுக்கும் அதிக பட்சமாக, மாதம் ஒன்றுக்கு 20 கிலோ வீதம் வழங்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியாலும், வெள்ளத்தாலும் உணவு உற்பத்தி பாதிக்கப் பட்டதால், அதிக பட்சமாக வழங்கப்படும் அரிசியின் அளவைக் குறைக்க வேண்டி வந்தது. எனினும், தனிநபருக்கான விநியோக அளவுகள் குறைக்கப் படவில்லை. 1—11—1985 முதல் குடும்ப அட்டை ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவு 20 கிலோவிலிருந்து 12 கிலோவாக குறைக்கப்பட்டது. ஆனால், இது 15—9—1984-க்கு முன் இருந்த நிலையை விட, தாராளமாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அச்சமயம் கிராமப் புறங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட அரிசி 6 கிலோவாகும். தற்சமயம் மாநிலம் முழுவதிலும் உள்ள குடும்ப அட்டை களுக்கு அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு 12 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் மத்திய அரசு ஐந்து தடவை விலையை உயர்த்தியுள்ளபோதிலும் அரசு பொது விநியோகத்தில் அரிசியின் விற்பனை விலையை மாற்றி அமைக்கவில்லை. உணவு உற்பத்தியின் நிலைமை யைக் கருத்தில் கொண்டும், உணவு மானியத்தினால் ஏற்படும் நிதிச் சுமையைக் குறைப்பதன் பொருட்டும், பொது விநியோகத்தில் வழங்கிவரும் சன்ன ரக அரிசியின் விலையை கிலோ ஒன்றிற்கு ரூ. 2-லிருந்து ரூ. 2.25 ஆகவும், மிகச் சன்ன ரக அரிசியின் விலையை கிலோ ஒன்றிற்கு ரூ. 2.15-லிருந்து ரூ. 2.50 ஆகவும், 1—11—1985 முதல் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. எனினும், குறைந்த வருமானமுள்ள வகுப்பினரது நலனை கருத்திற்கொண்டு சாதாரண ரக அரிசியின் விலை கிலோவிற்கு ரூ. 1.75 என்றிருந்ததை மாற்றியமைக்க வில்லை.

ஏகபோக கொள்முதல் முறையை நடைமுறைப்படுத்தியும், மத்திய அரசிட மிருந்து அதிகப்படியான ஒதுக்கீட்டை பெற்றும் அரசு உணவு நிலைமையை சிறப்பாக சமாளித்துள்ளது. விநியோக அளவுகளும், பொது விநியோகத்தில் வழங்கப்படும் அரிசியின் விலையும் சீரமைக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக் கைகளின் பயனாக மாநிலத்தில் உணவு நிலைமை சீராக அமைந்துள்ளது.

## II. பொது விநியோகமுறை.

இம்மாநிலத்தில், 20,723 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வரு கின்றன. இவற்றில் 15,648 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், 5,011 கடைகள் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், மீதமுள்ள 64 கடைகள் மலைத்தோட்ட நிர்வாகங்கள், தொழிற் சங்கங்கள் போன்ற



அமைப்புகளாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நியாய விலைக்கடைகள் மூலமாக 119.65 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் நியாயவிலைக் கடைகள் அனைத்தையும் கூட்டுறவு சங்கங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற அரசு ஆணைக்கு உயர்நீதி மன்றம் இடைக்கால தடை விதித் துள்ளது. இது குறித்த மற்றொரு வழக்கு உச்சநீதி மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் விரைவில் உச்சநீதி மன்றத்தின் ஆணைகள் பெறத் தேவையான நடவடிக்கைகளை இவ்வரசு எடுத்து வருகிறது.

நியாய விலைக் கடைகளின் பொருளாதார நிலைபற்றி ஆராய மாநிலக் கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை இயக்குநரை தலைவராகக் கொண்டு அரசு அமைத்த குழு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

சென்னை நகரத்தில் நியாய விலைக்கடைகள் திறக்க வாடகைக்கு இடம் கிடைக்காமல் கூட்டுறவு சங்கங்கள் பெரிதும் அவதிப்படுகின்றன. எனவே பரிட்சார்த்தமாக நியாய விலைக் கடைகள் கட்ட முதன்மை கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கலாமெனக் கருதி, அரசு 1986-87 ஆம் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வழங்கலாமென முடிவெடுத்துள்ளது.

அரிசி :

1985-86 ஆம் ஆண்டில், இதுவரை எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 28—2—1986 வரையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட மொத்த அளவு 9.98 லட்சம் டன்களாகும். ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் மாதமொன்றுக்கு 1.03 லட்சம் டன்களாக இருந்த அரிசியின் விநியோக அளவு, குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அளவைக் குறைத்ததாலும், போலி குடும்ப அட்டைகளை ஒழிப்பதை தீவிரப் படுத்தியதாலும், ஆண்டின் கடைசி நான்கு மாதங்களில் மாதமொன்றுக்கு சுமார் 70,000 டன்களாக குறைந்துள்ளது.

இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் ஏற்றுக்கொள்ளக் கூடிய தர மான அரிசி இருப்பு இல்லாததால், இம்மாநிலத்துக்கு ஒதுக்கப்படும் மொத்த அரிசியையும் உரிய நேரத்தில் எடுக்க முடிவதில்லை என தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கூறியுள்ளது. இந்திய உணவுக் கழகத்தின் கிடங்கு களிலிருந்து உரிய நேரத்தில் எடுக்க வசதியாக தரமான அரிசியை வைத்திருக்க வேண்டும் என்று அக்கழகத்தை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் 9.40 லட்சம் ரூபாய் செலவில் 6.25 லட்சம் உணவுப் பொட்டலங்களை வழங்கியது.

**கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள் :**

மத்திய அரசு முன்பு போலவே இந்த ஆண்டும் மாதமொன்றுக்கு 30,000 டன்கள் கோதுமையை இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்தது. ஆனால், பொது விநியோக முறையின் கீழ் கோதுமை வாங்குவது தொடர்ந்து குறைவாகவே உள்ளது. மத்திய அரசின் மொத்த ஒதுக்கீடான 3,30,000 டன்களில் 1-4-1985 முதல் 28-2-1986 வரையிலான காலத்தில், 57,702 டன் கோதுமை தான் நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு 1-2-1986 முதல் கோதுமை விற்பனை விலையை குவிண்டால் ஒன்றுக்கு 172 ரூபாயில் இருந்து 190 ரூபாயாக உயர்த்தியது. இதன் காரணமாக மாநில அரசு கோதுமையின் சில்லறை விற்பனை விலையை கிலோ ஒன்றுக்கு 2.05 ரூபாயாக நிர்ணயித்துள்ளது.

இம்மாநிலத்தில் 42 உருளை மாவு ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின் மாத உற்பத்தித் திறன் 75,610 டன்களாகும். மத்திய அரசு, இந்த ஆலைகளுக்கு 1985 ஏப்ரல் மாதத்திலிருந்து உரிமத் திறனில் 126 விழுக்காடு வரை கோதுமையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. 27-1-1986 முதல் இந்த கோதுமையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. 27—1—1986 முதல் இந்த ஆலைகளின் அரைவைத் திறனில் 150 விழுக்காடு அரைக்க அனுமதி வழங்கப்பட்டு, மாதமொன்றுக்கு 1,13,220 டன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மத்திய அரசு, புதிய உருளை மாவு ஆலைகள் அமைப்பதற்கான தடையை நீக்கி, நாளொன்றுக்கு 30 டன்கள் அரைவைத் திறன் கொண்ட ஆலைகள் துவங்க விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இவ்வாலைகள் திறப்பதில் (1) பொதுத் துறை, (2) கூட்டுறவு சங்கங்கள் மற்றும் (3) முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படவில்லையெனில், தனிப்பட்ட தொழில் முனைவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும். மாநில அரசால் பரிசீலிக்கப்பட்ட விண்ணப்பங்களை மத்திய அரசு பெற 30-4-1986 கடைசி நாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு, உருளை ஆலைகளுக்கு வழங்கப்படும் கோதுமை விலையை குவிண்டால் ஒன்றுக்கு 172 ரூபாயிலிருந்து 190 ரூபாயாக 1-2-1986 முதலும், 190 ரூபாயிலிருந்து 220 ரூபாயாக 1-4-1986 முதலும் உயர்த்தி





யுள்ளது. ரவை மற்றும் மைதாவின் சில்லறை விலை 31-3-1986 வரை கிலோ ஒன்றுக்கு 2.70 ரூபாய் எனவும், 1-4-1986 முதல் கிலோ ஒன்றுக்கு 3.00 ரூபாய் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொது விநியோக முறையில் கோதுமையும், கோதுமைப் பொருட்களும் அதிக அளவில் வாங்கப்படாமல் உள்ளது குறித்து அரசு கவலை கொண்டு, இவற்றை சுத்தம் செய்து, பாக்கெட்டுகளில் அடைத்து, விற்பதன் மூலம் விற்பனையை அதிகரிக்க முடியுமா என்பது குறித்து ஆராய்ந்து வருகிறது. கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களின் உபயோகத்தை மக்களிடையே பரப்புவதற்காக, தமிழ்நாடு உருளை மாவு ஆலைகள் சங்கம் மற்றும் "யு.எஸ்.வீட் அசோஷியேட்ஸ்" என்ற நிறுவனத்தின் உதவியுடன் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட உள்ளது.

**சர்க்கரை :**

நாடு முழுவதும் ஒரே விலையில் விற்கப்படும் லெவி சர்க்கரை நியாய விலைக் கடைகள் மூலம் மாதமொன்றுக்கு நபர் ஒருவருக்கு 450 கிராம் என்ற அளவில் விநியோகிக்கப்படுகிறது. கிலோ ஒன்றுக்கு 4.00 ரூபாயாக இருந்த லெவி சர்க்கரையின் விலை 1-4-1985 முதல் 4.40 ரூபாயாகவும், 1-12-1985 முதல் 4.80 ரூபாயாகவும் மத்திய அரசால் உயர்த்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களிலும், ஆகஸ்ட் முதல் சனவரி 1986 முடியவும், கார்டிற்கு மாதமொன்றுக்கு கூடுதலாக ஒரு கிலோ லெவி சர்க்கரை வழங்கப்பட்டது. 1985 ஜூன் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் வெளி அங்காடியில் சர்க்கரை விலை உயர ஆரம்பித்தபோது வழக்கமாக இம்மாநிலத்துக்கு ஒதுக்கப்படும் 21,292 டன்களும், கூடுதலாக மாதமொன்றுக்கு 3,402 டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கப்பட்டதால் வெளிச் சந்தை விலை கட்டுப்படுத்தப்பட்டது. இதைத் தவிர விலையை கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரையும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மத்திய அரசு ஒதுக்கீடு செய்த வெளிச் சந்தை சர்க்கரை விநியோகத்தை முறைப்படுத்தி, சர்க்கரை விலை வெளிச் சந்தையில் உயர்வதை இந்த அரசு தடுத்தது.

மண்ணெண்ணெய் விநியோகத்தில் இவ்வாண்டு குறிப்பிடத் தக்க மாற்றமேதும் நிகழவில்லை. மாதம் ஒன்றிற்கு இம்மாநிலத்துக்கு தேவைப்படும் 60,000 கிலோ லிட்டரில் மத்திய அரசு 47,000 கிலோ லிட்டரைத்தான் ஒதுக்கீடு செய்கிறது. வெள்ள நேரத்தில் அதிகப்படியாக 1,000 டன் மண்ணெண்ணெய் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. குடும்ப அட்டைதாரர்களின் தேவைக்கு அதிகமாக மண்ணெண்ணெய் இருந்தால், நகராட்சிகள்

மற்றும் நகர்ப்புற பகுதி குடும்ப அட்டைதாரர்களுக்கு அதை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பெட்ரோலியம் பொருட்களின் விலையை மத்திய அரசு ஏற்றிய காரணத்தால், மண்ணெண்ணெயின் விற்பனை விலை சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் லிட்டர் ஒன்றுக்கு 2.25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மண்ணெண்ணெயின் சில்லறை விற்பனை விலையை, மண்ணெண்ணெய்க் கம்பெனிகளின் கிடங்குகளின் தூரத்தைப் பொறுத்து நிர்ணயம் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் சென்னை—திருச்சி சாலையில் உடைப்பு ஏற்பட்டதால், மொத்த விற்பனையாளர்கள் மண்ணெண்ணெயை எடுப்பதில் சிரமம் அடைந்தனர். சுற்று வழியில் மண்ணெண்ணெய் கொண்டு வரப்பட்டதால், போக்குவரத்துச் செலவை கணக்கில் கொண்டு விலையை உயர்த்தித் தர வேண்டுமென அவர்கள் கேட்டனர். மக்களுக்கு தடையின்றி மலிவு விலையில் மண்ணெண்ணெய் கிடைப்பதற்காக இந்த அதிக செலவை மொத்த வணிகர்களுக்கு திருப்பி அளிக்கலாமென அரசு முடிவெடுத்தது.

**சமையல் எண்ணெய்:**

மத்திய அரசு, இம்மாநிலத்துக்கு மாதமொன்றுக்கு 3,600 டன்கள் சமையல் எண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. இது தவிர இந்துஸ்தான் தாவர எண்ணெய்க் கழகத்தின் மூலம் மாத மொன்றுக்கு 1,000 டன்கள் டின்களில் அடைக்கப்பட்ட சமையல் எண்ணெயும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சமையல் எண்ணெய்யை சீராக விநியோகம் செய்வதற்கு தேவையான உள்ளமைப்பை இம்மாநிலம் ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது. 1-4-1985 முதல் 26-2-1986 வரையிலான காலத்தில், 56,645 டன்கள் சமையல் எண்ணெய் பொது விநியோக முறையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட அளவைவிட இந்த ஆண்டு சமையல் எண்ணெய் குறைவாகவே ஒதுக்கப் பட்டிருப்பினும், உள்ளூர் உற்பத்தி அதிகமான காரணத்தால் வெளி அங்காடியில் சமையல் எண்ணெய் விலை கட்டுப்பாட்டிலேயே உள்ளது. மத்திய அரசு பாமாலின் விலையை டன்னுக்கு 1,000 ரூபாய் ஏற்றியதால் சில்லறை விலையை கிலோ ஒன்றுக்கு 11.85 ரூபாயாக இவ்வரசு நிர்ணயித்துள்ளது.



**கட்டுப்பாட்டுத் துணி:**

மத்திய அரசு, 1985 ஏப்ரல் மாதம் கிராமப் பகுதிகளில் உள்ள நலிவுற்றோருக்கு, சென்றடையும் வகையில் கட்டுப்பாட்டுத் துணியின் விநியோகம் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டது. கட்டுப்பாட்டுத் துணி அனைத்து நலிவுற்றோருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வரசு கிராமப் பகுதிகளிலும் நகர்ப்புறங்களிலும் மாதம் 1,000 ரூபாய்க்கு குறைவான வருவாய் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே கட்டுப்பாட்டுத்துணி வழங்கப்பட வேண்டுமென ஆணையிட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டுக்கு 18 மில்லியன் சதுர மீட்டர் கட்டுப்பாட்டுத்துணி இந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரிகளோடு காலமுறைக் கூட்டங்கள் நடத்தி உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் கட்டுப்பாட்டுத் துணி வழங்கப்படுவதை கண்காணித்து வருகிறார்.

**கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை:**

நியாய விலைக் கடையிலுள்ள சராசரி குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 575 தான். 1,500 குடும்ப அட்டைகளுக்கு குறைவாக உள்ள நியாய விலைக் கடைகள் அனைத்தும் நட்டத்திலேயே நடைபெறுகின்றன. எனவே, நியாய விலைக் கடைகளின் பொருளாதார நிலையை சீர்செய்ய கடைகளில் கட்டுப்பாடற்ற பொருள்கள் விற்பனையை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் பணியாளர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கி கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனையை அதிகமாக்க திட்டம் தீட்டியுள்ளன.

சென்னை நகரத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தேயிலை விற்கப்பட்டு வருகிறது. "இன்கோசர்வ்" நிறுவனம் இந்த தேயிலையை தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு விநியோகிக் கிறது.

**பொது விநியோகத் திட்டத்தைக் கண்காணித்தல்:**

இத்துறையின் அதிகாரிகள், மாதமொன்றுக்கு சோதனை செய்ய வேண்டிய கடைகள் மற்றும் குடும்பக் கார்டுகளின் இலக்குகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன. மாவட்ட அளவிலும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்

வோர் பாதுகாப்பு ஆணையாளராலும் இந்த செயலாக்கம் கண்காணிக்கப் படுகிறது. போலி குடும்ப அட்டைகளை நீக்கும் முயற்சியில், கிழக்கு மதுரையில் மட்டும் 3,458 போலி குடும்ப அட்டைகளை, அதாவது, அப்பகுதியில் உள்ள மொத்த குடும்ப அட்டைகளில் சுமார் 10 விழுக்காடு அட்டைகளை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கண்டுபிடித்து நீக்கியுள்ளார். இவ்வாறு மாநிலம் முழுவதும் முயன்று, போலி குடும்ப அட்டைகளை நீக்குவதன் மூலம் உண்மை நுகர்வோர் அதிக அளவில் அத்தியாவசியப் பண்டங்களைப் பெற இயலும்.

III. ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் பகுதிகளில் மலிவு விலையில் உணவு தானியங்களை விநியோகம் செய்தல்:

ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (Integrated Tribal Development Programme) பகுதிகளில் உள்ள கார்டுதாரர்களுக்கு மைய அரசு மிகவும் மலிவு விலையில் உணவு தானியங்களை வழங்கும் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. இப்பகுதிகளில் விநியோகம் செய்ய கோதுமையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 125 என்ற விலையிலும், அரிசியை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 160 என்ற விலையிலும், மைய அரசு மாநில அரசுக்கு வழங்குகிறது. ஒவ்வொரு மாதமும் ஒரு கார்டுக்கு 30 கிலோ கோதுமையும், 12 கிலோ அரிசியும் அதிக பட்சமாக வழங்கப்படுகிறது. நுகர்வோர்களுக்கான சில்லறை விலையை கோதுமைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50 என்றும், அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 1.85 என்றும் நிர்ணயம் செய்யும்படி மைய அரசு யோசனை தெரிவித்துள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உள்ள 9 வட்டாரங்களில் சேலம், வடாற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தை மாநில அரசு அமல்படுத்தியுள்ளது. அரிசிக்கு மிக அதிக அளவில் மாநில அரசு மான்யம் வழங்குவதால், பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் விலை மைய அரசு தெரிவித்துள்ள விலையைவிட குறைவாகவே உள்ளது. எனவே, இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சாதாரண அரிசிக்கான விலையை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.40 என்று மாநில அரசு நிர்ணயித்துள்ளது. கோதுமை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50 என்ற விலையில் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தினால் 38,000 குடும்ப கார்டுதாரர்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பனியர் என்ற ஊரில் வாழும் பழங்குடி மக்களையும் சேர்த்துக்



கொள்ளும்படி, மைய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்துள்ளது. இம்மாநிலத்தில் உள்ள எல்லாப் பழங்குடி மக்களையும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படியும் இந்த அரசு மைய அரசுக்கு யோசனை தெரிவித்துள்ளது.

IV. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

1985-86 ஆம் ஆண்டில் 28—2—1986 வரை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 2.02 இலட்சம் டன்கள் அரிசியையும், 28,710 டன்கள் பருப்பு வகைகளையும், 6,179 டன்கள் சமையல் எண்ணெயையும், 66,504 சத்துணவு மையங்களுக்கு வழங்கியது. இதனால் 86.88 லட்சம் குழந்தைகளும், 1,99,794 முதியோர் உதவித் தொகை பெறுவோரும், 112 முன்னாள் படைவீரர்களும் பயனடைகிறார்கள். சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவித்தபடி, இம்மாநிலத்தின் எல்லா சத்துணவு மையங்களுக்கும் அரிசி, பருப்பு வகைகள் மற்றும், சமையல் எண்ணெய் ஆகிய பொருட்களை கொண்டு செல்லும் பணியினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்று நடத்துகிறது.

V. அரிசி அரவை ஆலைகளை நவீனப்படுத்துதல்.

அரிசி அரவை ஆலைகளை நவீனமயமாக்குவதன் அவசியத்தை உணர்த்தும் பொருட்டு, இதுவரை 10 கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. 15 செயல்முறை "விளக்க மையங்களில்" பொருத்துவதற்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரிசி ஆலைகளை நவீனப்படுத்துவதற்கான மானிய உதவித் திட்டத்தின்கீழ் நவீன இயந்திரங்கள் வாங்க ரூ. 5,000 மானியம் ஆலையின் அதிபருக்கு வழங்கப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. 12—3—1984 அன்று அல்லது அதற்கு முன்பு நிறுவப்பட்ட அனைத்து ஒற்றை அல்லர் அரிசி ஆலைகளையும் நவீனப் படுத்துவதில் இருந்து அரிசி ஆலைகள் நியமனம் மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் விலக்களித்து மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. அதனால் அரிசி ஆலைகளை நவீனப் படுத்துவதில் கணிசமான முன்னேற்றம் காண முடியவில்லை. ஆயினும், மாநில அரசு இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த முயன்று வருகிறது.

குடிமைப் பொருள் வழங்குதுறை அலுவலர்களுக்கு அரிசி ஆலைகளை நவீனப்படுத்தல் பற்றி அண்ணாமலை பல்கலைக் கழகத்திலுள்ள [illegible] விரிவுப்பணி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## III. இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்திலுள்ள பல்வேறு விதி கட்டுப்பாட்டு ஆணைகளை செயல்படுத்துதல்.

இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்திலுள்ள பல்வேறு விதிகளையும் மற்றும் அந்த சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு ஆணைகளையும் செயல்படுத்துகின்ற பொறுப்பு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் மற்றும் இத்துறை அலுவலர்கள், காவல் துறை துணைத் தலைவர், உணவுப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு மற்றும் இப்பிரிவில் பணி புரியும் காவல் துறையினர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் 31—1—1986 வரை 2,649 வழக்குகள் செயல்படுத்து அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. அவர்கள் கைப்பற்றிய பண்டங்களின் மதிப்பு ரூ. 2,51,47,444 ஆகும். கண்டு பிடிக்கப்பட்ட 2,649 வழக்குகளில், 1,423 வழக்குகள் இன்றியமையாப் பண்டங்கள் கடத்தலைச் சார்ந்தவை ஆகும். 519 வழக்குகள் பதுக்கல் குற்றங்கள் தொடர்புடையவையாகும். மீதி வழக்குகள், இதர குற்றங்களைச் சார்ந்தவை.

1985 ஜூலைத் திங்கள் வரை, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் பிரிவு 6 ஏ-ன் கீழ் பறிமுதல் செய்து இடும் ஆணைகளின்மீது வரும் மேல் முறையீடுகளை அரசின் சார்பில் உணவுத் துறை ஆணையாளர் மற்றும் செயலாளர் விசாரணை செய்து ஆணையிட்டு வந்தார். 1985-ம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் இம்மேல்முறையீடுகளை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், அலுவல்வழி ஆணையாளர் மற்றும் செயலாளர் என்ற முறையில் விசாரணை செய்து ஆணையிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசு அளவில், உணவுக் கொள்கையை வகுப்பதில் முழு கவனத்தை செலுத்தவும் அதனை நல்ல முறையில் கண்காணிக்கவும் இது உதவுகிறது. அதிக அளவில் மேல் முறையீடுகள் வரப் பெற்றதால், அவற்றை விரைவாக முடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் முறையீடுகளை விரைவில் விசாரணை செய்து ஆணையிட ஏதுவாயிற்று. 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முடிய, எட்டு திங்களில் 460 மேல்முறையீடுகள் விசாரணை செய்து ஆணையிடப் பட்டுள்ளன.

கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்கு தலை நிலைப்பெறுதல் சட்டம் 1980-ன் கீழ் பொருளாதார குற்றங்கள் புரிபவர்கள் மீது சிறந்த முறையில் நடவடிக்கை எடுத்து அவர்களை தடுப்புக் காவலில் வைக்கப் பட்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த சட்டத்தின்

[illegible] அரசுக்கு லெவி கொடுப்பதை தவிர்த்து சட்ட விரோதமாக நெல்லை [illegible] கடத்தியதற்காக, தென்னாற்காடு மாவட்டத்தில் மூன்று பேரும், மண்ணெண்ணெயை கள்ளச் சந்தையில் விற்றதால் சென்னை நகரத்தில் ஒருவரும், நெல் மற்றும் அரிசியில் கலப்படம் செய்ததற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருவரும் இவ்வாண்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நடந்த வரவு-செலவுத் திட்ட சட்டமன்றத் தொடரில் உணவு அமைச்சரால் அறிவிக்கப்பட்ட அமல் பிரிவு அரசு ஊழியர்களுக்கு "ஊக்குவிப்புத் திட்டம்" ஒப்பளிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருள் வழங்கு துறையில் மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் அவருக்குக் கீழ் நிலையில் உள்ள அலுவலர்கள், வருவாய்த் துறையில் கோட்டாட்சித் [illegible] கீழ்நிலையில் உள்ள அலுவலர்கள்; காவல் தலைவர் மற்றும் அவருக்கு [illegible] மற்றும் அவருக்குக் கீழ் நிலையில் துறையில் துணை கண்காணிப்பாளர் [illegible] ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் பரிசு பெற தகுதி உள்ள அலுவலர்கள் [illegible] ஆவர். வெளி மாநிலங்களுக்கு கடத்தல் செய்வதைத் தடுப்பதிலும் [illegible] வெளிக் கொணர்வதிலும் பங்கு வகிக்கும் அரசு ஊழியர்களுக்கு பறிமுதல் செய்யப்படும் பொருள்களின் மதிப்பில் 10 விழுக்காடு பரிசுத் தொகையாக அளிக்கப்படும்.

## IV. மாநிலத்தில் விலைவாசி நிலைமை.

1984 ஆம் ஆண்டுடன் 1985 ஆம் ஆண்டின் மொத்த விலைக் குறியீட்டெண்ணை ஒப்பிடுங்கால் விலைவாசி நிலவரம் பெரும்பாலும் நிலையாக இருப்பது தெரியும். முதன்மைப் பொருட்களின் மொத்த விலைக் குறியீட்டெண் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. உணவுப் பொருட்களின் மொத்த விலைக் குறியீட்டெண் பொதுவாக நிலையாக இருந்தது. [illegible] நுகர்வோர் விலை குறியீட்டெண்ணில் காணப்படும் [illegible] லாளர்களின் [illegible] மையங்களுக்கிடையே பெருமளவு வேறுபாடுகள் [illegible] களில் வெவ்வேறு [illegible] இருப்பது புலனாகிறது. 1985 ஆம் ஆண்டில், ஏப்ரல் முதல் [illegible] வரையில் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் 20 புள்ளிகளுக்கு மேல் அதிகரித்துள்ளது. ஆனால் அதே சமயத்தில் கடலூர், நாகர்கோவில், குன்னூர் ஆகிய இடங்களில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பொதுவாக நிலையாக இருந்தது.

[illegible] பருவ நிலை பாதகமாக அமைந்ததைத் [illegible] ஆகவே, 1985 ஆம் ஆண்டில் மே முதல் செப்டம்பர் [illegible] பாதிக்கப்பட்டது. [illegible] அரிசியின் விலை ஓரளவிற்கு அதிகரித்தது. தமிழ்நாட்டில் [illegible] கூட்டுறவுச் சங்கங்களும் அரிசியை [illegible] வாணிபக் கழகமும் [illegible]

[illegible]

**NI. இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்திலுள்ள பல்வேறு விதி கட்டுப்பாட்டு ஆணைகளை செயல்படுத்துதல்.**

இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்திலுள்ள பல்வேறு விதிகளையும் மற்றும் அந்த சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு ஆணைகளையும் செயல்படுத்துகின்ற பொறுப்பு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் மற்றும் இத்துறை அலுவலர்கள், காவல் துறை துணைத் தலைவர், உணவுப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு மற்றும் இப்பிரிவில் பணி புரியும் காவல் துறையினர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் 31—1—1986 வரை 2,649 வழக்குகள் செயல்படுத்து அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. அவர்கள் கைப்பற்றிய பண்டங்களின் மதிப்பு ரூ. 2,51,47,444 ஆகும். கண்டு பிடிக்கப்பட்ட 2,649 வழக்குகளில், 1,423 வழக்குகள் இன்றியமையாப் பண்டங்கள் கடத்தலைச் சார்ந்தவை ஆகும். 519 வழக்குகள் பதுக்கல் குற்றங்கள் தொடபுர்டையவையாகும். மீதி வழக்குகள், இதர குற்றங் களைச் சார்ந்தவை.

1985 ஜுலைத் திங்கள் வரை, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் பிரிவு 6 ஏ-ன் கீழ் பறிமுதல் செய்து இடும் ஆணைகளின்மீது வரும் மேல் முறையீடுகளை அரசின் சார்பில் உணவுத் துறை ஆணையாளர் மற்றும் செயலாளர் விசாரணை செய்து ஆணையிட்டு வந்தார். 1985-ம் ஆண்டு ஜுலை திங்கள் முதல் இம்மேல்முறையீடுகளை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், அலுவல்வழி ஆணையாளர் மற்றும் செயலாளர் என்ற முறையில் விசாரணை செய்து ஆணையிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசு அளவில், உணவுக் கொள்கையை வகுப்பதில் முழு கவனத்தை செலுத்தவும் அதனை நல்ல முறையில் கண்காணிக்கவும் இது உதவுகிறது. அதிக அளவில் மேல் முறையீடுகள் வரப் பெற்றதால், அவற்றை விரைவாக முடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் முறையீடுகளை விரைவில் விசாரணை செய்து ஆணையிட ஏதுவாயிற்று. 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முடிய, எட்டு திங்களில் 460 மேல்முறையீடுகள் விசாரணை செய்து ஆணையிடப் பட்டுள்ளன.

கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்கு தலை நிலைப்பேணுதல் சட்டம் 1980-ன் கீழ் பொருளாதார குற்றங்கள் புரிப வர்கள் மீது சிறந்த முறையில் நடவடிக்கை எடுத்து அவர்களை தடுப்புக் காவலில் வைக்கப் பட்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த சட்டத்தின்

கீழ் அரசுக்கு லெவி கொடுப்பதை தவிர்த்து சட்ட விரோதமாக நெல்லை கடத்தியதற்காக, தென்னாற்காடு மாவட்டத்தில் மூன்று பேரும், மண்ணெண் ணெய்யை கள்ளச் சந்தையில் விற்றதால் சென்னை நகரத்தில் ஒருவரும். நெல் மற்றும் அரிசியில் கலப்படம் செய்ததற்காக திருநெல்வேலி மாவட்டத் தில் ஒருவரும் இவ்வாண்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வரவு-செலவுத் திட்ட சட்டமன்றத் தொடரில் உணவு அமைச்சரால் அறிவிக்கப்பட்ட அமல் பிரிவு அரசு ஊழியர்களுக்கு "ஊக்குவிப்பு திட்டம்" ஒப்பளிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருள் வழங்கு துறையில் மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் அவருக்குக் கீழ் நிலையில் உள்ள அலுவலர்கள், வருவாய்த் துறையில் கோட்டாட்சித் தலைவர் மற்றும் அவருக்கு கீழ்நிலையில் உள்ள அலுவலர்கள், காவல் துறையில் துணை கண்காணிப்பாளர் மற்றும் அவருக்குக் கீழ் நிலையில் உள்ள அலுவலர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் பரிசு பெற தகுதி யுடையோர் ஆவர். வெளி மாநிலங்களுக்கு கடத்தல் செய்வதைத் தடுப்பதிலும் பெருமளவில் பதுக்கலை வெளிக் கொணர்வதிலும் பங்கு வகிக்கும் அரசு ஊழியர்களுக்கு பறிமுதல் செய்யப்படும் பொருள்களின் மதிப்பில் 10 விழுக் காடு பரிசுத் தொகையாக அளிக்கப்படும்.

## IV. மாநிலத்தில் விலைவாசி நிலைமை.

1984 ஆம் ஆண்டுடன் 1985 ஆம் ஆண்டின் மொத்த விலைக் குறியீட் டெண்ணை ஒப்பிடுங்கால் விலைவாசி நிலவரம் பெரும்பாலும் நிலையாக இருப்பது தெரியும். முதன்மைப் பொருட்களின் மொத்த விலைக் குறியீட் டெண் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. உணவுப் பொருட்களின் மொத்த விலைக் குறியீட்டெண் பொதுவாக நிலையாக இருந்தது. தொழி லாளர்களின் நுகர்வோர் விலை குறியீட்டெண்ணில் காணப்படும் மாறுதல் களில் வெவ்வேறு மையங்களுக்கிடையே பெருமளவு வேறுபாடுகள் இருப்பது புலனாகிறது. 1985 ஆம் ஆண்டில், ஏப்ரல் முதல் அக்டோபர் வரையில் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் 20 புள்ளிகளுக்கு மேல் அதிகரித்துள்ளது. ஆனால் அதே சமயத்தில் கடலூர், நாகர்கோவில், கூனூர் ஆகிய இடங்களில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பொதுவாக நிலையாக இருந்தது.

பருவ நிலை பாதகமாக அமைந்ததைத் தொடர்ந்து நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டது. ஆகவே, 1985 ஆம் ஆண்டில் மே முதல் செப்டம்பர் வரை வெளி அங்காடியில் அரிசியின் விலை ஓரளவிற்கு அதிகரித்தது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் அரிசியை

இச்சமயத்தில் வெளிச் சந்தை விலையைவிட குறைந்த விலையில் வெளிச்
சந்தையில் விற்பனை செய்ததினால் கடுமையான விலை ஏற்றத்தை தவிர்க்க
முடிந்தது. 1985 ஆம் ஆண்டில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 11,05,277
டன்கள் அரிசியும், முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்கு தேவையான
2,18,646 டன்கள் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு மாதங்களாக
வெளிச் சந்தையில் அரிசியின் விலை கட்டுப்பாட்டிற்குள் நிலையாக
உள்ளது.

கோதுமை, கோதுமைப் பொருட்கள், சமையல் எண்ணெய், தேயிலை
ஆகியவற்றைப் பொறுத்தவரை அவற்றின் விலைகளில் குறிப்பிடும்படியான
சரிவு ஏற்பட்டுள்ளது. பருப்பு வகைகள், காய்கறிகள், இலவங்கப் பொருட்
கள் ஆகியவற்றின் விலைகள் இயற்கையான பருவகால ஏற்றத் தாழ்வுகளைத்
தவிர பொதுவாக நிலையாக இருந்து வந்துள்ளன. 1985 ஆம் வருடத்தில்
ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையிலான இடைப்பட்ட சிறிது காலத்தில்,
சர்க்கரையின் விலை அதிகரித்தது. ஆனால் முன்னேற்பாடாக சர்க்கரை
இருப்புகளை திறம்பட நிர்வகித்ததின் காரணத்தினால், அதிகரித்த சர்க்கரை
யின் விலை தடுத்து நிறுத்தப்பட்டது. மேலும், பண்டிகைக் காலங்களில்
ஏற்படும் தேவையைப் பூர்த்தி செய்ய மாதம் ஒன்றுக்கு குடும்பக் கார்டு
ஒன்றுக்குக் கூடுதலாக ஒரு கிலோ லெவி சர்க்கரை எட்டு மாதங்களில் வழங்கப்
பட்டது. கடந்த ஆறு மாதங்களாக சர்க்கரை விலை கட்டுப்பாட்டில் நிலை
யாக உள்ளது.

ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு
சென்னையில் 8—8—1985 ஆம் நாளன்று ஓட்டல் உரிமையாளர்கள்
கூட்டத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் கூட்டினார். அக்கூட்டத்தில்
சென்னையில் உள்ள சில முக்கியமான நுகர்வோர் நிறுவனங்களும் பங்கு
பெற்றன. இட்லி, தோசை, காபி, தேநீர், அளவு சாப்பாடு போன்ற இன்றிய
மையா உணவுப் பண்டங்கள் விலைகளை தாமே கட்டுப் படுத்தி விற்கும்
திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் முன்
வந்தது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள், ஓட்டல் உரிமை
யாளர்களுடன் பேச்சு நடத்தி உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயித்
துள்ளனர். இந்த உணவுப் பண்டங்கள் விலைகளை தாமே கட்டுப்படுத்தி
விற்பனை செய்யும் திட்டத்தை மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்
களும், சென்னையில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை ஆணையாளரும் கண்காணித்து வருகின்றனர்.



வர்த்தகர்கள், தாங்களாகவே இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக்
கட்டுப்பாட்டிற்குள் வைத்துத் தொழில் செய்வதையே அரசு பொதுவாக
விரும்புகிறது. இதற்காக வர்த்தகர்கள் பொருள் குழுக்களை ஏற்படுத்து
வதை அரசு ஊக்குவித்து வருகிறது. வர்த்தகர்கள் சங்கத்தைக் கூட்டி
பொருள் குழுவினை வர்த்தகர்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்
என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.
பெரியார் மாவட்டத்தில் சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளுக்கு
பொருள் குழுக்களை வர்த்தகர்கள் ஏற்படுத்தியுள்ளனர். இதர மாவட்டங்
களில் இதுபோன்ற குழுக்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு
வருகிறது.

மாநிலத்தில் விலைவாசி நிலைமை கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. இன்றி
யமையாப் பொருளின் விலை எவ்வப்போது அதிகமாக உயருகிறதோ அவ்வப்
போது அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

## VIII. நுகர்வோர் பாதுகாப்பு.

நுகர்வோர் இயக்கத்திற்கு, தேவையான ஊக்கத்தை அளிப்பதற்கு "கிரியா
ஊக்கி" போல் செயல்படுவதே நுகர்வோர் பாதுகாப்பில் அரசின் பங்கு
ஆகும். இதற்கு நுகர்வோர் கல்வி அவசியம் ஆகும். இதற்காக மரபு வழிக்
கல்விக்கூடங்கள் மற்றும் மக்கள் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த
வேண்டியுள்ளது. முன்னோடியாக, ஐந்தாவது வகுப்புப் பள்ளிச்
சிறுவர்களுக்கு கலப்படத்தின் தீமைகளையும், நுகர்வோர் பாதுகாப்பின்
அவசியத்தையும் எடுத்துரைக்க ஒரு பாடம் சேர்க்கப்பட உள்ளது. மேலும்
இதுபோன்ற ஒரு விரிவான பாடத்தை எட்டாவது அல்லது ஒன்பதாவது
வகுப்புப் பள்ளி மாணவர்களுக்குப் பாடமாக அமைப்பதற்கு ஒரு கருத்துரு
அரசின் பரிசீலனையில் உள்ளது. உணவுப் பொருட்களில் செய்யப்படும் கலப்
படத்தை சோதனை மூலம் கண்டறிவதற்கான ஒரு பாடத்தை சேர்க்குமாறு
வேதியியல் பயிற்றுவிக்கும் கல்லூரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. முறை
சாரா கல்வித் திட்டத்தில், நுகர்வோர் பாதுகாப்புப் பற்றிய ஒரு பாடமும்
சேர்த்துக் கொள்ளப்படும். நுகர்வோர் உரிமைகள் மற்றும் அந்த உரிமை
களைச் செயல்படுத்துவது பற்றிய வழிமுறைகளை நுகர்வோர் மத்தியில் ஒரு
விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு 1986-87 ஆம் ஆண்டில் அனைத்து
மாவட்டத் தலைமை இடங்களிலும் கருத்தரங்குகளை நடத்துவது எனவும்
அரசு முடிவு செய்துள்ளது.

உணவுப் பொருட்களைச் சோதனை செய்வதற்காக அமைந்துள்ள வசதிகளை மேலும் வலுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளரின் கீழ் செயல்பட்டுவரும் சிறு சோதனைச்சாலை 1985-86-ல் விரிவாக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்களில் செய்யப்படும் கலப்படத்தை எளிய முறையில் சோதனை செய்து கண்டறிவதற்கு உதவும் வண்ணம், ரசாயனப் பொருட்கள், கருவிகள் அடங்கிய சிறு பகுப்பாய்வுப் பெட்டிகள் வாங்குவதற்கு வாணிபக் கழகம் நடத்தும் அமுதம் பல்பொருள் அங்காடி, கூட்டுறவுத் துறை நடத்தும் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர்கள், வட்ட வழங்கல் அலுவலர்கள் ஆகியோருக்கு இப்பகுப்பாய்வு பெட்டிகள் வழங்கப்படும்.

நுகர்வோர் அமைப்புகளுக்கு அரசு போதிய அளவு ஊக்கம் அளித்து வருகிறது. நுகர்வோர் நலன்கள் குறித்து வர்த்தகர்கள் மற்றும் ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் ஆகியவற்றோடு அரசு பேச்சுவார்த்தை நடத்தும் போது, நுகர்வோர் அமைப்புகளும், அழைக்கப்பட்டு, அவர்களும், வர்த்தகர்கள் மற்றும் ஓட்டல் உரிமையாளர்களோடு நடத்தும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். மாநிலத்தில் உள்ள 19 முக்கிய நுகர்வோர் அமைப்புகளுக்கு மைய அரசு உதவி அளிக்கும் திட்டம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் இயக்கத்தின் வளர்ச்சிக்காக திருச்சி மாவட்ட நுகர்வோர் கவுன்சிலுக்கு மைய அரசு ரூ. 6,300 நிதி உதவி அளித்துள்ளது. மற்றொரு தன்னியல் அமைப்பு அளித்துள்ள கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்னை ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்து நடத்திய நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கிற்கு அரசு ரூ. 2,000 நிதி உதவி அளித்துள்ளது. அக்கருத்தரங்கிலும் அரசு கலந்து கொண்டது.

அண்மையில், மைய அரசு நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய வரைவு மசோதாவை கொண்டு வந்துள்ளது. நுகர்வோர் பாதுகாப்புக் குழு மற்றும் நுகர்வோரின் குறைபாடுகளை தீர்க்க நீதிமன்றம் ஆகிய அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு இந்த வரைவு மசோதா வகை செய்கிறது. இந்த வரைவு மசோதா அரசின் பரிசீலனையில் உள்ளது.

## IX. தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதல் செய்தல், கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக்கி, அதை கிட்டங்கிகளில் சேமித்து வைத்தல் மற்றும் இன்றியமையாப்



பொருட்களை பொது விநியோகத்திற்கு வழங்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில், இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 20 கோடியிலிருந்து ரூ. 30 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 19.89 கோடியாகும்.

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், குடும்ப அட்டைதாரர்களுக்கான அரிசியை விநியோகம் செய்வதற்காக நெல், அரிசியை தமிழக அரசின் முகவராக இருந்து நேரடிக் கொள்முதல் செய்கிறது. 1985-86 ஆம் ஆண்டில், சம்பாவில் 15-3-1986 வரை இக்கழகம், 4.68 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்துள்ளது. இதற்கென இக்கழகம், 832 நேரடிக் கொள்முதல் நிலையங்களையும், 45 லெவி சேகரிப்பு நிலையங்களையும் நிறுவியுள்ளது.

இக்கழகம் 1985-86 ஆம் ஆண்டில், இதன் 3.20 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு வசதியுடன் மேலும் 30,400 டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு வசதியை பெருக்கியுள்ளது. அரசால் அனுமதியளிக்கப்பட்ட 5 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சேமிப்பு கிடங்குகள், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் லெவி கொள்முதல் நிலையங்கள் ஆகியவற்றை ரூ. 73.73 கோடி செலவில் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை தீட்டியுள்ளது. அரசு, வரும் நிதியாண்டில், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்காக ரூ. 10 லட்சமும், செயல்முறை சேமிப்பு கிடங்குகள் கட்டுவதற்கு ரூ. 10 லட்சமும் அனுமதி அளித்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் 13 நவீன அரிசி ஆலைகளின் அரைவை திறனை ஆண்டுக்கு மேலும் 60,000 டன்கள் அதிகரிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதைப்போன்று ஆறு நவீன அரிசி ஆலைகள் கட்டுவதற்கான திட்டத்திற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. இதைத் தவிர, ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், இரண்டு நவீன அரிசி ஆலைகளை நிறுவுவதற்கு திட்டக் குழுவினால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் அனுமதியளிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில், சீர்காழி வட்டத்தில், எருக்கூர் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் நவீன அரிசி ஆலை, 1986 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் செயல்படத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1986 ஏப்ரல் 17

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகத்திடமிருந்து நான்கு நவீன அரிசி ஆலைகளை வாங்குவதற்கான செயற்குறிப்பு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அரிசி ஆலைகளை வாங்குவதற்கான வழிமுறை மற்றும் நிபந்தனைகள் குறித்து இந்திய உணவுக் கழகத்துடன் ஆராயப்பட்டு வருகிறது.

அரசின் மொத்த வணிகராக செயல்படுவதைத் தவிர இக்கழகம், தென்னாற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 5,011 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகிறது. 1985-86-ம் ஆண்டு இக்கழகத்தின் மொத்த விற்பனை அளவு ரூ. 526 கோடியாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இது 1984-85 ஆம் ஆண்டில் இருந்த விற்பனை அளவான ரூ. 443.55-ஐ விட 18.5 விழுக்காடு அதிகமாகும்.

## X. தமிழ் நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம், தமிழ் நாடு முழுவதும் சேமிப்பு கிடங்கு வசதியை அளிக்கிறது. விவசாய விளை பொருட்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருட்களுக்கு பூச்சிமருந்து அடிக்கும் பணியையும் மேற்கொள்ளுகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 6 கோடியாகும். 1985-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய, இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனத் தொகை ரூ. 5.01 கோடியாக இருந்தது. 1985-86 ஆம் ஆண்டு, அரசு இந்நிறுவனத்திற்கு ரூ. 20 லட்சம் பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது. இதேபோன்று மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் அதன் பங்கான ரூ. 20 லட்சத்தை இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. 1986-87 ஆம் ஆண்டு, இந்நிறுவனம் இதன் பங்கு தொகையை ரூ. 60 லட்சமாக உயர்த்த கருதியுள்ளது.

1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய, இந்நிறுவனம் 43 இடங்களில் 123 கிட்டங்கிகளை நடத்தி வந்தது. இவற்றின் கொள்திறன் 3.37 லட்சம் டன்களாக இருந்தது. 7-வது ஐந்தாண்டு திட்டத்தில், மேலும் 2.52 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு வசதியை, ரூ. 12.86 கோடி செலவில் ஏற்படுத்த இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டிற்கு, கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்த இந்நிறுவனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 40,000 டன்கள் மட்டுமேயாகும். இந்நிறுவனம். 75,000 டன்கள் கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்தி இந்த இலக்கை தாண்டியுள்ளது.



1986 ஏப்ரல் 17]

இந்நிறுவனம், விஞ்ஞான ரீதியிலான சேமிப்பு வசதி, இருப்பு வைத்தல் மற்றும் தாக்கட்டுப்பாடு ஆகியவற்றில் இந்நிறுவனத்தின் பணியாளர்களுக்கு திறமையை மேலும் வளர்ப்பதற்காக ஒரு பயிற்சி வகுப்பினை நடத்தி வருகிறது. இதன்கீழ் முதல் பயிற்சி வகுப்பு, இந்நிறுவனத்தின் சேமிப்பு கிடங்கு மேலாளர்களுக்கும் மற்றும் கிராமப்புற கிட்டங்கிகளில் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் 20—1—1986 முதல் 12—2--1986 முடிய நடைபெற்றது. இந்த பயிற்சி வகுப்பிற்கு விவசாய விளைபொருள் விற்பனை இயக்குநர் தனது இயக்ககத்திலிருந்து 5 பணியாளர்களை அனுப்பியிருந்தார். இந்த பயிற்சிக்கான விளக்கக்குறிப்பு மிகவும் உயர்ந்த தரமுடையதாக உள்ளது.

இந்நிறுவனம் தொடர்ந்து பல ஆண்டுகளாக லாபத்தையே ஈட்டி வருகிறது என்று குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த 5 ஆண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டியுள்ள லாபம் பின்வருமாறு :—

| ஆண்டு | இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1980-81 | 24.62 |
| 1981-82 | 69.31 |
| 1982-83 | 84.58 |
| 1983-84 | 100.10 |
| 1984-85 | 125.23 |

143550

இந்நிறுவனம், 1984-85 ஆம் ஆண்டிற்கான நிகர லாபத் தொகையான ரூ. 119.24 லட்சத்தில் 2 விழுக்காடு தொகையினை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த குடும்ப நலத்திட்டத்திற்காக வழங்கியுள்ளது. இத்தொகை ஒரு மருத்துவ மனையில் குடும்ப நல அறுவை சிகிச்சைகளுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும். 1985-86 ஆம் ஆண்டிலும் இதே போன்ற தொகை இந்நிறுவனத்தினால் வழங்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

D

V2 11,32'N86

N86.223.2-3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli 1
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-1[illegible].
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Velo Book Company, No. A, Annaji Rao Street, Erode 1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Culcutta-17.

© TAMIL NADU LEGISLATIVE COUNCIL SECRETARIAT—PUBLISHED UNDER RULES 196 AND 199 OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.